MANGAYAR MALAR
அக்டோபர் '94 ரூ. 8/-

மங்கையர் மலர்



நவராத்திரி
சிறப்பிதழ்

இணைப்புப்
புத்தகம்
கேட்டு
வாங்குங்கள்



இதயம் நல்லெண்ணெய்

நானும் ஒரு கில்லாடி தான் ...

என்ன சார்...

என்ன அப்படிப் பார்க்கறீங்க?

என்னடா வீட்டுக்காரியை

ஆபீசுக்கு அனுப்பிச்சிட்டு இவன்

சமையல் பண்ணிக்கிட்டு

இருக்கானேன்னா?



இன்னைக்கு வீட்ல விசேஷங்க.

எங்க கல்யாண நாள், அவளுக்கு லீவு

கிடைக்கலை. நான் ஆபீசுக்கு லீவு

போட்டுட்டு என் நளபாகத்தை

ஆரம்பிச்சிட்டேன். சமையலிலே

நானும் ஒரு கில்லாடி தான்.

இருக்கவே இருக்கு

இதயம் நல்லெண்ணெய்.

அதுல சமையல் செஞ்சா சுவையும்

மணமும் பிரமாதம்.

இதயத்திற்கு இதமானது **இதயம் நல்லெண்ணெய்**

இதயம் நல்லெண்ணெய் இரத்தத்தில்
கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கிறது.

BOMBAY DISTRIBUTOR
M/s. P.R. OIL DEPOT (P. Ramalingam)
MATUNGA (C.R), BOMBAY - 400 019
Phone: 4372077 & 4732473

DELHI DISTRIBUTOR
M/s. SRI RAMA STORE
SHOP No.4, RAMA MARKET MUNIRKA,
NEW DELHI - 110 067 Phone : 662686 & 652476



Silverspoon

சில சிந்தனைகள் சில வார்த்தைகள்

அவர்கள் புரிந்து கொள்வார்கள்!

சமீபத்தில் பல்லாயிரக்கணக்கான கல்லூரி மாணவிகள் பங்கெடுத்துக் கொண்ட விழாவில் நானும் கலந்து கொண்டேன். எனக்கு முன்பு பேசிய வர்கள் உண்மையிலேயே பெண்கள்பால் அக்கறை கொண்டு அவர்களுக்காகக் குமுறிப் பேசிய போது, கல்லூரி மாணவிகளின் கைத்தட்டலால் அரங்கமே அதிர்ந்தது.

பார்த்துக் கொண்டிருந்த எனக்குத் 'திக்''திக்'கென்றது. உண்மை. உணர்ச்சிக் கொந்தளிப்பாகப் பேச்சாளர் சொல்வதெல்லாம் உண்மை. அதைக் கைத்தட்டி இளம் மாணவிகள் வரவேற்பது நியாயம்!


ஆனால்... ஆனால் இதற்கு எல்லைக்கோடு எங்கே?

பேச்சாளர்கள் தாலி என்ற ஒன்று இன்று கேலிக்கூத்தாகிப் போன விதத்தையும், ஆண்கள் மட்டுமே நாகரீகப் போக்கில் மாறி பெண்ணின் தலையில் பண்பாடு என்ற பெயரில் மிளகாய் அரைப்பதையும் விவரித்தார்கள்.

உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லைதான்.

பெண்ணுக்கு 'அடையாளம்' சுமத்தப்படுகிறது, குமாரி, திருமதி, தாலி, மெட்டி இவை. ஆணுக்கு, பிரம்மச்சாரி, இல்லத்தரசன், விதவன் உண்டோ? கிடையாது. பெண் மட்டுமே கணவன் பெயரைத் தன்னோடு இணைத்துக் கொள்கிறாள்.

சரிதான். ஆமாம்தான்.



ஆனால்... கேட்டுக் கொண்டு கைதட்டி ஆரவாரிப்பவர்கள் இளம்பெண்கள்! 'டீன்ஏஜின்' உணர்ச்சிக் கொந்தளிப் பில் இருப்பவர்கள். இவ்விழா என்றில்லை, எங்கேயுமே பெண்

மஞ்சுளா ரமேஷ்

விடுதலை பற்றியும், உரிமைகள் பற்றியும் பேசும் போது அடிப் படையை விட்டு விடலாமோ!

'என் கணவரின் பெயரைத் தெரி யாமல் சேர்த்துக் கொண்டு விட்டேன்! மிஸஸ்... என்று அவர் பெயரை வைத்தே குறிப்பிடுகிறார்கள். என் பெயரே மறந்து போச்சு!' என்றார் ஒருவர்.

ஒரு குடும்பத்தில் தலைவி எந்த அளவு தனித்துவத்தை இழந்து விடுகிறாள் என்பதைக் கூற முற்படுகிறார் இவர். ஆனால் அது கணவர் பெயரைச் சேர்த்துக் கொண்டதே இழுக்கு எனும் அளவுக்கு இழுத்துப் போகிறார்.

இப்போதைய பல கருத்தரங்குகளில் இப்படிப்பட்ட பேச்சுக்களை நிறைய கேட்க முடிகிறது. சினிமாவில் தாலியைக் கழட்டித் தரும் சென்டிமென்ட் போல இவையெல்லாம்.

திருமணம் புரிந்து குழந்தைகள் கணவன் என வாழும் நாம் இளம்தலைமுறையினரிடம் இப்படிச் சொல்வது எந்த அளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை யாரேனும் ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தால் தேவலை. பேசுபவர்களும் கூட குடும்பத்தை விட்டு நடுத்தெருவுக்கு வர முடியாது. இன்றைய சூழ்நிலையில் பெண் தெருவில் நிற்க முடியாது.

பல கல்லூரி மாணவிகளிடம் தனிப்பட்ட முறையில் பேசும் போது அவர்கள் எந்த அளவு குழம்பிப் போயிருக் கிறார்கள் என்பதை வருத்தத்தோடு புரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு பக்கம் சினிமாக்களிலும் டீ.வி.க்களிலும் இளமையைச் சுண்டி இழுக்கும் பாடல்கள், கனவுலகை நோக்கித் தள்ளும் 'லவ் ஸ்டோரிகள்'.

இன்னொரு பக்கம் திருமணம், படித்த பெண் படிக்காத பெண்ணின் அவலங்கள், மாமியார் வீட்டுக் கொடுமைகள் எனப் பக்கம் பக்கமாக டிராமாவாக, சினிமாவாக, பத்திரிகைக் கதை கட்டுரைகளாக மீடியாக்கள் மூலமாக அவர்களை வந்தடையும் செய்திகள.

எது... எது சரி? தாலியே போட்டுக் கொள்ளலாமா, வேண்டாமா?

கணவனை எந்த அளவு நம்பலாம்?

மாமியார் காப்பி போடவா, நம்மை எரிக்கவா காஸ் பத்த வைக்கிறார்?

திருமணம் செய்து கொள்ளாமலே இருக்கலாமே! பல நடிகைகள் அப்படித் தானே அறிக்கை விடுகிறார்கள், 'கணவன் வேண்டாம், குழந்தை வேண்டும்' என்று.

இன்னும் எத்தனை எத்தனையோ!

வீட்டிற்கு வெளியே கரை புரண்டு ஓடும் நாகரீக வெள்ளம். அதிலே சென்று படிக்க வேலை பார்க்க அனுமதி. ஆனால் வீட்டிற்குள் வந்தால் திருமணம், கணவன், பெற்றோர் சொல்படி பணிந்து நடத்தல் - இவை சட்டம்.

பாவம், அந்தக் குழந்தைகள் விழி பிதுங்கி நிற்கிறார்கள். அவர்களின் மேல் இத்தனை விஷயங்களையும் ஏற்றி, 'ஓடு ஓடு'

'படிப்பில் கோல்ட் மெடல் வாங்க ஓடு

விளையாட்டில் ஃபர்ஸ்ட் வர ஓடு

அழகாக புடவை உடுத்தி கணவனோடு ஓடு

சகலகலாவல்லியாக குடும்பம் நடத்த ஓடு'

என விரட்டோ விரட்டு என விரட்டுகிறோம். இதனால் அவர்கள் என்னதான் செய்வார்கள்? இந்த ஓட்டப் பந்தயத்திலே முதுகு மூட்டையிலே ஏறி நிற்கும் பல விஷயங்களில் உன்னதமான பல கலாசாரங்கள் விழுந்து விடுமோ எனப் பயமாக இருக்கிறது.

குடும்பம் பற்றியும் கணவன் பற்றியும் பயமுறுத்துவதால் திருமணமே வேண்டாம் என தீர்மானித்து விட்ட பல கன்னிகள் இன்று வாழ்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை இன்று பெருகி வருவது வருந்தத் தக்கது.

பெண்ணின் வாழ்வியல் துன்பங்களைச் சொல்வோம், அவசியம்தான். அவர்கள் முன்னமேயே இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு வாழ்க்கைக்குத் தயாராவது நல்லது. ஆனால் அந்த வாழ்க்கையே வேண்டாம் என வெறுக்கச் செய்யும் அளவு செல்வது நல்லதா?

நாம் கட்டிக் காத்து வரும் குடும்ப அமைப்பு அத்தனை மோசமானதா? யோசியுங்கள்.


திருமண வாழ்வு என்பது காதல் கலந்த அருமையான வாழ்வு முறை

மாமியார் வீட்டு மக்கள், உறவினர்கள் என பந்தம் தேடிக் கொள்வது வாழ்வின் இன்ப துன்பங்களுக்கு மனிதத் துணை எத்தனை அவசியம் என உணரச் செய்யும்.

தொங்கத் தொங்க தாலிகட்டி மங்களமாக மனைவியும், அவளுக்காகவே கணவனும் இந்த அன்பு இல்லறத்தில் பிறந்த குழந்தைகளும் பாசத்தால் கட்டி வாழ்வது எத்தனை காவியம்?

இது அத்தனையுமே மோசமா?

வாழ்க்கையில் எல்லோருக்கும் பிரச்னையுண்டு, பெண்ணிற்கு இருப்பது போல ஆணுக்கும் உண்டு. வீட்டில் இருப்பது போல வெளியிலும், அலுவலகத்திலும் உண்டு. அரசியலோ, சினிமாவோ, தொழிற்சாலையோ எங்கு எடுத்துக் கொண்டாலும்



குழந்தைகளுக்கு விளையாடுவதற்காக வாங்கிய பிளாஸ்டிக், ரப்பர் பொம்மைகள் அவர்கள் பெரியவர்களானதும் பொம்மைப் பெட்டியில் எடுத்து வைத்து விடாமல்... அறையின் மூலை, டீ.வி.யின் மீது... ஆணியின் மீது மாட்டி வைத்தால்... பொம்மையின் கையில் சைக்கிள் சாவி, வண்டி சாவி என சாவிகளை மாட்ட உபயோகப் படுத்துவதுடன்... ரப்பர் பேண்ட், பொட்டு இவைகளை அவசரத்திற்கு மாட்ட, எடுக்க என சௌகர்யமாயிருக்கும். கழுத்தில் மணியை மாட்டி விட்டால் அதில் சேஃப்டி பின்களை போட்டு வைக்கலாம். அவசரத்திற்குத் தேடாமலும் இருக்க முடியும்.

- ரமா சந்திரசேகர்

பிரச்னைகளா இல்லை? எங்கும் வெற்றிகர மாக மேலே வர தேவை கடின உழைப்பு, நம்பிக்கை, அன்பு.

இந்த மூன்றும் வீட்டிற்கும் தேவை.

நம் இளம்தலைமுறைப் பெண்களுக்கு இவற்றைச் சொல்லி நம் வாழ்வின் அற்புதங் களைச் சொல்லி விளக்க வேண்டாமா?

சமுதாயத்தில் அவலங்கள் இல்லையா? உண்டு.

நயவஞ்சகமான கணவனும், பணம் பிடுங்கி மாமியாரும், அவமரியாதை செய்யும் மருமகளும், மனிதர்களைத் துச்சமென கருதும் மனிதர்களும் உண்டு.

இப்படியும் வாழ்வில் இருக்கிறார்கள் என அவர்களுக்கு உணர்த்துங்கள்.

'இளம்பெண்களே, இப்படிப்பட்ட 'மனிதர்கள் அல்லாத' மனிதர்கள் உங்கள் வாழ்வில் வர நேர்ந்தால் எங்கள் தலைமுறைப் பெண்களைப் போல தீக்குளிக்காதீர்கள். கிணற்றில் விழாதீர்கள். குறைந்தபட்சம் கண்ணீர் கூடச் சிந்தாதீர்கள்.

வீறுகொண்டு எழுங்கள். பயம் வேண் டாம். அச்சம் நாய்களுக்குத்தான் வேண்டும் என்றான் பாரதி. அது புதுமைப் பெண்ணான உனக்கு வேண்டாம். எங்கே உன் பெண் மையைச் சீரழிக்கப் பார்த்தாலும் விழித் தெழு' என்று சொல்லுங்கள்.

இந்தத் தைர்யத்தையும் தன்னம்பிக் கையையும் ஊட்டுங்கள். ஆனால் அதைச் சொல்ல வரும் போது ஒட்டுமொத்தமாகவே உலகில் இருள் சூழ்ந்து விட்டது, எதிர்காலமே இல்லை என்று சொல்லி விடக் கூடாதில்லையா?

இது கனவுகள் வசப்படும் காலம்.

காதலில் மகிழும் நேரம்.

சாதனைகள் பல புரிய திட்டமிடும் வேளை.

இவை இருக்கட்டும். நம் வாழ்வும், தந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்ததும் இங்குதான். உங்களுக்கும் அவை உண்டு. அதோடு நவீன உலகம் கொடுத்துள்ள ஏராள மான வாய்ப்புக்கள் உண்டு.

'பெண்ணே, சந்தோஷமாய் இரு!

சாதனைகளைச் செய் - வாழ்க்கையிலே

காதல் ஒருவனைக் கைப்பிடி.

வாழ்வில் நீயும் உயர் உன் குடும்பத்தையும் உயர்த்து'

என அவர்களை ஆசீர்வதிப்போமே! கூடவே கயமையை அடையாளமும் காட்டு வோம். இன்றைய பெண்கள் மகாபுத்தி சாலிகள். தைரியசாலிகள்.

அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

பட்டுப் புடவை யாருக்கு?

சென்ற மாதம் திருபுவனம் பட்டுக் கூட்டுறவு சங்கம் லிட் Z. 322வுடன் இணைந்து பட்டுப் புடவை பரிசளிப்பு விழாவை அறிவித்திருந்தோம். மலையாகக் குவிந்து விட்டன கூப்பன்கள். அற்புதமாக ஒத்துழைத்த வாசகிகளுக்கு நன்றி.

சென்னை தி.நகர் சரோஜினி தெருவிலுள்ள அவர்களின் கிளைக் கடையில் 11.9.'94 அன்று குலுக்கல் வைத்திருந்தோம். இரண்டு மூட்டை கூப்பன்களோடு நாங்கள் போய் இறங்கிய போது, அவர்கள் எங்களை அறுநூறு கூப்பன்களோடு வரவேற்றார்கள்! மேலாளர் திரு. நடராஜன் இதற்காகவே திருபுவனத்தில் இருந்து வந்திருந்தார்.

பி.டி. உஷாவிற்கு இணையாக உலக அரங்கில் விளையாட்டில் நம்மைப் பெருமை கொள்ளச் செய்த 'ட்ரையத்லான்' அமுதாதான் சிறப்பு விருந்தினர். வெறுங்காலோடு சைனாவில் ஓடி தங்கப் பதக்கம் பெற்ற அமுதா இங்கே அமைதியாக அமர்ந்திருந்தார்.

அவர் முன்பு கோணிகள் பிரிக்கப்பட்டு கூப்பன்கள் அடங்கிய கவர்கள் குவிக்கப்பட்டன. உடன் பணியாற்றுபவர்கள் அவற்றை நன்கு மேலும் கீழுமாகத் திருப்பி விட்டார்கள். இதற்குள் எப்படியோ விஷயம் தெரிந்து வாசகிகள் சிலர் வந்து விட்டார்கள்.

அமுதா ஒரு கூப்பனை எடுக்கவும் மீண்டும் நன்கு திருப்பி விடப்பட்டது. இப்படி ஒவ்வொன்றாக எடுத்து ஆசிரியை மஞ்சுளாரமேஷிடம் தர அவர் பார்த்து விட்டு திரு. நடராஜனிடம் தந்தார். இப்படியாகப் பத்து கூப்பன்களும் எடுக்கப்பட்டன. பெயரைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருப்பீர்களே!

இதோ :-

1. திருமதி. ஆர். சாந்தலட்சுமி, 19, ஜக்கீரியா காலனி. மெயின் ரோடு, சூளைமேடு, சென்னை - 600 094.
2. திருமதி. சீதா சுப்ரமணியன், B-7, ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அபார்ட்மெண்ட்ஸ்,16, 5-வது மெயின் ரோடு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061.
3. திருமதி. வைதேகி ரகுநாதன், 46, லோயர் கனால் ரோடு, பிரிதிவி பாக்கம், அம்பத்தூர், சென்னை - 600 053.
4. திருமதி ஜி. ஜெயலட்சுமி, பிளாட் எண் : 46,மன்னார் திருமலைநாயக்கர் தெரு, தனிகைநகர், திருநகர், மதுரை.



• அமுதா தேர்ந்து எடுக்கிறார்.



5. திருமதி. G.V. சரோஜா தங்கம்,
18, அங்குவிலாஸ் வீதி,
கோபிசெட்டிபாளையம்,
பெரியார் மாவட்டம்.

6. C. சுந்தராம்பாள்,
57/7 சோமசுந்தரம் தெரு, N.L.C.
ஆபிஸர்ஸ் நகர்,வடலூர்,
தெ.ஆ. மாவட்டம்.

7. திருமதி. கஸ்தூரி நடராஜன்.
W/o. Dr. R.M. நடராஜன், M.S.,
43 B ரெத்னா காலனி, திருச்சி
ரோடு, வ.உ.சி. நகர்,
தஞ்சாவூர் - 613 007.

8. N. ராதா அம்மாள்,
X-20, கோவை புதூர், கோயம்பத்தூர்
- 741 042.

9. D. சித்ரா,
W/o. K. இராஜபாண்டியன்,
பஜனை கோயில் தெரு,
கன்னிகைப்பேர், பெரியபாளையம் (வழி)
செங்கற்பட்டு M.G.R.
மாவட்டம் - 601 102.


10. K. ராஜம்மாள், லட்சுமி நிலையம்,
767, II மெயின் ரோடு, A Block
சஹாரா நகர், கொடிகிஹல்லி.
பெங்களூர் - 560 064.

இவர்கள் அனைவருக்கும் தனித் தபாலில் கடிதங்கள் செல்லும். தேர்ந் தெடுக்கப்பட்ட சிலருக்கு நேரில் சென்று தரவும் தீர்மானித் துள்ளோம். அவற்றிற்கும் கடிதங்கள் செல் லும். பரிசு பெற்ற விவரம் அடுத்த இதழில்.

படங்கள் : ராஜு

• வாசகிகளும் கலந்து கொண்டார்கள்.





இக,பர சுகம் தரும் நவராத்திரி

அவரவர் வீட்டிலே நவராத்திரி கொலு வைக்கிறோம். கோயிலிலே போய் அலங்கார வல்லியாய் நிற்கும் அம்பிகையைத் தொழுகிறோம். நவராத்திரிக்கெனவே விசேஷமாகச் சில இடங்களில் பூஜைகளும், ஹோமங்களும் உண்டு. ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகள் யோகமாயா ஸ்ரீபுவனேஸ்வரியை ஆராதிப்பவர். அழகுக்கு அழகு செய்யும் ஆனந்தவல்லிக்கு ஆராதனை செய்பவர். நவராத்திரி ஒன்பது நாட்களும் ஸ்வாமிகள் அகிலாண்டகோடி நாயகிக்குச் செய்யும் ஹோமங்களும், பூஜைகளும் மிக விரிவானது.

சென்னை அம்பத்தூரிலுள்ள (ஸ்ரீபுவனேஸ்வரி தெரு, கங்கை நகர், ரெட்ஹில்ஸ் ரோடு) ஸ்ரீபாரத்வாஜ ஆச்ரமத்தில் ஒவ்வொரு நவராத்திரியன்றும் மிக விமரிசையாக பூஜை செய்கிறார்கள். இதைப் பற்றிக் குறிப்பிடும் போது ஸ்வாமிகளின் வழித்தோன்றல் பரத்வாஜ ஸ்வாமிகள், விரிவாகப் பேசினார்.

"நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகளில் தேவியை ஆராதிப்பது என்கிறோம். ஆனால் நவம் என்றால் புதுமை என்றொரு பொருளும் உண்டு. தேவி, மகாசாமுண்டி, பக்தர்களுக்கு ஒவ்வொரு நாளும் புதுமையாகக் காட்சி தருபவள்தானே! நவராத்திரி நேரத்திலே தேவி மகாத்மியம் படிப்பது மிகவும் விசேஷம். அதையே படித்து, பாடி, ஹோமமாகவும் செய்யும் போது மிகவும் விசேஷமாகிறது.

தேவியானவள் நவராத்திரியிலே பக்தர்களுக்கு வேண்டிய வரம் தருகிறாள். சண்டிதேவியின் புகழ்பாடும் தேவிமகாத்மியம் மார்கண்டேய முனிவரால் இயற்றப்பட்டது. இது இக, பர என இரண்டு பலன்களையும் கொடுக்கவல்லது என்பதற்குச் சுவையான கதை ஒன்றைச் சொல்வார்கள்.

சாத்வீக முனிவரான மேத்தஸ் மகிரிஷியிடம் இரண்டு பேர் ஒரே நேரத்தில் வந்தார்களாம். க்ஷத்திரியான சுரத மகா ராஜாவும், வைஸ்யரான சமாதியும்தான் அந்த இரண்டு பேர். அரசனை அவனுடைய ராஜ உறவினர்கள் அரசைப் பிடுங்கிக் கொண்டு துரத்தி விட்டிருக்கிறார்கள். எனவே மீண்டும் தன் ராஜ்யம் வேண்டி அவன் வந்தான். சமாதியின் உறவினர்கள் நடந்து கொண்ட விதத்தால், பணம் காசு என்று வந்து விட்டால் ரத்தபந்தம் கூட எப்படியெல்லாம் மாறி விடுகிறார்கள் என்பதை உணர்ந்த நிலையில் உலகே வெறுத்துப் போய் வருகிறார் அவர். தனக்கு மோட்சம் கிடைக்க வேண்டுகிறார் சமாதி.

இவ்விரண்டு பேருக்கும் ஒரே நேரத்தில் தேவிமகாத்மியத்தைச் சொல்கிறார் மேத்தஸ். அரசபோகம் கேட்டவனுக்கு அரசு கிடைத்தது. மோட்சம் வேண்டியவன் விரும்பியபடி மேலுலகம் சென்றான். இப்படி இக,பர சுகம் தரும்



• புவனேஸ்வரி ஸ்வாமிகள்

• பரத்வாஜ

இப்போது

சமவிகித ஊட்டச்சத்து + சிக்கன ஆதாயம்

அறிமுகப்படுத்துகிறோம் புதிய செரிலாக் வீட் + ஸோயா. கோதுமையின் நற்பயன்களும், ஸோயாவின் ஊட்டச்சத்தும் அடங்கியது.

செரிலாக் வீட் + ஸோயா. புதிய வெற்றிகரமான ஆரம்பத் திட உணவு. கோதுமையின் வழக்கமான நற்பயன்களுடன், புரோட்டீன் மிகுந்துள்ள ஸோயாவின் ஊட்டச்சத்தையும் கலந்து தருகிறது. உங்களுடைய 4 மாதக் குழந்தைக்கு தாய்ப்பாலுடன் கூடவே ஊட்டச்சத்து சமவிகிதத்தில் அடங்கிய திட உணவும் தேவைப்படுகிறது. உங்களுடைய குழந்தை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வளர்வதற்கு இது உதவுகிறது.

உங்களுடைய குழந்தை நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெற்று, சகல வகையிலும் வளர்ச்சி அடைவதற்காக 12 விட்டமின்கள் மற்றும் 7 மினரல்களால் வலுவூட்டப்பட்டது செரிலாக் வீட் + ஸோயா.

மேலும், நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-லைன் முறைப்படி தயாரிக்கப்படுவதால், எளிதில் ஜீரணமாகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது!

இந்தப் பயன்கள் எல்லாமே, உங்கள் பணத்துக்கு உண்மையான மதிப்பு அளிக்கும் ஒரு விலையில் கிடைக்கின்றன.





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே, தானிய உணவும் கொடுங்கள்.



தேவிமகாத்மியத்தை நவராத்திரி நேரத்தில் பாராயணம் செய்யலாம். சண்டிஹோமம் செய்யும் போது மகா சிறப்பு கிடைக்கிறது. உலக க்ஷேமம் வேண்டி, கோடி காயத்ரீ ஜபம் செய்த புவனேஸ்வரி ஸ்வாமிகள் நவராத்திரி நேரத்தில் இந்தச் சண்டிஹோமம் செய்கிறார்..."

சண்டிஹோமம் மட்டுமில்லை, கோ பூஜை, கஜ பூஜை, சுஹாஸினி பூஜை, கன்யா பூஜை என ஒன்றையும் விடாமல் நவராத்திரி முழுக்க அத்தனை பூஜைகளையும் இந்தத் தளாத வயதிலும் விடாமல் செய்கிறார் ஸ்வாமிகள். "நவராத்திரி மட்டுமில்லை இங்கே நடக்கின்ற அஷ்டமி பூஜையும் பௌர்ணமி பூஜையும் கூட மகா விசேஷமானது" என்கிறார் பாரத்வாஜ ஸ்வாமிகள்.


"பௌர்ணமியன்று மேல் மாடியில் கண்ணாடியில் சந்திரன் தெரியும்படி அமைத்து, அதில் தேவியை ஆவாஹனம் செய்து செய்யும் பூஜை ஸ்ரீவித்யா சந்த்ரகலா பூஜை. இது மிகவும் விசேஷமானது. அஷ்டமி தேவிக்கு உகந்த நாள். ஒவ்வொரு மாதமும் இரண்டு நாட்களும் இங்கு பூஜை நடைபெறுகிறது."

"ஸ்வாமிகள் புவனேஸ்வரியை ஆராதனை தேவதையாக எடுத்துக் கொண்டது ஏன்?"

"புவனேஸ்வரி புவன ஈஸ்வரி. ஈரேழு உலகங்களின் நாயகி. பதினாறு பேறு என்று சொல்வார்கள் இல்லையா? அவை என்னென்ன தெரியுமா? சௌந்தர்ய லக்ஷ்மி, சௌபாக்யலக்ஷ்மி, கீர்த்தி, வீர, விஜய, சந்தான, வித்யா, மேத்தா, துஷ்டி, புஷ்டி, ஞான, சக்தி, சாந்தி, சாம்ராஜ்ய, ஆரோக்கிய லக்ஷ்மி. மொத்தம் பதினைந்து பேர் இருக்கிறார்கள். பதினாறாவது லக்ஷ்மிதான் மஹாலக்ஷ்மி - ஷோடஸ மஹாலக்ஷ்மி - புவனேஸ்வரி. முதல் பதினைந்து பேருக்கும் 15 அக்ஷரங்கள். பஞ்சதசி. பதினாறாவது அக்ஷரம்தான் மிக விசேஷமான ஹ்ரீம் எனும் அக்ஷரம். இது புவனேஸ்வரி உடையது. ஹ்ரீம் அக்ஷரத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால் அத்தனை சௌபாக்கியங்களையும் வாழ்வில் பெறலாம். பூர்ண சக்தி, பூர்ண கலா, பூர்ண தேவி - மஹாமாயா புவனேஸ்வரி.

ஸ்வாமிகளின் குரு மௌனசுவாமிகளான ஸ்ரீசிவ சிதானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆராதனை தெய்வமும். இத்தனை சிறப்புக்கள் வாய்ந்த ஸ்ரீபுவனேஸ்வரிதான். அதனால் தான் ஸ்வாமிகளும் ஸ்ரீபுவனேஸ்வரியைத் தன் வாழ்வின் பற்றாகவே பற்றிக் கொண்டு இருக்கிறார். அவருக்கு உலகின் அனைத்து ஜீவராசிகளும் க்ஷேமமாக வாழ வேண்டும். அதற்காகவே நாளும், நேரமும், மணித்துளிகளிலும் லோகமாதா புவனேஸ்வரியைத் தொழுது கொண்டு இருக்கிறார்."

முதலில் திருவல்லிக்கேணியில் ஹனுமந்தராய கோயில் தெருவில் தன் ஞான வாழ்வை



ஸ்படிகலிங்கம்

ஆரம்பித்த ஸ்வாமிகள், இப்போதும் அங்கேயே தொடர்ந்தாலும் ரெட்ஹில்ஸ் ரோடில் ஸ்ரீபாரத்வாஜ ஆச்ரமத்தையும் நிறுவி இருக்கிறார். மான்களும், மயில்களும் நடமாடும் அழகிய ஆச்ரம சூழ்நிலையில் தேவியின் பூஜை புஷ்பங்களுக்காகவே பரந்த நந்தவனத்தை அமைத்திருக்கிறார்கள். ஆச்ரம உயரத்திற்கு மஹாவிஷ்ணுவின் விசுவரூப சிற்பம் வெளியே கண்ணைக் கவர்ந்தால், உள்ளே காணற்கரிய சிற்பங்கள் நெஞ்சைக் கவர்கின்றன.

ஸ்ரீமஹாமேரு, மணித்வீபம், தசமகாவித்யையின் திருவுருவம், சப்தசதிதேவி, கங்கையை உலகுக்கு அளித்த சிவனின் ஆனந்த கோலம், பிரத்தியங்கிரா தேவி என காணற்கரிய ஓவியங்கள். இதில் 'பிரத்தியங்கிரா தேவி அதர்வணகாளி எனப்படுவாள். இவளைத் தொழுபவர்க்கு காவல் பயமே தேவையில்லை. அவளே ஓடி வந்து பக்தனைக் காப்பாள்' என்கிறார்கள்.

ஆச்ரமத்தில் அபூர்வமான காட்சி ஸ்படிக லிங்கம். இதிலே அழகிய ஸ்வர்ணரேகை ஓடுகிறது. இதன் ஆவுடையார் எமரால்டினால் அமைக்கப்பட்டதாம். மிக விசேஷமான இந்த லிங்கத்திற்கு தாங்களே ஆராதனை செய்ய விரும்பினாலும் கூட செய்யலாம் என்கிறார்கள்.

இத்தனையையும் தாண்டி கர்ஜித்து நிற்கும் சிங்க வாகனம் தாண்டி உள்ளே சென்றால் யோகாமாயா புவனேஸ்வரி தன் அருட்கண்களால் நம்மைப் பார்த்தவண்ணம் இருக்கிறாள்.

அவளுக்கு முத்தங்கி சேவையுண்டு.

64 வகை அபிஷேகங்கள் உண்டு.

அவற்றிலே ஒன்றான மாதுளை முத்துக்களாலான அபிஷேகம் காணற் கிடைத்தற்கரிய காட்சி. இத்தனையையும் பார்த்துப் பார்த்துச் செய்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார் புவனேஸ்வரி ஸ்வாமிகள்.

இங்கே வரும் பக்தர்கள் பலரும் பல மனக்குறையுடனும் வருகிறார்கள். நெடுநாள் ஆகியும் திருமணம் அமையப் பெறாதவர்கள், உடல் நோய் உள்ளவர்கள், குடும்பப் பிரச்னைகளால் அல்லல்படுபவர்கள் என எத்தனையோ பேர். அவரவர்க்கென இறைவியிடம் வேண்டி பூஜை செய்து பிரசாதம் அளிக்கிறார் ஸ்வாமிகள். அப்படி வேண்டி தாங்கள் பெற்ற வரத்தால் வாழ்வில் நிம்மதி கண்டதாக பலரும் தங்களுடைய அனுபவங்களைச் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

"இன்றைய வாழ்க்கை ரொம்ப வேகமான வாழ்க்கையாகி விட்டது. நம் முன்னோர்களுக்குச் செய்யும் 'பித்ரு காரியங்கள்' இன்று படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. பிறந்த நாளெல்லாம் கூட இன்று பார்ட்டியாகக் கொண்டாடி விடுகிறார்கள். ஆனால் இதை அப்படிச் செய்ய முடியாதே! சரியாக வைதீகர்கள் கிடைப்பதில்லை. வெளிநாடுகளில் தங்கி விடுகிறார்கள். சரியான கோத்திரம் கூட பலருக்கும் தெரிவதில்லை.

ஆனால் எப்படியிருந்தாலும், 'ஐயோ நம்மால் திதி போன்றவற்றைச் சரியாகச் செய்ய முடியவில்லையே' என வருத்தப்படுபவர்கள் நிறைய உண்டு. அவர்களுக்காகவே 'ஸ்ரீபுவனேஸ்வரி மந்த்ர ட்ரஸ்ட்'டில் ஒரு ஏற்பாடு செய்து இருக்கிறோம். ரூபாய் இரண்டாயிரம் கட்டி விட்டால் குறிப்பிட்ட திதி நாளன்று பூஜையில் அவர்களுக்காக வேண்டிக் கொண்டு, பதினோரு பிராமணர்களுக்கு புவனேஸ்வரியின் பிரசாதமாக சாப்பாடு போடுகிறோம். அன்னதானம் என்பதுதான் இதில் முக்கியம். அன்னையிடம் முன்னோர்களின் நல்லாசி வேண்டி பிரார்த்திக்கிறோம். இவை இரண்டுதானே பிரதானம்? இவற்றை இப்படி ஆச்ரமத்தில் நியமநிஷ்டையோடு செய்யும் போது சிறப்புப் பெறுகிறது. தந்தை தாய் திதியை எப்படிச் செய்வது எனப் பரிதவிப்பவர்கள் இதை பயன்படுத்திக் கொள்ளலாம்" என்கிறார் பரத்வாஜ்.

நவராத்திரி - அன்னை அருள்பாலிக்கும் நேரம். மனமும், உடலும் குளிர்ந்து அவள் நினைவிலே வாழும் காலம். எப்போதும் தெய்வீகம் பொலிய நடமாடும் பொழுதுகள். வீட்டினுள்ளும், வெளியிலேயும் எங்கும் சக்தியென்பதே பேச்சு. நம்மளவில் சிறிய பூஜைகள் செய்து கொண்டாலும், பாரத்வாஜ ஆஸ்ரமம் போன்ற இடங்களில் நடைபெறும் 'சண்டி ஹோமம் போன்றவற்றில் எல்லாம் கலந்து கொள்ளும் போது நாம் மேலும் சிறப்படைகிறோம். மஹாசக்தி நம்முள் சுற்றிச் சூழ்கிறாள்.

- ஜ்வாலா

கேழ்வரகு மா 4 கப் என்றால் உளுந்து அரை கப், அரிசி அரை கப், சிறிது வெந்தயம். இவைகளை ஊறவைத்து, நைசாக அரைத்துக் கொண்டு, கேழ்வரகு மாவை அதனுடன் கலந்து, உப்பு போட்டு வைத்து விட்டு, மறுநாள் தோசை வார்த்தால் மெத்தென்று இருக்கும். தேங்காய்ச் சட்னியுடன் சாப்பிட, அரிசி தோசையை விட ருசியாகவும் இருக்கும்.

- என். கே. ஈசுவரி



நவராத்திரி விழா நாட்களின் சந்தியா காலத்தில் இளமையின் தலைவாயிலை எட்டிப் பிடிக்கும் சின்னஞ்சிறு குமரிகள், பட்டுப் பாவாடையும், நகையுமாக குங்குமச் சிமிழ் ஏந்தி வீடு வீடாகப் போய் அழைக்கும் காட்சியினை தற்போது உங்களால் காண இயலுமா?

குழந்தைகளுக்கு வேதபாராயணம், பூஜை விதிமுறைகளைப் பயிற்றுவித்து அன்னதானம் செய்யும் பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளர் திருமதி. பிரேமா பாண்டுரங்கனிடம், இன்றைய இளம் பெண்களுக்கு இத்தகைய விஷயங்களில் இருக்கும் பிரச்னைகளைக் கேட்கிறார் இளம்பெண் பிரியா தீட்சித்.

"கொலு வைத்துக் கொண்டாடுவதுதான் நவராத்திரி விழாவின் சரியான முறையா?"

"அப்படிக் கூற முடியாது. காலப்போக்கில் சிறிது சிறிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட வழக்கம் இது. அவ்வளவுதான். கடவுளுக்கு உருவம் கொடுத்து பிரம்மத்தை வழிபடும் உருவ வழிபாடு முறையானது ஞானத்தின் மிக உயர்ந்த நிலையை அடைவதற்கு ஓர் ஆரம்பப் படி. அவ்வகையில் பார்க்கையில் அம்பாளின் சிருஷ்டி அனைத்துயிர்களிலும் அடங்கியுள்ளது. அவளை எந்த ரூபத்திலும் வணங்கி வழிபடலாம் என்பதை உணர்த்தும் வகையில் செடியிலிருந்து செட்டியார் பொம்மை வரை கொலுவில் வைப்பதற்குக் காரணமாயிருக்கலாம்."

"இந்த நாட்களை அம்பாளுக்கு மட்டும் உகந்ததாக ஏன் சொல்கிறார்கள்?"



பாரம்பரிய உடை அணிவதில் பெருமைப்பட வேண்டும்

"தன் குழந்தையின் கோரிக்கையை அதிசீக்கிரம் கேட்பவள் அம்மாதானே. உலகாளும் உமையவளும் அவள்தான் என்று சதம் கண்ட மகான் ஸ்ரீசந்திரசேகரேந்திர சுவாமிகள் ஒரு சமயம் கூறியது என் நினைவிற்கு வருகிறது. பக்தன் ஒருவன் கூறுகிறான் அம்பாளிடம், "நான் ருத்ரனிடம் வரன் வேண்டிச் சென்றால் நீ பஞ்சட்சரி ஜெபம் செய்தாயா காசி ராமேஸ் வரம் சென்றாயா யாருக்கு என்ன உதவி செய்தாய் என்று பல கேள்விகளை கேட்பார். அப்போது அருகிலிருக்கும் நீ, 'இவன் என்னுடைய பக்தன்' என்று ஒரு வார்த்தை சொல்லி அனைத்தும் கிடைத்திட ஆவன செய்வாய் 'ஏழையின் துன்பத்தை எளிதில் களைந்திடுவதில் அம்மா உனக்கு நிகராக யாருமில்லை' என்கிறார். நல்லது நடக்க நலமான காரியம் கைகூட எளிமையான வழியை கடைபிடிப்பதில் கஷ்டமென்ன இருக்கிறது?"

"நவராத்திரி காலங்களில் பட்டுப் பாவாடை அணிந்து கொள்ள எங்களில் பலருக்கு விருப்பமிருப்பதில்லை. வெற்றிலை, பாக்கு வாங்க வேறு வீட்டிற்குச் செல்ல வெட்கமாய் இருக்கிறது. இந்தக் கூச்சத்தை தவறு என்று சொல்வதற்கில்லையே!"

"தவறுதான். ஐந்து ஸ்டார் விடுதியில் வேலைக்கு மனு போட்டவன் பேண்ட், டை அணிந்து கொண்டு சென்றால்தானே பணிக்கு அமர்த்தப்படுகிறான்? சர்ச்சிற்கு போகும் கிறிஸ்துவர்கள் மினி டிரஸ் அணிவதில்லையே. நமது பாரம்பரிய உடையை அணிவதில் நாம் பெருமைகொள்ள வேண்டுமே தவிர, தயக்கம் கொள்வதில் அர்த்தமென்ன இருக்கிறது.

அடுத்து வெற்றிலை பாக்கு பற்றி கேட்டீர்கள். வெற்றிலை, பாக்கு, மஞ்சள் நம் வேத காலத்திலிருந்தே சொல்லப்பட்ட அஷ்ட மங்கலப் பொருட்களில் முதன்மையான மூன்று பொருட்களாக விளங்குகின்றன. மங்கலமாகட்டும், அமங்கலமாகட்டும் சபையில் முதலில் வைப்பது பாக்கு வெத்திலைதான். நாகவல்லி வெற்றிலை ஒரு சாட்சிப் பொருள்.

புராணத்தில் குறிப்பிட்ட அரசன் ஒருவன் தன் ஆபத்தில் உதவிய மனிதனுக்கு, சபையைக் கூட்ட முடியாத நிலை யில் வெற்றிலையை சாட்சியாக வைத்து "உன்னை இதன் சாட்சியாக என் பிரதான மந்திரியாக்குகிறேன்" என்று கூறுவதாக ஓர் இடம் வந்துள்ளது. திருமணத்திற்கு ஆதாய மாக விளங்கும் நிச்சயதார்த்தத்தை - என் பெண்ணை தங்கள் மகனுக்கு பாணிக்கிரஹணம் செய்து வைப்பதாக வாக்குறுதி கொடுப்பது பாக்கு வெற்றிலை மாத்தும் வைபவந்தானே. அங்கு அந்தப் பாக்கு வெற்றி லைதான் சாட்சிப் பொருள். அது மட்டுமல்ல. ஒரு மங்கலமான நாளில் ஒரு பெண் மற்றொரு பெண்ணிற்கு பாக்கு வெற்றிலையை அளிப்பது. 'இதன் சாட்சியாக இன்று முதல் நீ என் தோழி. வாழ்க்கையில் இன்பங்கள் சிறக்க நீ வாழ்ந்திட நான் வாழ்த்துகிறேன்' என்பது தான் அதன் பொருள். வாழ்க்கையில் பல நிலைகளில் பயன்படுத்தப்படும் இந்த வெற்றிலை பல பலன்களை அளிக்கவல்லது. இப்படி வெற்றிலையின் சிறப்பை தற்போது உணர்ந்த நீங்கள் இனி வெட்கப்படாதீர்கள். இவையெல்லாம் நட்பின் அன்பின் சின்னம். இவற்றை இன்றைய நாகரீக உலகமே ஏற்குமே!"

"நாகரீகம் ஃபாஷன் பழைய மாடல்கள் புதியதைப் போன்று மீண்டும் வளைய வருகிறது. அதைப் போல இம்பாரம்பரிய முறைகளும் மீண்டும் வருமா?"

"வரும். வரணும். அந்நிலையை உருவாக்குவதும் உங்களைப் போன்ற இளம் மங்கையர்களின் கைகளில்தான் உள்ளது. நாகரீகம் தேவைதான் ஆனால் நம் பாரம்பரியத்தை உணர்ந்து அதனைக் காப்பாற்றுங்கள் மூடநம்பிக்கை வேண்டாம். தொன்மையான பாரத வேதாந்தத்தைக் கைவிட்டு விடாதீர்கள். எந்த ஒரு நல்ல காரியமும் உன்னிலிருந்துதான் தொடங்க வேண்டும் என்கிறார், அந்நிய மண்ணில் நம் வேதாந்தத்தை முழக்கமிட்ட சுவாமி விவேகானந்தர். இன்றைக்கு இருக்கும் கல்வி முறையும் இயங்கும் சமூகமும் அதன் கேளிக்கை முறைகளும் (குறிப்பாகத் திரைப் படங்கள்) எந்த ஒரு விதத்திலும் வளருகின்ற சமுதாயத்தின் அமைதியான வாழ்க்கைக்கு அஸ்திவாரமாய் அமையாது. அமையப் போவதில்லை. நீங்கள்தான் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும்!"

தொகுப்பு : **கீதா மோஹன்**



தினமும் செய்யும் சுண்டலுக்கு சுவையும், வாசனையும் கூட்ட தினமும் சிரமப்பட வேண்டாம். நவராத்திரிக்கு முதல் நாளே கசகசா 50 கிராம், பொ. கடலை 50 கிராம், க. பருப்பு 50 கிராம், மல்லி 25 கிராம், பெருங்காயம் சிறிதளவு, மி. வற்றல் 30, உப்பு சிறிதளவு எடுக்கவும். வெற்று வாணலியில் மி. வற்றல், மல்லி, கடலைப் பருப்பை சிவக்க வறுக்கவும். பிறகு பொ. கடலை, கசகசா, பெருங்காயப் பொடி போட்டு வறுக்கவும். உப்பைச் சேர்த்து கொர, கொரவென பொடிக்கவும். சுண்டல் செய்து முடிக்கும் போது, சுண்டல் அளவுக்குத் தகுந்தபடி 1 ஸ்பூன், 2 ஸ்பூன் பொடியைத் தூவி, கிளறி இறக்கவும். 1 ஸ்பூன் நெய்யும் விட்டுக் கிளறலாம். தினமும் அருமையான சுண்டல் கிடைக்கும். மேலும் வேலைக்குச் செல்பவர்கள், சுண்டல் எளிதாய் செய்து விடலாம். தேங்காய் கூட தேவையில்லை.

- கமலா

200 வாட்ஸ் வெளிச்சம்
24 மணிநேரம் நீண்ட பிரகாசம்
6 கிலோ எடை இதோ பிரைமஸ் கேப்ஸன்ஸ் ஆட்டோகுளோ



உங்களுடைய வாழ்க்கைக்கு ஒளியூட்டக்கூடிய இந்த திட்டத்தைப்பற்றி அறிந்து கொள்ள உடனே விஜயம் செய்யுங்கள். அருகில் உள்ள பிரைமஸ் கேப்ஸன்ஸ் கடைக்கு.

ஆட்டோமெடிக் பிஸோ லைட்டிங் குமிழ்

24 மணி நேரம் நீண்ட பிரகாசம்

இத்துறையில் சர்வதேச அளவில் புகழ் பெற்ற பிரைமஸ் ஏ.பி. ஸ்வீடனுடன் கூட்டிணைப்பு

ஐ.எஸ்.ஐ. மார்க்

Autoglo


FROM

PRIMUS KABSONS

PRIMUS KABSONS LIMITED
Under licence from PRIMUS AB, SWEDEN

தலைமை அலுவலகம் :
8-3-1087 பிளாட் எண் 48,
ஸ்ரீநகர் காலனி, ஹைதராபாத் 873.
போன் : 220227/227548/227658.

கிளை அலுவலகம் :
தெரு : 89/1, அன்போம், இரண்டாம் மாடி, காந்தி பஜார் மெயின் ரோடு,
பெங்களூர்-4. போன் : 621761/627677.


OWN YOUR FLAT AT MADRAS
AKSHAYA
16, 3rd Main Road, Nanganallur, Madras - 600 061
AASHIRWAD
No.1, 1st Lane, 2nd Main Road, Trustpuram, Kodambakkam, Madras - 600 024
AISHWARYA
Plot 1 & 2, 7th Main Road, Dhandeeswarar Nagar, Velacheri, Madras - 600 042
ADITYA
15/4, Jayammal St., Extn., Aminjikarai, Madras - 600 029
CREATORS NOT JUST BUILDERS
ASSOCIATED BUILDERS
2nd Floor, 26, Ranganathan Street, T.Nagar, Madras - 600 017. INDIA
Ph : Off : 4340224 / 4340210. Res : 2345244. Telefax : (044) 2344333
உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் டீலக்ஸ் ஃபிளாட்டுகளும் பங்களாக்களும் சென்னை நகரின் பல்வேறு கௌரவமான பகுதிகளில் கிடைக்கும்.
கட்டடப் பணியின் முன்னேற்றத்தையொட்டி, வட்டியில்லாத தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம், அல்லது மொத்த கட்டணமும் செலுத்தி பத்து சதவிகிதம் தள்ளுபடி பெறலாம்.
முன்னணி நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி செய்து தரப்படும்.
நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் ரசனையுடன் அழகாக வடிவமைக்கப்படுகின்றன.
தரமான கட்டமைப்பு; நிர்ணயித்த கால்க் கெடுவுக்குள் முடிக்கப்படும்.



• நவராத்திரி கொலு......

பழசாகாமல் உடையாமல் இருக்கின்றன. சுமார் நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து கொலு வைத்து வருகிறேன். இதில் இடைவெளி என்பது என் மாமியார், மாமனார் இறந்த அந்த இரண்டு வருடங்கள்தான். தொடர்ந்து புதிய பொம்மைகள் வாங்கி வந்தாலும் பழைய பொம்மைகளின் அழகே அலாதி.

காலையில் லலிதா சஹஸ்ரநாமம் அர்ச்சனை சிரத்தையாக நடக்கும். மாலையில் தினமும் வீடு நிறைய பெண்களும் குழந்தைகளும் நிரம்பி வழியும். பக்தி, கலை எல்லோரும் ஒன்றுகூடி மகிழ ஒரு சந்தர்ப்பம்தான் இந்த நவராத்திரி என்பது என் கருத்து."





• விசாலாட்சி



• ருக்மிணி



திருமதி விசாலாட்சி நாகராஜன் :

பழமைக்கு...



• அனுராதா

மிகப் பழைமையான வீடு. அதற்கேற்றாற்போல் மிகப் பெரிய அழகிய பொம்மைகள். இந்தப் பொம்மைகளின் வயது ஐம்பது வருடங்களுக்கும் மேல். பார்த்தால் நிச்சயமாக நம்ப முடியாது. புத்தம் புதிதாக இருக்கின்றன. "சில பொம்மைகள் 1920 ஆம் வருடம் என் மாமியாருக்குத் திருமண சீதனமாக வந்தவை" என்கிறார் விசாலாட்சி.

"1955 இல் இந்த வீடு கட்டும்போது, கொலு வைப்பதற்காகப் பெரிய ஹால், பொம்மைகளைப் பத்திரமாக வைப்பதற்கு மாடிப்படியின்கீழ் அலமாரி போல் தட்டுக்கள் வைத்த அறை. மரத்தால் படிகள் இவை எல்லாமே என் மாமியாரின் திட்டம். பொம்மைகளை அப்படியே அந்த அலமாரியில் கொலு போலவே வைத்து, பூச்சி மருந்து பவுடர் நிறைய தூவி கதவைச் சாத்திப் பூட்டி வைத்து விட்டால் பொம்மைகள்

நவராத்திரியில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்?

திருமதி சாவித்திரி ரமணி :

விருந்தினர்களுக்கு...

"நாங்கள் சிறுமிகளாக இருந்த போதே அம்மா எங்களுக்கு நவராத்திரி சமயத்தில் ராதை, கிருஷ்ணன் இப்படிப் பலவிதமாக அலங்காரம் செய்து விடுவார். கிராமம் முழுவதும் எங்கள் வீட்டு நவராத்திரி விழாவை ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். அந்தப் பாதிப்பினால் திருமணமாகி நான் மாமியார் வீட்டிற்கு வந்ததும் அதே போல் விமரிசையாகச் செய்து வருகிறேன். உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் குடும்பத்துடன் வந்து சந்தோஷமாகக் கூடி இருப்பதற்கு இந்த நவராத்திரி வழி செய்கிறது என்று நினைக்கிறேன். கொலு விமரிசையாக வைப்பதுடன் எங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களை குடும்பத்துடன் வரச் சொல்லி கார்டு போடுவேன். ஏதேனும் சில நாட்களை மட்டும் குறிப்பிடாமல் அவர்கள்வசதிப்படி என்று வேண்டுமானாலும் வரலாம் என்று அழைப்புக் கொடுப்பேன். என் அழைப்பை ஏற்று வீட்டிற்கு வரும் வேற்று மாநிலத்தினர், வேற்று மதத்தினர் எல்லோரும் ஓர் இடத்தில் கூடி நல்ல கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

என் அம்மா, மாமியார், ஓரகத்தி, என் பெண், என் கணவர் ஆகிய எல்லோருடைய ஒத்துழைப்புடன் இந்த ஒன்பது நாட்களையும் மிகவும் இனிமையாகக் கழிப்பேன்."

திருமதி ருக்மணி ராமச்சந்திரன் :

பூஜைக்கு...

"1951 ஆம் ஆண்டு திருமணமாகி வந்ததிலிருந்து நவராத்திரி ஒன்பது நாட்களும் விமரிசையாகப் பூஜை செய்து வருகிறோம். கொலுவாக வைப்பதில்லை. முதல் மூன்று நாட்கள் துர்க்கை, அடுத்த மூன்று நாட்கள் மகாலக்ஷ்மி, கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதியை ஆவாஹனம் செய்து பூஜை செய்வோம். சரஸ்வதி பூஜை அன்று புத்தகங்களை வைத்து நிறைய புஷ்பங்கள் போட்டுப் பூஜை செய்து அதற்கு மறுநாள் விஜயதசமி அன்று நவராத்திரி நிறைவு பெறுகிறது. இந்த ஒன்பது நாட்களும் பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள், தேங்காய், ரவிக்கைத் துண்டு முதலியன வைத்துக் கொடுப்போம். துர்க்கைக்குச் சர்க்கரைப் பொங்கல், லக்ஷ்மிக்குப் பாயசம், சுண்டல், சரஸ்வதிக்குப் பாயசம், சுண்டல், அவல் பொரி, கடலை முதலியன வைத்து நிவேதனம் செய்வோம்."

திருமதி மாலதி வைத்தியநாதன் :

சுற்று அலங்காரங்களுக்கு...

"நாங்கள் மூன்று சகோதரிகள். பள்ளியில் படிக்கும்போதிலிருந்தே நவராத்திரி கொலுவை மிகவும் விமரிசையாக வைப்போம். எங்களுடைய அம்மாதான் எங்களுக்கு நிறைய ஐடியாக்கள் கொடுப்பது. கோயில், தெப்பக்குளம், மலை, வயல் வரப்புகள் அடங்கிய ஒரு கிராமத்தையே



கொலுவில் பார்க் அமைக்கும்போது, பிஸ்கட் பாக்கெட்டின் உள்ளே இருக்கும் பேப்பரைக் கூரை போன்றவற்றிற்கு வைத்தால், அஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டது போலிருக்கும். அதன் வளைவான மேடுபள்ளங்கள் குளத்திற்குப் படிக்கட்டு அமைக்கவும் கைகொடுக்கும்.

- உமா

புகழ்பாடி எங்களை வந்தடையும் வாழ்த்துக்கள் வார்த்தைகளால் கூறப்படுவதில்லை.

பெருமிதம், அதிகாரம், விஷமம் மற்றும் சுறுசுறுப்பு. எளிதில் திருப்தி அடையாத எமது வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்தவையே திருப்தி தருவது மட்டுமின்றி போற்றுவதற்கு தகுதி படைத்தவை.



புஷ்டியான வளர்ச்சிக்கு ஒரு வரவேற்பு. இதற்கென்றே பரிசோதனைமூலம், இயற்கையான உணவுப்பொருட்களை சமவிகிதத்தில் கலந்து சிறந்த தொழில் நுட்ப உதவியுடன் உணவுப்பொருட்களின் இயற்கையான மணம், ருசி கெடாமல் செயற்கை ருசியின்றி இயற்கை மணம் கமழ வழங்குகிறோம்.



எங்களின் பலவகையான உணவு தயாரிப்புகள் 100% சுகாதார முறையில் உங்களின் கைகளை அடையும் வரை பிறரின் கைகள் படாமல் -உலகின் மிகச்சிறந்த மெஷின்களைக் கொண்டு தயாரிக்கப் படுகிறது.

எனவே, உங்கள் மகிழ்ச்சியான கீச்சக்குரல்களை, சிரிப்புக்களை உறுமல்களைக் கேட்கும்போது, நாங்கள் தலைவணங்கி கூறுகிறோம் "நன்றி".


ஹிந்துஸ்தான் ஃபூட்ஸ் லிட்.
உறுதியான முதல் அடி.

HF Hindustan Foods Ltd., Goa.

Avenues:HF:70:94

பழைய குக்கர் கேஸ்கட்டை வட்டமாக வைத்து, அதற்குள் புல்தரை அமைத்து, பூங்கா, மிருகக் காட்சி சாலை ஆகியவற்றை வைத்தால் இடத்தை அடைக் காமல், அழகாக, கச்சிதமாக இருக்கும்.

– உமா



கொண்டு வருவோம். மலை என்றால் தத்ரூபமாக இருக்கும். பிராகாரத் துடன் கோயில் செய்வோம்.

திருமணமாகி பெரிய வீட்டிற்குக் குடி போனதும் கிராமத்தை நகரமாக்கி விட்டேன். சிகரெட்டு டப்பாக்களில் வீடு, பல மாடி கட்டிடங்கள், தெருக் கள், சிக்னல், மருத்துவமனை, தியேட் டர், பார்க் இப்படி ஒரு மினி நகரமே எங்கள் வீட்டு ஹாலில் வந்துவிடும். ஒருமுறை மிருகக் காட்சி சாலை வைத் தேன். பயங்கரமான காட்டின் பின் னணியில் தனித்தனி கூண்டில் மிருகங் கள் வைத்தபோது, அந்த ஆண்டு எல் லோரையும் கவர்ந்தது அதுதான். தண்டவாளத்துடன் இரயில் வண்டி பொம்மை கிடைத்ததால் இரயில் நிலை யம் ஒன்றை ஓர் ஆண்டு அமைத் தோம்.

மாமி, குருக்கள், பார்சி பெண்மணி இப்படிச் சின்னச் சின்ன பொம்மை கள் என்னுடைய அம்மா காலத்தில் வாங்கியவை. இதற்கெல்லாம் எனக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்."

அழகாக கொலு வைக்க விரும்புகிறவர் களுக்கு மாலதி தரும் டிப்ஸ் -

●● மலைமேல் பார்க் ஆகிய இடங்களில் மரம் வளர்ந்தது போல் காட்டுவதற்கு கேழ்வரகு சிறந்தது. முதல் நாளே தெளித்து விடாதீர்கள். முதல் இரண்டு நாட்கள் தண்ணீரில் ஊறப் போட்டு மூன்றாவது நாள் தெளித்தால் சரஸ்வதி பூஜை வரை பச்சைப் பசே லென்று இருக்கும்.

●● மலை அமைக்க ஒரு பெரிய பாத்திரத்தைக் கவிழ்த்து வைத்து அதன் மேல் மண்ணைக் குவித்து வையுங்கள். சிகரெட்டு டப்பாக்களை வைத்துச் சிறிய வீடுகள், பங்களாக்கள் கட்டலாம்.

●● பெரிய மருந்து அல்லது சார்ஃப் டப்பாக்களில் காகிதம் ஒட்டி அதன்மேல் வண்ணக் காகிதத்தில் ஜன்னல் போல் வெட்டி ஒட்டிப் பல மாடிக் கட்டிடம் தயாரிக்கலாம்.

●● தார் ரோடிற்குக்கரியைப் பொடி செய்து தூவி விடவும். தெருவின் இரு பக்கங்களிலும் நடைபாதைக் குக் கொஞ்சம் கரிப்பொடி, கொஞ்சம் சாக்பீஸ் தூள் என்று மாற்றித் தூவலாம்.

●● தடிமனான துண்டு துடைப்பக்குச்சியில் சிகரெட்டு டப்பாவிலுள்ள வெள்ளை ஜரிகைக் காகிதத் தைச் சுற்றி ஒரு குச்சியை நட்டு அதன்மேல் வைத்து குண்டூசி குத்திவிட்டால் தெருக்களின் இரண்டு பக்க மும் டியூப் லைட் ரெடி.

திருமதி அனுராதா சந்திரசேகர் :

கோலத்துக்கு...

"எங்கள் வீட்டு நவராத்திரியில் நான் போடும் ரங்கோலிதான் ஸ்பெஷாலிடி" என்கிறார் திருமதி அனுராதா.

"கல்லூரியில் படிக்கும்போது ரங்கோலி போட ஆரம்பித்தேன். இப்போதும் நவராத்திரி ஆரம்பத்தில் ஒருநாள் லீவு போட்டுவிட்டு ரங்கோலி போடுவேன். ஆலிலைக் கண்ணன், குழலூதும் கண்ணன், ஆஞ்சநேயர், பூனைக்குட்டிகள் இப்படி ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு விதமாகப் போடுவேன். 'ரங்கோலி இருக்கிறது அல்லவா' என்று கேட்டுக் கொண்டேதான் பெண்கள் வருவார்கள். கொலு, பார்க் வகையறாவும் உண்டு. இந்த ஆண்டு கொலுவில் கிதோபதேசம் ரங்கோலி போட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

பல மணி நேரங்கள் அமர்ந்து ரங்கோலி போடுவதற்கும் கொலு வைப்பதற்கும் என் கணவர், குழந்தைகள் ஆகியோரின் ஒத்துழைப்பு இல்லாமல் நிச்சயமாக என்னால் முடியாது.

நவராத்திரி என்றாலே கலை ஆர்வம் வளருவதற்கு ஒரு வழி என்று நினைக் கிறேன்."

தொகுப்பு : **கலாமூர்த்தி**

போன வருடம் நவராத்திரியில் என்ன ஆச்சு தெரியுமா?

மாலதி

பண்டிகை, நாள் கிழமையெல்லாம் விட்டு விட்டார்கள். ரொம்ப 'மெக்கானிக்கல்' ஆகி விட்டார்கள் என்றுதானே பொதுவாக எல்லாரும் எல்லாரையும் சொல்லிக் கொள்கிறது வழக்கம்? விடாமல் இவற்றையெல்லாம் பண்ணுகிறவர்களுக்கு என்னவெல்லாம் நேர்கிறது என்பதை அனுபவப் பட்டவர்கள்தாம் சொல்ல வேண்டும்.

போன வருட நவராத்திரி அனுபவங்கள் பற்றிச் சொல்கிறேன்.

வழக்கம்போல நூற்றெழுபது அழைப்பிதழ்கள் நவராத்திரிக்காக அச்சடித்து வந்தன எங்கள் வீட்டுக்கு. ஆஃபீஸில் நெருக்கமான இருபது முப்பது பேருக்குக் கொடுத்தேன். அக்கம்பக்கம் முப்பது, கணவரிடம் இருபது, பெண்ணிடம் இருபது, மீதி எல்லாம் உறவினர் நண்பர்களுக்குப் போஸ்ட் செய்யப்பட்டன.

10.10.93 முதல் 24.10.93 வரை என்று அழைப்பிதழில் போட்டவர் கவரில் மட்டும் 26.10.93 வரை என்று கோளாறு பண்ணி விட்டார். புரூஃப் திருத்த வருகிறேன் என்று நான் முட்டிக் கொண்ட பின்பும் 'தேவையே இல்லை. நான் பக்காவாய்ப் பண்ணித் தருகிறேன்' என்று சொன்ன லட்சணம்.

என் தோழிகளிடையே 'என்ன நவராத்திரி வேண்டியிருக்கிறது. வருடா வருடம், பத்து வருடத்துக்கொருமுறை பண்ணினால் போதாதோ?' என்கிற மாதிரி ஒரு ரகம்.

'கார்டு எப்ப போட்டாய்? இன்விடேஷன் வந்ததே லேட். அதற்கப்புறம் ஒழியவேயில்லை. என்று குற்றம் படிக்கிற ஒரு ரகம். 'அப்புறம் முடியுமோ முடியாதோ முதல்ல வேலையை முடிச்சிக்கணும்' என்று முதல் நாளே பகலோ இரவோ கடமையாக ஓடி வரும் ஒரு ரகம்.

'இதென்ன ஃபார்மாலிட்டி மாலதி, நான் இந்த நவராத்திரி அது இது என்றெல்லாம் எங்கயும் போறதில்லை. நீ தான் கிடந்து அலட்டிக்கிற. போன வருஷம் நா வரல்ல, மூணாம் வருஷம் வரல்லன்னு. சிந்துவைப்பார் அவளும் தான் பொம்மை வெக்கிறா. ஏதோ சொல்வா. முடிஞ்சா வான்னு அத்தோட சரி. நான் போனதும் இல்ல. அவ கேட்டதும் இல்ல'.

இப்படி ஒரு ரகம்.

வீட்டுக்கு வந்த பேரிலும் வாய்விட்டுப் பாராட்டுகிறவர்கள் ரொம்பக் கொஞ்சம் பேர். மீதி எல்லாரும் ஏதாவது ஒரு நொட்டு சொல்லி விட்டுப் போவார்கள்.

எழுபத்து மூன்று வருஷப் பழசான மைசூர் மஹாராஜா மஹாராணி பொம்மைகளைப் பார்த்துவிட்டு 'பழசு கலர் போனதெல்லாம் வெக்கவே கூடாதுன்றாளே' என்பார்கள். கல்யாண செட், கல்யாணப் பெண்ணின் சாமான் செட் பார்த்து விட்டு 'விளையாட்டுச் சாமானெல்லாம் இவங்க பெண் பத்திரமா வெச்சிண்டிருந்திருக்கு. நம்ம வீட்டுப் பசங்க? உள்ளுக்குள்ள என்ன இருக்குன்னு பார்த்துட்டுத்தானே மறுவேலை!' என்பார்




குத்துக்குத்து
குத்துக்குத்தாயா
தோயா ரு
தியா மேயா...
மாம்...
மாம்...
மதி...



கள் அதியமான் தொண்டைமான் ஆயுதங்களை ஒப்பிட்டு ஔவையார் சொன்ன நக்கல் பாணியில்.

பொம்மைகளைக் காப்பாற்றுவது பெரியவர்களின் சாமர்த்தியத்திலும் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்வது, 'வாலில்லாக் குரங்கு' களுக்கு அவமானம் தானே?

'ஒரே பிள்ளையார் மயம்' என்று அங்கலாய்ப்பார்கள் கொஞ்சம் பேர். யாரோ சினிமாக் காரர் வீட்டுக் கொலுவைப் பற்றி மெச்சி சொல்லிப் போவார்கள். சிலபேர் நமக்குக் 'கர்வம்' வந்து விடாமலிருக்க.'

'என்னத்த கொலுவை வெச்சிட்டு வாயைத் திறக்காம? வத்சலா வீட்டிலே வெத்தலை பாக்கு வாங்கிண்டு வந்தேன். நேயர் விருப்பம்தான் போ அங்க. இந்தோளத்தில அவ நாத்தனார் பாடினா, மோஹனத்துல யாரோ வந்தவா, வத்சலா பொண்ணுக்கு நன்னா பாட்டுச் சொல்லி வெச்சிருக்கா, ராக மாலிகை ஒண்ணு பாடித்து, பிரமாதமாயிருந்தது?'

முதல் நாள் என் வீட்டில் தொழில் முறைக் கலைஞரைக் கூப்பிட்டு ரெண்டு மணி நேரக் கச்சேரியே வைத்து எல்லாருக்கும் சொல்லியிருந்தேன். ஈ, காக்கை வரவில்லை. டேப் எடுத்துக் காலையும் மாலையும் போட்டு ரசித்தோம். இதில் பாட்டு வாசனையே இல்லாத வீடு போல கரிப்பு வேறு.

ஒரு மாமி மடியாக மாலை நாலுமணிக்கு வந்துவிட்டு, 'ஐயய்ய' நவராத்திரிக்குப் பட்டுப் புடவை எல்லாம் கட்டிண்டு டம்பமா தாம்பூலமும் பழமும் தேங்காயும் தரவாவது. நான் பூஜையோடு சரி, லலிதா ஸஹஸ்ர நாமம் சொல்லி, த்ரிஸதி சொல்லி, ஸப்த சதி சொல்லி...?' லிஸ்ட் முடியவே இல்லை.

எத்தனை மட்டமான பழக்கம் வீடு வீடாகப் போய் சுண்டல் வாங்குவது, பாடுவது என்று முடித்தார். ஆத்ம சுத்தி, உப்பில்லா விரதம் அதானாம் நவராத்திரி.

'டாக்டருக்குப் படிக்கிற பெண் இப்படி பொம்மை வைத்து விளையாடுகிறது, என்ன இது படித்துக் கிழிக்கும்?' என்கிறார்போல் கண்டனங்கள் என் பெண்ணுக்கு. மழலைகள் மட்டுமே மனசுக்கு ஆறுதல்.

பக்கத்து வீட்டு ஸஹானாவுக்கு இன்னும் பேச்சே வரவில்லை. குட்டை கவுனும் முழு கால் உறை அணிகளுமாய் 'பெங்குவின் போல இருப்பாள், ஸஹானா. ரொம்ப மறுப்புகளுடன்தான் முதல் முறை பொம்மை பார்க்க வந்தாள். ஏனென்றால் அவளுக்குக் கண்ணில் தென்படுகிற அனைவருமே அவளைக் கடத்திக் கூண்டில் அடைப்பவர்கள் என்கிற எண்ணம். பறவை போல ஒடுங்கித் தாய் முதுகிலோ அல்லது அவளைப் பார்த்து கொள்ளும் 'ஆயா' பக்கமோ ஒட்டிக் கொள்வாள். கழுத்து வலிக்க ஒன்பது படியையும் அண்ணாந்து பார்த்தாள். அடுத்த பார்வை என் மீது முழு அப்ரிஸியேஷனோடு.

தூக்கிக் கொண்டிருப்பவர் பிணைப்புகளையெல்லாம் விலக்கி விட்டு தரையில் இறங்கிக் கொண்டாள். இரண்டாவது தட்டில் கல்யாணச் சாப்பாடு 'செட்' பொம்மையைக் கவனித்து விட்டு 'மாம், மாம்' என்றாள்.

கொலு வைத்தது ஸார்த்தகமாகி விட்டது எனக்கு. கொஞ்ச நேரம் எதையும் தொடவில்லை. மலைத்து மலைத்துப் பார்த்தாள். கவர்ச்சியான ஒரு சிவப்புப் பொம்மையை எடுக்க டபக்கென்று கை நீட்டி விட்டாள். நாங்கள் சாமர்த்தியமாகத் தவிர்த்து வேறு போக்குக் காட்டினோம்.

அப்புறம் ஒன்பது நாளும் 'பாப்பா, பாப்பா' என்று சொல்லிக் கொண்டு பொம்மை பார்க்க யாருடனாவது வந்து விடுவாள். கை வீசி அவள் நடக்கிற அழகும் கண் விரியப் பார்க்கிற நேர்த்தியும் எந்த பொம்மைக்கு வந்து விடும்?

இன்னொரு கலகல பார்வையாளன்



பிரிமியர்


மிக்ஸர் மேட்

சிறிதளவு பொருட்களை பெரிய மிக்ஸிகளில் அரைக்க இயலாமல் அவதிப்படுவது உங்களின் அன்றாட பிரச்சனையாகும்.

இப்போது பிரிமியர் மிக்ஸர்-மேட் உங்கள் தொல்லைகளை முற்றிலும் நீக்குகிறது.

பிரிமியர் மிக்ஸர்-மேட் எல்லா வகையான மிக்ஸிகளுக்கும் பொருந்தும் வகையில் கிடைக்கிறது. (இந்திய மற்றும் வெளிநாடு)

இனி குறைந்த அளவுள்ள மசாலா மற்றும் சட்டினியை பிரிமியர் மிக்ஸர்-மேட்டில் மிக நேர்த்தியாக அறைப்பது ஓர் இனிய அனுபவம் ஆகும்.



இப்போது
ஸ்டெயின்லஸ்ஸ்டீலிலும்
கிடைக்கிறது

Marketed by:

Premier Marketing

Waikiki Complex
289, P.H.Road, Madras - 600 007
Phone : 6421924/6424779

'நிகில்' வயது இரண்டே கால். அவனுடைய ஸ்பெஷாலிட்டி வாய் ஓயாத பேச்சு. ட,ர,ல போன்று ஏகப்பட்ட எழுத்துக்கள் வராத போதும் அடாது 'ய' போட்டு பேச்சு மட்டு மில்லை பாட்டு வேறு. டியூன் மாறாமல் அத்தனை ஹிந்திப் பாட்டும் அத்துப்படி யாய்ப் பாடுவான். 'துத்துத்'தா துத்துத் தாயா தோயோ ந தியா மையா' என்பான். 'தோடோ ந தில் ஹமாரா' வாம் அது. அவன் கொலு வின் முன் உட்கார்ந்ததுமே 'அவர்கள் வீட்டு டிவியில் 'குக் குக் குக்' வருகிறது' என்றான். அவன் சொன்னபின்தான் கவனித்தோம் பொம்மை டிவியில் காஸ்ட்யூம் அச்சு அசல் 'சோலி கே பீச்சே' பாட்டின் மாதுரி தீட்சித் காஸ்ட்யூம்.

அத்தனை பொம்மைக்கும் தப்பாமல் கமெண்ட் சொன்னான். 'எதையும் தொடக் கூடாது. எல்லாம் சாமி' என்று தனக்குத் தானே ஜெபம் பண்ணிக் கொண்டான். படு அமர்க்களமான மூட் வந்து விட கைரிக்ஷா, சைக்கிள், ஸ்கூட்டர் எல்லாம் எடுத்துப் பார்க்கும் ஆவல் வந்து கை நீட்டலானான். மிக்ஸியை 'பொம்' என்று சுத்த வைக்கவும் 'ஸ்ஸ்' என்பதாகக் குக்கரை இறக்கி வைக்க வும் முற்படலானான். அவனைத் திசை திருப்ப டைனிங் டேபிளுக்குக் கொண்டு போனோம்.


எல்லாக் குழந்தைகளுமே பொதுவாகச் செய்தது மீண்டும் வீட்டுக்குப் போக மறுத் ததுதான். என் கஸினின் பெண் 'இங்கேயே இருக்கேன், இன்னிக்கு, நாளக்கி அதுக்கு மறு நாள் அப்புறம் அப்புறம்' என்று பத்துப் பதி னைந்து நாள் போல கணக்கில் வைத்தாள். என் கஸினும் வேறு வழியின்றி 'சரி இங்கயே இரு. இப்ப ராமுமாமா வீடு போய்ட்டுத் திரும்பி வரலாம். அப்புறம் இங்கயே இருப் பியாம்' என்று ஏமாற்ற அப்படியே நம்பிக் குழந்தை புறப்பட்டாள்.

காரில் ஏறினவளிடம் என் பெண் வாய் தவறி 'come another day' என்க குழந்தை



'நிதி, 'I am coming today only' என்றதே பார்க்க லாம் என் கஸின் மனசு உருகி அன்று என் வீட்டிலேயே தங்கி விட்டாள் குழந்தைக்காக.

இன்னொரு குழந்தை வந்தான். கீழ் வீட்டுக் குழந்தையின் ஸ்கூல் மேட். அவன் இங்கிருந்து போய் அவர்கள் குடும்பம் மொத் தத்தையும் அன்று மாலை அழைத்து வந்து விட்டான். அப்பா, அம்மா, சித்தி, சித்தப்பா, தாத்தா பாட்டி மற்றும் நாலு குழந்தைகள். அழுது அடம் பிடித்து அழைத்து வந்ததாகச் சொன்னார்கள். ஆண்கள் கூச்சப்பட்டு வாச லில் நின்றதைச் சொல்ல வேண்டும். குழந்தை அடம் பற்றித் தெனாலிராமன் மட்டும் தானா சொல்ல முடியும்? குடும் பத்தையே முன்பின் தெரியாத எங்கள் வீட் டுக்கு வரவழைத்த வாண்டு வெற்றிப் பார் வையை என்னிடம் வீசி விட்டு கடைக்குப் போய் வாங்க வேண்டிய பொம்மை லிஸ்ட்டை அம்மாவிடம் சொல்லலானான் தான் சொந்த சேகரிப்புக்கு. இந்த முறை நவராத்திரியில் நாலே நாள் வொர்க்கிங் டேஸ். மீதி நான் ஆபீஸ் லீவ். அப்படியும் ஆபீஸ் பெண்கள் சாக்குச் சாக்காய் சாக்கு சொன்னார்கள், மஞ்சள் குங்குமத்துக்கு வர முடியாததற்கு. முப்பத்திரண்டு இடங்கள் போய் வந்திருப்பார்கள். அதிகாரியான என் னிடமே பர்மிஷன் பெற்றுக் கொண்டு.



நவராத்திரிக்குச் செய்யும் சுண்டலில் கொத்துமல்லி விதை, மிளகாய் வற்றலை வறுத்துப் பிசிறிவிடுங்கள். மசாலா கடலைச் சுண்டல் போல பிரமாதமாக இருக்கும்.

- ஸரோஜா ரங்கராஜன்



அற்புதமான சுவை,
மணம் நிறைந்த மகிழ்ச்சி!
அதுவே பெஸ்ட் குலாப் ஜாமுன் மிக்ஸ்
மற்றும் பெஸ்ட் ரியல் பாதாம் மில்க்
BEST BRAND
FOR PREPARING
REAL BADAM MILK
BEST BRAND
INSTANT
GULAB JAMOON MIX
TO PREPARE
50
JAMOONS
உங்கள் வாழ்க்கைக்கு சுவையூட்டும்
எங்களது இதர தயாரிப்புக்கள்.
பெஸ்ட் ஹல்வா மிக்ஸ்
பெஸ்ட் ஐஸ்க்ரிம் மிக்ஸ்
பெஸ்ட் ரவா இட்லி மிக்ஸ்
பெஸ்ட் ரசகுல்லா மிக்ஸ்
பெஸ்ட் வடை மிக்ஸ்
BEST PRODUCTS CO.
108, BULL TEMPLE ROAD CROSS,
BANGALORE-560 019
PHONE: OFF: 602992, RESI: 608350
VITTO



நவராத்திரி சமயத்தில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம் வைத்துக் கொடுக்கும்போது வசதியுள்ளவர்கள் சிறிய அளவிலான பாக்கெட் சைஸில் உள்ள ஸ்லோகப் புத்தகங்களையும் (அபிராமி அந்தாதி, மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம், லட்சுமி ஸ்தோத்திரம்) போன்றவைகளையும் சேர்த்துக் கொடுத்தால் வாங்கிக் கொள்பவர்களுக்கும் கொடுப்பவர்களுக்கும் மனநிறைவு ஏற்படும். மேலும் அது அவர்களுக்கும் மிக்க பயனுள்ளதாகவும் இருக்கும்.

- உஷா நாராயணன்

ஸ்பென்ஸர் பிளாஸாவில் ஷாப்பிங், சாமுண்டியில் தள்ளுபடி விற்பனை, பாதையோர மருதாணி டிஸைனரிடம் அப்பாயிண்ட்மெண்ட், டெய்லர் கடை, ஜமக்காளக் கடை, கோ ஆப் டெக்ஸ் ஆறு தவணை எல்லாவற்றுக்கும் நேரம் இருந்தது. சம்பிரதாயமாக மஞ்சள் குங்குமத்துக்கு வர ஒழியவில்லை.

வராமல் இருப்பதே பரவாயில்லை வந்துவிட்டு ஒரு கூடை குறை சொல்வதை விட என்று உணர்த்தினாள் ஒரு புண்ணியவதி. 25.10.93 காலை மெனக் கெட்டு போன் பண்ணி (பண்டிகையெல்லாம் ஆச்சா' என்ற போது நான் சாங்கோபாங்கமாக விஷ்ணு ஸஹஸ்ர நாமம், நாலாயிர திவ்ய ப்ரபந்தம், சௌந்தர்ய லஹரி பிரதக்ஷிண பூஜை, ருக்மிணி கல்யாண லகு பூஜை என்றெல்லாம் ஒன்பது நாளும் பண்ணினதைச் சொல்லி வைத்தேன். பீற்றலுக்குத்தான் நான் பிறந்ததே). 'பூஜை எப்ப நடக்கறதுன்னு சொல்லியிருந்தா எங்கம்மாவைப் 'பேக்' பண்ணி வெச்சிருப்பேன்' என்றாள்.

'ஆமாமாம், எப்பப்ப பூஜைன்னு இனப் படி. சொல்லணுமா என்ன? பத்து நாளைக்கு மாய் பத்திரிகை அனுப்பி வைக்கலையா? அன்னன்னி புரோகிராம் அப்பப்ப டிஸைட் ஆகும்' என்றேன். இன்னிக்கும் தசமி மிச்சமிருக்கு. தேவி பாடம் படிக்கிறேன். வேணா வாயேன் அம்மாவோடு' என்றும் சொல்லி வைத்தேன்.

அன்று ஆபீஸ் லீவ். ஆனாலும் இரவு எட்டரை மணிக்கு வந்து சேர்ந்தாள். வந்தவுடன் எத்தனை சிரமப்பட்டு வந்தேன் என்பதை விவரித்தாள். குழந்தையிடம் (2 வயது) அது கேட்காமலேயே கொலு சாமான்களைக் கையில் கொடுத்தாள். அவன் எப்படி எல்லாம் உடைப்பான் கடிப்பான் என்பதை ரசனையுடன் சொன்னாள். அந்தக் குழந்தை பாவம் கொலுவை அனுபவிக்கவேயில்லை. இருந்த நேரத்தில் பாதி நேரம் பாத்ருமில் இருந்தது. அவசரம் அவசரம் என்று சொல்லிக் கொண்டு ஒன்னரை மணி நேரம் இருந்து வீட்டில் சாப்பாட்டு நேரத்தைக் கெடுத்து இரவு பத்து மணிக்கு வீடு போய்ச் சேர்ந்தாள்.



வீட்டுக்குப் போய் எனக்குப் போனும் செய்தாள். பேசிய விஷயங்களில் முக்கியமானவை (1)அவளுக்கு ஆட்டோச் செலவு ரூ.45 ஆனது (இரவு 10 மணி டபிள் ரேட்) (2) நான் கொடுத்த பஜ்ஜியையும் ரோஸ்மில்க் கையும் அவள் வாந்தி எடுத்தது (3) என் வீடு வரு முன் அவள் பார்த்த மிகப் பெரிய கொலு. (எவ்வளவு பெரிய என்று சொல்லவில்லை)

பஸ்ஸில் ஒரு தோழியிடம் என் கடைசி நவராத்திரி அனுபவத்தைச் சொன்னேன். ஒரு விநாடி யோசித்துவிட்டு அவள் சொன்னது 'தப்பா நெனைக்காதிங்க உங்க தோழியர் வட்டம் சரியில்லை' நான் சிரித்தபடி அவளுக்கு நினைவூட்டினேன்.

'நண்பன் சரியில்லை என்றால் நான் தான் சரியில்லை என்று அர்த்தம், தெரியுமில்லையா?' என்று.

உயிரோடு உள்ள தலைவர்களுக்குப் பொம்மை செய்ய மாட்டாங்க

நவராத்திரி என்றவுடன் 'கொலு பொம்மைகள்' ஞாபகத்திற்கு வந்துவிடும் அல்லவா? அந்த விதவிதமான, வண்ணமயமான, நிறுக நிறுசான பொம்மைகள் செய்வதைத் தொழிலாகக் கொண்டு மதுரை அருகே 'விளாச்சேரி' கிராமம் புகழோடு திகழ்கிறது. மதுரையில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் பசுமையான வயல் வெளிகளைத் தாண்டி அந்த சின்னஞ் சிறிய விளாச்சேரி கிராமத்திற்குள் சென்ற போது வீட்டுக்கு வீடு பெண்கள் பொம்மைகள் செய்து கொண்டு இருந்ததைக் காண முடிந்தது. வயதான, நடுத்தர வயதுப் பெண்கள் மட்டுமின்றி சிறுமிகளும் ஆழ்ந்த கவனத்துடன் மும்முரமாக பொம்மைகள் செய்து கொண்டு இருந்தார்கள்.



"இந்தக் கிராமத்திலே பொம்மைகள் செய்யற தொழில் துவங்கி முப்பத்தியஞ்சு வருஷம் ஆகுது. முதன் முதலா இங்கு இந்தத் தொழிலை ஆரம்பித்தவர் என் மாமனார் சதாசிவம் தான். அவர் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நானும் முழுமையாக இதில் இறங்கி விட்டேன். மதுரை மாவட்டம் முழுவதற்கும் எங்க கிராமத்துலேந்துதான் பொம்மைகள் சப்ளை செய்யறோம். காதிகிராப்டில் வந்து வாங்கிட்டு போவாங்க. வேறு பிரபல கடைகள் முதல் சாதாரண பொம்மை விற்கும் வியாபாரி வரை இங்கே வந்து வாங்கிட்டு போவாங்க. இந்த பொம்மை தொழில் நம்பி முப்பது குடும்பங்கள் வாழறோம். பெரிய லாபம் இல்லைன்னாலும் கஞ்சி குடிக்கற அளவு மாசம் இரண்டாயிரம் ரூபாய் வரை கிடைச்சிடும். எல்லா ஜாதிக்காரங்களும் ஒற்றுமையா இந்தத் தொழில் செய்யறோம். கோவில் கடைகாரங்க பொம்மைகள் வாங்கிட்டு போவாங்க. கோவில் விசேஷ காலங்களில் நிறைய பொம்மைகள் விற்பனை ஆகும். விநாயகர் சதுர்த்தி நேரத்தில் பிள்ளையார் பொம்மைகள் நிறைய செஞ்சு கொடுப்போம்.

நவராத்திரி சமயம்தான் எங்களுக்குப் பொற்காலம். கொலுவில் வைக்க நிறைய பெண்கள், வசதியான வீட்டுக்கார அம்மா எல்லாம் காரில் வந்து ஆர்டர் கொடுத்து பொம்மைகள் வாங்கிட்டு போவாங்க.


திருநெல்வேலி, பழநி போன்ற வெளியூர்களுக்கும் பொம்மைகள் ஆர்டர் வந்து அனுப்பறோம். சாதாரணமா மாரியம்மன், முருகன், மீனாட்சி சிலைகள் நிறைய விற்பனை ஆகும். மாரியம்மன் கோவில் விசேஷம் வந்தால் எங்க காட்டிலே மழைதான். சாதாரணமாக மண் பொம்மைகள் ஏழு ரூபாயில் இருந்து முப்பது ரூபாய் வரை விலை வைப்போம். 'பேப்பர் மேஷ்' பொம்மைகள் ஐம்பது ரூபாயில் இருந்து நானூறு ரூபாய் வரை விலைக்குக் கொடுப்போம். அரசாங்க உதவியுடன் எங்கள் சங்கம் பொம்மைகள் செய்யும் வகுப்புகள் நடத்தி சம்பளமும் தருகிறது.

பொம்மைகள் செய்வது எப்படி என்று சின்னச் சின்ன பொம்மைகளை செய்து கொண்டிருந்த இரு சிறுமிகள் சொன்னார்கள்...

"கம்மாயில் (கண்மாயில்!) இருந்து களி மண் எடுத்து. ஆத்தங்கரையில் இருந்து வண்டல் மண் எடுத்து. ஐந்து ஐந்து தட்டுகள் இரண்டு மண்ணிலும் எடுத்துத் தண்ணீர் ஊற்றித் தொட்டியில் கரைத்துச் சல்லடையில் வடிகட்டி கல் இல்லாமல் செய்ய வேண்டும். மறுநாள் அந்த மண்ணை பக்குவம் செய்து

எடுத்து எந்தப் பொம்மை வேண்டுமோ அந்த வடிவ பொம்மை 'மோல்டில்' மண்ணைப் போட்டு அமுக்கிவிடணும். பிறகு குச்சியால் பொம் மையை வெளியே எடுத்து கிள்ளினால் வராதுபடி காயவைத்துப் பிறகு சூளையில் வைக்க ணும். விறகு, எரு, தேங்காய் மட்டை எரிய வைத்த சூளையில் பொம்மை பக்குவப்பட்டு உறுதி யாகிவிடும். பிறகு வண்ணம் தீட்டுவோம். பொம்மையின் கண் வரைவது கஷ்டமான விஷயம்.

பொம்மை செய்ய பயன்படும் 'மோல்டு' செய்யறவங்க இங்க ஏழெட்டு பேர்கள்தான் இருக்காங்க. இருபது ரூபாய் சம்பளம் ஒரு நாளைக்குத் தருவாங்க. பனிரெண்டு பொம்மைகள் செய்யணும். எங்க சம்பளத்தை வைச்சுதான் எங்க குடும்பமே சாப்பிடும். பங்குனி, சித்திரை, ஆனி மாதங்களில் எங்க தொழில் சுமாரா நடக்கும். அப்ப கஷ்டப்பட வேண்டி இருக்கும். முதலில் சம்பாதித்ததில் சேமிச்சு வைச்சதை எடுத்துச் செலவழிப்போம். இந்தப் பொம்மை தொழில் மேலே ஈடுபாடு வந்ததாலே எங்களுக்குப் படிக்க பிடிக்கலை. இதையே முழு நேரமும் செய்யறோம்."





பந்துலுவின் மனைவி சில விளக்கங்களைச் சொன்னார்.

"இந்த பொம்மைகள் செய்யற தொழிலை தெய்வமா நாங்க மதிக்கறோம். வீட்டு விலக்கு நாட்களில் பொம்மை செய்ய மாட்டோம். தினமும் சாமிக்குப் பூசை செஞ்சிட்டுதான் பொம்மை செய்யத் துவங்குவோம். சில சமயம் பொம்மை சரியா வரலைன்னா ரொம்ப வேதனைப்படுவோம். அதை நினைச்சே சாப்பிடக் கூட மாட்டோம். நவராத்திரி நேரத்தில் ராத்திரி கண்முழிச்சு இரவு பகலா பொம்மைகள் செய்வோம். இதை நம்பி எங்க கிராமமே வாழுது. நவராத்திரி 'செட் பொம்மைகள்' எங்க புகழை ஊர் அறியச் செய்கிறது. எம்.ஜி.ஆர். பொம்மை செஞ்சதுதான் எங்களுக்குச் சவாலா அமைஞ்ச விஷயம். ரொம்ப இஷ்டப்பட்டு 'மோல்டு' செஞ்சு பொம்மை செய்தோம்.

நவராத்திரி சமயத்திலே டவுனுக்குப் போய் பெரிய பங்களா முதல் சின்ன வீடுகள் வரை எங்க பொம்மைகளைக் கொலுவில் அழகா அடுக்கி வைச்சு இருப்பதை வெளியே இருந்தே பார்த்து சந்தோஷப்பட்டு விட்டு வருவோம். உயிரோட இருக்கற தலைவர்களுக்குப் பொம்மை செய்ய மாட்டோம். அது எங்க கொள்கை. பொம்மைகளை வெளியூர் வண்டிகளில் அனுப்பும் போது உடைஞ்சு போய் நஷ்டம் உண்டாயிடுது. பொம்மை இன்சூரன்ஸ் கொண்டு வந்தால் நல்லது. அது போல எங்க கிராமத்திலே ஒரே இடத்தில் பொம்மைகள் செய்ய வசதியை அரசாங்கம் செஞ்சு கொடுத்தால் நல்லது."

தொகுப்பு, படங்கள் : **விஜயா கண்ணன்**


கூந்தலுக்கு
இளமை
ஏ.வி.டி.யின் செழுமையான புதிய தீபிகா தேங்காய் எண்ணெய். இது உங்கள் கூந்தலுக்கு அளிக்கிறது — அதிக பளபளப்பு மற்றும் இளமை யான தோற்றம். இயற்கை தரும் வளம் குன்றாமல் மிகச் சிறந்த தேங்காய்களிலிருந்து தயாரிக்கப் படுகிறது தீபிகா. பிசுக்கை உண்டாக்காத மெல்லிய தீபிகா, கூந்தலை வாரிச்சீவிட வசதி யானது. ஏ.வி.டி.யின் தரம். இன்னும் சொல்ல வேண்டுமா என்ன?
AVT
DEEPIKA
COCONUT OIL
செழுமையான தேங்காய் எண்ணெயின் சக்தியைக் கண்டறியுங்கள்

ஆடையுலகில் என்ன புதுமை - 4

மேலை நாடுகளும் நம் உடைகள்



ஆடையுலகைப் பற்றி அறிந்து கொள்ள போகும் போது அகில உலகத்தையும் அறிந்து கொள்ள முடியுமோ? அதுவும் குறிப்பாக இன்றைய இளம்தலை முறையினரின் தீட்சண்யமான அறிவைப் பற்றி, பொழுது போக்கு பற்றி. அப்படி ஒரு சுவையான பயணமாகத்தான் இருந்தது, சேலம் டெக்ஸ் டைல்ஸில் இப்போது உருவாகிக் கொண் டிருக்கும் புதிய உடைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போனது.

சேலம் டெக்ஸ்டைல்ஸின் உரிமையாளர் பிரபாகரனும், அவருடைய மகள் கல்லூரி மாணவியான சுதாவும் அற்புதமாகப் பேசிக் கொண்டு வந்தார்கள், ஆத்தூரில் உள்ள அவர்களுடைய தொழிற்சாலைக்குப் போன போது.

காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது தொழில் துறையை ஊக்குவிக்கும் வகையில், சேலம் உடையாரை சேலம் டெக்ஸ்டைல்ஸை ஆரம்பிக்கச் சொன்னார். அப்படி ஆரம்ப மான ஸ்பின்னிங் தொழிற்சாலையே இன்று அவருடைய மகன் பிரபாகரனின் தலைமை யில் உலக அளவில் வியாபாரம் செய்கிறது.

சேலம் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலைக் குள் போய் மலை போலக் குவிந்து கிடந்த பஞ்சுப் பொதிகளைப் பார்த்த போது நாம் 'ரிவர்ஸில்' வருகிறோம் எனப் புரிந்தது. ஏனென் றால் இதற்கு முன்பு பார்த்ததெல்லாம் நூலி ழையில் இருந்து ஆடையாகத் தயாரான மற்ற உடைகளை. இவர்களோ பஞ்சிலிருந்து நூலிழைகளைத் தயாரிக்கிறார்கள். எனவே ஆரம்பம் இவர்களிடம் இருந்துதான். தரமான நூலிழைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புவது இவர்களின் முக்கியமான வியாபாரம்.

முதல் ஸ்டேஜ் மிக்ஸிங். பல ஊர்களில் இருந்து வரும் பஞ்சு மூட்டைகளைத் தரமான பஞ்சுதானா எனச் சோதித்து இவற்றைக் கலக்கிறார்கள். 'ப்ளோ ரூமில்' பல்வேறு மிஷின்களில் இவை நன்கு 'திறந்து' விடப்படு கிறது. 'என்னடா இது' என யோசிக் கிறீர்களா? இதைச் சாதாரண மாகப் 'பஞ்சடித்தல்' என்பார் கள். அந்தக் காலத்தில் பஞ்சை நன்கு அடித்துப் பிரிப்பார்கள் இல்லையா? இதையேதான் மிஷின்கள் செய்கின்றன. கெட்டி யாக, கொட்டைகள், அழுக்கு எனப் பலவற்றுடன் வருகின்ற பஞ்சினை நன்கு பிரித்து அழுக்கு கொட் டைகளை நீக்கி தூய பஞ்சாக, அதாவது 'பஞ்சு போல மென்மையாக' என்பார்களே அந்த மாதிரி மென்மையான நிலைமைக்குக் கொண்டு வருகிறார்கள். இப்படிப் பலமுறை சுத்திகரிக்கப்பட்டு நூல் எடுப்பதற்குத் தகுதி யான நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது.

ஜெனரல் மானேஜர் ஹரிநரசிம்ஹன் இவற்றையெல்லாம் சுவையாக விளக்கிக் கொண்டே வந்தார்.

இப்படி ஃபைன் குவாலிட்டியாக மாற்றப் படும் பஞ்சிலிருந்து ஏராளமான கதிர்கள் மூல மாக நூலாகத் திரிக்கப்படுகிறது. அதையெல் லாம் பார்க்க வேண்டுமே! நாளெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அத்தனை அழகு. இயந்திரங்கள் பஞ்சிலிருந்து நூலை எடுத்து 'சரசர'வென்று கோன்களில் சுற்றுகிறது! எத்தனை மெல்லிய தூய்மையான நூலிழைகள்!

ஒரு தானியங்கி இயந்திரத்தை ஸ்பின்னிங் மிஷினில் வைத்திருக்கிறார்கள். அது இயங்கிக் கொண்டே இருக்கிறது. ஆயிரக்கணக்கான கோன்களுக்கு நடுவே. ஒரு கோனில் நூல் குறிப்பிட்ட அளவு முடிந்தவுடனே ஸ்விட்சை ஆஃப் செய்து நிறுத்தி அதை நீக்கி விட்டு காலி கோனை மாட்டி ஸ்விட்சை ஆன் செய்து சுற்ற விட்டு அடுத்த நிறைந்த விட்ட கோனை நோக்கி நகரும். அது வேலை செய்யும் நேர்த்தி... அடடா... (நம்ப வீட்டில்



இப்படி ஒரு மிஷின் வீட்டு வேலைகளுக்கு இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்!

"இங்கேதான் நாங்கள் பல புதிய நூலிழைகளைத் தயாரிக்கிறோம்" என்கிறார் பிரபாகரன். காட்டனையும், லினனையும் இணைத்து நூலிழை நிலையிலேயே ஒன்று சேர்க்கும் போது ஒரு அழகிய புதிய நூலிழை உருவாகிறது. அதேபோல 'ஸ்ட்ரெட்ச்ட் ஃபேப்ரிக்' உருவாக்க வேறு பருத்தி இழைகள் தயாரிக்கப்படுகின்றன. ஃப்ளெக்ஸ் காட்டன் ஒரு புதிய முறை. அது ஒன்றுமில்லை, சணல் இழை ஒன்றையும், பருத்தி இழை ஒன்றையும் இணைக்கிறார்கள். இப்படி உருவாகும் 'கலப்பு இழை'யால் தயாரிக்கப்படும் ஆடைகள் அத்தனை அழகைக் கொடுக்கின்றன.

"இப்படிப் பல்வேறு புதிய நுட்பங்களை கண்டுபிடிப்புகளை அடிப்படை நிலையிலேயே நாங்கள் முயற்சி செய்கிறோம்" என்கிறார் பிரபாகரன். அந்த வகையில் உலகத் தரத்திற்கு

திரு. பிரபாகரனின் மகள் சுதா சென்னையில் டெக்ஸ்டைல்ஸ் டிசைனிங் படித்துக் கொண்டு இருக்கிறார். அவரிடம் இன்றைய கல்லூரி மாணவியரைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தேன். அடேயப்பா, இந்தக் காலப் பெண்கள்தான் எத்தனைத் தெளிவாக இருக்கிறார்கள் என்றுதான் பாராட்டத் தோன்றுகிறது...

"நாங்களெல்லாம் காலேஜுக்கு பாவாடை, தாவணிதான் போட்டுக்கிட்டுப் போவோம். ஆனால் இப்போ எங்கேயும் தாவணியைக் காணோமேம்மா...."

"ஐயோ, தாவணியா? புடைவை கட்டிக்கிட்டுப் போறவங்களையே ஒரு தனி ஜாதியாகத்தான் ஒதுக்கி வைக்கிறார்கள். தாவணி போட்டால் அவ்வளவுதான். இப்போ 'ட்ரெண்ட்' அந்த மாதிரி இருக்கு ஆன்ட்டி, அதனால நிறைய பேர் மத்தவங்க கேலி செய்வாங்களே அப்படீங்கறதுக்காகவே சுடிதார் இல்லேன்னா டூ பீஸ் மிடி போட்டுட்டு வர்றாங்க..."

"ஆனா நீங்களே ஒருநாள் நிமிர்ந்து புடைவை

இவர்களால் போட்டி போட முடிகிறது. 'லினன் காட்டன்' 'கலப்பு நூல் ஃபைன் கேஜ்' என்பது உலகின் சில மில்களில்தான் தயாரிக்கப்படுகிறது. அவற்றுள் 'சேலம் டெக்ஸ்டைல்ஸ்' ஒன்று. அதே போல பின்னல் மெஷினில் இவர்களுடைய தரத்திற்கு உலகிலேயே வெகு சில தொழிற் சாலைகளே உள்ளன. ஆசியாவில் இவர்களுடையது மட்டுமே இருக்கிறது.

இப்படிப் பல பெருமைகளுடன் தலை நிமிர்ந்து வரும் பருத்தி நூலிழைகள் மேலும் பல இயந்திரங்களின் மூலமாக சீர்செய்யப் படுகிறது. பருத்தியை நூலாக்கும்போது இருக்கும் பிசிறுகள் எல்லாம் அகற்றப்பட்டு ஒரே 'ஈவன்' இழையாக பெரிய கோன்களிலும், பிறகு சிறிய கோன்களிலும் சுற்றப்பட்டு ஏற்றுமதிக்குத் தயாராகின்றன.

அதே போல பின்னலாடை மெஷின்கள் 'பனியன் துணிகள்' என நாம் சாதாரணமாகச் சொல்லும் 'ஸ்ட்ரெட்ச்' துணி வகைகள் இங்கு பின்னப்படுகின்றன. நூற்றுக்கணக்கான சுழல் தக்களியின் மூலமாக வரும் நூல் பின்னிப் பின்னி உருளை வடிவ பனியன் துணிகளாக வெளிவருகின்றன. இவை வெகு நுணுக்கமாகத் தரம் சோதிக்கப்பட்டு



கட்டீங்க, அத்தனை அழகா அத்தனை பாந்தமா கட்டீங்க...?"

சிரிக்கிறாள். "அதுக்கு நாங்க எவ்வளவு நேரம் எடுத்துப்போம், தெரியுமா? இதுவும் ஒரு டிரெஸ் என்றோ, அல்லது திடீர் 'ஸர்ப்ரைஸ்' கொடுக்கவோ இப்படித்தான் எப்பவாவது புடைவையைக் கையில் எடுக்கறது. அந்த மாதிரி நேரத்துல ரொம்ப டைம் ஸ்பெண்ட் பண்ணி கட்டறோம்..."

"ஆனா சில காலேஜ்ல்ல இன்னும் சுடிதாருக்கோ மற்ற உடைகளுக்கோ அனுமதி இல்லாமலும் இருக்கு, இல்லையா?"

"உண்மைதான். அவங்க புடவைதான் கட்டிக்கிட்டு வரணும்னு ரொம்ப கண்டிப்பா இருக்காங்க. அந்தப் பெண்களை நினைக் கிறப்ப ரொம்பப் பாவமா இருக்கும். எதையுமே கண்டிச்சு அடக்கி வைக்கிறது ரொம்பத் தப்பு. அவங்க டீவியிலே, சினிமாவுலே, வெளியுலகத்திலே மத்த பெண்கள் விதவிதமா டிரெஸ் பண்ணிக்கிட்டுப் போறதைப் பாக்கறாங்க இல்லையா? அப்போ மனசுல ரொம்ப பாதிக்கத்தான் படுவாங்க. அது ஒருநாள் 'படார்'னு வெடிக்கும். அப்படிப்பட்டவங்களுக்குத் திடீர்ச் சுதந்திரம் கிடைக்கும் போது பலர் பயங்கரமா மாறிடறாங்க. அது தப்பில்லையா?"

• சுதா



"நீங்கள்ளாம் கூட மாடர்ன் டிரெஸ்னு சொல்லிட்டு 'கன்னாபின்னா'ன்னு போடத்தானே செய்றீங்க?"

"இல்ல ஆன்ட்டி. அப்படி இருக்கிறவங்க ரொம்ப கொஞ்ச பேர்தான். நாங்க என்னதான் மாடர்ன் டிரெஸ் போட்டாலும் ஒரு குறிப்பிட்ட லிமிட்டைத் தாண்டறது இல்லை. எங்க அம்மாக்களும் விடறதில்லை. எங்களுக்கே கூட எங்களுடைய பண்பாடு பத்தியும், கலாசாரத்தைப் பத்தியும் தெரியும் இல்லையா?"

"இத்தனை பேசற நீங்க கல்யாணத்தைப் பத்தி, மாமியார், நாத்தனார் பத்தி என்ன நினைக்கிறீங்க? ஏன்னா எங்களுடைய 'டீன்ஏஜ்'லே இந்த அளவுக்கு இதெல்லாம் பேசப்படலை. ஆனா இப்போ பத்திரிகைகள்ல, டீவியிலே எங்கே பார்த்தாலும் நிறைய விவாதிக்கறாங்க இல்லையா?"

"உண்மைதான். இதனால நிறைய பசங்க கல்யாணம் பண்ணிக்கவே பயப்படறாங்க. என்னால இப்படியெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு வாழவே முடியாது அப்படீங்கறாங்க..."

ஏற்றுமதிக்குத் தயாராகின்றன.

கொண்டு வரப்படும் பருத்தியின் தரத்தை நவீன கம்ப்யூட்டர்கள் ஒரு விநாடியில் எடை போட்டு விடுகிறது. முன்பெல்லாம் அதன் எடை, நீட்சித் தன்மை, தரம் இவற்றையெல்லாம் பார்க்க மணிக்கணக்கில் ஆகுமாம். இப்போது அந்தப் பருத்தியில் இருந்து கொஞ்சம் எடுத்து ஒரு நீள கிளிப்பில் எடுத்து அந்த மிஷினில் மாட்டி விட்டால் போதும். 'டக்டக்' என அதன் ஜாதகத்தையே கூறிவிடுகிறது. அறிவியல் முன்னேற்றம்! "இதற்கு முன்பு ஆடைகளைத் தயாரிக்க வேண்டும் என நான் நினைத்ததில்லை. ஆனால் நான் வெளிநாடுகளுக்குப் போன போது அவர்களின் உடைகளின் தரத்தைப் பார்த்த போது எனக்கும் அந்த ஆசை ஏற்பட்டது. ஏனென்றால் நாம் அனுப்பும் நூலிழைகளை கொண்டு விதவிதமான ஆடைகளைத் தயாரித்து அவர்கள் நமக்கே விற்பனை செய்கிறார்கள். நாமோ உலகத் தரத்திற்கு இழைகளை விற்பனை செய்கிறோம். நாமும் ஏன் புது முயற்சிகளில் இறங்கக் கூடாது என நினைத்தேன். அதன் விளைவுதான் சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் நடந்த உலக ஆடைகள் கண்காட்சியில் நாங்கள் தயாரித்த ஆடைகளை 'எக்ஸிபிட்' செய்தது. மிக நல்ல வரவேற்பு இருந்தது. இந்தத் துறையில் நாம் முன்னேற வேண்டும் என்றுதான் இப்போது முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம்...." - பிரபாகரன்.

"ஆனால் இப்போதைய வியாபார உலகில் பெரும் குழப்பங்கள் நிலவுகிறதே! அதுவும் வெளிநாட்டுச் சந்தை இந்தியாவை நோக்கி வேகமாக வந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் உங்களால் அவர்களின் மிகப் பெரிய வியாபார வெள்ளத்தில் சமாளிக்க முடியும் என நினைக்கிறீர்களா?"

"நிச்சயமாக முடியும். ஏனெனில் ஏற்கெனவே நாங்கள் உலகத் தரத்திற்குத்தான் நூலிழைகளைத் தயாரித்து வருகிறோம். தவிரவும் இனி எதிர்காலம் போட்டி மிகுந்ததாக இருக்கும். கடும் உழைப்பு, தரம், கிரியேட்டிவிடி இவை மூன்றும் இருந்தால்தான் இனி வாழ முடியும். இவை மூன்றும் அமையப் பெற்றவர்களுக்கு வியாபாரம் 'சேலஞ்சிங்' ஆக இருக்கும். இது நல்லதுதானே? நம்முடைய மக்களுக்கு நாம் கொடுப்பதுதான் பொருள் என்ற தன்மை போய் விடும் இல்லையா? யார் சிறப்பானதைக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு மார்க்கெட். எனவே ஒவ்வொருவரும் சிறந்ததையே தர வேண்டும் என முடிவெடுக்க

"அதனால இளம்பெண்கள்கிட்ட ஒரு பயத்தை உண்டு பண்ணிடறாங்க, இல்லையா? அது தவிர லைஃபை ஃபுல்லா அனலைஸ் பண்ணிடறதால ஒரு 'சார்ம்' போயிடுது. கற்பனைக்கு இடமே இல்லை இல்லையா?"

"இதை இப்படியும் பாஸிடிவ்வா நாங்க எடுத்துக்கறோம். உங்களுக்கெல்லாம் இந்தப் பிரச்னைகள் விரிவா தெரியாது. ஆனா எங்களுக்குத் தெரிஞ்சு போயிடறதால, இந்த மாதிரி ஒரு நிலைமை வந்தால் என்ன செய்யணும்னு தயாரா ஆயிடறோம். அப்படி இல்லாம நல்ல குடும்பம், நல்ல வாழ்க்கைன்னு அமைஞ்சுட்டா சந்தோஷமா வாழப் போறோம். ஜெனரல் மென்ட்டலா ப்ரபேர் ஆகிறதும் நல்லதுதானே!"

'ஓ வாரே வாஹ்' என்று கைதட்டிச் சந்தோஷிக்கத் தோன்றியது அந்தப் பெண் பேசும் போது. இளம்பெண்கள் தாயிடம் மிகுதியாகப் பாசம் செலுத்துகிறார்களாம். அந்தத் தாய் தன் மகளைப் புரிந்து கொண்டு, அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு தோழியாகும் போது ஒரு மிகச் சிறந்த நட்பு உருவாகிறது. ஆனால் பல குடும்பங்களில் இன்றைய தாய்மார்கள் தங்கள் டீன்-ஏஜ் பெண்களின் மென்மையான உணர்வுகளைப் புரிந்து கொள்வதே இல்லை என்று புகார் செய்கிறார்.

"என்னைப் பொறுத்தவரை நான் ரொம்ப லக்கி. என் தோழிகள் வந்துட்டா என்னோட மதரும் அவங்களோட உட்கார்ந்து பேச ஆரம்பிச்சுடுவாங்க. அதனால் என்னால எனக்கு என்ன பிரச்னைகள் ஏற்பட்டாலும் வெளிப்படையா பேச முடியுது. பட் பாவம் என்னோட பல ஃப்ரெண்ட்ஸ் ரொம்ப வருத்தப்படுவாங்க. அதனால அவங்க அம்மாக்களை விட்டு ரொம்ப தூரம் விலகிப் போயிடறதாலே பிரச்னைகள் வரும் போது பேரண்ட்ஸுக்குத் தெரியாமலேயே போயிடறது..."

இப்படி அறிவுபூர்வமாக விவாதித்த பெண், "ஐயோ, இப்பல்லாம் சினிமா பாட்டுக்களே கேட்க முடியலை. அன்னிக்கு ஒரு நாள் குட்டி குட்டி பசங்கள்ளாம் மோசமான பாட்டைப் பாடறாங்க. எங்களுக்கு ரொம்ப கஷ்டமாப் போச்சு!" என்கிறார்.

சுதா டெக்ஸ்டைல்ஸ் டிசைனிங் படிக்கிறார். ரெடிமேட் ஆடைகள் உலகில் பல புதிய டிசைன்கள், துணி வகைகள் இவற்றைக் கொண்டு வருவதுதான் இவருடைய லட்சியமாம். தன்னுடைய தந்தையின் தொழிற்சாலையில் ஆடைகள் பிரிவில் மிகுந்த அக்கறை காட்டுகிறார். பல டிசைன்ஸ் புத்தகங்களை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறார்.

வளரட்டும் இளையதலைமுறை!

இவர் ஒரு மாமனிதர்



சுரேந்திர மேத்தா

இவர் உருவாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க பெயர்

பாபாலால்

இவர் அந்தப் பெயருக்குப் பெருமை சேர்த்ததற்குக் காரணம்

இவர் இப்போது இருக்கும் இடம்:

Mehta

சுரேந்திர மேத்தா

வைரங்களின் உலகிலே இவரே ஒரு நிறுவனம். 50ஆண்டுகளுக்கும் மேலாக, வைரங்களுக்கு மிகப்பிரபலமான இடமாக பாபாலால் திகழ்ந்ததற்கு இவரே காரணம். இவருடைய தேர்ச்சியும் தெளிவான அறிவும் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. இவர் தம் திறமைகளை எல்லாம் நம்பகமான தம் குழுவினருக்கும் அளித்தார்... சகோதரர் **நரேஷ்,** மற்றும் மகன்களாகிய **துஷார்** மற்றும் **அபய்** ஏதேனும் ஒரு தோஷம் இருந்தால் அதை முதல் பார்வையிலேயே கண்டு கொள்ளக்கூடிய வியக்க வைக்கும் திறன் இவர்களுக்கு உண்டு.


மேத்தா ஜுவல்லரி

இரண்டு வருடங்களுக்கு முன்பு இவர்கள் புதிதாக ஒரு முயற்சி மேற்கொண்டார்கள்--மேத்தா வைரங்கள் என்றாலே பாபாலால் என்று சொல்லும் அளவுக்குப் புகழ் பெற்ற அதே நேர்த்தியான வேலைப்பாடும் துல்லியமும் இப்போது மேத்தா என்ற பெயருக்கும் பொருந்தும். எனவே இப்போது மேத்தா வைரம் மிகவும் புகழ்பெற்றுத் திகழ்வதில் வியப்பு என்ன இருக்கிறது !

Mehta
JEWELLERY

40, திருமலை பிள்ளை ரோடு
தி. நகர், சென்னை 600 017 தொலைபேசி: 828 3130
நேரம்: காலை 10.00 முதல் பிற்பகல் 1.30 வரை
பிற்பகல் 2.30 முதல் இரவு 7.00 வரை

ARTKG/1534



• கோன் மாற்றும் இயந்திரம்......


வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப் படுவார்கள், இல்லையா? 'ஏனோ தானோ' என இருக்க முடியாதே! இது ஒரு வரவேற்கத் தக்க அம்சம்தானே!" என உற்சாகமாகக் கூறுகிறார் பிரபாகரன்.

அவர் சொல்கிறார், கையில் உலகத் தரத்திற்குக் காட்டனை வைத்துக் கொண்டு... நம்மவர்களுக்கு 'அஸ்தியில் ஜுரம்' தானே... அது போகட்டும், அவர் அப்புறம் என்ன சொல்கிறார்...

"ஸோ... நாங்கள் ரெடிமேட் ஆடைகள் பக்கம் எங்கள் கவனத்தைத் திருப்ப ஆரம்பித்தோம். காட்டன், லினன் இவற்றை இணைத்து பல்வேறு மாடல்களில் உடைகளைத் தயாரிக்கிறோம். அதேபோல நிட்டட் துணியில் (பனியன் துணி) நைட்டீஸ் தயாரித்தோம். நைட்டீஸ் என்பதால் அதிலே பல பூக்களை அச்சிட்டு பல வண்ணங்களை அளித்தோம். துணியும் சாதாரண துணியாக இல்லாமல் நல்ல தரமான அழுத்தமான நிட்டட் துணியாக இருந்தது. இதை அணிந்து கொண்ட என் மகள் மறுநாள் சொன்னாள்,

"அப்பா, இந்தத் துணி நைட்டிக்கு ரொம்பப் பொருத்தம். ஏனெனில் தூங்கும் போது உடம்பை அசைக்க, தாராளமாக கையை காலை வைத்துக் கொள்ள இது 'ஸ்ட்ரெட்ச்' ஆகக்கூடியதாக இருப்பதால் ரொம்ப சௌகர்ய

• பஞ்சு நூலாகி டிரம்களில் நிறைகிறது....



டாக இருக்கு. இதுவே சாதாரண மான காட்டன் துணியாக இருந்தால் ஸ்ட்ரெட்ச் ஆகாதே?" என்றாள்.

இது முற்றிலும் உண்மை எனக்கு அப்போதுதான் பட்டது. நைட்டீஸுக்கு மிக அருமையான துணி நிட்டட் வகைகள்தான். அதேபோல பேண்ட், டீ-ஷர்ட் இவற்றிற்கெல்லாம் கூட நிட்டட் க்ளாத் மிக மிக வசதியானது. அதுவும் மேலைநாடுகளில் இதற்கு நல்ல 'டிமாண்ட்' இருக்கிறது. ஏனெனில் அவர்களில் டீ-ஷர்ட்டுகளையே மிகப் பெரும்பாலும் அணிகிறார்கள். தரமான, கெட்டியான நிட்டட் காட்டன் எத்தனையோ சௌகர்யங்களைத் தரும். அது உடம்போடு மென்மையாக இழைகிறது. அதேசமயம் வியர்வை உறிஞ்சும். 'கசகசப்பாக' இருக்காது. உடம்போடு சேர்ந்து இருப்பதால் நல்ல 'ஷேப்'பைத் தருகிறது..."

அப்போது எனக்குப் பொறி தட்டியது. "ஏன் சார், இத்தனைக்கு இந்தத் துணி சௌகர்யம் என்கிறீர்களே, இது ப்ளவுஸுக்கும் சௌகர்யம் இல்லையா? அதுவும் பெண்கள் ஒரே நிலையில் இருப்பதில்லை. கொஞ்சம் தடித்து, கொஞ்சம் மெலிந்து... 'ஸ்ட்ரெட்ச்' ஆகக் கூடியதாக இருந்தால் எங்களுக்கும் சௌகர்யமாக இருக்குமே..."

"அடேடே, ரொம்ப நல்ல ஐடியாவாக இருக்கிறதே..."

"ஆனால் ப்ளவுஸ் மெட்டீரியல் வரும் போது நிறைய கலர், நிறைய ஷேட்ஸ் என நிறைய சிரமங்கள் இருப்பதையும் நீங்கள் பார்க்க வேண்டும்..."

"பட் எங்களிடம் அதற்கான எல்லா அடிப்படை வசதிகளும் இருக்கின்றன. கண்டிப்பாக எங்களால் இந்தப் புதிய ஐடியாவையும் செய்ய முடியும் என நினைக்கிறேன்..."

அதே போல கர்ப்பிணிகளுக்கான ஸ்பெஷல் உடைகள், ஃப்ளெக்ஸ் காட்டன் இவை இவர்களுடைய புதிய படைப்புக்கள். மேலை நாடுகளில் மூன்று நிலைகளில் கர்ப்பிணிகளுக்கான உடைகள் தயாரிக்கப்படுகின்றன. முதல் சில மாதங்களுக்கு, நடுவில், எட்டு ஒன்பது மாதங்களுக்கு என்று. அவற்றை இவர்கள் தங்களுடைய தயாரிப்பில் புதிய டிசைன்கள், புதிய வண்ணங்களில் அறிமுகப்படுத்துகிறார்கள். அதேபோல சணல் இழையும், காட்டன் இழையும் இணைந்து ஒரே நூலாக மாறி அதன்மூலம் தயாரிக்கப்படும் உடைகள் மிக நல்ல 'லுக்'கைத் தருகிறது. அதன் பின்னல் நேர்த்தியும், இயற்கையான வண்ணங்

களும், கம்பளி ஆடை போன்ற தோற்றமும்... குளிர் காலங்களுக்கு ஏற்ற உடை.

பொதுவாகவே இவைகளையெல்லாம் பார்க்கும் போது ஆடையுலகில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் என்பதை நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. தரமான இழைகளைத் தயாரிப்பதுடன் புதிய புதிய கலப்பு முயற்சிகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள். உலகத் தரத்திற்கு நமது ஸ்பின்னிங்கும், ஆடைகளும் பேசப்படுகின்றன, போற்றப்படுகின்றன. நம் நாட்டில் இத் துறையில் ஈடுபட்டு இருப்பவர்கள் மேலைநாடுகளுக்குச் சென்று பல புதிய தொழில்நுட்பங்களைக் கற்று வருவதால் இத் துறையை நவீனப்படுத்தி வருகிறார்கள். இயற்கையிலேயே நம் இந்தியர்கள் கூர்மையான அறிவுத்திறன் கொண்டவர்கள். இவர்கள் இப்படித் தொழில்நுட்பத்துடனும், கற்பனைத் திறனுடன் புதிது புதிதாகச் சாதனை படைப்பார்களேயானால் இந்தியா உலக அரங்கில் பெருமிதமாகத் தலைநிமிர்ந்து நிற்கும்!

- மஞ்சுளா ரமேஷ்

9

சாரதா அவர்களது காரின் நம்பரை கவனிப்பதை மகா புரிந்து கொண்டாள்.

காயத்ரியிடம் புகார் செய்தார்.

ஓடக்கா போ! என்று காயத்ரியின் வார்த்தை எடுத்தெறிந்தது.

உம்ம் என்ற ஏறும் உறுமலுடன் கார் புறப்பட்டது.

காரின் நீள ஒளிக்குழல் இருட்டைத் துளைத்துச் சென்றது.

வீட்டில் போய் இறங்கினார்கள்.

மகாவின் வீடு.

1200 சதுர அடி ப்ளாட்! அப்பழுக்கில்லா சுத்தத்தில் இருந்தது. விளக்குகள் நிலா போல கசிந்தன. விசால ஹால் சித்திரக் கூடம் போல இருந்தது.

சோபாவில் அமர்ந்தார்கள்.

இருவருக்கும் சுவாசங்கள் நீண்டு வந்தன.

மகா அந்தக் காகிதக் கட்டை எடுத்தாள்.

பிரித்தாள்.

ஒரு கட்டு கசங்கிய காகிதங்கள் தனித்தனியாக வந்தன.

பல நாட்களாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பால் பாயிண்டினால் எழுதப்பட்டிருந்தது. பல இடங்களில் கையெழுத்துத் தெளிவாக இல்லை.

''படிக்கலாமா?'' என்றாள் காயத்ரி.

''படிச்சுடலாம்! ஆவலா இருக்கு!'' என்றாள் மகா!

அவளே படிக்கத் தொடங்கினாள்.


"இந்தக் கதை பத்திரமானவர்கள் கையில் போய்ச் சேரும் நம்பிக்கையுடன்தான் எழுதுகிறேன். இதை சுயநினைவோடு எழுதுகிறேன். இதைப் படிப்பவர் யாருக்காவது தங்களுக்கு இதில் அக்கறையும் சம்பந்தமும் இல்லை என்று தெரிந்தால், இதில் சம்பந்தப்பட்டவர்களை எப்படியாவது தேடிச் சந்தித்து, அவர்களிடம் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என் பெயர் சுந்திரமூர்த்தி! நான் வருமான வரி இலாகாவில் வேலை பார்த்தவன்.

நான் ஓய்வு பெறுவதற்கு எட்டு வருடங்களுக்கு முன் பரமானந்தம் என்ற பால்ய நண்பனைப் பார்க்க நேர்ந்தது.

வடக்கே பம்பாயில் வாழ்ந்து, சொந்த முயற்சியில் முன்னுக்கு வந்து, ஏராளமாகச் சம்பாதித்தவர் அவர்.

நாங்கள் இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். என்னை அவன் தேடியே வந்தான்.



ஸ்ரீ வேணுகோபாலன்

சென்னையில் அவன் கம்பெனியில் கிளை நிறுவ வேண்டும் என்றும், நான் அதில் முக்கிய பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும் கூறினான்.

அவன் அப்போது எனக்குக் கொடுக்க முன்வந்த ஐயாயிரம் சம்பளம் ரொம்பப் பெரிசு.

வெஸ்ட்எண்ட் டிரேடர்ஸ் என்று கம்பெனியின் பெயர்! முதலில் கைக்கெடிகாரங்களை இறக்குமதி செய்து கொண்டிருந்தது.

பின்னர் கெமிக்கல் ஏற்றுமதியில் ஈடுபட்டது.

நான் சென்னையில் அவன் கம்பெனியை நிர்வகித்தேன். வளர்த்தேன். தன் காலில் நிற்கும் நிலைக்கு கம்பெனி செழித்து விட்டது.

இந்த நிலையில் நான் கம்பெனியிலிருந்து ஓய்வு பெற நினைத்தேன்.

கம்பெனியின் நீடித்த பரபரப்பு என் உடம்பை பாதித்தது. எனக்கு ஒரு அட்டாக் வந்து விட்டது.

இதைத் தெரிவித்த போது பரமானந்தன் வருத்தப் பட்டான்! தனது ஒரே மகன் சுரேஷ்குமாரை அனுப்பி வைத்தான். துரதிருஷ்டம்!



அந்தப் பையன் சென்னை ஏர்போர்ட்டிலிருந்து வரும் வழியில் கார் விபத்தில் சிக்கி இறந்து போனான்.

பரமானந்தம் பட்ட துன்பத்திற்கு அளவு கிடையாது. என் வீட்டில் அவனை ஒரு மாதம் தங்க வைத்தேன்.

உடைந்த மனத்தோடு பம்பாய்க்குத் திரும்பிப் போனான். அங்கே இருதய நோய் அவனையும் பீடித்தது.

ஒருநாள் எனக்கு அவசர அழைப்பு வந்தது. விரைந்து போனேன். பரமானந்தன் படுக்கையில் இருந்தான். என்னைப் பார்த்ததும் கண்ணீர் விட்டான். ஒரு யோசனை சொன்னான்!

அவனது ஒரே மகள் அரவிந்தா. அவளை என் மகனுக்குக் கொடுத்து, சென்னைக் கம்பெனியை அவனுக்கே ஒப்படைக்க நினைத்தான்.

என் மகன் ரங்கா ஒரு சராசரி. பிரமாத ஐக்யூ என்று சொல்ல முடியாது.

படிப்பதை மகா இங்கே நிறுத்தினாள்.

காயத்ரி தலைநிமிர்ந்து "என்ன மகா?" என்று கேட்டாள்.

"இந்தப் பெயரை கேட்ட மாதிரி இருக்கு?"

"யார் இது? நம்ப பிரச்னைக்குத் தொடர்பு கிடைச்சுப் போச்சா?"

"இதுதான் மிஸ்டர் ப்ரசாந்த்துடைய கம்பெனி டைரக்டர்னு நினைக்கிறேன்."

"யாரு? எனக்குத் தெரிஞ்ச பிரசாந்த் தானே! உங்க பிரெண்டு வசந்தாவினுடைய கணவர்?"

"ஆமாம்!"

"ரொம்ப அதிர்ச்சியா இருக்கே?" என்ற காயத்ரி யோசனையுடன் எழுந்தாள்.

"ஏன் அதிர்ச்சி?" என்று கேட்ட மகாவுக்கு நினைவுகள் பரபரத்தன.

அதே நேரத்தில் அவளுக்கு ஏதோ புரிவது போலவும் இருந்தது. காயத்ரியை ஏறிட்டு பார்வையை நிறுத்தினாள்.

"இந்தப் பாரு, மகா! யாரோ ஒருத்தன் பிள்ளையைப் பிடிச்சு வச்சுக்கிட்டு பணயம் கேட்டு ஒருத்தன் லெட்டர் எழுதியிருக்கிறான் இல்லையா?"

"ஆமாம்!"

"அந்த லெட்டரின் வாசகம் நம்ப கையிலே எதேச்சையா சிக்கிடுத்து! அதைத் தயார் செய்து அனுப்பித்தவன் யாரு, அவன் அட்ரஸ் என்ன என்கிறதை நாமே ஒரு மாதிரி கண்டுபிடிச்சிருக்கோம்! அந்த லெட்டர் எழுதின அட்ரசுக்கு நாம்ப போனோம். ஏதோ ரவுடியினுடைய, வீடாக இருக்கும்னு நினைச்சா இப்படி ஒரு கண்ணியமான குடும்பமா இருக்கே! அதுவும் உங்க பிரெண்டு கணவரோட 'பாஸ்' ஆக அவர் இருக்கிறாரே!..." - என்று சொல்லி காயத்ரி நிறுத்தினாள்.

ஒரு சின்ன நிசப்தம்.

"அதுதான் நானும் பார்த்தேன்! அப்படி இருக்க முடியுமா?" என்று கேட்டாள் மகா.

"ஒருவேளை ரங்கா என்கிற பெயர் வேறு ஆளோட பெயரோ?" என்றாள் காயத்ரி.

மகா திரும்பவும் வெறுமையாகப் பார்த்தாள். "அப்படித்தான் இருக்கணும். அப்படி இல்லைன்னா அது ஒரு பேரதிர்ச்சியாக இருக்கப் போறது!"

"சரி! எதுக்கும் படிச்சுப் பார்க்கலாம்."

மகா படிக்கத் தொடங்கினாள்.

"என் மகன் ரங்கா ஒழுக்கத்தில் கூட சராசரி! எனக்கு அப்படி ஒரு பிள்ளை இருந்தது பிடிக்கவே இல்லை!"

ஆனால் யாரும் ரங்காவின் வெளித் தோற்றத்தையும் வெளி ஒழுக்கத்தையும் பார்த்து அசந்து போய் விடுவார்கள்.

உள்ளே அவன் ஒரு அரைகுறை படிப்பாளி, ஒழுக்கக் குறைவுள்ளவன் என்பது யாருக்குமே தெரியாது.

பி.எஸ்ஸி., முதல் வருடத்திற்கு மேல் போகவில்லை! நான் 'பையன், பி.எஸ்ஸி., பாஸ் பண்ணியிருக்கிறான்னு'தான் வெளியிலே சொல்லுவேன்.


அவன் அம்மாதான் ஊரிலே நிறைய பீற்றிக் கொள்வாள். அவளுக்கு எதுவுமே தெரியாது.

பத்து வயசிலேயே யாருக்கும் தெரியாமல் சிகரெட் குடிக்க ஆரம்பித்தாகி விட்டது.

எஸ்.எஸ்.எல்.ஸி.யை பாஸ் பண்ணவில்லை! தனியாக எழுதித்தான் முடித்தான்.

கல்லூரி சேர்ந்ததும் சகவாசம் சரியில்லை! ராத்திரி லேட்டா வருவான்! சாப்பிடாமல் படுத்துக் கொள்வான். அறைக்குள்ளே எட்டிப் பார்த்தால் போதும் விஸ்கி நெடி வீசும்!

பையனைப் பற்றி என் மனைவியிடம் எதுவும் சொல்ல மாட்டேன்! யார்கிட்டேயும்




கலர் கலர் ரிப்பன்களை வாங்கிவந்து படிக்கட்டுகளின் இரு பக்கமோ, அல்லது ஒவ்வொரு படிக்கட்டுகளிலுமோ நீளமாக வைத்து 'பின்' பண்ணிவிட்டால், வழக்கமான வெள்ளைத் துணியையே பார்த்தவர்களுக்கு இது வித்யாசமாக, அழகாக இருக்கும்.

- உமா


Extra Care
தூய்மைப்படுத்தும் வழிமுறைகள்
எண்ணெய் பசையுள்ள சருமத்திற்கு கூடுதல் தூய்மை தேவைப்படுகிறது.
New
Palmolive
Extra Care
WITH CLEANSING CREAM
தொட்டால் தெரியும் பட்டின் மென்மை
பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர்
இப்போது க்ளென்ஸிங் க்ரீமுடன்
Ambience/EC/183/B/Tam

செட்டியார் பொம்மைக்கு முன்பாக அரிசி, பருப்பு, வெல்லம் போன்ற சாமான்களை வைக்குமுன்பு, ஒரு பெரிய தட்டு அல்லது டிரேயின் அடியில் எறும்புப் பொடியை குழைத்துப் பூசிவிட்டு, அதற்குள், மேற்சொன்ன பொருட்களைச் சிறுசிறு கிண்ணங்களில் வைக்கலாம். எறும்புத் தொல்லை இருக்காது.

–உமா



சொல்ல மாட்டேன். நம்ப பிள்ளையை நாமே தாழ்த்திக் கொள்வதில் பிரயோசனம் என்ன?

இந்த ரீதியிலே சிநேகிதன் பரந்தாமன் கிட்டே என் பிள்ளை ரங்காவைப் பற்றி உயர்வாகக் கூறியிருந்தேன்.

அதனால் அவன் தன் பெண்ணையே கொடுக்கறேன் என்று சொன்ன போது திகைத்து விட்டேன்.

"இல்லை பரமானந்தம்! உன் அந்தஸ்து ரொம்ப உயர்த்தி! அதுக்கு நான் எட்ட மாட்டேன். உனக்குத் தகுந்த சம்பந்தத்தைத் தேடு" என்று சொன்னேன்.

எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை.

திருமணத்தை பம்பாயிலேயே முடித்து வைத்தான்.

மகனுக்கு நிறைய புத்திமதி சொன்னேன்!

"உன்னை அதிர்ஷ்டம் தேடி வந்திருக்கு! இனிமே வாழ்க்கையிலே சரியாயிருக்கணும்!" என்றேன்.

"அப்பா! அடிக்கடி இந்த மாதிரி உபதேசம் பண்ணறே! நான் சரியாயில்லைன்னு நினைக்கிறியா?" என்று கேட்டு விட்டான்.

நேரடியாக அவனைக் குற்றம்சாட்ட எனக்குத் தைரியம் கிடையாது.

"இல்லை பொதுவாகச் சொன்னேன்!" என்று சொன்னேன்.

நண்பன் பரமானந்தம் அதற்குப் பிறகு ஆறு மாதம்தான் இருந்தான். பிறகு போய் விட்டான். அவன் மனைவியும் அதற்கு இரண்டு மாதத்திலே போய் விட்டாள்!

பம்பாய்க் கம்பெனி நிர்வாகமும் இங்கே வந்தது.

பையன் கையில் ஏராளப் பணம்!

பிஸினஸ் பிரமோஷன் போறேன் என்று மேனாட்டுக்கு போக ஆரம்பித்தான்! அவன் எதற்குப் போகிறான் எனறு எனக்குத் தெரியும்! பிஸினஸாவது, பிரமோஷனாவது?

திரும்ணம் ஆகி ஒரு வருஷம் முடிந்திருக்கும், ஒருநாள் அவன் மனைவி கண்ணீரும், புலம்பலுமாக என் முன்னே வந்து நின்றாள்.

"மாமா! கம்பெனி எல்லாத்தையும் பாழ் பண்ணிட்டார் மாமா! வேண்டாத பழக்கம் எல்லாம் வந்தாச்சு! மாமா!" என்றாள்.

உண்மைதான்! வெளிநாட்டு ஏஜென்ஸி எல்லாம் போய் விட்டது! ஏற்றுமதியும் இழந்தாயிற்று. கம்பெனியில் எலும்புக்கூடு மட்டும் பாக்கி இருந்தது.

அப்போதும் பையனின் ஜபர்தஸ்து, பேச்சு, நடவடிக்கை எல்லாம் எப்போதும் போலத்தான்! இன்னும் அதே சர்க்கரையான பேச்சுதான்! ஜென்டில்மேன் நடவடிக்கை தான்! அப்பழுக்கு சொல்ல முடியாது. உங்களிடம் பேசினால், 'இவ்வளவு பெரிய மனிதன் பேசுகிறானே!' என்று அசந்து விடுவீர்கள்! பத்து லட்சத்திற்கு ஷூரிட்டி போடத் தயாராக இருப்பீர்கள்!

ஆனால் அவன் பின்னால் முற்றிலும் மாறான இன்னொரு தோற்றம் இருக்கிறது என்பதை நீங்கள் உணரவே மாட்டீர்கள்! உணரவும் முடியாது!

அவன் மனைவி வந்து புகார் செய்த போது நான் என்ன செய்ய முடியும்?

கண்டிக்கிறேன். விசாரிக்கிறேன் என்று பதில் சொன்னேன். வேறு எதுவும் சொல்ல முடியவில்லை!

அவனே என்னை விநோதமாகப் பார்க்க ஆரம்பித்தான்.

ஓகோ! அப்பாவும், பிள்ளையும் ஒரு டிட்டோவோ? என்று நினைத்திருக்க வேண்டும்.

அவள் பேச்சுகள் குறைந்தன.

திடீரென்று ஒருநாள் தூக்க மாத்திரையை அதிகமாகச் சாப்பிட்டு, வாழ்க்கையை முடித்துக் கொண்டாள்.

அதை சாதாரண எதேச்சை மரணம் என்று என் பையன் சாமர்த்தியமாகப் பூசி விட்டான்.

போலீசாரும் நம்பினார்கள்.

நாட்டுப் பெண்ணுக்கு அடுத்தது போனது என் மனைவி.

கடைசிவரை பையனின் குணாதிசயம் அவளுக்குத் தெரியாது. அறியாமையிலேயே இறந்தாள். அது அவள் அதிர்ஷ்டம்.

எல்லோரும் போய் வீட்டில் நான் மட்டும் என்று முடிந்த பிறகு, ரங்காவின் சில வேலைகள் வெளிப்படையாக வெளிவர ஆரம்பித்தன.

வீட்டின் கீழ்த்தளத்திலேயே என்னை நிறுத்தி வைத்தான். "மாடிக்கு வர வேண்டாம் அப்பா! கம்பெனி மீட்டிங் எல்லாம் வீட்டிலேயே வச்சுக்க ஆரம்பிச்சுட்டேன்! நாலு பேர் வருவா, போவா! அவங்க சிகரெட் பிடிப்பாங்க, ரெண்டு பேர் குடிக்கக் கூடச் செய்வாங்க! உனக்கு அப்ஜெக்ஷன் இல்லையே?"- என்று சொல்லி மாடியில் இதெல்லாம் நடக்கப் போகிறது என்பதை அப்பட்டமாகச் சொல்லி விட்டான்.

ஒன்றிரண்டு பெண்களும் மாடியில் அவ்வப்போது தென்பட ஆரம்பித்தார்கள்.

வாசல் பக்கம் நோக்கி நான் உட்கார்ந்திருந்தால், பையன் ரங்கா என்னைக் கடியவும் ஆரம்பித்தான்.

பணம் எல்லாம் கரைந்திருக்கும். கடனில் வாழ்ந்திருக்க வேண்டும்! ஆனால் இப்போது கூட அவனிடம் யாரும் எந்த மாறுதலையும் பார்த்திருக்க முடியாது! வெளி உலகுக்கு அதே புன்னகை! அதே மயக்கும் பேச்சு!

இந்தச் சமயத்தில்தான் சமையல்காரி ஒருநாள் ஒரு திடுக்கிடும் விஷயத்தைத் தெரிவித்தாள். மாடியில் ஒரு அறையில் ஒரு சின்னப் பையனை அடைத்து வைத்திருக்கிறான் என்று!

அவளே மாடிக்குப் போய் சன்னல் வழியாக சாப்பாடு கொடுத்து வந்தாள்.

எனக்கு வயிற்றைக் கரைத்தது.

சில தினங்களாக மாடிக்கு ஆட்கள் வருவது குறைந்திருந்தது! பைரவன்! பத்மு என்று இரண்டு பேர்தான் வந்தார்கள். இருவரும் ரங்கா கம்பெனியில் வேலை பார்க்கும் சிற்றாட்கள்.

அந்தச் செய்தி வந்ததிலிருந்து இரண்டு மூன்று நாட்கள் எனக்கு எதுவும் ஓடவில்லை.

ஆபீசுக்குப் போகாமல் ரங்கா வீட்டிலேயே தங்கி இருந்தான். நிறைய சிகரெட் ஊதித் தள்ளினான்.

ராத்திரி வெகுநேரம் விழித்திருந்தான்.

எனக்கு ஒருநாள் ராத்திரி தூக்கமே வரவில்லை. மணி பதினொன்றுக்கு மேல் ஆனது. மாடியில் இன்னும் விளக்கு எரிந்தது.

அப்போது கிணுங் என்று போன் சத்தமிடும் ஓசை கேட்டது.

மாடியில் போனை எடுத்தால் கீழே உள்ள போனில் இந்தச் சத்தம் கேட்கும்.

எனக்குத் திகிலும் ஒரு ஆர்வமும் எழுந்தது.

இருட்டில் மெதுவாக நடந்து, போன் பக்கம் சென்றேன்.

பதைப்புடன் போனை நலுங்காமல் எடுத்து காதில் வைத்துக் கொண்டேன். போனின் வாயை இறுக மூடினேன்.

போனில் குரல் கேட்டது! என் பையன் ரங்காதான் பேசிக் கொண்டிருந்தான்.

அவன் குரலே விசித்திரமாக இருந்தது. கரகரப்பாகப் பேசினான். தோரணையும் அதிகாரமும் அதில் இருந்தது.

"உங்க பையனை உயிரோட விடுதலை செய்யணுமானா நான் கேட்டதைக் கொடுத்துடுங்க! லட்ச ரூபாய் கேட்டேன்! அது பெரிய தொகையே இல்லை! லட்ச ரூபாய் கேட்டாத்தான், 'சரி, இது ஒண்ணும் பெரிசில்லை, கொடுத்துடலாம் போ!'ன்னு என் கிட்டே பேச ஆரம்பிப்பாங்க! நல்லாத் தெரியும்... எனக்கு லட்சம் தேவை இல்லை..."

"இப்போ என்ன வேணும்?" என்று ஒரு பதட்டமான குரல் கேட்டது. இது அந்தச் சிறுவனின் தந்தையாக இருக்க வேண்டும் என்று ஊகித்தறிந்தேன்.

"பணமே வேண்டாம்!" என்றான் ரங்கா.

"பின்னே?"

"உங்க வீட்டிலே அந்த நாலு சிலை இருக்கே! அதைக் கொடுத்திடணும்!"

"சிலையா?"

"ஆமாங்க! சாமி சிலை! பூஜைச் சிலை வாங்கி வச்சிருக்காங்களே! அதைக் கொடுத்தா போதும்! உங்களுக்கு வேறு செலவு இல்லை. சிலைங்களும் இலவசமா கிடைச்சதுதானே?"

"ஐயோ! பணமே கேளுங்க மிஸ்டர்!"


"முடியாது பேச்சை வளர்த்தாதே! நாளைக்குள்ளே யோசிச்சு வை! இல்லாட்டி உன் பையன் பிணம் தாம்பரம் தாண்டி வயக்காட்டுக் கிணத்திலே மிதக்கும்..."

போனைப் பக்கென்று வைத்தேன்.

என் பையன் ரங்காவா இவ்வளவு கரகரப்பாப் பேசினான்? அவனா சிறுவனை கடத்தல் பண்ணி இருக்கிறான்? அவனா பணயம் கேட்கிறான்?

நான் துடித்துப் போய் விட்டேன்.

(தொடரும்)



மிகச்சிறிய பொம்மைகளை பெரிய பொம்மைகளுக்கு இடையே வைத்தால் பார்வையாக இருக்காது. இவற்றிற்கென்று தனி ஸ்டூல். அல்லது டப்பாக்களில் வைக்கலாம். இதையும்விட ஒரு வழி. டம்ளர் அல்லது டப்பாக்களில் மண்ணை நிரப்பி அதன் நடுவில் பொம்மைகளை நிறுத்தினால், பெரிய பொம்மைகளுக்கு அருகில் வைத்தாலும் உயரமாக 'பளிச்' சென்று பார்க்க முடியும்.

–உமா



• ஜெயந்தி



• ஆனந்தி



• பத்மா



• சியாமளா



• சரோஜா

கொலுவிலே... இது என்ன கலாட்டா?

பெண் பார்க்கும் வைபவத்தில் இந்தச் சம்பிர தாயம் குறைந்து கொண்டே வந்தாலும், நவராத்திரி கொலுவுக்கு வருபவர்களை வற்புறுத்துவது குறைந்ததாகத் தெரியவில்லை பாட்டுப் பாடு மாறு வற்புறுத்துவதைத்தான் குறிப்பிடுகிறோம்.

"இன்னொரு நாள் பாடு கிறேன்" என்று சொல்ல சொல்லக் கேட்காமல் அவரை "அதெல்லாம் முடியாது, பாடாமல் போனா உங்களை விட்டுடுவமா?" என்று மற்ற வர்கள் கட்டாயப்படுத்துவது கண் கொள்ளாக்காட்சி (பாடத் தொடங் கியபிறகு பாட்டை சட்டை செய் யாமல் அவரவர் தத்தம் வேலைகளை கவனிப்பது அதை விடக் கண் கொள்ளாக்காட்சி!).

பல ஆண்டு களுக்கு முன் ஒரு சமயம் கொலுவுக்கு வந்த ஒரு சிறுவன் "மாப்பிள்ளே டோய், மை லேடி டோய்" என்று அந்தக் கால ஹிட் பாடல் ஒன்றைப் பாட "யாருடா அது லேடி, கிடி னெல்லாம் அனா சாரமாகப் பாடு வது?" என்று கோபத்துடன் கேட்டபடி பாட்டி உள்ளேயிருந்து வந்ததும், சிறுவன் கண்டல் கூட வாங்கிக் கொள்ளாமல் தலைதெறிக்க ஓடியதும் தனிக்கதை (பாட்டின் அகராதியில் 'லேடி' என்றால் 'லிப்ஸ்டிக் பூசிய வெட்கம் கெட்ட மேனாட்டுப் பெண்'!)

எதிர் வீட்டுக்கு ஒரு பாம்பு வர, நான்காவது வீட்டு அலமேலு அன்று புன்னாக வராளியில் கொலுவுக்கு முன்னே பாடியதால்தான் பாம்பு வந்தது என்று அந்த வீட்டுத் தாத்தா சாதித்ததும் நினைவில் எட்டிப் பார்க்கிறது. இத்தனைக்கும் அந்தப் பாம்பு (ரொம்பப் பாதுகாப்பு உணர்வு டன்!) அலமேலு பாடி விட்டுப் போய் நான்கு மணி நேரம் கழித்துதான் அந்த வீட்டுக்குள் எட்டிப் பார்த்திருக்கிறது!

இப்படிப் பல கலாட்டாக்கள் கொலுவுக்கு வந்தவர்கள் பாடும் பாடல் தொடர்பாக ஏற்படுவதுண்டு. அப்படிப்பட்ட சில அனுபவங்கள் இதோ —

சியாமளா சுந்தரம் :

“பெங்களூரில் என் தோழி வீட்டுக்குப் போயிருந்தேன். அவளது மேலதிகாரியின் மனைவியும், அவர்களது பத்துவயதுப் பெண்ணும் கொலுவுக்கு வந்திருந்தார்கள். தன் பெண் நன்றாகப் படுவாள் என்று கூறினாள் அந்த மேலதிகாரியின் மனைவி. “அப்படியா? ஒரு பாட்டுப் பாடேன்” என்றாள் என் தோழி அப்பாவித்தனத்துடன். “சாமி பாட்டா? சினிமாப்பாட்டா?” என்றாள் அந்தச் சிறுமி. “எது வேணுமானாலும் பாடு” என்றாள் தோழி. “ஐயையோ. நவராத்திரி கொலுவிலே சினிமாப் பாட்டு பாடுவாங்களா?” என்று ஏதோ என் தோழிதான் தப்பு செய்தது போல் பதில் கேள்வி வந்தது. “சரி சாமிப் பாட்டுப் பாடேன்” என்றாள் தோழி. “எனக்கு முருகர் பாட்டுதான் தெரியும்”, “சரி முருகர் பாட்டுதான் பாடேன்”, “ஐயையோ, நவராத்திரியிலே அம்மன் பாட்டு தானே பாடணும்” - இந்த ரீதியில் தொடர்ந்து சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. அந்தப் பெண்ணின் அம்மாவும் இதில் தலையிட்டு பெண்ணை அதட்டக் காணோம். மேலதிகாரியின் குடும்பம் என்பதால் தோழிக்கும் தர்ம சங்கடம். இதில் நடுவே ஏற்கனவே பாடிய ஒரு மாமியின் பாட்டு நன்றாகவே இல்லை என்று கமெண்ட் வேறு அடித்தது அந்தப் பெண் (அந்த மாமி வேறு யாருமில்லை, என் தோழியின் வீட்டுச் சொந்தக்காரி - அந்தக் கமெண்டின் போது அங்குதானிருந்தார்!). கடைசியில் எந்தப் பாட்டும் பாடாமலேயே விடை பெற்றுக் கொண்டனர் அவர்கள். “இனிமேல், யாரையும் பாடச் சொல்ல மாட்டியே?” என்று கிண்டல் செய்தார், இதுவரை நடந்ததை அறையிலிருந்தே கண்டு ரசித்துக் கொண்டிருந்த அவள் கணவர்.”

சரோஜா :

“எங்கள் வீட்டில் எல்லோருக்குமே ஆஸ்டெரிக்ஸ் காமிக்ஸ் பிடிக்கும். அதில் ‘காகோ ஃபோனிக்ஸ்’ என்ற ஒரு பாத்திரம். அவன் பாட அல்லது இசைக்கத் தொடங்கினாலே அவன் வாயை ஊர் மக்கள் துணியால் கட்டி மரத்தின் மேல் உட்கார வைத்து விடுவார்கள். அப்படி ஒரு கடூரமான குரல்வளம்! இதனால் என் தம்பி பெண் பானு யாராவது அபஸ்வரமாகப் பாடினால் ‘காகோ’ என்று சங்கேதமாகக் கூறுவாள். ஒருமுறை நவராத்திரியின்போது எங்கள்

குனிந்து சப்பாத்தி இடுவது சிரமமாக இருக்கிறதா? சப்பாத்திக்கல் வேண்டாம்.

தேவையான உயரமும் அளவும் உள்ள ஓர் அழுத்தமான எவர்சில்வர் சம்புடமே போதும். தேய்த்து அலம்பி, சுத்தமாகத் துடைத்துவிட்டு, கவிழ்த்துப் போட்டுக் கொண்டு சப்பாத்தியோ பூரியோ இடுங்கள். சிரமமே தெரியாது!

அடிப்பகுதி தட்டையாக உள்ள, சற்று உயரமான எந்த எவர்சில்வர் பாத்திரத்தையும் உபயோகிக்கலாம்!

- எஸ். பட்டம்மா



வீட்டுக்கு வந்த ஒரு பெண்மணியைப் பார்த்து என் தம்பி மனைவி "நீங்க நல்லாப் பாடுவீங்களே, ஒரு பாட்டு பாடுங்களேன்" என்றாள். அந்தப் பெண்மணிக்குக் குரல்வளமே கிடையாது. உடனே பானு என்னிடம் 'காகோ' என்றாள். "நீ என்ன சொல்றேன்னு எனக்குப் புரிஞ்சிடுச்சு" என்றார் அந்தப் பெண்மணி. திக்கென்றது. பிறகு "காக்கைச் சிறகினிலே பாட்டைப் பாடச் சொல்றே இல்லையா? நேரடியாகவே சொல்லியிருக்கலாமே" என்றபடி அந்தப் பாடலைப் பாடினார். சிரிப்பும் வந்தது; பாவமாகவும் இருந்தது.

பத்மா ராமமூர்த்தி :

"ஒருமுறை நவராத்திரியின் போது என் மகன் விளையாடிவிட்டு வந்துகொலுவின் முன்னால் படுத்துக் கொண்டு புரண்டு கொண்டு இருந்தான். கொஞ்ச நேரம் கழித்து படிப்பதற்காகக் கைகால் அலம்பிக் கொள்ளச் சென்றான். நான் விளக்கேற்றி விட்டு, ஒரு பாடலைப் பாடினேன். அப்போது திடீரென்று அவன் வந்து "அம்மா, என் உடம்பில் தண்ணீர் விட்டால் ரத்தம் ரத்தமாக வருகிறது" என்று சொல்லிக் குதித்தான். நானும் அவன் காலில் தண்ணீர் விட்டுப் பார்த்தேன். தண்ணீர் ஊற்ற ரத்தம் வெளியேறியது. எனக்கு ஒரே பயம். "நானொரு விளையாட்டு பொம்மையா?" என்று அப்போது பாடிக் கொண்டிருந்த பாடலில் அம்மனை நொந்து கொள்வது போல் வார்த்தைகள் அமைந்ததால் தெய்வக் குற்றமாகிவிட்டதோ என்று சென்டிமென்டலாகவெல்லாம் நினைத்துக் கொண்டேன். சரி டாக்டரிடம் காண்பிக்கலாம் என்று புறப்படும்முன் என் கால்களைக் கழுவிக் கொண்டேன். அப்போது என் காலிலும் சிவப்புத் தண்ணீர் வந்தது. அப்போதுதான் மர்மம் விளங்கியது. கலர் கோலம் போடுவதற்காகத் துணிக்குப் போடும் சாயத்தை (கோலப் பொடியில் கலக்க) எடுத்தபோது, சிறிது கீழே

அன்றும் இன்றும்
அதே தூய்மை...
அதே சிக்கனம்...


சுப்ரீம்



7 வருடங்களுக்கு முன்பு, சுப்ரீம் சமையல் எண்ணெய் அறிமுகப்படுத்தப்பட்டது. அது பிசுக்கற்றதாகவும், மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடியதாகவும், மிகமிகச் சிக்கனமாகவும் இருந்தது. வைட்டமின் E மற்றும் புரோட்டீன் ஆகியவற்றை அதிக அளவில் கொண்டிருந்த இந்த எண்ணெயில் கொலஸ்ட்ரால் இல்லை. எனவே அது ஆரோக்கியமான எண்ணெயாகவும் திகழ்ந்தது.

இன்று, மிக உன்னதமான சமையல் எண்ணெயாகத் திகழ்கிறது சுப்ரீம் - புதிது புதிதாகப் பலப்பல சமையல் எண்ணெய்கள் தோன்றினாலும், என்றென்றும் சிறந்த தரத்தையும் மாறாத தூய்மையையும் அதிக சிக்கனத்தையும் தொடர்ந்து வாங்கி வருகிறது... சுப்ரீம்

அதிக சேமிப்பு, அரோக்கியம்... அள்ளித் தரும் எண்ணெய் - சுப்ரீம்.



சுப்ரீம்

இருமுறை சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான தாவர எண்ணெய்

இது ஒரு எஸ். எஸ். டி ஆயில் மில்ஸின் தரமான தயாரிப்பு

ARTIG / 1519

விழுந்திருக்கிறது. அது மகனின் உடலில் ஒட்டிக் கொண்டு தண்ணீர் விட்டபோது ரத்தம் போல வெளிப் பட்டிருக்கிறது. இதை சொல்லிச் சொல்லி ஒவ்வொரு நவராத்திரியின்போதும் சிரிப்பது வழக்கமாகிவிட்டது."


ஆனந்தி ஸ்ரீனிவாசன் :

"**க**ணவர் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தபோது, "இதோ பாருங்க நம்ம சுஜா பாடப் போறாளாம். கேட்டுட்டுப் போங்க" என்று தெரியாத்தனமாக சொல்லி விட்டேன். சுஜா எங்கள் தெருவில் இருக்கும் பெண். கொலுவுக்காக வந்திருந்தாள். சொன்னபிறகுதான் அவசரமாக ஒரு இடத்துக்கு அவர் கிளம்ப வேண்டிய அவசியம் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. சுஜாவோ "ஜகம்புகழும் புண்ணியகதை ராமனின் கதையே" என்ற மிக நீளமான, ராமனின் முழு சரித்திரத்தையும் கூறும் பாடலைப் பாடி முடித்த கையோடு "அங்கிள் இன்னொரு பாட்டும் பாடப் போறேன்" என்றபடி "பாலபிஷேகம் பழனியிலே" என்று மற்றொரு நீளமான பாட்டைப் பாடினாள். இந்தப் பாட்டுக்கு அபிநயம் வேறு. அப்படி ஆடியபோது அவள் கை பட்டு என் கணவர் அன்றுதான் விரும்பி வாங்கி வந்திருந்த தலையை ஆட்டும் நடனப் பெண்மணி பொம்மை கீழே விழுந்து உடைந்து விட்டது. இதற்குப் பிறகு அந்த நவராத்திரி முடியும் வரை என் கணவர் லேட்டாகவேதான் வீட்டுக்கு வந்தார். அவ்வளவு கோபம்."

ஜெயந்தி சந்திரன் :

"**எ**னது மிகச் சிறிய வயதில் நடந்த சம்பவம் இது. சற்றுப் பெரியவளான பிறகுதான் இதன் முழுப் பொருளையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அப்போது எனக்கும் என் இரண்டு அக்காக்களுக்கும் நாலிலிருந்து ஏழு வயதுக்குள்தான் இருக்கும். முதல் முறையாக நவராத்திரிக்கு அழைப்பிதழை அச்சடித்து அனுப்பினாள் அம்மா. ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண்மணியுடன் அவரது தம்பி மற்றும் அந்தத் தம்பியின் நண்பன் ஆகியோர் வந்திருந்தனர். நாங்கள் பாடி முடித்தவுடன் என்னைக் கூப்பிட்டு "பாப்பா ரொம்ப நல்லாப் பாடினே. ஆமாம், கிரிஜா, ரேவதி, ஜெயந்தி இவங்களெல்லாம் எங்கே?" என்று அந்தத் 'தம்பி' கேட்டார் மெதுவா. நானும் என் 'குட்டி'ச் சகோதரிகளும் தான் அவர்கள் என்றேன். அவர் முகத்தில் ஏமாற்றம். அழைப்பிதழில் எங்கள் பெயர்களுக்கு முன்னால் 'மிஸ்' என்று குறிப்பிட்டிருக்கவே, ஏதோ வாலைக் குமரிகளைப் பார்க்கலாம் என்று அவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள்! இந்தக் குளறுபடியால் அந்த ஆண்டு நவராத்திரியில் எங்கள் வீட்டுக்கு வெற்றிலை பாக்கு வாங்கிக் கொள்ள வந்தவர்களில் பெண்களை விட ஆண்கள்தான் அதிகம் என்று வீட்டில் பெரியவர்கள் சொல்லிச் சிரித்தது நினைவிருக்கிறது."

- ஜி.எஸ்.எஸ்.



வீட்டில் காய்கறிகளை வைக்கும் வட்டமான பிளாஸ்டிக் கூடை லேசாக எங்கேயாவது உடைந்திருந்தால் மெல்லிய நூலினாலோ, கம்பியினாலோ கட்டி, நடுவில் ஓட்டை போட்டு அதனுள் ஒயரை செலுத்தி பல்பு மாட்டினால் கொல்லைப்புறத்திற்கு அழகான லைட் ஷேட் ரெடி!

– ஆர். சீதா

மணி பதினொன்றுதான் என்றாலும் வெயில் கள்ளென்று உறைக்க ஆரம்பித்து விட்டது. வாசல் மணி ஒலித்த போது, "இந்த வெயிலில் யாராயிருக்கும்?" என்று ஒருகணம் யோசித்தாள் மாலா. கணவர் அலுவலகம் சென்று விட்டார். குழந்தைகள் பள்ளியிலிருந்து வர மணி இரண்டாகி விடும்.


யாரென்று ஜன்னல் வழியே பார்த்தாள் மாலா.. ஒரு முதியவள். இதுவரை பார்த்திராதவள்.

"யார் நீங்கள்?" என்றாள் மாலா.

"இந்த வீட்டுக்கு நீங்கள் புதுசாகக் குடிவந்திருக்கிறீர்கள் இல்லையா? நான் கோடி வீட்டில் வசிக்கிறேன். உங்களைத் தெரிஞ்சுக்கலாமேன்னு வந்தேன்!"


"உள்ளே வாருங்கள்!" மாலா கதவைத் திறந்தாள். அப்பெண் பாதம் நலுங்காமல் உள்ளே வந்து, தன்னைச் சுற்றிப் பார்த்து விட்டு, இருந்ததில் சிறந்ததான சோஃபாவில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டாள்.

நல்ல நிறம்... மெலிதான, கச்சிதமான உடல்வாகு. அழகான முகத்



தில், புருவம், கண்கள், நாசி, வாய் என்று ஒவ்வொன்றும் தனித்தனியாக அழகாயிருந்தன. என்ன வயது இருக்கும்? ஐம்பது? அறுபது? தலைமுடி முழுவதுமாக நரைத்திருந்தது. நீலநிறத்தில் நூல் புடவை உடுத்தியிருந்தாள். மலிவான புடவைதான் என்று நினைத்துக் கொண்டாள் மாலா. காதில் முத்துத் தோடு. நெற்றியைப் போலவே, கழுத்தும் வெறுமை.

"எப்போது இந்த வீட்டுக்கு வந்தீர்கள்?" என்று அவள் முறுவலித்தவாறே கேட்ட போது, அழகான வரிசைப் பற்கள் பளீரிட்டன...



"ஒரு வாரம் ஆகிறது!" என்றாள் மாலா.

"வீடு பிடிச்சிருக்கா?"

"ஓ! சௌகரியமாயிருக்கு!"

"சௌகரியமா? கிச்சன், ஹாலைத் தவிர, இரண்டு பெட்ரூம் தானே? விஸ்தாரமாக ஒரு வராந்தா கூட இல்லையே?!"

அவள் சொன்ன விதத்தில், இதுவரை சௌகரியமாகத் தெரிந்த வீடு சட்டென்று அசௌகரியமாகச் சுருங்கி விட்டாற் போல் நினைத்தாள் மாலா.

"ஆனால் எங்கள் வீட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது பெரிய, சௌகரியமான வீடு தான்... எங்கள் வீட்டில் ஒரேயொரு பெட்ரூம் தான். இரவில் என் பேரன்களும் நானும் ஹாலில்தான் படுத்துப் போம்!"

"ஓ!"

"சொல்லவில்லையே நான்! நான் என் பிள்ளை மாட்டுப் பெண்ணோடு வசிக்கிறேன். இரண்டு பேரன்கள்.. சரியான ரெட்டை வால்கள், போயேன்!" என்றவள், "நான் வயசில் பெரியவள்... அதனால் உன்னை, 'வா, போ!' என்று ஒருமையில் சொன்னால் உனக்கு ஆட்சேபணை இல்லையே?" என்றாள்.

"அடியோடு இல்லை, மாமி... ஒருமையில் சொன்னால் அதில் ஒரு சலுகை தெரியறது!"

"நிஜம்தான்... ஆமாம், உன் பெயர் என்ன?"

"மாலா..."

"சின்னதாய், அழகாயிருக்கு... மாலதி என்கிற பெயரின் சுருக்கமா?"

"ஆமாம்... மிகச் சரியாய்ச் சொல்லி விட்டீர்கள்!"

ருக்மிணி பார்த்தசாரதி

"உனக்கு எத்தனை குழந்தைகள், மாலா?"

"ஒரு பெண், ஒரு பையன்..."

மாலா கடிகாரத்தைப் பார்த்தாள். பதினொன்று நாற்பது... இப்போதே சமையலை ஆரம்பித்தால்தான் குழந்தைகள் பள்ளியிலிருந்து வருமுன் சமைத்து முடிக்க முடியும். இந்த மாமியோ போகிற வழியாய்க் காணோம்.

"சமையலறைக்கு வாருங்கள், மாமி. நான் சமைச்சுண்டே உங்களோடு பேசறேன்!" என்றாள் மாலா.

"நீயே சமையலைக் கவனிக்கிறாயா? சமையல்காரி இல்லையா?"

"இல்லை... உங்கள் வீட்டில் இருக்கிறாளா?"

"இல்லை..."

பின் எதற்கு இந்தக் கேள்வி? "ஒருவேளை இது குத்தல் பேச்சோ?" என்று நினைத்து, அந்த முதியவளின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் மாலா. மலர்ந்த முகத்தில் தோழமை தெரிந்ததே தவிர, வக்கிரம் தெரியவில்லை.

அவள் மாலாவைத் தொடர்ந்து சமையலறைக்கு வந்தாள். மாலா தந்த காப்பியை மறுக்காமல் வாங்கிக் கொண்டாள்.

"காப்பி நன்றாயிருக்கிறது. புது டிகாக்ஷன், தண்ணீர் கலக்காத பால்.. என் மாட்டுப் பெண் டிகாக்ஷன் இத்தனை திக்காக இறக்க மாட்டாள். கட்டுப்படியாகாது என்பாள்!" மாலா முட்டைக் கோஸைப் பொடிப் பொடியாக நறுக்கி, பச்சைப் பட்டாணியைத் தோலுரித்ததைப் பார்த்து, "கோஸ் பட்டாணி உன் குழந்தைகளுக்குப் பிடிக்குமோ?" என்றாள்.

"ஆமாம்..."

"பொரியலா?"

"இல்லை... கூட்டு..."

"பச்சடியும் உண்டல்லவா?"

"உண்டு.. தக்காளிப் பச்சடி..."

"அப்புறம்?"

"ஒரு ரசம்..."

"அவ்வளவுதானா?"

"அவ்வளவுதான்..."

"அடடா! கூட, வெண்டைக்காயைச் சுருள வதக்கி, அப்பளம் பொரித்தால் நன்றாயிருக்கும். நல்ல நெய்யும், கெட்டித் தயிரும் ஆவக்காய் ஊறுகாயும் இருந்தாலோ, கேட்கவே வேண்டாம்!" இதெல்லாம் தினந்தோறும் சமையலில் இடம்பெறக்கூடிய சாதாரண விஷயங்கள் என்ற விதத்தில் அவள் பேசினாள். இத்தனைக்கும் அவள் உடுத்தியிருந்தது சாதாரண நூல் புடவை. காதில் சிறு முத்துத் தோடு.

'இவள் ஒரு புதிர்!' என்று அப்போதுதான் முதன் முறையாக நினைத்தாள் மாலா.

அதன் பிறகு அவள் வாரத்துக்கு ஒரு முறையாவது வர ஆரம்பித்தாள். எப்போதாவது தான் செய்த பட்சணங்களில் சிறிதளவு கொண்டு வருவாள். "சாப்பிட்டுப் பார், மாலா... மைசூர்பாகு வாயில் கரையும். அத்தனையும் நெய்..."

"நிறைய செலவாகியிருக்குமே, மாமி!"

"நிஜம்தான்... என் மாட்டுப் பெண் கூட, "இத்தனை நெய் விடாதீர்கள். வனஸ்பதி கலந்தால் என்ன?" என்றாள். கலப்படம் செய்யற வேலையெல்லாம் எனக்குத் தெரியாது. நீயே சொல் மாலா! தினமுமா மைசூர்பாகு பண்ணறோம்? ஏதோ ஒரு நாள், கிழமை... ஒரு பண்டிகை, ஒரு பிறந்தநாள்... அப்படிப் பண்ணும் போது பட்சணம் எப்படி இருக்கணும்? ஏ..ஒன்.. அப்படித்தானே இருக்கணும்?"

"ஆனால் உங்கள் மாட்டுப்பெண் சொல்றதிலும் ஒரு நியாயம் இருக்கு, மாமி!"


"நீ வேறு எப்படிச் சொல்வாய்? பாவம், அவளும் நீயும் குடித்தனம் பண்ணற இந்தக் காலத்தில் மளிகை சாமானெல்லாம் யானை விலை, குதிரை விலை... தரமும் மகா மட்டம். உங்கள் கண்ணோட்டம் கொஞ்சம் கஞ்சத்தனமாகத்தான் இருக்கும்!"

எப்போதாவது இந்த மாதிரி பட்சண வகைகள் செய்வார்களே தவிர, அவர்கள் குடும்பம் அப்படியொன்றும் பணத்தில் மிதக்கவில்லை என்று மாலா புரிந்து கொண்டாள். மாமி அவள் வீட்டுக்கு அவ்வப்போது திடீர் விஜயம் செய்வாள். "இரண்டு உருளைக் கிழங்கு கொடு, மாலா! குழந்தைகள் பஜ்ஜி

வெற்றிலை பாக்குடன் வைத்துக் கொடுப்பதற்காக வாங்கி வைத்திருக்கும் உருண்டை மஞ்சள் கிழங்குகள் நாளானால் ஓட்டை விழுந்து மாவாக கொட்ட ஆரம்பித்து விடும். வாங்கியதும் உலர்த்தி ஈரமில்லாத சம்புடங்களில் ஒரு துண்டு கெட்டி கற்பூரத்துடன் போட்டு இறுக மூடி வைத்தால் இந்த மாதிரி உளுத்துப் போகாது.

- எஸ். பட்டம்மா





மயில்கண் வேஷ்டி கிழிந்து விட்டால், அதன் பார்டரை எடுத்து துணி உலர்த்த கொடி கட்ட பயன்படுத்தலாம். மிகவும் உறுதியாக இருக்கும். பார்க்கவும் அழகாக இருக்கும். துணியில் எந்தக் கறையும் ஒட்டாது.

- ஆர். சீதா

கேட்கிறார்கள்!" "கொஞ்சம் நெய் வேண்டும்... வீட்டில் பொட்டு நெய் இல்லை. என் மாட்டுப் பெண்ணுக்கு என் மேல் கோபம், மாலா. "நெய் இல்லாவிட்டால் அது இல்லாமல் சாப்பிட வேண்டியதுதானே, கடன் வாங்கினால் தலைகுனிவு இல்லையா?" என்கிறாள். நெய் இல்லாமல் எப்படி ரசம் சாதம் சாப்பிட முடியும்? நீயே சொல் மாலா!"

ஒவ்வொரு நாள் நண்பகலில் அவள் வருவாள். "உன்னை டிஸ்டர்ப் பண்ணறேனா, மாலா? எங்கள் வீட்டில் மின்விசிறி ரிப்பேர்... காத்து இல்லாமல் என் உடம்பு வேர்த்து வேர்த்துக் கொட்டறது. நான் பேசாமல் இப்படி சோபாவில் படுத்துக்கறேன். வயசான உடம்பு பார், மத்தியானம் கொஞ்சம் தூங்கினால்தான் தெம்பு வரது. குறட்டை விட மாட்டேன், மாலா! பயப்படாதே!" என்பாள். தூங்க ஆரம்பித்தால் மாலாவின் குழந்தைகள் பள்ளியிலிருந்து வரும் போதுதான் விழித்துக் கொள்வாள். மாலா தரும் காப்பியை மறுக்காமல் வாங்கிக் கொண்டு ருசித்துப் பருகுவாள். வாய் நிறைய, "நன்றாயிருக்கிறது!" என்பாள். "நான் இங்கே காப்பி சாப்பிட்டு விட்டதால் அந்தப் பாலை என் மாட்டுப் பெண் தயிர் தோய்த்து விடுவாள். நாளைக்கு எங்கள் வீட்டில் மோர் கொஞ்சம் திக்காக இருக்கும்!" என்பாள்.

விடைபெற்றுக் கொள்ளும் போது, "ஆ, சொல்ல மறந்து விட்டேன் பார்த்தாயா? மார்க்கெட்டில் மாம்பழம் கொட்டிக் கிடக்கிறது. பங்கனப்பள்ளி... கிலோ முப்பது ரூபாய் தான்... வாங்கிக் குழந்தைகளுக்குக் கொடு!" என்று மிகச் சாதாரணமாகச் சொல்வாள், முப்பது ரூபாய் என்பது மலிவு விலை என்பது போல்!

ஒருநாள் அவள் கண்களில் கண்ணீரோடு மாலாவிடம் வந்தாள்.

"அநியாயத்தைக் கேள், மாலா! பாத்திரக் கடையில் நான் ஒரு ஸ்டீல் குடம் பார்த்தேன். விளிம்பில் முத்துக் கோர்த்த மாதிரி மிகவும் லட்சணமாயிருந்தது. தெரிந்த கடைதான். மறுநாள் பணம் தருவதாகக் கடைக்காரரிடம் சொல்லி விட்டு எடுத்துக் கொண்டு வந்தேன்... அதைப் பார்த்ததும் என் மகன் குதிகுதின்னு குதித்தான். "வீண் செலவு... முதலில் திருப்பிக் கொடு!" என்றான். நான் எத்தனையோ கெஞ்சிப் பார்த்தும் மசியவே இல்லை. மறுநாள் குடத்தைக் கடையில் திருப்பிக் கொடுத்தேன். "பரவாயில்லை, அம்மா! உங்கள் கையில், பாவம், காசா பணமா? மகனை அண்டி வாழறவங்க பாடு கஷ்டம்தான்!" என்று கடைக்காரர் சொன்ன போது அவமானத்தில் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல இருந்தது. வெள்ளிக் குடமா என்ன? சாதாரண ஸ்டீல் குடம்."

"விலை என்ன, மாமி!"

"நூற்று எண்பது ரூபாய்... இது ஒரு பணமா? தண்ணீர் பிடிச்சு வச்சுக்க எத்தனை சௌகரியமாயிருந்திருக்கும்?"

"வீட்டில் வேறு குடங்கள்...."

"இருக்கு... பழைய பித்தளை குடம், பித்தளை தவலை. பிளாஸ்டிக் குடம்..."

மாலா பதில் சொல்லவில்லை. சற்று நேரம் புலம்பிப் புலம்பித் தீர்த்தாள் அந்த முதியவள். பின், ஒரு மாதிரியாகச் சமாதானமடைந்தாள். சட்டென்று நினைத்துக் கொண்டவள் போல, "நான் ஒரு ரவிக்கை வேண்டும்னு என் மாட்டுப் பெண்ணிடம் சொன்னேன்.... அந்த அசட்டுப் பெண் புதுசாக இருபத்தஞ்சு ரூபாய்க்கு ரவிக்கைத் துணி வாங்கி வந்திருக்காள்... கட் பீஸ் கடையில் பதினைஞ்சு ரூபாய்க்குக் கிடைச்சிருக்கும்! செட்டும் சிக்கனமுமாய் இருந்தால்தானே குடும்பம் முன்னுக்கு வரும்?" என்ற போது, "எத்தகைய புதிர் இவள்!" என்று மறுபடியும் வியந்து போனாள் மாலா.

ஊரிலிருந்து மாலாவின் அத்தை வந்திருந்தாள். அத்தையின் ஸ்பெஷாலிடி முறுக்கு, தட்டை வகைகள். அதனால் அத்தை வந்தால் கூடவே இந்தத் தின்பண்டங்களும் வரும் என்று ஓர் எதிர்பார்ப்பு... எதிர்பார்ப்பு வீண் போகவில்லை!

அடுத்த தடவை கோடி வீட்டு முதியவள் வந்த போது "இதை டேஸ்ட் பண்ணுங்கள் மாமி!" என்று முறுக்கு, தட்டை ஒவ்வொன்று கொடுத்தாள் மாலா.

முறுக்கில் ஒரு விள்ளல் வாயில் போட்டுக் கொண்டாள். பின், உண்மையான ரசனையோடு, "முறுக்குன்னா இது முறுக்கு... கரகரப்பு, கூடவே மிருதுதன்மை..." என்றவள் தட்டையில் ஒரு விள்ளல் ருசி பார்த்தாள்.

"ஆஹா! இதுவும் ஏ ஒன்! யார் பண்ணது? நீயா?" என்றாள்.

"இல்லை... என் அத்தை!" என்று தன் அத்தையை அறிமுகப்படுத்தினாள் மாலா... இரு பெண்களும் ஒருவரையொருவர் கூர்ந்து பார்த்தனர். பின், அத்தை "நீயா அமிர்தா!" என்றாள். மாமி, "நீயா மஞ்சுளா!" என்றாள். அதன் பிறகு இருவருமே மாலா அறையிலிருப்பதை மறந்தே போனார்கள். பேச்சு, பேச்சு, பேச்சு!

இரண்டு மணி நேர குசலப் பிரச்னங்களுக்குப் பிறகு மாமி, "நான் கோடி வீட்டில்தான் இருக்கேன். அவசியம் வா, மஞ்சுளா!" என்று பிரியாவிடை பெற்றுக் கொண்டாள்.

அவள் சென்றதும், "உனக்கு இவளைத் தெரியுமா மாலா?" என்றாள் அத்தை.

"அடிக்கடி வருவாள், அத்தை... நல்ல மாதிரி... மனம் விட்டுப் பேசற குணம்..."

"பாவம்!" என்று பெருமூச்செறிந்தாள், அத்தை. பின், பேசலானாள்.

"இளமையில் அமிர்தா எப்படியிருப்பாள், தெரியுமா? சிறந்த சிற்பி செதுக்கின சிலை மாதிரி இருப்பாள். அந்த அழகை வார்த்தையில் வர்ணிக்க முடியாது. கண்ணால் பார்த்தால் கண்ணுக்குள்ளேயே தங்கி விடும் அழகு அது! அமிர்தவல்லி என்கிற அவள் பெயரும் அழகுதான், இல்லையா?"

"நிச்சயமாக!"

"சாதாரண பள்ளி வாத்தியாரின் மூன்றாவது மகள். இரண்டு தமக்கைகள், ஒரு தம்பி. ஏழ்மையில் வாடும் குடும்பம்!"

"சரி"

"தாரமிழந்த, குழந்தை இல்லாத, ஒரு நாற்பத்தைந்து வயது செல்வந்தரின் பார்வை இவள் மேல் விழுந்தது. இவளைத் தனக்கு மணமுடிக்க ஒப்புக் கொண்டால், மூத்த இரு பெண்களுக்குத்தானே மாப்பிள்ளை பார்த்து, தன் செலவிலேயே மணமுடிப்பதாகச் சொன்னார். சந்தோஷத்தோடு ஒப்புக் கொண்டார் இவள் தந்தை... செலவில்லாமல் மூன்று பெண்களுக்குமே கல்யாணமாகி விடும் என்றால் கசக்கிறதா, என்ன?"


வாக்குக் கொடுத்தபடியே மூத்த பெண்களின் திருமணங்களை நடத்தி வைத்து விட்டு, இவளை மணந்தார் அந்தப் பணக்காரர்... ஏழை வீட்டில் பிறந்து வளர்ந்த அமிர்தா, பெரிய வீட்டில் சொகுசு வாழ்க்கை வாழ ஆரம்பித்தாள்... ஒரு துரும்பை இங்கிருந்து எடுத்து அங்கே வைக்க வேண்டாம். நல்ல புஷ்டியான ஆகாரம். உடம்பெல்லாம் நகைகள். எப்போதும் பட்டாடைதான். நான் நினைச்சுப்பேன் மாலா, நிஜமான அழகுக்கு அலங்காரம் அவசியமில்லை, அலங்காரத்தினால் அந்த அழகு குறைஞ்சுதான் போகும்னு... தப்பு... அமிர்தா ஏழ்மையிலும் பேரழகி, செல்வச் செழிப்பிலும் பேரழகி... அந்தக் காலத்தில் அவளுக்கு முத்து என்றால் ஒரு பைத்தியம்... காதிலும் கழுத்திலும் கைகளிலும் முத்து நகைகள் அணிவாள். சந்தோஷமாகச் சிரிப்பாள். முத்துக் கோத்த மாதிரி பற்களுக்கெதிரே அந்த ஆபரணங்கள் அவமானப்பட்டு ஒளி மங்கிப் போன மாதிரி நினைச்சுப்பேன். இப்போதும் அந்தப் பற்கள் அதே மாதிரி இருக்கிறதைப் பார்க்கும் போது மனசுக்குத் திருப்தியாயிருக்கு, மாலா! காதிலும் முத்துத் தோடுதான்!"

"நானும் கவனிச்சேன், அத்தை!"

"இனிக்க இனிக்க வாழ்ந்தாள் அமிர்தா. ஒரு மகன் பிறந்தான். மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? திடீரென்று, பேரிடி.... உள்ளங்கையில் வச்சுத் தாங்கின கணவர் ஒரே வார ஜுரத்தில் இறந்து போனார். இதுவரை எங்கே இருந்தார்கள் என்றே தெரியாத உறவினர்கள் சட்டென்று முளைத்தார்கள். ஆளாளுக்குச் சுரண்டினார்கள். கடைசியில் மிச்சமிருந்தது அந்த வீடும், சில நகைகளும், பொக்கிஷமாக ஒரு மகனும்தான்!"

"அடடா!"

"அமிர்தா வெகுளி... சூதுவாது தெரியாதவள். அதிகமாகப் படிக்கவும் இல்லை... வீட்டை விற்றுப் பணத்தை அப்படியே தந்தையிடம் கொடுத்தாள். மகனோடு பிறந்த வீடு வந்தாள். அவள் வளர, வளர, அந்தப் பணம் கரைந்தது. எப்போது, எப்படி என்று அவள் உணருமுன், "விதவைக்கு அலங்காரம் கூடாது!" என்றும், "உனக்கென்ன, பெண்



சமீபத்தில் என் தோழியின் வீட்டிற்குப் போயிருந்தேன். ஹாலில் ஒரு பெரிய நிலைக் கண்ணாடி மாட்டியிருந்தாள். 'எதுக்கு ஹாலில் போய் இவ்வளோ பெரிய கண்ணாடியை மாட்டியிருக்கே' என்று நான் அப்போது குழம்பினாலும் மாலை வீட்டில் விளக்கு போட்ட போது வீட்டிற்குள் பளிச் பிரகாசமாய் ஒளிர்ந்தது. ஒரு விளக்கில் சிக்கனத்திற்கு சிக்கனம். மறுபுறம் வீடே பெரியதாய் உள்ளது போன்ற ஒரு ரம்மியமான பிரமிப்பையும் ஏற்படுத்தியது. சத்தமில்லாமல் என் வீட்டிற்கும் அதை காப்பியடித்துக் கொண்டு வந்து விட்டேன்.

- அனுபல்லவி

குழந்தை இருக்கா? யாருக்கு நகை போட்டு அழகு பார்க்கப் போகிறாய்?" என்றும் விதம் விதமாகப் பேசி, அவள் நகைகளை அவள் பிறந்த வீட்டு மனிதர்களே அபகரித்தனர்..."

"மகா கொடுமை, அத்தை!"

"ஆமாம்... ஆனால் தன் மகன் விஷயத்தில் அவள் அதிர்ஷ்டசாலிதான். நல்ல வேலை கிடைச்ச உடனேயே அவன் ஒரு வீடு பார்த்துத் தன் தாயை அந்தப் பேராசைக் கும்பலிலிருந்து பிரிச்சு அழைத்துப் போனான். நல்ல உத்தியோகம், நல்ல சம்பளம். மாட்டுப் பெண்ணாக வாய்த்தவளும் குணவதி... ஓஹோன்னு இல்லாவிட்டாலும் மதிப்பாய், ஒற்றுமையாய் வாழ முடியுமே! அப்படித்தான் அமிர்தா வாழறான்னு நினைக்கிறேன்!"

"ஆமாம்..."

"இப்போதும் அமிர்தா பார்க்க லட்சணமாய்த்தான் இருக்கிறாள்... அந்தப் புருவம், கண்கள், மூக்கு, வாய், வரிசைப் பற்கள். சின்ன வயசில் அவள் எப்படி இருந்திருப்பாள்னு உன்னால் கற்பனை பண்ண முடியறதா?"

மாலா கற்பனை செய்ய முயற்சித்தாள். ஆனால் மனம் இங்குமங்குமாகத் தாவிற்று.

ஒருபுறம்... வதக்கலும் கூட்டும், பச்சடியும், அப்பளமும், ரசமும், நெய்யும், கெட்டித் தயிரும் ஊறுகாயுமான உணவு சாதாரணம் என்கிற மாதிரி அவள் பேசியது, நூற்று எண்பது ரூபாய்க்கு ஸ்டீல் குடம் வாங்கித் தர மறுத்த மகன் மீது அவள் குறைபட்டுக் கொண்டது, கலப்படமற்ற நெய் விட்டு மைசூர்பாகு செய்ததில் ஆத்மதிருப்தி பெற்றது, மாம்பழம் கிலோ முப்பது ரூபாய் என்பதை அதிர்ச்சி தரும் விஷயமாக அவள் நினைக்காதது - எல்லாமே அவள் வாழ்ந்த செழிப்பான வாழ்க்கையின் சுவடுகள் - அவள் வரை நிஜங்கள்.

மறுபுறம்... மாலா வீட்டில் காப்பி சாப்பிட்டதால் மறுநாள் தன் வீட்டில் கெட்டி மோர் கிடைக்கலாம் என்று அவள் கணக்குப் போட்டது. பதினைந்து ரூபாய்க்கு வாங்கியிருக்கக் கூடிய ரவிக்கைத் துணிக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்த மாட்டுப் பெண்ணின் ஊதாரித்தனத்தைக் கடிந்தது. அவளுடைய மலிவான புடவை, இவை இன்றைய நிலைமையின் யதார்த்தங்கள்.. இவையும் நிஜங்களே.

அமிர்தவல்லி உண்மையில் புதிர் இல்லை!

"என்ன, அமிர்தா எப்படிப்பட்ட அழகின்னு கற்பனை பண்ணிப் பார்த்தாயா?" என்றாள் அத்தை.

"பண்ணிக் கொண்டிருக்கேன், அத்தை!" என்றாள் மாலா.

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806
223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354
கிளை: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு *
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

ரொக்கப் பத்திரங்கள்	தொகை	பத்திரங்கள் மதிப்பு	தொகை	பத்திரங்கள் மதிப்பு
36 மாதங்கள்	Rs.2,925/- Rs.5,850/-	Rs. 5,000/- Rs.10,000/-	Rs. 8,775/- Rs.11,700/-	Rs.15,000/- Rs.20,000/-

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320
Rs.25,280	Rs.24,000	Rs.24,000	Rs.2,25,280

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/-
முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு
முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535
Rs.7,500	Rs.8,880	Rs.10,725	Rs.15,000	Rs.19,010

பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ரூபாய் 10 ஆயிரம் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேமிப்பு திட்டம்
10% P.a.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக
டெபாசிட் செய்யும்பொழுதே வழங்கப்படும்.
* தனியோகம் டெபாசிட் திட்டம் 20%
குறைந்த அளவு ரூ.20,000 டெபாசிட் காலம் 5 ஆண்டுகள்.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ☐ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ☐ வெள்ளி விடுமுறை


நல்லெண்ண நவராத்திரி

◆ நம் வீட்டிற்கு அக்கம் பக்கமுள்ளவர்கள் விசேஷ நாட்களில் ஏதாவது தின்பண்டம் தந்தால் கூடுமான வரை அவர்களது கிண்ணங்களை அலம்பி அதில் பழமோ, மிட்டாயோ, பிஸ்கட்டோ, கல்கண்டோ ஏதாவதொன்றை போட்டு உடனேயோ அல்லது அன்றேயோ திருப்பிக் கொடுத்து விடுவது மிகவும் நல்லது. ஏனெனில் அன்றாட அவசரத்தில் மறதி நேர்வது சகஜம். அவர்களுடைய கிண்ணம் அல்லது தட்டு நம் வீட்டுப் பாத்திரங்களுடன் கலந்து விடுவதும் உண்டு. நாம் அது பற்றி மறந்தே போகும் போது, அவர்கள் கேட்க சங்கோஜப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். ஆகவே பிறர் பொருளை அவ்வப்போது திருப்பித் தந்து நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்வது நல்லது.

◆ பிறருக்கு நம் வீட்டில் செய்த பலகாரத்தையோ, தின் பண்டங்களையோ விசேஷ நாட்களில் தருகையில், ஒட்டை விழுந்த, நசுங்கிய அல்லது கறைபடிந்த தட்டிலோ கிண்ணத்திலோ தரக் கூடாது. சற்றே கருகிய முறுக்குதானே என பிறருக்குத் தந்து விட்டு, நல்லனவற்றை நமக்கென வைத்துக் கொள்ளக் கூடாது. இறைவன் எங்கும் இருக்கிறான் அனைவரிலும் இருக்கிறான் என்பதே நவராத்திரியின் அர்த்தம் இல்லையா?

"மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" இதை நினைத்துப் பார்க்கையில் வியப்பூட்டுவதாயிருக்கிறது. நாம் சிறு வராயிருக்கும் போது படித்திருக்கிறோம். இளமைப் பருவமாதலால் புரியவில்லை முழுப் பொருள் விளங்கவில்லை. இப்போது புரிகிறது. மனம் போன போக்கில் சாப்பிட்டால் ரத்தக் கொதிப்பும், சர்க்கரை வியாதியும் இன்னும் பலவும் வருகின்றன. மனம் போன போக்கில் அனைவரையும் எதிர்த்துப் பேசி கோபத்தைக் காட்டினால் முன்னேற்றம் தடைபடுகிறது. குறிக்கோளின்றி மனம் போன போக்கில் சுற்றித் திரிந்தால் செலவு செய்தால் கடனில் மூழ்கி எழாமல் அமிழ்ந்து விடுவோம். மனம் போன போக்கில் இளமையைச் செலவழித்தால், குணப்படுத்த முடியாத வியாதியும் அல்பாயுளில் மரணமும் ஏற்படுகிறது. எதிலும் ஒரு கட்டுப்பாடு தேவை என்பதை









எவ்வளவு எளிமையாக நமக்கு உணர்த்தி விட்டார் ஔவைப் பாட்டி.

◆ சகலலோக நாயகியாம் அன்னையைக் கொண்டாடும் "நவராத்திரி" வருகிறது. பெண்களை அழைத்து மஞ்சள் குங்குமம், வெற்றிலைப் பாக்கு முதலியவற்றைக் கொடுத்து, அன்னைக்கென்று விசேஷ பூஜைகள் செய்து மனநிறைவும் சந்தோஷமும் பெறுகிறோம். விலை வாசிகள் விஷம் போல் ஏறி மாதா மாதம் பட்ஜெட் உதைக்கும் நிலை நம்மில் பலருக்கு ஏற்படுகிறது. ஆகவே கடன் உடன் பட்டாவது பகட்டாக நவராத்திரி கொண்டாடாமல் நம் கணவருக்கு சிரமம் தராமல் கொண்டாடுவதே உகந்தது. நம்முடைய ஆற்றாமைக்கும், நிம்மதியின்மைக்கும் முக்கியமான காரணம் என்ன தெரியுமா? மற்றவர்களோடு ஒப்பிட்டுக் கொண்டு நாமும் அவர்களைப் போல செய்ய நினைத்து, முடியாவிட்டால் கணவரை குறைப்பட்டுக் கொள்வது; நம்மை நாமே வருத்திக் கொள்வது. இது தேவை தானா? நல்லெண்ணத்துடன் சிக்கனமாக நவராத்திரி கொண்டாடுவோம். உண்மை அன்பையும், சிரத்தையுடன் செய்யும் உழைப்பையுமே அன்னை விரும்புகிறாள். ஆகவே சில நல்ல கொள்கைகளை வழிமுறைகளைக் கடைப் பிடிப்போமா இந்த நவராத்திரி முதல்?

1. நல்ல சுத்தமான (மிளகாய் மிஷினில் அரைக்கப்படாத) மஞ்சள் பொடியையும், குங்குமத்தையுமே பூஜை செய்வதற்கும், பெண்களுக்குத் தரவும் பயன்படுத்த வேண்டும். இவை இரண்டும் கிடைப்பதில் தரமான கடைகளில் கஷ்டமில்லை. மஞ்சள் தூள் சுத்தமானது கிடைக்காதவர்கள் மஞ்சள் கிழங்குகளை குங்குமத்துடன் தரலாம்.

2. ஓட்டை விழுந்த மற்றும் காய்ந்த வெற்றிலை, ஒரு பாக்கு, ஒரு மஞ்சள் போன்றவற்றை என்ன அவசரமாயிருந்தாலும் பிறருக்குக் கொடுக்க வேண்டாம். இனிமையான வரவேற்பும், முறுவலும் கொண்டு வெறும் குங்குமம் கொடுத்து அனுப்பினாலே போதும்.

3. பழைய பாக்குப் பொட்டலங்களை வெற்றிலையுடன் வைத்துக் கொடுக்காதீர்கள். அதனுள்ளே பூஞ்சக்காளான் பிடித்த கெட்டுப் போன பாக்குத் தூள்களே இருக்கும். கன்னிகைகள்தானே என்று சிறுமிகளுக்கும் தராதீர்கள். நாம் யாரை நினைத்து யாருக்காக, என்ன தருகிறோம் என்பதை மறந்து விடாமலிருக்க வேண்டும்.

4. தேங்காய் மலிவாய் கிடைக்கிறதே என்று நாலைந்து நாள் முன்னரே வாங்கிப் போட்டு (முக்கியமாக சரஸ்வதி பூஜை அன்று) தருவதில் அர்த்தமில்லை. என் அனுபவத்தில் இருமுறை அம்மாதிரி தேங்காய்க்குள் இளநீருக்கும் தேஙகாய்க்கும் பதிலாக கருமையான கும்பி நாற்றமடிக்கும் குழம்பிப் போனதிரவமே இருந்தது. தாம்பூலம் பெற்றுக் கொண்டவர்கள் இது பற்றி பிரஸ்தாபிக்காமல் பேசாமல் இருந்து விடுவார்கள். இம்மாதிரி தேங்காய்கள் கொடுப்பது எந்த புண்ணியத்தில் சேர்த்தி? நல்ல கொப்பரைகளை வாங்கி முழுவதாகவோ அல்லது பாதியாக அரிந்தோ தரலாமே. பெற்றுக் கொள்பவர்களும் சில நாட்களுக்கு உபயோகிப்பார்கள். அல்லது 10 பேர்களுக்குக் கொடுப்பதற்கு பதில் 5 பேர்களுக்குச் சற்று நல்ல தேங்காய் வாங்கிக் கொடுக்கலாமே. நாம் பிறருக்குக் கொடுப்பது யாவும் ஜகதம்பிகைக்கே என்ற நினைப்பு வேண்டும்.

5. தூரத்தில் உள்ளவர்களுக்கு கார்டு போட்டு, அவர்கள் செலவு பண்ணிக் கொண்டு வருகிறார்களே அவர்களுக்கு

கடன் கொடுக்கா விட்டால்?




ஒரு நாள் என் பெண் கடன் வாங்கிக் கழிக்கும் கணக்குகளைப் போட்டுக் கொண்டு இருந்தாள். அவளுக்கு அது சரியாகப் புரியவில்லை. அப்போது நான் "மேல் உள்ள எண் சின்னதாக இருந்தால் பக்கத்தில் உள்ள எண்ணிடமிருந்து கடன் வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று சொன்னேன். உடனே அவள் டக்கென்று "கடன் கொடுக்காட்டி?" என்று கேட்டாள். ஒரு நிமிடம் அசந்து விட்டேன் 'நாம் படிக்கும் காலத்தில் நாம் இப்படி எல்லாம் கேட்கவில்லையே' என்று.

பிறகு "கடன் கேட்டால் பக்கத்தில் உள்ள நம்பர் கண்டிப்பாகக் கடன் கொடுத்துவிடும். அதற்கென்ன வாயா இருக்கிறது. கடன் கொடுக்க மாட்டேன் என்று சொல்வதற்கு" என்று சொல்லி சமாதானப்படுத்த வேண்டியதாகிவிட்டது.

- ராணி வின்செண்ட்.

அமெரிக்காவில் டீ வடிகட்டி

நான் அமெரிக்கா சென்றிருந்தபோது டீ வடிகட்டி ஒன்று வாங்கினேன். அது ஒரு பெரிய குங்குமச் சிமிழ் அளவுள்ளது. மூடித்திறக்கலாம். ஒரு பக்கம் சங்கிலி உள்ளது. இதைத் திறந்து நமக்குத் தேவையான அளவு டீ அல்லது காப்பித்தூள் போட்டு மூடி நீரில் போட்டு கொதிக்க வைக்க வேண்டும். கொதித்ததும் பாலில் சர்க்கரை போட்டு டீ டிக்காஷனை கலந்து குடிக்க வேண்டியதுதான்.



சூடான பாலில் கூட இதைச் சிறிது நேரம் போட்டு வைத்தால் டீயை வடிகட்ட வேண்டிய வேலை இல்லை.

– சரஸ்வதி

ஏதாவது தர வேண்டும் என்று நினைத்து எவர்சில்வர் பண்டங்கள் தரப்படுகின்றன. அது மட்டுமல்ல. ஒரு சமயம் ஒரு பெண்மணி என்னிடம், "சரோஜா கூப்பிட்டாளே என மைலாப்பூரிலிருந்து டி. நகருக்கு மஞ்சள் குங்குமத்திற்குப் போனேன். வெறும் தாம்பூலத்துடன் சரி. வேறொன்றும் தரவில்லை" எனக்குறிப்பிட்டாள். அருகில் உள்ளவர்களை நவராத்திரிக்கு அழையுங்கள். மற்றபடி உறவினர்களை அழைப்பதும், சாப்பிடச் சொல்வதும் கொண்டாடுவதும் அவரவர் குடும்ப சௌகர்யம்.

6. நல்ல பழம் கொடுங்கள். அழுகும் நிலையில் இருப்பதைக் கொடுக்காதீர்கள்.

7. கண்டல் தினமும் செய்ய முடியாதவர்கள், தேங்காய் பர்பி, பொட்டுக்கடலை மாவின் லட்டு போன்று சில நாள் நிற்கும் இனிப்புகளை பண்ணி வைத்துக் கொண்டு வெற்றிலை பாக்குடன் தரலாம்.

8. சோளித்துண்டு வைத்துத் தருபவர்களுக்கு ஒரு வேண்டுகோள். 65 செ.மீ., 70 செ.மீக்குப் பதிலாக 80 செ.மீ., 85 செ.மீ. வாங்கி பெண்களுக்குக் கொடுங்கள் முடிந்தவரை ஓரிருவருக்குத் தந்தாலும் நிஜமாகவே அவர்கள் உபயோகிக்க முடியும்.


9. பிளாஸ்டிக் குங்கும டப்பிகளுடன் பின்னால் பேப்பர் ஒட்டிய கண்ணாடிகள் (சிறிய, சதுரமான) தரப்படுகின்றன. இது எவ்வளவு தூரம் பயன்படுகிறது வாங்கியவர்களுக்கு என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே மூடி, திறப்பது போன்று விற்கும் பிளாஸ்டிக் கண்ணாடிகளை சிறிது விலை அதிகமானாலும் வாங்கித் தரவும். வேலைக்குச் செல்பவர்களும் கைப் பையில் கொண்டு செல்லலாம். வீட்டினருக்கும் பயன்படும். எது செய்தாலும் ஓரிருவருக்கேனும் பயன்படுமாறு செய்வது நல்லது.

இந்த நவராத்திரியில் பெண்களுக்கும் கன்னிகைகளுக்கும் மற்றவர்களுக்கும் நம்மால் எது முடியுமோ அவைகளை மட்டும் கொடுத்து, யாவற்றையும் அன்னைக்கென அன்புடன் அர்ப்பணித்து அழகாய்க் கொண்டாடி அவள் அருளைப் பெறுவோம்.


- கீதா சேதுராம்

தயிர் கலக்கும் கருவி

இதுவும் எவர்சில்வர்தான். கைப்பிடியில் ஐந்தாறு கம்பிகளை குருவிக்கூடுபோல் இணைத்துப் பார்க்க மிக வும் அழகாக இருக்கும். தயிர் கலக்கினால் ஐந்தே நிமிடத்தில் வெண்ணெய் ரெடி. ஒரு திருப்பு திருப்பி னால் மோர் ரெடி. கீரை மசிக்க, வேகாத பருப்பை மசிக்க, கோதுமைமாவு கட்டாமல் தோசைக்குக் கரைக்க, முட்டை அடிக்க, மைசூர்பாகு கிளற என்று எதுவும் செய்யலாம்.



– சரஸ்வதி


L.K.S GOLDHOUSE



• மைதிலி

மங்கையர் மலர் & மீரா ஹெர்பல் பவுடர் வழங்கும் கூந்தல் பராமரிப்புப் பக்கங்கள்



♦ *எனக்கு ஆறு வருடங்களாக முடிகொட்டுவது நிற்கவே இல்லை. அலோபதியில் தலையில் ஊசி போட்டுப் பார்த்தேன். வைட்டமின், அயர்ன் டேப்லட் சாப்பிட்டுப் பார்த்தேன். ஆயுர் வேதம் முயற்சி பண்ணினேன். ஒன்றிலும் நிற்கவில்லை. இப்பொழுது முடி கொட்டி கொட்டி மண்டையெல்லாம் தெரிகிறது.*

ராணி.

உடனே தாங்கள் எல்லா சிகிச்சைகளையும் நிறுத்துங்கள். 1 லிட்டர் தேங்காய் எண்ணெயில் கரிசலாங்கன்னி, கருவேப்பிலை, மருதாணி, வேப்பிலை, நெல்லிமுள்ளி வேர், இவைகளைத் தனித்தனியாக ஒரு கைப்பிடி அளவு எடுத்து அம்மியில் அரைத்து அதை எண்ணெயில் போட்டுக் காய்ச்சவும். அனல் குறைவாக இருக்க வேண்டும். பிறகு இரண்டு நாட்கள் ஊறிய பிறகு அந்த எண்ணெயைத் தலைக்கு உபயோகிக்கவும். Hotcil massage என்கின்ற முறை உண்டு. அழகுக் கலை நிபுணரிடம் முதலில் செய்து கொண்டு பின்னர் நீங்களே செய்தால் கண்டிப்பாக நல்ல பலன் காண்பீர்கள்.

♦ *இக் காலத்தில் பெரும்பாலோர்க்கு தலைமுடி இளவயதிலேயே நரைத்து விடுகிறது. அதற்கு என்ன காரணம்? அதை ஓரளவு எப்படித் தடுக்கலாம்? தலைமுடி நன்கு வளர பட்டுப் போன்று இருக்க முட்டையினை உடைத்துத் தேய்க்கலாம் என்று சிலர் கூறுகிறார்களே. அது எந்த அளவுக்கு உண்மை? கூந்தல் நுனி பிளவுபடாமல் இருக்க என்ன வழி?*

எஸ். ஜெயலக்ஷ்மி, சென்னை - 5.

இளவயதிலேயே நரைக்க பல காரணங்கள். நிறைய மருந்துகள் சாப்பிடுவதால். உடல் பலவீனத்தால், அதிக டென்ஷன், கவலை இவைகளால், அடிக்கடி ஷாம்பூ உபயோகிப்பதால், blow dry செய்வதால்.

2. தலைமுடி பட்டுப் போன்று இருக்க முட்டையின் வெள்ளைக் கருவுடன் அரை மூடி எலுமிச்சைப் பழத்தின் சாற்றைக் கலந்து தேய்த்துக் கொண்டு அரைமணி நேரம் ஊறிக் குளிக்க வேண்டும்.

3. கூந்தல் நுனி பிளவுபட்டால் நுனியில் பிளவுபட்ட பகுதியை வெட்டி விட்டு சீராக வைத்துக் கொள்ள வேண்டும்.

♦ *எனக்கு ஓரளவு நீளமுடி உள்ளது. நான் உத்தரப்பிரதேசம் வந்து 6 மாதங்கள் ஆகின்றன. தற்போது நீளநீளமாக அப்படியே முடி உதிர்கிறது. (கழல்கிறது). தண்ணீர் மாறுதலால் முடி*

தைலம் தயாரித்தால்

மட்டும் போதாது

பதில்களைத் தருபவர் - அழகுக்கலை நிபுணர் திருமதி. மைதிலிபாபு

இப்படி உதிருமா? (இங்கு தண்ணீர் இலேசாக உப்பாக இருக்கும்) இதைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

உமாபாரதி, உத்தரபிரதேசம்.

கண்டிப்பாகத் தண்ணீர் மாறுதல்களால் முடி கொட்டும். சீதோஷ்ண நிலையும் மாறுகின்றது அல்லவா? தண்ணீரை நன்கு இரவே கொதிக்க வைத்து விட்டு ஆறிய பிறகு வடிகட்டி அந்த நீரை தலைக்கு மட்டும் உபயோகித்தால் கண்டிப்பாக முடி உதிர்வது உடனே நிற்கும்.

♦ *என் தோழி கல்லூரி படித்துக் கொண்டு இருக்கும் போது முடி உதிர ஆரம்பித்து கடந்த 7 வருடங்களாக நிற்கவில்லை. மிகவும் அடர்த்தியாக இருந்த முடி இப்போது துரும்பாக மாறி விட்டது. மேலும் நிறமும் செம்பட்டையாகி வருகிறது. மீண்டும் முன்பு போல அடர்ந்த கூந்தலைப் பெற தாங்கள் தகுந்த ஆலோசனை வழங்க வேண்டும்.*

எஸ். ஜெயஸ்ரீ, தூத்துக்குடி.

7 வருடங்களாக முடி உதிர்வது என்பது நீங்கள் கவனக்குறைவாக இருந்ததால்தான். முடியை நன்கு பராமரித்து உணவிலும் நல்ல சக்தியான உணவை சாப்பிட ஆரம்பித்தாலும் கூடவே மூலிகை தைலத்தைப் பயன்படுத்தியும் முடி உதிர்வதைத் தடுக்கலாம்.

♦ *என் மகள் வயது 9. அவளுக்கு அரையடி ஆன கூந்தல். சுமாரான அடர்த்தி. ஆனால் அவள் கூந்தல், பிசுபிசுப்பாக இருக்கின்றது. உதிர் உதிராக இல்லை. அதிகமாக சிக்கு பிடிக்கின்றது. தலைக்குக் குளிக்கும் போது முடி ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டு திரிதிரியாக இருக்கின்றது. அதிகமாக பேனும், ஈறும் பிடிக்கின்றது. இந்தக் கூந்தல் கருமையாகவும், உதிர்உதிராகவும் அடர்த்தியாகவும் வளர உங்கள் மேலான ஆலோசனையை நாடுகின்றேன்.*

எஸ். ராமலக்ஷ்மி, பாளையங்கோட்டை.

குளிக்கும் போது எண்ணெய்ப் பிசுக்கு போகின்றது போல உப்புத் தண்ணீர் இல்லாமல் நல்ல தண்ணீரில் முடியை அலச வேண்டும். வாரம் 2 முறை எண்ணெய் தேய்த்துக் குளித்தால் போதும். ஹெர்பல் சீக்காயில் முடிக்குப் பளபளப்பாகும் தன்மையும் எண்ணெய் பிசுக்கை நீக்கும் தன்மையும் உள்ளதாலும் இந்தச் சீக்காய் நல்லது. கூந்தலுக்குத் தேவையான சக்தி இருக்கின்றது, என்பதால் அதை உபயோகிக்கவும். அதிகமாக பேனும், ஈறும் பிடிக்க தாங்களே காரணம். ஈறு எந்த மருந்தினாலும் போகாது ஈறு போகின்ற சீப்பை வைத்து வார வேண்டும். தினமும் வார

ஆம்லாவில் உள்ளன. இவை எல்லாம் சேர்ந்து உங்கள் கேசத்திற்குக் கூடுதல் கண்டிஷனிங் மற்றும் பளபளப்பைத் தரும். அதன் மூலம் அழகாய்த் துள்ளும் கேசம். அத்துடன் மனம் மயங்க வைக்கும் நறுமணம்.



வேண்டும். இதில் பேன்கள் ஒழியாது.

பொடுகு ஒருத்தருக்கு இருந்தால் எல்லாருக்கும் வரும். பொடுகு எந்த வகையைச் சேர்ந்தது? அதாவது கலந்த சருமா (அல்லது) எண்ணெய்ப் பசையுள்ள சருமா என்று முதலில் பார்க்க வேண்டும். நிறைய ஷாம்பூ போட்டு தலை குளிப்பதால் சருமம் வறண்டு பொடுகு வரக் காரணமாகும். எது இருந்தாலும் தேங்காய் எண்ணெயில் சிறிதளவு வேப்பிலையும் குப்பை மேனியும் போட்டுக் காய்ச்சி உடனே தலைக்குத் தேய்த்துச் சிறிது நேரம் கழித்து அலசவும். இதே போல் வாரம் 3 முறை செய்ய வேண்டும். 6 மாதமாவது இவ்வாறு செய்ய வேண்டும்.

♦ *என் வயது 29. என் கூந்தல் மிகவும் மெல்லியதாக இருக்கும். அடர்த்தி இல்லை. (அவர் முடியைப் பாதுகாக்க எடுத்துக் கொள்ளும் சிகிச்சைகளைப் பெரிய பட்டியலாகக் கொடுத்திருக்கிறார்) நான் சீயக்காய், பூங்காங்கொட்டை, காய்ந்த நெல்லிக்காய், வெட்டிவேர், நன்னாரி வேர், சிறிது அரிசி, வெந்தயம், பச்சைப் பயறு கலந்து திரித்து அதை தான் தேய்த்துக் குளிக்கிறேன். இதன் பின்னும் என் முடி நன்றாக இல்லை. எனக்கு நன்கு முடி வளர்ப்பது எப்படி என்று சொல்லுங்கள்.*

எஸ். விஜயலக்ஷ்மி, சென்னை - 14.

சிலருக்கு முடி கொட்டும், கொட்டும் என்று நினைத்து நினைத்துக் கவலைப்படுவதாலேயே கண்டிப்பாக முடி கொட்டும். எண்ணெயில் நாம் எந்த எண்ணெயை உபயோகிக்கின்றோமோ அதையே தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். அவ்வப்போது மாற்றக் கூடாது. தாங்கள் செய்கின்ற ஹெர்பல் சிகிச்சையில் ஏதாவது ஒன்றை மாற்றாமல் தொடர்ந்து செய்து வரவும். கவலையை விடவும். சத்துணவைச் சாப்பிடவும்.

♦ *நான் தலைக்குத் தேய்த்துக் குளிக்கும் போது கஞ்சியுடன், 1 ஸ்பூன் ஹெர்பல் பவுடரும் 1 ஸ்பூன் கடலை மாவும், தேய்த்துக் குளிக்கிறேன். கடலை மாவு தலைமுடிக்கு நல்லதா? கெடுதலா?*

ரோகிணி ராமசுவாமி, மங்களூர்.

கஞ்சியுடன் 1 ஸ்பூன் ஹெர்பல் பவுடரும், 1 ஸ்பூன் கடலை மாவும் கலந்து தேய்ப்பது மிக நல்லது. பிறந்த குழந்தைக்கு வெறும் கடலை மாவுதான் தேய்ப்பார்கள். அதனால் கடலை மாவை தாங்கள் கலந்து தேய்க்கலாம். கடலை மாவு முடிக்கு ரொம்ப வறட்சியைக் கொடுக்காது.

♦ *வீட்டில் இருந்தபடியே எனக்கு என் முகத் தோற்றத்திற்கு ஏற்றாற்போல் ஹேர்ஸ்டைல் செய்து கொள்ள விருப்பம். ப்யூட்டி பார்லர்களில் அவர்களிடம் செய்து கொள்ளச் சொல்கிறார்கள். எனக்கு என் முகத்திற்கு ஏற்ற தலையலங்காரத்தை உங்கள் நிபுணர் விளக்குவாரா?*

கே. சத்யா, சென்னை - 92.

முகத்திற்குத் தகுந்தாற்போல தலையலங்காரம் மாற்றி அமைக்க முதலில் நீங்கள் அழகுக் கலை நிபுணரிடம் ஆலோசனைகளைப் பெற்று மாற்றிய பிறகு நீங்களே அதே போல செய்து கொள்ளலாம்.

♦ *எனது தலையில் 3 அல்லது 4 ஆண்டு காலமாக பொடுகு உள்ளது. அதற்காக நான் புத்தகங்களில் வரும் மருத்துவர் கூறும் நிவாரணிகளை பயன்படுத்திப் பார்த்து விட்டேன். விளம்பரங்களில் வரும் மற்றும் மருத்துவர்கள் கூறும் ஷாம்பூகளையும் பயன்படுத்திப் பார்த்து விட்டேன். பொடுகு ஒழிவதாகத் தெரியவில்லை. மற்றும் முடி அதிகமாகக் கொட்டுகிறது. அதற்காக நான் அழகு நிலையம் ஒரு முறை சென்று தலைக்கு மசாஜ் செய்து கொண்டு வந்தேன். இருந்தும் எனது முடி கொட்டுகிறது. பொடுகும் ஒழிவதாய் இல்லை. இப்பொழுது அனைத்தையும் கைவிட்டு வாரத்திற்கு இருமுறை கஞ்சியில் சீயக்காய் பவுடர் வீட்டில் தயாரித்து போட்டுக் குளிக்கிறேன். வீட்டில் தயாரித்த தேங்காய் எண்ணெய் பயன்படுத்துகிறேன். இருந்தும் பொடுகு தொல்லையும், முடிகொட்டுவதும் நிற்கவில்லை. இதற்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?*

என். உமாராணி, ஈரோடு.

தாங்கள் தைலம் தயாரித்தால் மட்டும் போதாது அதை எப்படி தலைக்கு உபயோகிக்க வேண்டும் என்று ஹெர்பல் அழகுக் கலை நிபுணர்களைக் கேட்டு முறைப்படி உபயோகப்படுத்தினால் கண்டிப்பாக முடிகொட்டாது. நிறைய கீரைகள், காய்கள், பழங்கள் சாப்பிட வேண்டும். அடிக்கடி எண்ணெய் மாற்றக் கூடாது.



கொலு பார்க் டிப்ஸ்

* கொலுவில் பார்க்/ மலை போன்று அமைக்கும்போது சிறிய தகரடப்பாவை மணலில் புதைத்து அதிலிருந்து சாம்பிராணி புகை வரும்படியாக அமைத்தால் மலையிலிருந்து பனிப் புகை வருவது போன்ற 'எஃபெக்ட்' இருக்கும். கொலு பொம்மைகள் வைத்துள்ள அறையும் மணம் கமழுமே!

— ஆர்.சீதா.

மூலிகை எண்ணெய் தயாரிக்கும் விதம்

தேவையான பொருட்கள்:

பொன்னாங்கண்ணி கீரை, மஞ்சள், கரிசிலாங்கண்ணி கீரை, வேப்பிலை, மரு தாணி, செம்பருத்தி, கருவேப்பிலை - (ஒவ்வொரு கீரையிலும் ஒரு கைப்பிடி அளவு)

வெட்டிவேர், மகிழம்பூ, வாசனைப் பட்டை, வெந்தயம், கார்போக அரிசி - தலா இரண்டு ஸ்பூன் பொடியாக (வெட்டி வேரை பொடி பண்ண முடியாது)

தயாரிக்கும் விதம்:

கீரையைத் தண்ணீர் விடாமல் அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு மேல் சொன்ன பொடிகளையும் சேர்க்க வேண்டும். இக் கலவைக்குத் தேவையான அளவு சுத்தமான தேங்காய் எண்ணெயை எடுத்து இந்தக் கலவையுடன் சேர்த்துக் குறைவான சூட்டில் அடுப்பில் வைத்து சூடு பண்ண வேண்டும். ஒரு லிட்டர் ஆயில் கொதிக்கத் தேவையான நேரம் - 15 நிமிடங்கள், கொதித்த பிறகு இறக்கி வைத்து இரண்டு நாட்கள் அப்படியே மூடி வைத்து விட வேண்டும். பிறகு ஒரு சுத்தமான வெள்ளைத் துணியைக் கொண்டு நன்றாக வடிகட்டி, வடிகட்டிய எண்ணெயை இங்கு சொன்னது போல் உபயோகிக்க வேண்டும்.

பட்டுப் போன்ற கூந்தல் வளர

மூலிகை எண்ணெய் தயாரிப்பது மட்டும் போதாது. சரியான முறையில் உபயோகிக்க வேண்டும். ஒரு வாயகன்ற சிறிய பாத்திரத்தில் சிறிதளவு தண்ணீரை ஊற்றி அந்தத் தண்ணீரில் மூழ்காதவாறு ஒரு சிறிய கப்பில் 3 ஸ்பூன் எண்ணெயை ஊற்றி வைக்க வேண்டும். அடுப்பில் சூடு படுத்த வேண்டும். பிறகு தண்ணீர் கொதித்து அந்தக் கொதியில் எண்ணெயும் கொதிக்கும். பிறகு பஞ்சை எடுத்துக் கொண்டு பஞ்சின் மூலமாக முடியில் அல்லாமல் மண்டையில் உள்ள தோலில் படுமாறு வெது வெது சூடாக அழுத்தி விரல் நுனிகளின் மூலமாகத் தேய்க்க வேண்டும். பிறகு நடு மண்டையில் சிறிது சிறிதாக அழுந்தத் தேய்த்து விட வேண்டும். 15 நிமிடங்கள் செய்த பிறகு ஒரு வாயகன்ற பாத்திரத்தில் சுடு நீரை ஊற்றிக் கொண்டு ஒரு துண்டை அதில் நனைத்துப் பிழிந்து அந்த ஆவியை மண்டையில் படுமாறு தலையைச் சுற்றிக் காதுகளில் படாதவாறு கட்ட வேண்டும். பிறகு 5 நிமிடங்கள் கழித்து நன்றாக வேர்த்த பின்பு சீக்காயைப் போட்டுத் தலையை அலசி நன்றாகத் துடைத்து விட்டுக் காய வைக்க வேண்டும். இப்போது முடி கருகருவென்று பளபளப்பாக பட்டுப் போல தெரியும்.

பரிசு பெற்ற கட்டுரை

நீங்கள் மட்டும் சிவலோகம் போகலாமா?

எங்கள் கிராமத்தில் மார்கழி மாதம் திருவாதிரை நாளன்று சிவன் கோவிலில் மிகவும் பெரிய வழிபாடு நடக்கும். அப் பொழுது சிவ பெருமான் ஊர்வலத்தில் வந்து, கோவிலின் முன்னால் உள்ள நுழை வாயில் வழியாக உள்ளே செல்லாமல், பின் னால் இருக்கும் நுழைவாயில் வழியாக உள்ளே போவது வழக்கம். (ஆருத்திரா தரிசனம் மகிமை யாவருக்கும் தெரிந்ததே)

அதுசமயம் உற்சவமூர்த்தியுடன் கூட செல்லுபவர்களுக்கு மரணத்திற்குப் பிறகு சிவலோக பிராப்தி நிச்சயம் என்பது ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை. இதனால் இந்தக் கோவிலுக்கு ஏரானமான பக்தர்கள் வருவார்கள். இவர்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாமல், ஊர்வலத்தில் வலம் வரும் உற்சவமூர்த்தி சிவபெருமானுடன் உள்ளே செல்வதற்கு உதவி செய்ய சில தொண்டர்கள் நின்று கொண்டிருப்பார்கள்.

அவ்வாறு பக்தர்கள் உள்ளே சென்று கொண்டிருக்கையில் ஒரு பெண் மணியின் பின்னலிலிருந்து சவுரி தனியாக ஒரு தொண் டர் கையில் மாட்டி வந்து விட்டது. அந்தப் பெண்மணி அதைக் கவனிக்காமல் உள்ளே சென்று விட்டார். உடனே தொண்டர் அதைப் பிடித்துக் கொண்டு,

"அம்மா! நீங்கள் மட்டும் தனியாக இப்படி, உங்கள் அருமையான கூந்தலை பூலோகத்தில் விட்டு விட்டு சிவலோகம் செல்ல நினைப்பது சரியா?" என்று கூவினார். இதை கேட்டதும் அங்கு குழுமியிருந்த பக்தர் கள் அனைவரும் தங்களையும் மறந்து சிரித் ததை பதினைந்து ஆண்டுகளாகியும் மறக்க முடியவில்லை.

பி.கு.:- அப்பொழுது அநேகமாக எல்லா நடுத்தர வயதுப் பெண்மணிகளும் கூந்தல் எவ்வளவு நீளமாக இருந்தாலும் ஒரு சவுரியையும் சேர்த்துதான் பின்னவோ,

முடிந்துகொள்ளவோ, கொண்டை இடவோ செய்வார்கள். சவுரி சர்வசாதாரணமாக உப யோகித்து வந்த காலம் அது.

- கே.கே.புவனேஸ்வரி, பம்பாய் - 93.

பிரசுரத்திற்குச் சில கட்டுரைகள்:

கழுத்தை விட்டு இறங்காத கூந்தல்

என் தம்பியின் திருமணம். பத்திரிக்கை வந்தது. நான் வெகு தூரத்தில் இருப்பதால் திருமணத்திற்கு முதல்நாள்தான் போக முடிந்தது. பெண் அழைப்பு வெகு ஜோராக நடந்து கொண்டிருந்தது. வாண வேடிக் கையும் வீடியோ லைட்டும் கண்களை கூசு கிறது. எங்களைச் சேர்ந்தவர்கள் முன்னாடி சென்று கொண்டிருந்தார்கள். நான் பெண் வீட்டார் வரிசையில் பின் தங்கி விட்டேன். பெண்ணின் அம்மா மாப்பிள்ளை வீட்டார் பெண்களை பார்ப்பதும் தங்களுக்குள் ஏதோ பேசுவதும் சிரிப்பதும் கிண்டலும் கேலிக் கையுமாக வந்தார்கள். என்னை யார் என்று அவர்களுக்குத் தெரியாது. இதைப் பார்த்த எனக்கு எப்படியோ இருந்தது. பெண்ணின் அம்மாவை அணுகி,

"நீங்கள் சொல்வதற்கு எல்லோரும் சிரிக்கிறார்கள் அப்படி என்ன சொல்கிறீர் கள்?" என்றேன்.

"நீங்கள் யாருங்க" என்று கேட்டார்கள்.

"நான் உங்கள் பக்கத்து ஊர் பாங்க் மானேஜரின் மனைவி. பெண்ணின் அப்பா பத்திரிக்கை கொடுத்தார். ஆகையால்தான் வந்திருக்கிறோம்" என்று சமயோசிதமாக பதில் அளித்தேன்.

அவர், "நாங்கள் மாப்பிள்ளை வீடு பார்க்க சென்றிருந்தோம். மாப்பிள்ளையின் அம்மா என்னிடம் பெண்ணிற்கு நீளமாக முடியிருக்குமா, பெண் நன்றாக இருக்குமா என்று கேட்டார்கள். நான் நன்றாக இருக்கும் என்று சொன்னேன். மாப்பிள்ளை வீட் டாரைப் பார்த்தால் எல்லா பெண்களையும் அடையாளம் சொல்கின்ற அளவுக்கு கழுத்தை விட்டுக் கூந்தல் இறங்கவில்லை. முதுகிற்கு மேலே கூந்தல் உள்ளவர்கள் மாப் பிள்ளை வீட்டார்கள் என்று சொல்லிவிட லாம்" என்று கழுத்தை ஒரு வெட்டு வெட் டினார்களே பார்க்கலாம்.

என் தலையைத் தடவிப் பார்த்துக் கொண்டேன். என் கூந்தலும் அப்படித்தான். நான் யாரென்று தெரிவதற்குள் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டேன்.

-மகேஸ்வரி நாகராஜன், திருச்சி.

கூந்தல் ஜோக்

"ஏண்டி, அழகாயிருந்த உன் கூந் தலை வெட்டி, பாப் பண்ணிட்டே?"

"அழகிப் போட்டியில கலந்துக்கப் போறேன்."

சுமித்ரா ராஜூ, கல்பாக்கம்.

கூந்தல் ருசி!

என் தம்பிக்கு பெண் பார்க்க திருச்சி யில் இருந்து சென்னைக்கு வந்தோம். முதலில் நானும் என் கணவரும் போய் பார்த்துவிட்டு வருவதாக ஏற்பாடாயிற்று. அதன்படி நாங் கள் இருவரும் பெண் பார்க்கப் போனோம். பெண் கருப்பாக இருந்தாலும், மூக்கும் முழியு மாக அழகாக இருந்தாள். அப்போது என் தம்பி பம்பாயில் வேலையில் இருந்தான். நான் என் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் "பெண்ணின் நிறம் குறைவாக இருந்தாலும் அடக்கமாக, அழகாக இருக்கிறாள். எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. 'கருப்பே அழகு; காந்தலே ருசி' அதனால் உனக்கும் அந்தப் பெண்ணை பிடிக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே லீவு போட்டுக் கொண்டு ஒரு நாள் போய் பெண்ணைப் பார்த்து விட்டு வா" என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதன்படியே என் தம்பியும் சென் னைக்கு வந்து பெண்ணைப் பார்த்துவிட்டு எனக்குப் பதில் எழுதினான். அதில் 'அக்கா! எனக்குப் பரிபூர்ண சம்மதம். கருப்பு அழகு தான். நான் பார்த்துவிட்டேன். ஆனால் கூந் தலைத்தான் ருசி பார்க்கவில்லை' என்று எழுதிவிட்டு, கூடவே நான் அவனுக்கு எழுதிப் போட்ட லெட்டரையும் வைத்து அனுப்பியிருந்தான். என்ன இது! கூந்தலை யாவது ருசி பார்ப்பதாவது! என்ன எழுதி யிருக்கிறான் என்று விளங்காமல் நான் எழுதின லெட்டரைப் பிரித்துப் படித்தேன். அதில் 'கருப்பே அழகு; கூந்தலே ருசி' என்று எழுத்துப் பிழையாக எழுதியிருப் பதைப் பார்த்து ஒரே சிரிப்பு.

பிறகு கல்யாணம் முடிந்து 'ஹனி மூனும்' முடிந்து, என் தம்பி என் வீட்டுக்கு விருந்துக் காக வந்தான். அப்போது என் கணவர்

இந்த இதழ் பரிசுக் கட்டுரைக்கு மீரா அளிக்கும் பரிசு – ரூ. 1,000/- மதிப்புள்ள குக்கர்	அடுத்த இதழுக்கான போட்டி - ப்யூட்டி பார்லர் சம்பவம்! கடைசி தேதி 10-10-94

"என்ன அசோக்! கூந்தலை ருசி பார்த்து விட்டாயா?" என்று கேட்டாரே பார்க்கலாம். 'டபுள் சிரிப்பு'தான் போங்கள்!

- **கே.கல்யாணி.**

கோபி சிசாவுக்கு மூடிவேணும்!

சென்ற வருடம் நானும் என் கணவரும் எங்கள் பன்னிரண்டு வயதான பெண் சிதாவுடன் வேறு வீட்டிற்குக் குடித்தனம் போனோம். அப்போது சாமான்களை எல்லாம் பிரித்து எடுக்கும்போது கோபி செட்டிப்பாளையத்திலிருந்து வாங்கிவந்த, இரண்டு அழகான சீசாக்களின் மூடியும் உடைந்து விட்டன. எனக்கு ஏக வருத்தம். வீடு மாற்றிய சில நாட்கள் கழித்து, என் பெண் 'சீதா' பெரியவளாகி விடவே, அதைக் கொண்டாட கோபியிலிருக்கும், என் பெற்றோர்களை வரும்படி அழைத்தேன். அப்படியே வரும் போது 'கோபி சீசாவுக்கு இரண்டு மூடி வேண்டும்' என்றும், அதை வாங்கி வரும் படியும் எழுதியிருந்தேன்.

அப்போது கோபியில் அதிக மழை பெய்து வருவதாகவும், அவர்களால் அப்போது வரமுடியாது எனவும் கூறி, அங்கிருந்து வந்த ஒரு நண்பரிடம் நான் கேட்டதை மட்டும் வாங்கி அனுப்பி இருந்தனர் என் பெற்றோர்கள். அந்த நண்பர் சென்ற பிறகு, பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்த எனக்கு ஓரே சிரிப்பு. பொட்டலத்தினுள் இரண்டு சவுரி முடிகள் இருந்தன. ஒன்றும் விளங்கவில்லை. மூன்று நாட்கள் கழித்து கோபியிலிருந்து என் பெற்றோர்கள் வந்தனர். வரும்போதே நான் எழுதியிருந்த போஸ்ட் கார்டை காட்டி,

"என்னம்மா பொண்ணு நீ! மழை நாளில் போஸ்ட் கார்டில் எழுதிப் போடலாமா! நீ கொடுத்த புது வீட்டு அட்ரஸ் எல்லாம், அழிந்து போய், உன் வீட்டைத் தேடிக் கண்டுபிடிக்க இவ்வளவு நேரம் ஆகிவிட்டது" என்றார் என் தந்தை அலுப்பாக.

நான் எழுதிய கார்டை வாங்கிப் பார்த்தேன். உண்மை விளங்கி விட்டது. 'கோபி சீசாவுக்கு மூடி வேணும்' என்பது மழையில் அங்கும் இங்குமாக அழிந்து 'பேபி சிதாவுக்கு முடி வேணும்' என்று படித்திருக்கிறார்கள். அதன்படியே சவுரி முடி வாங்கி அனுப்பியிருக்கிறார்கள். வீடு முழுவதும் ஒரு வாரத்துக்கு சிரிப்போ சிரிப்புதான் போங்கள்.

மாளவிகா, சென்னை - 24.

கூந்தல் ஜோக் என்றவுடன் என் நினைவிற்கு வந்தது 'சயின்ஸ் டுடே'யில் பெருகி வரும் மூலிகை எண்ணெய்களைப் பற்றிய செய்தியுடன் வெளியான இந்த ஜோக்தான். மூலிகைகளைக் கிண்டலடிப்பது போல் இருந்தாலும் பார்ப்பவரை புன்னகை மன்னனாக்கும் இந்த ஜோக்.





பனை எண்ணெயிலிருந்து தயாரிக்கப் படுவதால் பாமாயிலை தேய்த்துக் கொண்டால் பனைமரம் போல் முடிவளரும் என்ற கற்பனையில் ஆனந்த விகடனில் (21-8-94) வெளியான இந்த ஜோக் நரசிம்மராவ்களையும் சிரிக்க வைக்கும்.


"சார் நம்ம கூந்தல் தைலத்தை தடவிகிட்டா முடியெல்லாம் உதிர்ந்து போகுதுன்னு புகார் வந்திருக்கு."

"நல்லதா போச்சு, அதையே ஹேர் ரிமூவரா வித்துடலாம்."

ஹி...ஹி...இது நம்மளோடது.

-பூர்ணிமா, பெங்களூர் -21.

நாட்டையே காப்பாற்றியது தங்கம்!



முதல் தடவை அவரைச் சந்தித்த போதே அவர் சொன்ன ஒரு வாசகம் என்னைக் கவர்ந்தது -

''நாங்கள் பெண்கள் விரும்பும் நகை வியாபாரத்தில் இருந்தாலும், பெண்களை விளம்பர சாதனமாக வைத்து விளம்பரம் செய்ய விரும்புவதில்லை. அதை எங்கள் கோட்பாடாகவே வைத்து இருக்கிறோம். அதனால்தான் நாங்கள் விளம்பரங்கள் தரும் போது எங்கள் கடை படம், பழமொழி என போடுவோம்.''

சென்னை தி.நகர் உஸ்மான் ரோடிலுள்ள எல்.கே.எஸ். கோல்ட் ஹவுஸின் உரிமையாளர்களில் ஒருவரான எல்.கே.எஸ். சையத் அஹமதுதான் அவர். 1930-களில் ஸ்ரீலங்காவில் மிகப் பெரிய நகைக் கடையை வைத்திருந்தார்களாம் இவருடைய முன்னோர்கள். அறுநூறு பொற்கொல்லர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்களாம்!



''ஆனால் அதெல்லாம் பழங்கதை. சென்னையில் 60-ல் கடை ஆரம்பித்தோம். அப்புறம் 88-ல் தி. நகரில். எங்களுடைய புதுமையான டிசைன்களுக்காகவே நாங்கள் புகழ்பெற்றோம்.''

''எல்லாம் சரி. நகை, புடவை இரண்டையும் பெண்களின் இரண்டு கண்களாகச் சொல்கிறார்கள். இப்படி மோகம் பிடித்து அலைகிறார்களே எனக் குற்றம் சாட்டுவதுண்டே. ஆனால் இதே தொழிலில் இருக்கும் நீங்கள் இதை ஆதரிக்க மாட்டீர்கள் இல்லையா?''



"நான் நகைத் தொழிலில் இருக்கிறேன் என்பதற்காக இதை மறுக்கவில்லை. தங்கம் என்பது எப்போதும் கையில் இருக்கும் பயன்படத்தக்க செல்வம். பணத்தைக் கையில் வைத்திருக்க முடியாது. திடீரென நடு இரவு ஒரு அவசரம். அப்போது கொடுக்க வேண்டியவருக்கு நகையாகக் கொடுத்து விட





மருந்தோ மருத்துவமோ இப்படிப்பட்ட இக்கட்டான தருணங்களைத் தடுக்கலாம். என் அபிப்பிராயம் ஒவ்வொரு பெண்ணும் குறைந்தபட்சம் இருபது பவுன் நகையாவது வைத்திருக்க வேண்டும்..."

எனக்குச் சிரிப்பு வந்தது. தாலி செய்யக் கூட தங்கம் வாங்க இயலாமல் தவிக்கும் பல ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள்.

"உண்மைதான் நீங்கள் சொல்வது. ஆனால் வறுமை என்பதற்காக யாரும் சாப்பிடாமலோ உடை உடுத்தாமலோ இருந்து விடுவதில்லை. மற்ற எல்லா பொருட்களையும் இன்றைய சூழ்நிலையில் தவணையில் வாங்கி விடலாம். ஆனால் தங்கத்தை வாங்க முடியாது. எனவே எப்போதும் தங்களுக்கு அவசரத்திற்கு உதவும் தங்கத்தைச் சிறுகச் சிறுகச் சேர்க்க வேண்டும்!"

"ஆனால் தங்கம் ஒரு 'டெட் இன்வெஸ்ட்மெண்ட்' இல்லையா? தொழிற்சாலையைப் போல மற்ற இயங்கும் நிறுவனங்களைப் போல அது கைமாறுவதில்லையே! போட்ட பணம் அப்படியே முடங்கி விடுகிறதே!"

தங்கத்தைப் பற்றி இவர்கள் சொன்ன சில சுவையான தகவல்கள் :

- இந்தியாவில் தனியார்வசம் இருக்கும் தங்கத்தின் மதிப்பு ஏழாயிரம் டன்னாம்!
- வருடத்திற்கு 400 டன் தங்கம் இந்தியாவில் வாங்கப்படுகிறது!
- தென்னிந்தியப் பெண்மணிகள் தான் அதிக எடையுள்ள நகைகளை விரும்புகிறார்களாம்!
- அதிகபட்ச தங்கப் பரிமாற்றம் திருமண நேரங்களில்தான் நடைபெறுகிறது.

"அப்படிச் சொல்லாதீர்கள்! நமக்கு மிகப் பயங்கரமான பொருளாதார நெருக்கடி வந்த காலகட்டத்தில் தங்கம்தான் நம் நாட்டைக் காப்பாற்றியது. தங்கத்தைக் கொடுத்து நாம் பொருளாதாரத்தைச் சமாளித்தோம் இல்லையா?"

"உண்மைதான். சமீபத்தில் நடந்ததே..."

"எனவே தங்கமே இக்கட்டான நிலைமைக்கு உதவுவதுதான். சேமிப்பு என்பதைப் பல்வேறு விதமாகச் செய்ய வேண்டும். அதிலே தங்கமும் ஒன்று. ஆனால் அதைக் கட்டி கட்டியாகவா வைக்க முடியும்? எனவேதான் பெண்கள் நகையாக அணிகிறார்கள்!"


"இப்போதெல்லாம் கடைக்குக் கடை தங்கத்தின் வண்ணம் மாறுகிறது. துபாயில் இருந்து வரும் நகைகள் பளீரென மஞ்சளில் மின்னுகிறது. இந்த வித்தியாசங்களுக்குக் காரணம் என்ன?"

"வண்ணம் ஏறக்குறைய இருப்பதால் அது தங்கத்தின் குறை என்று சொல்ல முடியாது. எல்லாமே 22 காரட் தங்கம்தான். 24 காரட் தங்கத்தில் நகை செய்ய முடியாது என உங்கள் எல்லோருக்குமே தெரியும். அதிலே ஒரு காரட் வெள்ளியும், ஒரு காரட் செம்பும் சேர்த்துத்தான் நகை செய்ய முடியும். அப்படிச் சேர்க்கும் போது அந்த வெள்ளியும், செம்புமே தங்கம் எத்தனை சுத்தமாக இருக்கிறதோ அத்தனை சுத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் தரமான 22 காரட் என்று சொல்ல முடியும்."

"உங்கள் கடை டிசைனுக்கு பேமஸ் என்கிறார்களே...?"

"உண்மைதான். நாங்கள் எல்லாவித டிசைன்களையும் வைத்து இருக்கிறோம். அதிலே சுவையானது 'J' தோடு. புகைப் படத்தில் நம்முடைய முதலமைச்சர் போட்டிருக்கும் தோட்டினைப் பார்த்து அதே போல தங்கத்தில் செய்யச் சொன்னேன். அது விற்பனைக்கு வந்த போது நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பினைப் பெற்றது. ஏனென்றால் முன்னாடியெல்லாம் காதில் பட்டன் தோடுதான் போடுவார்கள். இது அன்றாடம் வீட்டில் போட்டுக் கொள்ளும் டிசைன். ஆனால் ஜெ தோடு இப்போது அந்த இடத்தைப் பிடித்து விட்டது. இதிலே கொஞ்சம் கொஞ்சம் இம்ப்ரூவ் செய்து, கல் வைத்து, குண்டலம் வைத்து என நிறைய மாடல்கள் கொண்டு வந்து விட்டோம். மிகக் குறைந்த தங்கத்திலேயே இதைத் தயாரிக்க முடியும் என்பதாலும், நவீன பல டிசைன்களை இதில் கொண்டு வர முடிந்ததாலும் நல்ல வரவேற்பு இதற்கு!"

ஜெ எப்போதும் எங்கும் 'ஜே'தான் போலிருக்கிறது! ஆனால் அவற்றைப் பார்த்த போது 'பொடி' வேலை நிறைய இருக்குமோ எனத் தோன்றியது. "ஆனால் இப்போதுதான் 'காட்மியம்' எனும் தொழில்நுட்பம் வந்து விட்டது. தங்கத்தைப் பற்ற வைக்க இந்த இரசாயனப் பொருள் உபயோகிக்கப்படு கிறது. இரண்டு தங்கத்தையும் ஒட்ட வைத்து விட்டு காட்மியம் காணாமல் போய் விடுகிறது. எனவே இதில் நஷ்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை.



• சையது அகமது

அப்புறம் நீங்கள் டிசைன் பற்றிக் கேட்டீர்கள் இல்லையா? கேரள ஆசாரிகளிடம்தான் மிக நுட்பமான கைவேலைப்பாடுகள் அதிகம். அவற்றையே 'வெயிட்'டான தங்க நகைகளில் பயன்படுத்தும் போது அழகாக அமைகிறது. நிறைய சிறு சிறு மாற்றங்களைச் செய்து புதுப்பிக்கிறோம்."

"டிசைன்கள் உங்களுக்கு எங்கிருந்து வரும்?"

"மக்களிடம் இருந்துதான். அவர்கள் பல ஐடியாக்களைச் சொல்வார்கள். அதிலிருந்து நாங்கள் எடுத்துக் கொண்டு அதில் எங்கள் தொழில் நுட்பத்தைக் கையாண்டு பர்ஃபெக்ட்டாக ஆக்கி விடுவோம்."

"பெண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு டேஸ்ட்டில் இருப்பார்கள் இல்லையா? ஒருசிலர் பொடியோ, எடை குறைவோ கூடாது, வாங்கினால் 'காத்திரமாக' நகை வாங்க வேண்டும் என்பார்கள். சிலர் அழகிய தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்..."

"அது நாம் எதற்கு வாங்குகிறோம் என்பதைப் பொறுத்து இருக்கிறது. சேமிப்பாகவோ, வைத்து எப்போதேனும் போடுவதற்கோ என்றால் காத்திரமாக வாங்குவதுதான் நல்லது. ஆனால் அன்றாட, அடிக்கடி பயன்படுத்தும் நகைகளை அவ்வப்போது ஏற்படும் ஃபேஷனுக்கு ஏற்ற மாதிரி வாங்குவது நல்லது!"

"இரண்டு வகையாகவும் எங்களிடம் இருக்கிறது" என்கிறார் இவருடைய சகோதரர் அக்பர்ஷா.

" 'ஆன்டிக்' வகை எனப்படும் பழைய வேலைப்பாடுகளுடன் நகையும் இருக்கிறது. அதைப் பார்த்தீர்களானால் புதுசு என்றே யாரும் சொல்ல மாட்டார்கள்..."

"அதை யாரேனும் வாங்குகிறார்களா என்ன...?"

"ஐயோ, அதற்கு என்ன டிமாண்ட் தெரியுமா? மிகவும் ஹைசொஸைட்டி, தனி டேஸ்ட் உள்ளவர்கள் வாங்குகிறார்கள். டெல்லியில் ஒரே ஒரு ஆசாரி தான் இருக்கிறார் இதற்கு. அவர் வாரத்திற்குக் கொஞ்சம் அனுப்புவார். வந்தவுடன் தீர்ந்து விடும்.

அதே போல நிறைய மிக நுட்பமான வேலைப்பாடுகள் கொண்ட நகைகள் உண்டு. மேலைநாட்டிலிருந்து வருபவர்கள் இவற்றை மிகவும் விரும்பி வாங்குவார்கள். இப்படி சாதாரண நிலை முதல் ஆன்டிக் வரை எல்லாமே இங்கு உண்டு" என்கிறார்கள் இச்சகோதரர்கள்.

நகை பாதுகாப்பிற்கு இவர்களின் இளைய சகோதரர் இம்தியாஸ் அகமது சொல்லும் யோசனை. "நகைகளை எந்த வடிவத்தில் வாங்குகிறீர்களோ அந்த வடிவத்திலேயே வைத்துப் பாதுகாக்க வேண்டும். கல்யாணத்திற்குப் போட்டுக் கொண்டு போய் வந்த பின் அவசரத்தில் சுருட்டி வைத்து விடுவார்கள். அது அதன் அழகிய 'ஷேப்'பை இழந்து விடும். நகைப் பெட்டி



• இம்தியாஸ் அகமது

யில் அதே வடிவில் வைக்க இரண்டு நிமிடம் செலவாகுமா? வெளியூர்ச் செல்பவர்கள் ஒவ்வொரு பெட்டியாகத் தூக்கிக் கொண்டு போக முடியுமா எனக் கேட்கலாம். யானை வாங்கியவர்கள் அங்குசம் வாங்கத் தயங்கக் கூடாது. நகைப் பெட்டி ஒன்றினை வாங்குங்கள். நாங்கள் கூட பிரயாணத்திற்கு வசதியாக இதை வடிவமைத்து இருக்கிறோம். பல நகைகளை இதில் வைத்துக் கொள்ளலாம். நகைகளை வாங்கும் போது இருக்கும் உற்சாகம் அதைப் பாதுகாப்பதிலும் இருக்க வேண்டும்'' என்கிறார் சையது அகமது.

"பண்டிகை நாட்களில் செய் கூலி இல்லை, சேதாரம் இல்லை என விளம்பரப்படுத்துகிறார்களே?''

"உண்மை என்னவென்றால் இதை ஆரம்பித்து வைத்தது நாங்கள்தான். அந்த ஐடியாவும் என் மனைவியிடம் இருந்து கிடைத்ததுதான். ஒரு தடவை வருடக் கடைசியில் என் மனைவி, 'நாளை காலை நான் ஷாப்பிங் போகிறேன். ஜனவரி 1 என்பதால் இருநூறு ரூபாய் தள்ளுபடியாம். காலையில் போய் விட்டு வருகிறேன்' என்றார்கள். மறுநாள் ஒன்பதாச்சு பத்தாச்சு அவள் வரவேயில்லை. அவளைத் தேடிக் கொண்டு போனால் ஒரு பெரிய க்யூவில் நின்று கொண்டிருந்தாள்.

அப்போதுதான் எனக்குத் தோன்றியது. இருநூறு ரூபாய் என்பது எங்கள் நிலையில் பெரிய விஷயம் இல்லை. ஆனால் தள்ளுபடி என்றவுடன் என் மனைவியே அங்கு போகிறாள் என்றால்...? பெண்களுக்கு இது ஒரு அட்ராக்ஷன் போலும் என நினைத்தேன். நானும் என் சகோதரர்களும் கலந்தாலோசித்து நகையிலேயும் இப்படிச் சேதாரம் இல்லை, செய்கூலி இல்லை என அறிவித்தோம். அது மிகப் பெரிய வெற்றி அடைந்தது. பிறகு மூன்று நாட்களுக்கு என நீட்டிக்க வேண்டியதாயிற்று. அந்தச் சமயம் பார்த்தீர்களானால் கடையே காலியாகி விடும்! அப்புறம் எல்லா நகைக் கடைகளும் இதனை அறிவித்தன..."

"இது எப்படி உங்களுக்குக் கட்டுப்படியாகிறது? இதில் ஏதேனும்..."

"நீங்கள் நினைப்பது போல எதையும் யாரும் தவறாகச் செய்ய முடியாது. ஏனெனில் தரம் என்பது எங்கள் வியாபாரத்தில் மிகவும் முக்கியம். எங்களின் வாடிக்கையாளர்களின் நல்ல எண்ணம் எப்போதும் எங்களுக்கு வேண்டும். தவிரவும் மற்ற பொருட்களைப் போல விலையையும் மாற்ற முடியாது. மார்க்கெட் ரேட் என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. விளம்பரத்திற்குச் செலவழிக்கிறோம் இல்லையா அது போலத்தான் இதுவும். மக்களுக்கு வருடத்திற்கு ஒரு தடவை எந்தவிதமான அதிகச் செலவும் இல்லாமல் தங்கத்தைத் தங்கம் விலைக்கே கொடுக்கிறோம். ஆசாரிகளுக்குக் கொடுக்கும் கூலி, சேதாரம், மற்ற செலவுகள் என அனைத்தையும் நிர்வாகம் ஏற்கிறது. ஒரு நல்ல காரியம் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்!''

"இனிவரும் சீசன்களில் உங்களுக்கு வியாபாரம் கூடும் இல்லையா?''

"நிச்சயமாக. பெண்களுக்கு ஒரு மொத்தமாகப் பணம் சேரும் போது நகை வாங்கத்தான் விரும்புவார்கள். ஏனெனில் டி.வி., புடவையெல்லாம் இப்போது இன்ஸ்டால்மெண்டில் கிடைக்கிறது. தவிரவும் விதம் விதமாகப் போடவும் பெண்கள் விரும்புகிறார்கள். இப்போதெல்லாம் விழாக் கோலம் என்றில்லை எப்போதும் பெண்கள் நகை வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!''

கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல பெண்களுக்கு நகை போட்டு புகைப்படம் எடுப்பதையே இவர்கள் விரும்பவில்லை. 'அது வேண்டாங்க. நகைகளை மட்டும் வேண்டுமானால் புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்கள்'. என்றார்கள். அவர்களைச் சமாதானப்படுத்துவது பெரும்பாடாகி விட்டது.

"இது நீங்கள் கொடுக்கிற விளம்பரம் இல்லையே? நாங்கள்தானே நகைகளைப் பற்றி உங்களிடம் கேட்கிறோம்!'' எனச் சொல்லி எடுக்க வேண்டியதாயிற்று.


பெண்களுக்கு பெருமதிப்பு தரும் இச் சகோதரர்கள் எப்போதும் சிரித்த முகத்துடன் கடையில் வளைய வளைய வருகிறார்கள்! தங்கமானவர்கள்தான்!!

- 'புவன்'

அட்டை வண்ணப்படம் :
ஓம். சுப்ரமண்யம்

அட்டையில் : **விஜி, ப்ரியா.**

கட்டுரைப் படங்கள் :
ஓம் சுப்ரமண்யம், பி. ஆர். கண்ணன்.



கொலு வைத்திருப்பவர்கள் வீட்டில் சின்ன அம்மன் ஸ்லோகங்களை (4 வரிகளுக்குள் உள்ளது) சின்ன அட்டையில் 'ஸ்கெட்ச்' பென் கொண்டு சுவரில் எழுதி மாட்டலாம்/ஒட்டலாம்.

- ஆர். சீதா

♦ ஒவ்வொரு மாதமும் மங்கையர் மலரைப் பார்த்ததும் தாயைக் கண்ட சேய் போல் உள்ளம் குதூகலிக்கிறது. சேய் தன் தாயிடமிருந்து தான் எல்லாவற்றையும் கற்றுக் கொள்வதாலோ?

சென்னை -5, கே. ஆர். பத்மினி.

♦ வெற்றிப் பாதையில் கட்டுரை அசர வைக்கிறது. வென்று காட்டியிருக்கிறோம் என சப்தம் இல்லாமல் சாதனை படைத்து வரும் மீனா சேது போன்ற பெண்மணிகளைப் பற்றிப் படிக்கும் போது புது ரத்தம் பாய்கிறது. புத்துணர்ச்சி பிறக்கிறது.

பரமக்குடி, பா. உஷாராணி.

♦ மென்மையாக பாடல்கள் எழுதி அவற்றைக் கேட்கும் போது மனதுக்கு ஒத்தடம் கொடுக்கும் சுகத்தைத் தொடர்ந்து தந்து வருகின்ற கவிஞர் - இயக்குனர் ஆர்.வி. உதயகுமாருடன் ஒரு மென்மையான பேட்டியைப் படிக்கப் படிக்க மனம் சந்தோஷத்தில் நிறைந்தது. "ஒருநாளும் உனைமறவாத இனிதான வரம் வேண்டும்" என்ற பாடலை எழுதிய ஆர்.வி. உதயகுமாரை ஒரு நாளும் மறக்கவே முடியாது என்பது என் கணிப்பு!

சென்னை - 14, வலங்கைமான் நசீர்.

♦ 200க்கும் மேற்பட்ட திருமண விளம்பரங்கள் ஆவணி, புரட்டாசிக்கே இப்படினா இன்னமும் 'தை' பிறந்தால் தனி இலவச இணைப்பைப் போட்டுக் கொடுத்திடுவீங்க போலிருக்கே.

மதுரை, சுகந்தி நாராயண்.

♦ இம்மாத இதழுக்கு யோசனை சிறப்பிதழ் என்றே பேர் வைத்திருக்கலாம். பக்கத்துக்குப் பக்கம், குடும்பத்துக்கு உதவும் பல்வேறு குறிப்புகள், யோசனைகள். வாசகிகளுக்கு சிக்கனத்தையும், சுறுசுறுப்பையும் வாசகிகளே (துணுக்குகள் எழுதி) கற்றுத் தந்து விடுகிறார்களே!

இராமேஸ்வரம், மு. முருகேசன்.

♦ 'வலி' நாவல் கண்ணம்மா அவர்களுக்குப் பாராட்டுக்கள். உண்மையிலேயே உண்மையின் யதார்த்தத்தை பிட்டு விட்டீர்கள். படித்தால் ஆண்கள் ஓரளவு மாற வழியுண்டு.

மன்னை, ஏ. எஸ். சரளா.

♦ 'கேழ்வரகு ஒரு சத்துள்ள உணவு' பப்புலுவின் சமையற் குறிப்பின்படி செய்த தோசைகள், ரவை தோசையையும் தோற்கடித்தது.

சென்னை - 97, திருமதி வசந்தரா

'யோசனை சிறப்பிதழ்' என பெயர் வைத்திருக்கலாம்!



♦ ஆர்.வி. உதயகுமாரின் பேட்டியில் அவரின் தெளிந்த கருத்துக்கள் அருவியாய்ப் பாய்ந்தது! பெண்களைப் போற்றும் விதத்தை அருமையாகக் கூறியிருந்தார்!

திருச்சி - 20, புலவர் நதியா.

♦ ஆர்.வி. உதயகுமாரைப் போல திரைப்பட இயக்குநர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் இயக்கும் படங்களில் 'செக்ஸி'யான பாடல்களையோ, காட்சிகளையோ அனுமதிப்பதில்லை என்று சபதம் எடுத்துக் கொண்டு செயல்பட்டால், திரைப்படங்களுக்கு சென்ஸார் போர்டு என்று ஒன்று தேவையேயில்லை. பயனுள்ள சந்திப்பு.

சென்னை - 24, வை. ஆனந்தராஜ்.


♦ குழந்தைகள் முதல் (பஞ்ச ரத்ன லேகியம்) பெரியவர்கள் வரை (வஜ்ரவல்லித் துவையல் ஜீரணமாக) அனைவருக்கும் பயன்படத்தக்க வகையில் "உணவே மருந்து" சமையல் குறிப்பு அமைந்திருந்தது. உளுந்து, நெல்லிக்காய், பாகற்காய், பிரண்டை இவற்றின் அருமை பெருமைகளை உணர முடிந்தது! பாராட்டுக்கள், மங்கையரின் மனம் புரிந்து நல்லனவற்றையெல்லாம் தொகுத்தளிக்கும் உமது ஆசிரியர் குழுவினர்க்கு!

வேலூர் - 6, ரமாசந்திரசேகர்.

♦ தன்னை விட குறைவான சம்பளம் வாங்கும் கணவனை, மனைவி மதிப்பாளா என்று சில தம்பதிகளின் பேட்டியைப் படித்தோம். ஒரு மனைவி தன்னை விட கணவன் அழகிலோ, படிப்பிலோ, சம்பளத்திலோ குறைவாக இருந்தாலும் மதிப்பு கொடுப்பாள். ஆனால் மாமியார் வீட்டுப் பேர்களும், பிறந்த வீட்டுப் பேர்கள் மத்தியிலும் மதிப்பாக நடத்தாமல், கஷ்டத்தில் கைகொடுக்காமல் அவர்களோடு சேர்ந்து கேலி பேசுவானானால் வேலைக்குப் போகாத மனைவி கூட மதிக்க மாட்டாள்.

புதுதில்லி, ஆர். ஆர். வல்லி.

சொல்ல விரும்புகிறோம்!



அனுபவ் தேக்குத் தோட்டங்களின் ஒரு தோற்றம்... 15 மாதங்களுக்கு முன்பு

கண்ணால் காண்பதே மெய்

உங்களுடைய ரூ.36 லட்சம் வளர்ந்து வருவதை இப்போது காணலாம்!

போடிநாயக்கனூரில் உள்ள தேக்குப் பண்ணையில் முதன் முதலாக, தேக்குக் கன்றுகளை அனுபவ் நட்டு 15 மாதங்களே ஆகின்றன.

சீரான நீர்ப்பாசனத்தாலும், பயிற்சி பெற்ற தோட்டக்கலை வல்லுநர்களின் மிக உயர்ந்த தொழில்நுட்ப மேற்பார்வையினாலும், இங்குள்ள நிலப் பகுதி பிரமிக்கத்தக்க வகையில் மாறிவிட்டது.

இன்று, வரிசை வரிசையாகத் தேக்கு மரங்கள் 6.08 மீட்டர் (20 அடி) உயரத்திற்கு நெடிது உயர்ந்து வளர்ந்திருக்கின்றன.

சாதாரணமாக இதற்கு 3 ஆண்டுக் காலம் தேவைப்படும்... ஆனால் 15 மாதங்களிலேயே இந்த விரைவான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது அனுபவ்.

இந்த மாபெரும் வளர்ச்சியால் தேக்குப் பண்ணை உரிமையாளர்களுக்கு ரூ.18 லட்சம் முதல் ரூ.4.6 கோடி வரை வருமானம் கிடைக்கவிருக்கிறது

OVER 14000 SOLD TEAK FAR...

நீங்கள் எப்பொழுது அனுபவ் தேக்குப் பண்ணை உரிமையாளராகப் போகிறீர்கள்?

திட்டம்	முதலீட்டுத் தொகை ஒரே தவணையில் செலுத்தினால் ரூ.	நிலம் ச.மீ.	20 வருடங்களுக்குப் பிறகு உத்திரவாதமான தேக்கு மரம் க.மீ.	20 வருடங்களுக்குப் பிறகு கணிக்கப்பட்ட மதிப்பு* ரூ.
அ	28,800	334	40.8	36 லட்சம்
ஆ	14,400	167	20.4	18 லட்சம்
இ	80,000	1,003	124.6	1.10 கோடி
ஈ	1,60,000	2,006	254.8	2.25 கோடி
உ	3,20,000	4,013	521.0	4.60 கோடி

குறிப்பு: இடைக்கால வருமானங்கள், முதலீடு ரத்து விருப்பத் தேர்வு மற்றும் ஓர் எளிய தவணைத் திட்டம் ஆகியவை இந்தத் திட்டங்களின் கவர்ச்சிகரமான கூடுதல் சிறப்பு அம்சங்களாகும்.

*கனமீட்டர் ஒன்றுக்கு ரூ.88,321 என்று குறைந்த தோராயத்தில் மதிப்பிடப்பட்ட தேக்கு விற்பனையின் அடிப்படையிலானது



அனுபவ் பிளாண்ட்டேஷன்ஸ் லிட்.,

11, சோமசுந்தரம் தெரு, தி.நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 8283316, 8254155, 8282833, 8282629. ஃபேக்ஸ் : 044 – 8284967.

கிளைகள் : 23, கஸ்தூரிரங்கா ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018. போன் : 4990344. பி.ஆர். காம்ப்ளக்ஸ், இரண்டாவது மாடி, 12, ராமகிருஷ்ணா சாலை, தாம்பரம், சென்னை – 600 056. 119, மேற்கு பெருமாள் மேஸ்திரி தெரு, இரண்டாவது மாடி, மதுரை-625 001. ஜென்னி பிளாசா, ஷாப் நெம். 9, (கீழ்தளம்) 5, பாரதியார் சாலை, திருச்சி 620 001. சிவா காம்ப்ளக்ஸ், (சாரதா காலேஜ் எதிரில்), ஃபேர்லாண்ட்ஸ், சேலம்-636 009. 101-105, டி.பி.ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-641 002. 536, சாய் காம்ப்ளக்ஸ், பி.என். ரோடு, திருப்பூர் 638 602. 25/B, இரண்டாவது மாடி, எஸ்.ஆர்.கே. காம்ப்ளக்ஸ், எஸ்.என். ஹை ரோடு, திருநெல்வேலி ஜங்ஷன் 627 001. 10, ஐந்தாவது குறுக்குத் தெரு, சுப்பிரமணியபுரம், காரைக்குடி – 623 002. ரவீந்திரன் பில்டிங், 8/A முதல் மாடி, வள்ளல் பச்சையப்பன் தெரு, காஞ்சீபுரம் – 631 501. நெ. 8/B, கமிஷரி மார்க்கெட், சாக்ஸன் சென்டர், (பூம்புகார் எதிரில்) வேலூர் – 632 004. 105,3 புளூ கிராஸ் சேம்பர்ஸ், 11, இன்பேண்ட்ரி ரோடு கிராஸ், பெங்களூர்-560001. போன் : 5591483. ஃபேக்ஸ் : 080 5591406. 234, அண்ணா சாலை, முதல் மாடி (லோட்டஸ் டேங்க் அருகில்), பாண்டிச்சேரி – 605 001. நெ. 50, ஏ.எஸ்.பி. காம்ப்ளக்ஸ், வெங்கட்ரமணன் தெரு, பொள்ளாச்சி-642 001. நெ.36, புதுத் தெரு, கரூர் – 639 001. நெ. 60/A, ஏ.எஸ்.பி. காம்ப்ளக்ஸ், இரண்டாவது மாடி, நாகேஸ்வரன் வடக்கு தெரு, கும்பகோணம் – 612 001. 1090/C, சுப்ரீம் ரோடு, (மணிக்கூண்டு எதிரில்), ஈரோடு – 638 001. மேப் மெயின் ரோடு, சத்ராஸ் மேற்கு, கல்பாக்கம் – 603 102.

Srichakra Coms./288/94

இவர்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள்?

நவராத்திரி பண்டிகை தொடர்ந்து ஒன்பது நாட்கள் - மாலை வேளைகளில் மட்டுமே கொண்டாட வேண்டிய ஒன்று. 'ஷிப்ட்' முறைகளில் பணிபுரியும் பெண்களும், - நேரம் காலம் எனக் குறிப்பிட்டுச் சொல்ல முடியா தபடி எந்த நேரத்திலும் பணியைத் தொடர வேண்டிய நிலையில் உள்ள பெண்களும் நவராத்திரியை எப்படிக் கொண்டாடுகின்றனர்?

மகப்பேறு மருத்துவத் துறையில் நிபுணத்துவம் பெற்றவரான சாமுண்டி சங்கரி அவர்களைக் கேட்டபோது -

"நீங்க கேட்கறது நியாயம்தான். என் வீட்டில் நடக்கும் நவராத்திரி கொலு, மற்றும் பூஜைகளில் கலந்து கொள்ள எனக்கு மிகவும் விருப்பம்தான். ஆனால் உங்களுக்கே தெரியுமே என் தொழிலுக்கு நேரம் காலமே இடையாது என்று! தினமும் மாலை 5 மணி முதல் இரவு 9.30 மணிவரை கிளினிக்கில் என் பேஷண்டுகளைக் கவனிக்க வேண்டும். இதிலிருந்து தவறவே முடியாத நிலை. செய்யும் தொழில்தான் முதல் தெய்வம். நம் கடமைகளை நாம் ஒழுங்காகச் செய்தால் ஆண்டவனே நம்மைத் தேடி வருவான் என்பார்களே பெரியவர்கள்! கடமைதான் எனக்கு முதலில். இருந்தாலும் இந்த நவராத்திரி நாட்களில் என் குழந்தைகள் செய்யும் பூஜைகளில் முடிந்த வரை தலையைக் காட்டி விடுவேன். ஆயுத பூஜையன்று தவறாமல் ஒரு 10 நிமிடங்களாவது பூஜையில் அமர்ந்து தியானம் செய்வேன். ஆனால் அந்த நேரமும் அவசர சிகிச்சைக்காக ஏதாவது நோயாளிகள் வந்தால்... நிச்சயம் அவர்களைக் கவனித்துவிட்டுத்தான் பூஜைக்குச் செல்வேன். முதலில் என் குழந்தைகளை இது பற்றிக் குறைப்பட்டாலும் இப்போது புரிந்து கொண்டு விட்டார்கள்" என்றார் சிரித்தபடியே.



* லலிதா ராமமூர்த்தி



* சசிகலா கண்ணன்



* ஜெயலட்சுமி ஸ்ரீராம்

அடுத்து தொலைக்காட்சி நிலைய தயாரிப்பாளரான திருமதி ஜெயலட்சுமி ஸ்ரீராம் - இவருடைய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் நேரம் (மாலை வேளைகளில்) இவர் நிலயத்தில் இருக்க வேண்டிய நிலை.

"என்னைப் பொறுத்தவரை எந்தப் பண்டிகைகளையுமே நான் விட்டுக் கொடுப்பதில்லை. 'பொன் வைக்குமிடத்தில் பூவைத்தாவது' என்பார்களே அது போலச் செய்து விடுவேன். வயதை மறந்து ஒரு சின்னப் பெண்ணாகவே ஓடியாடி வேலைகளை முடித்துவிடுவேன்.



* சாமுண்டி சங்கரி

நவராத்திரியைப் பொருத்தவரை விஜய தசமியும் சேர்ந்து 10 நாள் பண்டிகையாயிற்றே? மாலை நேரம் 'டிரான்ஸ்மிஷனில்' இருக்கும் ஓரிரு நாட்கள் தவிர மீதி நாட்கள் வீட்டிலிருந்து கொலுக்கு நான் விடுத்த அழைப்பை ஏற்றுவரும் பெண்களையும் குழந்தைகளையும் உபசரித்துத் தாம்பூலம் தருவேன். தினமும் பூஜைகளையும் விடாமல் செய்வேன். தினமும் தவறாமல் (9 நாட்களுமே) ஒரு சுண்டல் செய்து விடுவேன். கார்த்திகையன்று மாலை நேரம் 'டியூடி' வந்து விட்டால் உடன் பணிபுரிபவர்களிடம் கேட்டு மாற்றிக் கொண்டு விடுவேன். எந்தப் பண்டிகையையுமே நான் விட்டுக் கொடுப்பதில்லை. தீபாவளியின் போது நேரமின்மையால் பட்சணங்களைக் கடையில் வாங்கினாலும் சாஸ்திரத்திற்காக நிச்சயம் வீட்டில் எண்ணெச் சட்டி வைத்து ஏதாவது செய்யாமலிருக்க மாட்டேன்.

பண்டிகைகளின் முக்கியத்துவம், அவைகளைக் கொண்டாட வேண்டிய விதம் பற்றி விரிவாக என் பெண்ணிற்கு எடுத்துச் சொல்வேன். அவசியமான எதையுமே - வழக்கப்படி நாம் விடாமல் செய்து வந்தால்தானே நம் குழந்தைகளும் தொடர்ந்து செய்வார்கள்" என்றார்.

சென்னை வானொலியில் வர்த்தக ஒலிபரப்பில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணியாற்றுபவர் திருமதி லலிதா ராமமூர்த்தி. மாலை நேரத்தில் டியூடி செய்ய நேரும்போது....

"இந்த தலைமுறைப் பெண்களைப் பொறுத்தவரை - அதுவும் சென்னை போன்ற பெரிய நகரங்களில் வசிப்பவர்களில் வேலைக்குச் செல்பவர்களின் சதவிகிதம் மிக அதிகம். நவராத்திரியின் போது 9 நாட்களுக்குக் கொலு வைத்துக் கொண்டாடினாலும் தினமுமே எல்லோரையுமே அழைப்பதில்லையே! நாம் தினமும் அழைத்தாலும் வருவதற்கு எங்கே நேரமிருக்கிறது என்பவர்கள்தானே அதிகம்? அத்துடன் இந்தக் காலத்தில் அழைப்பிதழ் அச்சடித்து அனுப்பும் போதே 'மஞ்சள் குங்குமம்' வந்து பெற்றுக் கொள்ள நாட்களையும் குறிப்பிட்டுதானே அனுப்புகிறார்கள்! அவர்கள் குறிப்பிடும் அந்த நாட்களில் நமக்கு முடியும் நாட்களை நாமும் தேர்ந்தெடுத்துக் கொண்டு செல்ல வசதி இருக்கும் போது என்ன கவலை? என் அலுவலக வேலையைப் பொறுத்தவரை மாலை நேர ஷிப்ட் என்பது வாரத்தில் ஒருநாள்தான். அந்த ஒருநாளும் நவராத்திரி வெள்ளிக்கிழமை, சரஸ்வதி பூஜை, விஜய தசமி இப்படி அமையாமல் பார்த்துக் கொள்வேன். அப்படி அமைந்து விட்டாலும் உடன் பணிபுரிவோரிடம் கேட்டு மாற்றிக் கொள்வேன். என் வீட்டில் 9 நாட்களும் கொலுவும், பூஜையும் உண்டு."

பண்ணாட்டுத் தொலைபேசி இணைப்பகத்தில் பணியாற்றுபவர் திருமதி பானுமதி வெங்கடரமணி. இவர்கள் காலை, மதியம், இரவு என ஷிப்ட் முறையில் பணி செய்பவர்கள். மதியம் ஒரு மணி முதல் இரவு எட்டு மணி வரையிலான ஷிப்ட் அமையும் நேரம்....


"எங்கள் அலுவலகத்தைப் பொறுத்தவரை இங்கு நாங்கள் அனைவருமே ஒரே குடும்பம் போல. எங்களுக்கென அமையும் பணி நேரத்தைத் தேவைப்படுமானால் மாற்றி அமைத்துக் கொள்ள வசதிகள் உண்டு. நீங்கள் குறிப்பிடும் அந்த ஒரு மணி முதல் இரவு எட்டு மணிவரை ஷிஃப்ட் நவராத்திரியின் போது அமைந்து விட்டால்தான் சற்றுச் சிரமமாக இருக்கும். ஆனால் உடன் பணிபுரிவோரிடம் கேட்டு நாங்கள் அதை மாற்றி அமைத்துக் கொண்டுவிடுவோம்.

என்னைப் பொறுத்தவரை இது போன்ற பெரிய பண்டிகைகளைக் கொண்டாடி பலரையும் வீட்டுக்கு அழைத்து உபசரிக்க வேண்டுமென்றால் வீட்டில் பெரியவர்களுடன் சேர்ந்து கூட்டுக் குடும்பமாக இருக்க வேண்டும். சம்பிரதாயப்படி இவைகளை நாம் செய்ய பெரியவர்கள் வழிகாட்டுவார்கள்.

என் பெண்களும் பணிபுரிபவர்கள்தான்.

பென்சில்களைத் தயாரிப்போர் தற்போது தயாரிக்கும் அளவிலே சரியாக 'பாதி அளவிற்கு'த் தயாரித்தால், பென்சில் பாக்ஸில் வைப்பதற்கும், ஜியோமிதியின் காம்பஸில் பொருத்தி உபயோகிக்கவும் வசதியாக இருக்கும். விலையும் பாதியாக இருக்கும். பொதுவாக ஐந்தாம் வகுப்பிற்குக் குறைவாகப் படிக்கும் மாணவ மாணவிகளே அதிகம் பென்சில் உபயோகிப்போர்; அதிகம் தொலைப்பதும் அவர்களே.

— நந்தினி சேகர்.



காலை எட்டு மணிக்குக் கிளம்பினால் மாலை ஏழு மணிக்குத்தான் வீடு திரும்புவோம். நவராத்திரி வெள்ளிக்கிழமை, சரஸ்வதி பூஜை போன்ற தினங்களில் பூஜை செய்து உறவினர்கள், நண்பர்களுக்கு அழைப்பு விடுத்து, மஞ்சள் குங்குமம் தருவது என் வழக்கம். எங்களுடைய வார ஓய்வு நாட்களைக் கூட நாங்கள் தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொள்வோம். நவராத்திரி மட்டுமல்லாமல் மற்ற பண்டிகை தினங்களையும் கூட - உடன் பணிபுரியும் மற்ற மதங்களைச் சார்ந்தவர்களிடம் கேட்டு 'டியூடி' மாற்றிக் கொள்வோம். அதே போல அவர்களின் பண்டிகை நாட்களில் அவர்களுக்கு விடுப்பு அளித்து நாங்கள் பணிக்கு வருவோம். எங்கள் அலுவலகத்தைப் பொறுத்தவரை எந்த விதமான வேறுபாடும் கிடையாது."

கம்ப்யூட்டர் கேம்ஸின் உரிமையாளரும், அதன் பயிற்சியாளர்களில் ஒருவருமானவர் திருமதி சசிகலா கண்ணன். இங்கு நான் முழுவதுமே டிடிபி வகுப்புகள் உண்டு. மாலை நேரங்களில் கிளாஸ் எடுக்க நேரும் போது....

"எங்கள் வீட்டில் கொலுவைப்பதில்லை. பூஜை மட்டும் 9 நாட்களும் உண்டு. கடைசி மூன்று நாட்கள் மிகவும் விசேஷமான பூஜைகள் உண்டு. நீங்கள் குறிப்பிடுவது போல மாலை நேரங்களில் நான் கிளாஸ் எடுக்க வேண்டி வரும். ஆனால் எங்கள் வீடு பக்கத்திலேயே இருப்பதால் ஒரு 10 நிமிட இடைவெளியில் வந்து தினமும் பூஜையில் கலந்து கொண்டு விடுவேன். ஆனால் கடைசி மூன்று நாட்களும் நான் காலை வேளைகளில் மட்டுமே வகுப்புகளை கவனித்துவிட்டு மாலை வேளையில் பூஜைகளில் முழுமையாகக் கலந்து கொண்டு வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்குத் தாம்பூலம் தருவேன். நான் வீட்டிலில்லாத வேளைகளில் என் மாமியார் வருவோரை உபசரிப்பார். என்ன தான் நாம் கம்ப்யூட்டர் யுகத்திலிருந்தாலும் நம் சாஸ்திர சம்பிரதாயப்படி பண்டிகைகள் கொண்டாடி - நண்பர்கள் உறவினர்களுடன் கூடி மகிழ்ச்சியில் திளைப்பதே தனி இன்பம்தானே?!

என்னைப் பொறுத்தவரை 9 நாட்களும் கொலு வைத்து பூஜை செய்ய ஆசைதான்! நேரமில்லையே?'' என்றார் பெருமூச்சு விட்டபடி.

தொகுப்பு : **வைதேகி தேசிகன்**

புகழ்பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம.பத்மனுபன்



காழியூர்
ம. பத்மனாபன்

வேண்டுவோர்
கடிதத் தொடர்பு கொண்டு
விபரம் அறிந்து
பணம் அனுப்பி
சகல நன்மைகளும்
அடைவீர்களாக.

பிரபல ஜோதிஷர்
பண்டித காழியூர்
ம. பத்மனாபன்
"தபோநிதி"
நெ : 5, வித்யோதயா
முதல் மெயின் தெரு,
தபால் பெட்டி
எண் : 1411,
தி. நகர்,
மதறாஸ் - 600 017,
தென் இந்தியா
Phone : 8263814

கிளைகள் கிடையாது


ஸத்யமேவ ஜயதே

பிரபல ஜோதிஷர் (பண்டித காழியூர் ம. பத்மனாபன்) காழியூர் ஸ்ரீனிவாசாச்சாரியாரின் மூத்த புதல்வரும், அவரால் ஜோதிஷ மந்திர சாஸ்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசிர்வாதமும் பெற்றவரால் கீழ்க்கண்ட மகத்தான சக்தி வாய்ந்த யந்திரங்கள் சக்கரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

		ரூ. 200/-
மஹாசுதர்சன யந்திரம்	(வெள்ளியில்)	ரூ. 200/-
ஹனுமத் கவசம்	"	ரூ. 200/-
ஸரஸ்வதி கவசம்	"	ரூ. 200/-
மஹாலக்ஷ்மி கவசம்	"	ரூ. 200/-
தனாகர்ஷண யந்திரம்	"	ரூ. 400/-
லக்ஷ்மிநரஸிம்ம கவசம்	"	ரூ. 300/-
மஹாலக்ஷ்மி சக்ரம்	"	ரூ. 500/-
மஹாசுதர்சன சக்ரம்	"	ரூ. 500/-

இவை தவிர இன்னும் அநேகவிதமான யந்திரங்களும் கவசங்களும் விசேஷ பூஜா க்ரமப்படிக்கு தயாரித்து அனுப்பப்படும்.
வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகையையும் D.D (Bank Draft) மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு தனி ரூ.50/-
கேட்லாக்கும் அனுப்பப்படும்.

மற்றும் சர்வாரிஷ்ட நிவாரிணி விபூதி ரூ.30.00; க்ஷேம ஸம்ரக்ஷணி குங்குமம் ரூ.30.00; விஜய தனாகர்ஷணி மூலிகை ரூ.25.00; வசீகரண அஞ்சனம் ரூ.25.00; சதாமூலிகா தூபம் ரூ.35.00.



எனது தந்தையார் அடியேனுக்கு மந்திரோபதேசம் செய்யும் காட்சி.

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழில்	... ரூ.40.00
கம்ப்யூட்டர் ஜாதகம் ஆங்கிலத்தில்	... ரூ. 40.00
ஆயுள் பலனுடன்	... ரூ. 200/-
(ஜனன வருஷம், மாதம், தேதி, நேரம், ஊர் தேவை)	
ஜாதகத்தின் பொதுபலன்களை நேரில் சொல்வதற்கு	... ரூ.35.00
முகூர்த்தம் அல்லது விவாஹப் பொருத்தம் விவரித்து எழுத	... ரூ.35.00
ஆருடம் 3 கேள்விகளுக்கு	... ரூ. 25.00

முக்கிய கவனிப்பு :

தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம ரகசியமாக வைக்கப்படுகின்றன. எனவே எவரும் எம்மாதிரியான ஆந்திரிக ரகசிய விஷயங்களைப் பற்றியும் பயமின்றி எழுதலாம். மற்றும் இதர விஷயங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

வீட்டில் கிரக தோஷம், திருஷ்டி தோஷம், சல்லியம், வாஸ்து தோஷம், சங்கா தோஷம் மற்றும் எந்த விதமான தோஷங்களும் பாதியாமல் இருப்பதற்கு சுதர்சன ஹோமம், மஹா சுதர்ஸன சக்கரம், பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டும் செய்யப்படும். விவரம் வேண்டுவோர் நேரிலோ, தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். சுபமஸ்து!

Komala Ads.

கண்ணுக்குள் நிற்கும் கங்காரு நாடு

லேனா தமிழ்வாணனின் ஆஸ்திரேலிய நியூஸிலாந்துப் பயணக் கட்டுரை. தொடர் கதையைப் போல விறுவிறுப்பாகவும் பயணக் கட்டுரையை எழுத முடியும் என நிரூபித்திருக்கிறார் லேனா.

விலை ரூ. 32.00

மாண்டலின் வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

ஆசிரியர் - நாட்யாசார்யா ஸ்ரீ எஸ். பாலசுந்தரராஜு

விலை ரூ. 25.00

எயிட்ஸ் நோயும் பாதுகாப்பு முறைகளும்

எளிமையாகப் புரியவைக்கிறது. ஆசிரியர் கே. சந்தான கிருஷ்ணன்.

விலை ரூ. 15.50

(மூன்றும் பதிப்பு - மணிமேகலை பிரசுரம், த.பெ. எண். 1447, 4, தணிகாசலம் சாலை, தி. நகர்., சென்னை - 17)

கொஞ்சம் யோசிக்கலாமே!

சிவசங்கரியின் வாழ்வியல் நூல். மனிதன் மனிதனாக வாழ அறிவுறுத்துகிறார்.

விலை ரூ. 18.00

மௌனமே காதலாக

பாலகுமாரனின் சிறுகதைத் தொகுப்பு. இன்றைய நிலையில் காதலை, காதலர்களை வலிமையாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

விலை ரூ. 50.00

(இரண்டும் திருமகள் நிலையம், 55 வெங்கட் நாராயண ரோடு, தி.நகர், சென்னை - 17)

காளையார் கோவில் ரதம்

கோவி. மணிசேகரன் அவர்களின் சரித்திரச் சிறுகதைகளின் தொகுப்பு. பெரிய மருது, மொகலாய சாம்ராஜ்யம் எனப் பல்வேறு கதைக்களன்கள்.

விலை ரூ. 22.00

(கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.)

மீண்டும் சங்கரவிஜயம்

மகா சுவாமிகள் பரமாச்சார்யார் சுதர் உடுத்தி கிராமநலத் திட்டங்கள் பல அறிமுகப் படுத்தி வாழ்ந்த வரலாறும், அவர்களின் புனிதமான பணிகளுமாகப் பல விஷயங்களை விளக்குகிறார் எஸ். லட்சுமி சுப்பிரமணியம்.

விலை ரூ. 30.00

அகலிகை முதலிய அழகிகள்

வியாசரின் மகாபாரதக் கதாபாத்திரங்களான திலோத்தமை, சசி, அகலிகை போன்றோரை எடுத்துக் கொண்டு தன் போக்கில் கதை சொல்லியிருக்கிறார் எம். வி. வெங்கட்ராம்.

விலை ரூ. 28.00

(இரண்டும் வானதி பதிப்பகம், 10, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.)

முத்துவின் முத்துக்கள்

கா. முத்துவின் கவிதைத் தொகுப்பு.

விலை ரூ. 40.00

தமிழில் இஸ்லாமிய இதழ்கள்

தமிழில் வெளிவந்த இதழ்கள் பற்றித் தொகுத்துத் தருபவர் அ.மா. சாமி.

விலை ரூ. 120.00

(இரண்டும் நவமணி பதிப்பகம், 12, 2-வது பெருஞ்சாலை, நகர வளர்ச்சிக் குடியிருப்பு, சென்னை - 4.)

இலக்கிய உலகில் மேதைகளின் உலா

இலக்கியம், அதன் உயிர்நாடி, இலக்கியம் கலையா வியாபாரமா



என ஆராய்பவர் எம். ஏ. பழனியப் பன்.

விலை ரூ. 15.00

அனுபவங்கள்... அர்த்தமுள்ளவை

தென்கச்சி - கோ. சுவாமிநாதன் அவருக்கே உரிய கிராமிய நடையில் நகைச்சுவையாகப் பல சம்பவங்களைக் கூறு கிறார்.

விலை ரூ. 20.00

பாரதிதாசனின் புதிய நாடகங்கள்

பாவேந்தரின் இதுவரை அச்சில் வராத எட்டு நாடகங்களைத் தொகுத்துத் தந்துள் ளார் ச. சு. இளங்கோ.

விலை ரூ. 25.00

(மூன்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண் டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 098.)

வீடு கட்டி வாழ்ந்திடுங்கள்

வீடு கட்ட நினைப்பவர்களுக்கு பயனுள்ள பல விளக்கங்களைத் தருபவர் காழியூர் நாரா யணன்.

விலை ரூ. 10.00

ஜோதிடமும் மருத்துவமும்

ஜாதகரீதியாக ஒருவரது உடல்நிலை எப் படி இருக்கும், எப்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என விளக்குகிறார் காழியூர் நாராயணன்.

விலை ரூ. 12.00

பல்லக்கு

ரா. கி. ரங்கராஜன் எழுதிய சிறுகதை களின் தொகுப்பு. ஒவ்வொன்றும் வித்தியாச மாக உள்ளது.

விலை ரூ. 28.00

(இரண்டும் கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.)

மகாத்மா காந்தியின் சாந்தி மொழிகள்

தொகுத்துப் பதிப்பித்தது - தோ. ந. வீர ராகவன். திருமதி யசோதா வீரராகவன் அவர்களின் மணிவிழாவை ஒட்டி வெளி யிடப்பட்டது.

உலகத்துப் பொன்மொழிகள்

தொகுத்துப் பதிப்பு - புத்தகப்பித்தன்.

'நாற்பது வயது என்பது இளமைக்
காலத்தில் முதுமை
எய்தி விட்ட மாதிரி.
ஐம்பது வயது என்பது முதுமைக்
காலத்தில் இளமையை
அனுபவிக்கிற மாதிரி'

விலை ரூ. 26.00

சுவையாக சமையல் செய்வது எப்படி?

இனிப்பு, கார பலகாரங்கள் முதல் சாப் பாடு வரை. ஆசிரியர் பா. ராஜேஸ்வரி.

விலை ரூ. 32.00

(மூன்றும் - இமயம் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001)

ஒவ்வொரு துளியிலும்...

எரிபொருள் சிக்கனம் பற்றிய கவிதைத் தொகுப்பு. தொகுத்தவர்கள் - உதயம்ராம், எஸ்.வி. ராஜசேகர்.

விலை ரூ. 15.00

'பிராண வாயு போனால்
மனிதன் பிணம்
ஓசோன் வாயு போனால்...?
பூமியே பிணம்!'
- வல்லம் மகேசு.

(உரத்த சிந்தனை, வாசக எழுத்தாளர் சங்கம், 45, அருணாசல ஆச்சாரி வீதி, சேப் பாக்கம், சென்னை - 5.)

அஷ்டோத்திர சுதம்பம்

சௌந்தர்யலஹரி, நவக்ரக அஷ்டோத் திரங்கள் எனப் பலவற்றையும் தொகுத்திருப் பவர் எஸ். இரகுநாதன்.

விலை ரூ. 10.00

ஸ்தோத்ர சுதம்பம் - பாகம் 2

இதுவும் தொகுப்பு எஸ். ரகுநாதன்.

விலை ரூ. 7.50

(இரண்டும் இலக்குமி நிலையம், 32, அம் மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை -14.)

கீத கோவிந்தம் (அஷ்டபதி)

ஸ்ரீஜெயதேவரின் அஷ்டபதியின் சமஸ் கிருத வடிவம் மற்றும் ஆங்கில தமிழாக்க விளக்கம். ஆசிரியர் - என். கங்காதரன்.

விலை ரூ. 20.00

(லிப்கோ, தி லிட்டில் ப்ளவர் கம்பெனி பதிப்பகம், தி. நகர், சென்னை -17.)

மாறியது நெஞ்சம்

ரமா ராமலிங்கம்

"கண்ணூஞ்சல் ஆடினாள் காஞ்சன மாலை"... என ஒரு மாமி, குரல் நடுங்க, மூச்சு வாங்க, பாடி முடிக்க, நாதஸ்வரகாரரும் அதை நையாண்டி செய்து, நாதஸ்வரத்தில் ஊத, உமாவும் ராகவனும் ஊஞ்சலாடி, கெட்டி மேளம் முழங்க, ராகவன் உமா கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டு பெரியோர் ஆசியுடன் அவளை தன்னவள் ஆக்கிக் கொண்டான். மாலை நலங்கு, ரிசப்ஷன் என்று எல்லாம் நல்லபடி முடிந்தது. மறுநாள் காலை கட்டுசாதக் கூடை வைத்து, பாலிகை கரைத்து, சாப்பாடு முடிந்ததும் வேனில் சாமான்கள் ஏற்றப்பட்டு ராகவன் குடும்பத்தினர், புது மாட்டுப்பெண்ணுடன் தங்கள் வீடு வந்து சேர்ந்தனர்.

வீட்டு வாசலில் பெரிய கோலமிட்டு, செம்மண் கரை கட்டி, வாழை மரம், மாவிலைத் தோரணங்களுடன் மங்களகரமாயிருந்தது. அந்த வீட்டு எஜமானி அமிர்தம். கணவர் ராஜ கோபாலன் ரிடையர்டு ரயில்வே அதிகாரி. அவர்களுக்கு மூத்தவள் பெண். கல்யாணமாகி கோவையில் கணவர், இரண்டு பிள்ளைகளுடனிருக்கிறாள். பிறகு மூன்று பிள்ளைகள். மூத்தவன் சங்கரன், மனைவி சரோஜா, இவர்களுடன் ஒரு பிள்ளை, ஒரு பெண். இவர்கள் தங்கள் அம்மா, அப்பாவுடன் சேர்ந்திருக்கிறார்கள். சங்கரனுக்கு மதறாஸில் 'அசோக் லேலண்டி'ல் நல்ல பதவி, சம்பளம். இரண்டாவது பிள்ளை சேகர், மனைவி விஜயா, சேகருக்கு பம்பாயில் வேலையாதலால், மனைவி இரண்டு பெண்களுடன் வருடத்துக்கொரு முறை லீவில் வந்து போவான்.


ராகவன் கல்யாணம் 'மே' மாதத்தில் நடப்பதால், எல்லோருக்கும் முன்னே, பின்னே சேர்ந்தார் போலிருக்க வசதியாய் இருந்தது! 'அமிர்தம்' அந்த வீட்டில் பிள்ளை, மாட்டுப் பெண், பால் காரன், கறிகாய்காரி முதல் வேலைக்காரி வரை எல்லோருக்கும் அம்மாதான். யார்யாருக்கு எது, எப்போது வேண்டும் என்று பார்த்துப் பார்த்துச் செய்வாள். அவள் எது சொன்னாலும் அதை எதிர்பேச்சு பேசாமல் செய்வது மூத்த மாட்டுப் பெண் சரோஜாவின் வழக்கம். அது அவளுக்குப் பழகிவிட்டது. அம்மாவிற்கு ஆசாரம் பார்ப்பது, மடியாயிருப்பது திருப்தியைத் தரும் என்பதால் சரோஜா தினம் எழுந்தவுடன், முதலில் பல்தேய்த்து, ஸ்நானம் செய்து தான் சமையலறையில் நுழைவாள். அதற்குள் அமிர்தம் தலையில் ஈரத்துண்டுடன் காப்பி தயாரிப்பதில் இருப்பாள். தன்னுடனேயே பன்னிரண்டு வருடங்களாய் சேர்ந்திருந்து, தன் வழக்கங்களை பின்பற்றி ஈடுகொடுத்து வருவதால், மாமியார், மாட்டுப்பெண் உறவு அங்கு கெட்டிப் பட்டு, அவர்களுக்குள் ஒரு புரிந்து கொள்ளுதல் இருந்தது. சேகர் பம்பாய் வாஸி ஆதலால், கல்யாணமானவுடன் மனைவி விஜயாவுடன் தனிக்குடித்தனம் தான். ஆனாலும் இங்கு வந்து இருக்கும் போதெல்லாம், விஜயாவும், தன் மன்னியைப் பார்த்து, தானும் அந்த வீட்டுப் பழக்க, வழக்கங்களை அனுசரித்துப் போய்விடுவாள். இந்த 2 மாதங்களைக் கழித்து, மறுபடி பம்பாய் சென்றுவிட்டால், பிறகு தன் குடித்தனம் தன் இஷ்டப்படிதானே என்று அவள் நினைப்பு. எப்போதாவது அம்மா-அப்பா பம்பாய் வந்தாலும் பத்து நாட்களுக்கு மேல் தங்கமாட்டார்கள்.

வீட்டிற்குள் சாமான்கள் இறக்கப்பட்டு, உறவினர்கள் நிறைந்து ஒரே பேச்சும், சிரிப்புமாய் அமர்க்களப்பட்டது. அவரவர் ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டும், பேசிக் கொண்டும் நின்றபோது உமாவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கழுத்து நிறைய நகையும், தலை நிறைய பூவும், பட்டுப்



என் மனைவி தங்கம்னா தங்கம். கல்யாணம் ஆனதும் நாட்டியத்துக்கு முழுக்குப் போடும்படியாச்சு. வாயைத்திறந்திருப்பாளா ? என்னைப் போல முரட்டுக் கணவனோடும், இரட்டை வால்களான இரண்டு பசங்களோடும் ஏழு வருஷம் குடித்தனம் பண்ணியும், அவளுக்குள் இருந்த கலையுணர்வு அழியவே இல்லை.

இப்பதான் கொஞ்ச நாள் முன்பு, வீட்டுக்கு எந்த வாஷிங்மெஷின் வாங்கலாம்னு பேசிக்கிட்டு இருந்தோம். அவளோ சர்வசாதாரணமா ஒனிடா வாங்கலாமேன்னுட்டா ! என்னோட இன்ஜினியர் புத்தி சும்மா இருக்குமா ? சும்மா பேரைக் கேட்டு மயங்கக் கூடாது. "டெமான்ஸ்ட்ரேஷன் பண்ணிக் காட்டச் சொல்லு. அக்கு வேறா ஆணி வேறா அலசிப் பாரு, அப்புறமா முடிவு பண்ணு" என்று சொன்னேன் அவளுக்கோ ஒரே ஆச்சரியம்.



4-வழி நீர் சுழற்சி

இரண்டு நாளைக்கு அப்புறம், ஆபீஸ் விட்டு வர்ரேன். குழந்தைகள் நமட்டுச் சிரிப்பு சிரிக்கின்றன. என் மனைவியோ தன்னிச்சையாக பரத நாட்டிய நிகழ்ச்சி நடத்திண்டிருக்காள்.

ஆஹா ! என்ன ஒரு வரவேற்பு ! என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை !

உணர்ச்சி பூர்வமாக, அபினயத்தோடு ஒனிடா வாஷிங் மெஷினின் செயல்திறன் பற்றி அவள் விளக்கிக்காட்டினதைக் காண

ஒனிடா வாஷிங் மெஷின்...
பரத நாட்டியத்திற்குத் தந்தது புனர்ஜென்மம்.



கண் கோடி வேண்டும்! ''உன்னத சலவைக்கென, இணையற்ற 4-வழி நீர் சுழற்சி'' இருப்பதை அவள் தன் கைகளை நாலாபுறமும் விதவிதமாக மின்னல் வேகத்தில் ஆட்டின விதம், அதற்கேற்ப அவள் பின்னால் முன்னும் பின்னும் அசைந்த விதம் அனைத்தையும் கண்கொட்-டாமல் பார்த்தேன்!



வேறு எந்த மெஷினிலும் இல்லாத, அழுத்தமான சலவை, சாதாரண சலவை, மென்மையான சலவை இவற்றுக்குள் கண்கூடாகத்தெரியும் வித்தியாசம் - இதையும் அவள் தன் அழகிய விழிகளை உருட்டியும், விரல்களை மடக்கியும், கைகளில் முத்திரைகளைப் பிடித்தும் விளக்கிக் காட்டினாள்.

பிறகு ஓனிடாவின் விசேஷ ஹெவி-ட்யூட்டி மோட்டாரின் கட்டுறுதியையும் அதன் பயனாக அது பல ஆண்டுகள் தொல்லை இன்றி இயங்குவது பற்றியும் விளக்கிச் சொல்வதற்காக அவள்தன் தலைப்பை இடுப்பில் செருகிக்கொண்டு உடம்பை முழுக்க வளைத்து முழு பரத நாட்டியமே ஆடிக்காட்டினாள்.

அப்படியே நான் சரணாகதி ஆகி விட்டேன்! ''வா, இப்போதே போய் ஓனிடா வாங்கி வந்து விடுவோம்'' என்றேன்.

அம்மாவும், குழந்தைகளும் உடனே களுக்கென சிரித்தனர்.

கச்சிதமான, அழகான பொருள் ஒன்று திரைச்சீலைக்குப் பின் மறைந்திருப்பதை அப்போதுதான் கவனித்தேன். ஆஹா! அவள் ஏற்கெனவே வாங்கி விட்டாள்.

நான் யூகித்-திருக்கணும். என் ஆறு வயது மகள் திரைச்சீலையை நகர்த்தி உற்சாகம் பீறிட கூறினாள். ''பெண் விடுதலை!''

நானும் என் மனைவியை நேசத்தோடு பார்த்துக் கூறினேன் ''இனிமே உனக்கு நிறைய நேரம் கிடைக்கும். உன் பரத நாட்டியத்தை மீண்டும் நீ உயிர்ப்பிக்க முடியும் என தோன்றுகிறது...''



ஓனிடா
வாஷிங் மெஷின்

புடவையும் வெயிலில் கசகசத்தது. எல்லாவற்றையும் அவிழ்த்துவிட்டு, ஹாசாக ஒரு மேக்ஸி அணிந்து, படுத்துத் தூங்கலாமா என்றிருந்தது. ஆனால் புது இடம், புது மனிதர்கள் எல்லாமே புதுசுதானே. ஒன்றும் புரியாமல் பயமாயிருந்தது.

அப்போது சரோஜா மன்னி வந்து, "உமா, ஏன் ஓரமாய் நிற்கிறாய்? வா, உங்கள் அறை முன்பக்கத்தில் இருக்கு. அதில்தான் ராகவன் தன் சாமான்களுடன், படிப்பது, படுப்பது எல்லாம். அங்கேயே உன் பெட்டிகளை வைக்கச் சொல்லியிருக்கேன். அங்கு போய் இந்தப் புடைவையை மாற்றி எதாவது சிம்பிளாய் கட்டிக் கொள். வெயிலில் வேர்க்கிறது" என்றவுடன் "அப்பாடா" என்றிருந்தது. பிறகு அக்கம்பக்கத்தில் ஒவ்வொருவராய் வருவதும், எல்லோருக்கும் உமாவை பிரத்யேகமாய் அறிமுகப்படுத்துவதும், அவளை நடுவில் உட்கார வைத்து எல்லோருமாய் பேசுவதுமாய், உமா களைத்துப் போனாள்.

தனியாய் ஒதுங்கி இருக்க முடியாமல் அவளே உள்ளே அந்த அறைக்குச் சென்றாலும், உடனே யாராவது வந்து என்ன வேண்டும், என்ன வேண்டும் என்று கேட்பதே வேடிக்கையாய் இருந்தது. ராகவன் எங்கும் கண்ணில் படவில்லை. யாரையாவது கேட்கவும் வெட்கம். பிறகு பார்த்தால் யாருடனோ, எங்கோ போய்விட்டு, ஸ்கூட்டரில் வந்து இறங்கினான். இரவு சமையல் முடிந்து சாப்பிட்டு எல்லாம் ஆகி, மணி 10 அடித்தாலும் எல்லோருமாய் ஹாலில் அமர்ந்து, ஒரே சிரிப்பும், கலாட்டாவுமாக இருக்க, உமாவும் ஒரு ஓரமாய் சின்ன மன்னி விஜயாவுக்கு அருகில் அமர்ந்திருந்தாள். அமிர்தம் எழுந்து வந்து. "நீங்கள் எல்லாம் 12 ஆனாலும் தூங்காமல் கொட்டமடிப்பீர்கள். பாவம், சிறுசுகள், இரண்டு நாளாய் களைத்துப் போய் விட்டனர். உமா எழுந்திரு. போய் உங்களறையில் நீங்கள் படுக்கப் போங்கள்" என்று ஜாடையாய், மெதுவாய் சொல்லி, உமா கையில் சுடச் சுட பால் செம்பும் தர, அவள் எழுந்து தங்கள் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள்.

உள்ளே ராகவன், "வா! உமா. எங்கள் இல்லை இல்லை நம் வீடு எப்படி இருக்கிறது? என் அம்மா, மன்னிகள் என்ன சொன்னார்கள்?" என்று கேட்டான்.

"எல்லாம் நன்றாயிருக்கு. இனிதான் எல்லாம் புரிந்து கொண்டு பழகணும். புதுசுதானே" என்று முணுமுணுத்தாள்.

அவன் தன் வீட்டைப் பற்றி, அண்ணா, மன்னிகளைப் பற்றி, அம்மாதான் வீட்டு நிர்வாகம் என்பதுபற்றி நிறைய சொன்னான். அவன் சொன்னதில் ஒன்றுமட்டும் நன்கு புரிந்தது. இந்த வீடு ரொம்ப ஒற்றுமையாய், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் உள்ள நல்ல தொரு குடும்பம் என்று நன்கு புரிந்தது. "ஆமாம். நான் மேக்ஸி, சுடிதார் எல்லாம் போட்டுக்கலாமா? எங்கள் வீட்டில் நான் மேக்ஸிதான் போடுவேன்," என்றதும்,

"அது என்னவோ, அம்மாவுக்கு அதெல்லாம் பிடிக்காது. என் அக்காவோ, மன்னிகளோ அதெல்லாம் போட்டு நான் பார்த்ததேயில்லை."

"அம்மா, நான் போட்டுக் கொண்டால் எதாவது சொல்வார்களா?"

"இப்போதைக்கு நீ புடைவையே கட்டிக் கொள். பிறகு பார்க்கலாம்" என்றான்.

மறுநாள் காலை உமாவுக்கு விழிப்பு வந்தபோது யாரோ கதவை மெதுவாய் தட்டுவது புரிய, அவசரமாய் எழுந்து தன்னைச் சரி செய்து கொண்டு, கதவைத் திறந்து வெளியே வந்தால் சரோஜா மன்னி, புன்சிரிப்புடன் "குட்மார்னிங்" சொல்லி,

"உமா! பின்பக்க பாத்ருமில் பல் தேய்த்து, கையோடு குளித்து வந்துவிடு," என்று சொல்ல, வீட்டில் அநேகமாய் குழந்தைகள் தவிர எல்லோரும் எழுந்து, அம்மாவும், மன்னிகளும் குளித்து, சமையலறையில் மும்முரமாயிருந்தனர். உமா குளித்து, காப்பிக்காக அங்கு வந்தபோது, காப்பியை கையில் கொடுத்தவாறு, "உமா! நாளையிலிருந்து இன்னும் கொஞ்சம் முன்னால் பொழுது விடிவதற்கு முன், எழுந்திருக்கணும். இப்படி கதவை தட்டி எழுப்பும்படி பண்ணாதே!" என்று அம்மா வெளிப்படையாய் சொல்ல, சரோஜா மன்னியும், விஜயா மன்னியும் குளிந்து கறிகாய் நறுக்குவதில் மும்முரமாயிருந்தாலும், உமாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

"ஆகட்டும்மா!" என்றபடி அவளும், மன்னிகளுடன் உட்கார்ந்து கொண்டாள்.

சாப்பாடெல்லாம் ஆனதும் 'டெக்கில்' கல்யாண கேஸட் போட்டு எல்லோரும்

ஒரு வாணலியில் 4 ஸ்பூன் கசகசா, 25 ஏலக்காய் இவற்றை வறுத்து, 1 கிண்ணம் சீனி போட்டு நைஸாக மிக்சியில் அரைத்து டப்பியில் அள்ளவும். தினமும் பூஜைக்குச் செய்யும் பாயசத்தில் ஒரு ஸ்பூன் இதை அள்ளிப் போட்டால் சுவையும், மணமும் கூடும்., வேலை பளு குறையும். பொடிக்கும்போது முந்திரியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

- கமலா



நவராத்திரி வருகிறது. குழந்தைகளுக்குக் கைநிறையக் கோதுமை சீடை போடலாமே! 1 கப் கோதுமை மாவு அரை கப் மைதா மாவு இரண்டையும் லேசாக வறுத்துக் கொள்ளுங்கள். வறுத்துப் பொடித்த உளுத்தமாவு ஒரு ஸ்பூன் அளவான உப்பு, சீரகம், பெருங்காய நீர்விட்டு, 2 ஸ்பூன் நெய் அல்லது சூடான எண்ணெய் விட்டுப் பிசைந்து உருட்டி எண்ணெயில் பொரிக்கவும். "சீப் அண்ட் பெஸ்ட் சீடை! வெடிக்காது. குடிக்காது எண்ணெயை!

- ரோஜி



பார்த்தபோது, நாத்தனார் லலிதா "என்ன உமா! வீடியோவில் நன்றாய் சிரித்து அழகா யிருக்கக் கூடாதோ? ஏன் உம்மென்று இருக் கிறாய்" எனவும், அவள் முதல் பிள்ளை ஹரி "மாமி! இங்கு பாருங்கள், கண்மூடி தூங்கி விட்டீர்களா?" என்று அவளை கேலி செய்தது ஏனோ உமாவுக்கு அதிகப்படியாய் தெரிந்தது. இரவு சாப்பாடு பரிமாறும் போது அப்பாவுக்குச் சாதம் போட்டு விட்டு அதே கையுடன் உமா, மோரை எடுக்க, பார்த்துக் கொண்டிருந்த அம்மா,

"என்ன உமா! பத்தில்லையா? கையை அந்தப் பாத்திரத்துத் தண்ணியில் முக்கி விட்டு மோரை எடு" என்றார்.

பத்தாவது பதினொன்னாவது. அங்கு இவள் வீட்டில் டைனிங் டேபிளில் நடுவில் எல்லாம் வைத்துக் கொண்டு எல்லோரும் போட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். அதி லிருந்து உமா சாதம் தொட்டால், சாம்பார் தொட்டால், மோர், ஊறுகாய் என எல்லா வற்றுக்கும் தண்ணியில் கையை நனைப் பதைப் பார்த்து விஜயாமன்னி சிரித்தார்.

மறுநாள் மாலை ராகவன், உமாவிடம் "முதலில் சேர்ந்து கோயிலுக்குப் போகலாம். அம்மாவிடம் சொல்லி விட்டுக் கிளம்பு" என்றபோது சந்தோஷமாய் இவள் அம்மா விடம் சொல்ல, "தாராளமாய் போய்விட்டு வாருங்கள். நீ சத்திரத்துக்கு நாங்கள் வந்த போது, கரு நீலத்தில் கிரேப் ஸில்க் கட்டி யிருந்தாயே, அதையே கட்டிக் கொள், உன் கலருக்கு எடுப்பாயிருந்தது." என்றார். அவள் டிரஸ் செய்து கொண்டு வர, திருப்தியாய் ரசித்துப் பார்த்து, நெருக்கமாய் தொடுத்த மல்லிகையை தலைநிறைய வைத்து, அனுப்பி வைத்தார்.

அடுத்த வாரம் நாத்தனார் குடும்பமும், இரண்டு நாளில் சேகர், விஜயாவும் குழந் தைகளுடன் கிளம்பிச் சென்றனர். அம்மா இருவருக்குமே, பக்ஷணங்கள் வீட்டில் செய்த வடாம், ஊறுகாய் என்று பேக் செய்து அனுப்பி வைத்தார். எல்லோரும் அம்மா அப்பாவிற்கு நமஸ்காரம் செய்து கிளம்பிச் சென்றனர். இனி வீட்டில் இருப்பவர்கள் ரொடீனுக்கு வந்தனர். ராகவன் பேங்க் லீவு முடிந்து போய்வர ஆரம்பித்து விட்டான். அவன் பேங்க் கிளம்பிப் போனதும், இவள் வேலைகள் முடிந்து விட்டதே என்று, தங்கள் அறையில் அமர்ந்து எதாவது புஸ்தகம் படிக்கலாம் என்றால் அதற்கும் அம்மா, "ஏனிப் படி, தனியாக ஒதுங்கி, ஒதுங்கி உட்காருகிறாய்? வேலைக்காரி துணி தோய்க்கிறாள் போய் எல்லாவற்றையும் மாடியில் உலர்த்து" என்று ஏதாவது சொல்லி கூப்பிடுவார். சாப்பாடும் மாமனார் சாப்பிட்ட பிறகுதான், அவர் பூஜை, புனஸ்காரங்களை முடித்துவர பதி னோரு மணியாகிவிடும். இரண்டாவது தடவை காப்பி குடித்தாலும், பிறந்தவீடுபோல, "அம்மா! நான் சாப்பிடுகிறேன், பசிக்கிறது" என்று உட்கார முடியவில்லை.

அன்று காலை ராகவனிடம், "கல்யாணத் துக்கு வந்த ரவிக்கைகளை டெய்லரிடம் தைக்கக் கொடுக்கணும், மாலை போகலாமா," என்றபோது

"இதெல்லாம் பெண்கள் விஷயம், மன்னி யுடன் போய் வாயேன்" என்று சொல்லி விட்டான்.

இரவு மூடிய அறைக்குள் ராகவன், அவ ளிடம் அன்பை கொட்டி பிரியமாயிருந் தாலும், பகலில் எல்லோர் எதிரிலும் ஒதுங் கியே இருப்பான். தனியாக பேச சந்தர்ப்பமே தர மாட்டான். உமாவிற்கு ஆறு மாத மாவதற்குள் இந்த வீட்டில் எல்லாம் கட்டுப் பெட்டித்தனமாய், சுதந்திரம் இல்லாதது போல உணர ஆரம்பிக்க, அவ்வப்போது தனி மையில் ராகவனிடம் குறைப்பட ஆரம் பித்தாள். அம்மா சொன்னார், மன்னி கேட் டார் என்று அவன் குடும்பஸ்தர்களைப் பற்றி, புதிய கோணத்தில் அவனுக்கே அறி முகம் செய்ய ஆரம்பித்தாள்.

ராகவன், "உமா! சரோஜா மன்னியைப் பார். இந்த வீட்டுடன் இணைந்து போய் விட்டாள். குற்றம், குறை எல்லோரிடமும் இருப்பதுதான். சின்ன விஷயங்களை பெரிது பண்ணாதே. வீடு என்றால் எல்லாம்தானிருக் கும்."

"அப்படிப் பார்த்தால், விஜயா மன்னி அதிர்ஷ்டசாலி. கொஞ்ச நாட்கள் இங்கு சேர்ந்து இருக்கும்போது, நல்ல பெயரும் வாங்கிவிட்டு, பிறகு பம்பாயில் தன்னிஷ்டப் படி குடும்பம் நடத்துகிறார். அங்கு அவர் மேக்ஸி, வெளியில் போகும்போது சுடிதார் எல்லாம் போட்டுக் கொள்வாராம்."

"மேக்ஸியும், சுடிதாரும்தான் சுதந்திரமா? இங்கு நாம் கூட்டுக் குடும்பத்தில் இருப்பதால்,

எல்லோரும் சேர்ந்து, பகிர்ந்து எல்லாம் செய்வதால் எவ்வளவு சௌகரியமாக இருக்கு. அப்பா–அம்மா சொல்லும் வேலைகளை செய்துவிட்டு, சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, எந்தப் பொறுப்பும், கவலையும் இல்லாமல், இருக்கிறோமே! ஏன்? உன் மனதில் இப்போதே தனிக்குடித்தன ஆசை வந்துவிட்டதா'' என்றான்.

உமாவிற்குப் பயமாக இருந்தது. "அப்படியில்லை. உங்கள் பேங்கில் டிரான்ஸ்பர் கேட்டால் தருவார்களே? எங்காவது மூணு, நாலு வருடங்கள் போகலாமே. எனக்கென்னவோ இங்கு கட்டிப் போட்டார் போலிருக்கிறது. நான் வெளியில் கிளம்பினால் கட்டிக் கொள்ளும் புடவைகூட, அம்மா சொல்கிறார்'' என,

"அது ஒரு ஆசையில், இன்டிரெஸ்டில் சொல்கிறார் என எடுத்துக் கொள்ளேன். "சரி சரி எனக்கு நாழியாகிறது. தட்டைப் போட்டு பரிமாறு, வருகிறேன்'' என்று பேச்சை முடித்தான்.

அன்று பாத்ரூமில் குளிக்கப் போய், துணியை வைத்துவிட்டு திரும்பியவள் கால் ஸ்லிப்பாகி சறுக்கினார் போல் விழ, கணுக்காலில் கால் மடிந்து, சுளுக்கி, "அம்மா'' என்று உமா உட்கார்ந்துவிட, பதறியபடி ஓடி வந்த அமிர்தமும், சரோஜாவும் அப்போது மடியாயிருந்தாலும், இவளைத் தாங்கியபடி அழைத்து வந்து இவர்கள் அறையில் கட்டிலில் படுக்க வைத்து, உடனே ஏதோ வலி குறைய தைலம் தடவி உருவி, ஒரு துண்டால் காலில் இறுகக்கட்டி, உடனே ராகவனை விரட்டி, ஆட்டோவில் டாக்டரிடம் அனுப்பி, அவர் எக்ஸ்–ரே எல்லாம் எடுத்து, ப்ராக்சர் ஒன்றுமில்லை என்று, காலுக்கு இறுக பேண்டேஜ் கட்டி, மாத்திரை, மருந்துகளுடன் அனுப்பி வைத்தார். அடுத்த ஒரு வாரம் உமாவை எந்த வேலையும் செய்ய விடாமல், முழு ரெஸ்டில் இருக்கும்படி வைத்துவிட்டனர். வேளாவேளைக்கு அம்மாவே, அவள் அறைக்கே காப்பி, டிபன் என்று எடுத்துவர உமா, கூசிப்போனாள். மாமனாரும், மைத்துனரும் கூட அவள் அறைக்கு வந்து "எப்படியிருக்கு?'' என்று விசாரிக்க அவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளும் அக்கறையில் முகம் சிவந்து போனாள். பாத்ரூமிற்கு அவள் மெள்ள நடந்து போனால், "டேய் ராகவா! உமா தனியாய் போகிறாள். கொஞ்சம் பிடித்துக் கொள்,'' என்று மாமியார் கூப்பிட, ராகவன் உதவிக்கு வரும்போது, இவள் வெட்கத்துடன் கையை உருவிக் கொண்டாள். இவள் வீட்டுக்குச் செய்தி போக அப்பா வந்து, கேட்டுக் கொண்டு இவளை அழைத்துப் போய் பதினைந்து நாட்கள் வைத்துக் கொண்டு அனுப்பி வைத்தனர். திரும்பி வந்ததும் அம்மா, "நல்லபடியாய் வந்து சேர்ந்தாயா, வீடே வெறிச்சென்றிருந்தது'' என்று புலம்ப, உள்ளேயிருந்து வந்த மன்னி, "வா உமா, போரடித்துவிட்டது. கால்நன்றாக தேவலையா...? என்று வரவேற்றார்.

நாட்கள் கழிய, அன்று காலை முதல் உமாவிற்கு உடல்நலமில்லை. தலை சுற்றலும், வயிறு பிரட்டலுமாய் எழுந்திருக்கவே முடியவில்லை. ராகவன் அம்மாவிடம் சொல்ல, ஓடி வந்தவர், "சந்தோஷம் உமா! புரியவில்லையா? நாள் தள்ளிப் போனபோதே நினைச்சேன். கொஞ்சம் லைம் ஜூஸ் தரச் சொல்கிறேன். மெள்ள எழுந்துவா, போதும். குளிச்சதும் டாக்டரிடம் போகலாம்'' என்றார்.

ரிக்ஷாவில் அம்மாவுடன் லேடி டாக்டரிடம் போக அவரும் உறுதி செய்துவிட்டார். டாக்டரிடம் அம்மா, "இவள் சாப்பாடே போதாது. பசித்து, தெம்பாகச் சாப்பிட எதாவது டானிக் தாருங்கள்'' என்று வாங்கி வந்தார்.

அன்றிரவு தனிமையில் ராகவன், "உமா! ரொம்ப நாட்களாய் உனக்கு ஒரு குறையிருக்கு. புரிந்தாலும் நான் இடம் கொடுக்கவில்லை. இப்போது எங்கள் பேங்கில் வேறு ஊருக்கு மாற்றல் வாங்க ஒரு சான்ஸ் வந்திருக்கு. எழுதிக் கொடுத்துவிடட்டுமா'' என்றான்.

"வேண்டாம். இந்தக் குடும்பத்தையும், இதிலுள்ளவர்களின் நெருக்கத்தையும், அன்பையும், நான் தெளிவாகப் புரிந்து கொண்டுவிட்டேன். பெரியவர்களின் துணையும், உதவியும் நமக்கும் தேவை என்பதையும் உணர்ந்துவிட்டேன். நாமாக பிரிவதற்கு, வழி தேட வேண்டாம். நம் குழந்தைக்கும், தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, அத்தை என்று மனிதர்களின் உறவும், உறவின் பலமும் வேண்டும்'' என்று அழகாய் புன்னகைத்தாள்.



50 கிராம், 100 கிராம் சாமான் போட்டு வரும் கவர்களைச் சேமிக்கத் துவங்குங்கள். நவராத்திரி சமயத்தில் விருந்தினர்கள் வரும்முன் கண்டலை அதில் போட்டு சீல் செய்து வைத்துவிட்டு வரும் விருந்தினர்களை வரவேற்கத் தயாராக இருக்கலாம். குழந்தைகள் கண்டலைச் சிதறாமல் வீட்டிற்கு எடுத்துச் செல்ல எளிதாக இருக்கும்.

- பத்மாவதி ராதாகிருஷ்ணன்

மண்டைக் கனம் ஜாஸ்தியாப் போச்சு

தலைவலியா...?
உடல்வலியா...?
ஜலதோஷமா...?

இப்படிக் கேள்விமேல் கேள்வி அடுக்கி 'ஆமாப்பா, ஆமா...' என எரிச்சல் பட்டு... நாம் அடிக்கடி டீ.வி.யில் மட்டும் இதைப் பார்க்கவில்லை. அனுப விக்கவும்தான் செய்கி றோம்.

தலையில் நீர் கோர்த்து இருக்கு, மண்டை கனமாக இருக்கு, இடைவிடாத தும்மல், முகம் பொது பொதுவென்று ஊதிக் கொண்டு அவஸ்தை இப்படி அனைவருமே அனுபவிக்கிறோம்.

'சைனஸைடிஸ்' எனப்படும் நீர்க்கோவை யையே சித்த வைத்தியத்தில் பீனிசம் என் கிறார்கள். வருடக்கணக்கில் இப்படி அவ திப்படும் பலரும் ஓரிரு மாதங்களிலேயே சித்த மருத்துவத்தில் நன்றாகக் குண மடைந்து விடலாம். குணப்படுத்தி இருக்கி றோம்" என்று கூறுகிறார்கள். பதினெண் சித்தர் மருத்துவமனையின் (AC/8, II Avenue, First Main Road, Anna Nagar, Madras - 600 040 Phone : 6264150) டாக்டர்கள்.

"சைனஸ் என்பது எல்லோருக்கும் இருப் பதுதான். நம் முக அமைப்பிற்காகப் பல் வேறு மேடு பள்ளங்கள் உண்டு. முகத்தின் இருபக்கம், கண்ணின் கீழ், நெற்றிப் பொட்டு இவையெல்லாமே பதிவுகள், சைனஸ்தான். இதிலே நீர் கோர்த்து, இன்ஃபெக்ஷன் ஆகித் தொல்லையாக மாறுவதுதான் சைன சைடிஸ். எனக்கு சைனஸ் என்பார்கள். எல் லோருக்குமே சைனஸ் அதாவது பதிவுகள் உண்டு. அதிலே வரும் தொந்தரவுதான் சைனசைடிஸ்" என்கிறார் டாக்டர் சிவராமன்.

"சைனசைடிஸ் வர பல காரணங்கள் உண்டு. நம் உடலில் கபம் அதிகமாகும் போது, பித்தம் அதிகமாகி அதை 'டபக்'கென குறைத் துக் கபத்தை அதிகமாக் கும்போது (அதாவது வெயி லில் நன்றாகச் சுற்றிவிட்டு வீட்டினுள் வந்தவுடன் 'ஜில்'லென ஃபிரிஜ் நீரைச் சாப்பிடுவதைத்தான் அவர்கள் பாஷையில் சொல்கிறார்கள்.), பருவ காலங்கள் மாறும்போது அதற்கேற்ப உடம்பு மாறத் திணறும்போது இப்படிப் பல சமயங்களில் சைன சைடிஸ் வருகிறது" என் கிறார் டாக்டர் செல்வம்.

"அதேபோல காலம் தவறிய உணவு, பல முறை யில்லாத பழக்கங்க ளும்கூட காரணம். சாப் பிட வேண்டிய நேரத்தில் நாம் சாப்பிடாமல் நீண்ட நேரம் கழித்துச் சாப்பிடும் போதோ அல்லது சாப் பிடாமலேயே இருந்தால் ஒருவித அக்னி வாய்வு அடி வயிற்றிலிருந்து கிளம்பும். இதை நாம் அனைவருமே உணர முடியும். அந்த வாயு தலையிலே போய்ச் சேர்ந்து குளிர்ந்து ஆங்காங்கே படிந்து விடு கிறது. இதுவும் தலையில் ஏற்படும் சைன சைடிஸ்தான். தலைக்குக் குளித்துவிட்டு வந்து தேங்காயெண்ணெய் தேய்த்துக் கொள் வார்கள். இவைகளினால் தலையில் நீர் கோர்த்துக் கொள்ளும்..."

"உடற்பயிற்சி செய்த பிறகோ, வெளியே போய் வந்தாலோ உடலில் வியர்வை இருக் கும். இந்த மாதிரிச் சமயங்களில் வியர் வையை நன்கு ஒற்றியெடுத்துவிட்டுச் சிறிது நேரம் ஆன பிறகுதான் முகத்தைக் கழு வவோ, குளிக்கவோ செய்ய வேண்டும். ஆனால் பலரும் 'ஐயோ, ஒரே வியர்வை' என்று குளிர்ந்த நீரை முகத்தில் அடித்துக் கொள்வார்கள். இதுவும் சைனசைடிஸ் ஏற் படப் பல காரணங்களில் ஒன்று" என்கிறார் டாக்டர் முத்துக்குமார்.

"சைனசைடிஸ் எப்படி வருகிறதோ, ஆனால் வந்துவிட்டால் ரொம்பக் கொடுமை. அதை அனுபவிக்கிறவர்களுக்குத் தான் அந்தக் கஷ்டம் தெரியும். தலை பார மாகி, முகம் வீங்கி தும்மலும் மூக்கில் வடியும் நீரு மாக ரொம்பக் கஷ்டப்படு வார்கள். ஒரு வேலை செய்யத் தோன்றாது. வெளிச்சம் பார்க்கவே கண்கள் கூசும். தலைவலி 'டண் டண்' ணென்று மண்டையைப் பிளக்கும்.

எங்களிடம் ஒரு மாண வன் வந்தான். அவனுக்கு சைனசைடிஸ் தொந்தரவி னால் பாடம் படிக்கவே தோன்றவில்லை. காலை யில் எழுந்தால் கொஞ்சம்



• சிநேகலதா

சுதாரித்துக் கொள்ள இரண்டு மணி நேரம் ஆகுமாம். அப்படி இருந்தவளை முழுமையாகக் குணப்படுத்திவிட்டோம். பல இல்லத்தரசிகள் பயனடைந்திருக்கிறார்கள். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், 'தலைவலி தனக்கு வந்தாத்தான் தெரியும்' என்பார்கள். மற்ற எந்த வேலையிலும் நாட்டம் செல்ல விடாத இந்த சைனசைடிஸுக்கு சித்தாவில் அற்புதமான மருந்துகள் உள்ளன" என்கிறார் இம்மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் ஸ்நேகலதா.

"சைனசைடிஸுக்கு மற்ற மருத்துவ முறைகளில் ஆன்டிபயாடிக், அக்கு பங்க்சர் என நிறைய இருக்கிறது. இவற்றிலே என்ன செய்கிறார்கள் என்றால் நீர் மிகுதியாகச் சுரக்கும் சுரப்பிகளை அப்படியே காய வைத்து விடுகிறார்கள். ஆனால் இயற்கையாக ஏற்படும் ஒன்றை நாம் தடை செய்தால் மீண்டும் வேகமாக வளரும். ஆனால் எங்கள் மருத்துவ முறையில் கோர்த்துக் கொண்ட நீரை முழுமையாக வெளியேற்றுகிறோம். இதற்கு உள்ளே மூலிகைகளை கஷாயம் குடிக்கக் கொடுத்தல், ஆவி பிடித்தல், பற்றுப் போடுதல் என மூன்று வகைகளில் நீரை வெளியேறச் செய்கிறோம்.

நாங்கள் கொடுக்கின்ற மூலிகைகளைக் கொதிக்கும் நீரில் இட்டு அந்த ஆவியைப் பிடிக்கும்போது மூக்கின் மூலமாகவும், வியர்வையாகவும் நீர் வெளியேறும்.

அதேபோல 'நீர்க்கோர்வை' என்றொரு பற்று இருக்கிறது. அதை நெற்றியிலிட்டால் நீரை அப்படியே உறிஞ்சிவிடும்."

"எங்களிடம் ஒரு பெண்மணி வந்தார். அவரிடம் மருந்துகளைக் கொடுத்து ஆவி பிடிக்கச் சொன்னோம். மறுநாளே போன் செய்தார், 'ஐயோ, இதென்ன மூக்கில் இருந்து தண்ணி தண்ணியா கொட்டுது! நான் என்ன பண்ணட்டும்' என்று. நாங்கள் சொன்னோம், "ஒன்றும் பயப்படாதீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். சரியாகிவிடும்" என்று. அப்புறம் இரண்டு மூன்று நாள், தொடர்ந்து, சிகிச்சை முறைகளைக் கையாண்டு 'பளிச்'சென்று வந்தார், 'இன்னும் ஆவி பிடிக்கணுமா' என்று..." என்றார் டாக்டர் சியாமளா.

"இதுதான் ரொம்ப முக்கியம். இந்த மருந்துகளால் சைனசைடிஸ் குணமாகி விடுகிறது. ஆனால் மீண்டும் இது நம்மைப் பாதிக்காமல் இருக்கவும் நாம் சொன்ன உணவுப் பழக்கங்களை நோயாளிகள் கடைப்பிடிக்க வேண்டும். இதில்தான் பலரும் தவறிவிடுவார்கள். தலையில் நீரோடு எண்ணெய் தேய்ப்பது, நீர்ச்சத்து நிறைந்த காய்களை உண்ணுவது, எனப் பல தவறான பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும்."

"எண்ணெய் தேய்த்துக் குளிப்பது இவர்களுக்குச் சரியா தவறா...?"


"முதலில் நாமெல்லாம் நகரங்களில் செய்யும் கழுத்தோடு குளித்தலே தப்புதான். குளிப்பது என்றால் தலையில் நன்னீரை விட்டுக் குளிப்பதுதான். வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். நமக்கு எப்படியோ குழந்தைகளுக்குச் சிறு வயதிலிருந்தே இப்பழக்கத்தை ஏற்படுத்தி விட்டால் இந்தப் பிரச்னையே இருக்காது. சைனசைடிஸ் தொந்தரவு உள்ளவர்கள் முதலில் ஓரிரு மாதங்களுக்கு நாங்கள் கொடுக்கின்ற மூலிகை எண்ணெயைக் கொண்டே எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டும். பிறகு சாதாரணமாக எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாம்...."

"இதையெல்லாமே சித்த மருத்துவர்களின் அறிவுரைப்படி செய்வது நல்லது. ஏனென்றால் சிலருக்கு நல்லெண்ணெயில் மிளகு தட்டிப் போட்டால் நல்லது. சிலருக்கு வெந்தயம் தேய்த்துக் குளிப்பது நல்லது. ஒவ்வொரு உடம்புக்காரர்களுக்கு ஒவ்வொன்று நல்லது."

"ஆனால் இப்போது எண்ணெய் தேய்த்துக் குளிப்பது எங்கே இருக்கிறது? தலைக்குத்

உபயோகித்த 'கொசுவிரட்டி' மேட்டுகளை வரிசையாக பரத்தி, நடுவில் உள்ள இடைவெளியில் புல் தூவினால், கான்கிரீட் தளம் அமைத்தது போலிருக்கும். இதை, பங்களா, வீடு போன்ற பொம்மைகளுக்கு முன்பு அமைத்து, அதில் கார் பொம்மையை பார்க் செய்யலாம். 'காம்பவுண்ட் வால்'க்கு முன்பு சொன்ன பிஸ்கட் (வளைவளைவான) பேப்பரை சுற்றி நிறுத்தலாம். பிரமாதமாய் இருக்கும்.

- உமா



தேங்காயெண்ணெய் போடுவதே குறைந்து விட்டதே?"

"சைனசைடிஸ் தொந்தரவு போல எத்தனையோ தொந்தரவுகளும் ஜாஸ்தியாகி விட்டதே! தினமும் தேங்காயெண்ணெய் தடவாவிட்டாலும் எப்போதாவது ஒரு முறை தேய்த்துக் கொள்வது நல்லது. அதேபோலத்தான் எண்ணெய் தேய்த்துக் கொள்வதும். இவை தலையை நல்ல குளிர்ச்சியாக வைத்திருக்கும். உஷ்ணமாகாமல் காக்கும். வியர்வைத் துவாரங்கள் நன்கு சுத்தமாகி, அடைப்புகள் நீக்கப்பட்டு உடல் பரிசுத்தமாகிறது. தோலில் பளபளப்பு ஏற்பட்டு சுருக்கம் வராமல் இருக்கிறது. எண்ணெயினால் உடலுக்கு எத்தனையோ நன்மைகள் உண்டு என்பதை மேலைநாட்டவர்களே ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள்.

நம் பழக்கங்களின் அருமைகள் நமக்கே தெரியாது. மற்றவர்கள் வந்து சொன்னால்தான் தெரியும். அந்த வகையில் இப்போது அவர்கள் சொல்லும்போதாவது நாம் ஒப்புக் கொள்வது நல்லதுதானே! அதைத் தவிர காரண காரியங்களோடுதான் நம் பெரியவர்கள் எத்தனையோ வழக்கங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையோடு நாம் இவற்றைப் பின்பற்றினால் இன்று வரும் ஏராளமான வியாதிகளில் இருந்து தப்பிக்கலாம்!"

"சைனசைடிஸ் என்கிறீர்கள்? இதற்கும் ஆஸ்துமாவிற்கும் சம்பந்தம் உண்டா? ஜலதோஷம் கூட இதே தும்மல், தலைவலி கேஸ்தானே?"

"ஜலதோஷம் என்பது இன்ஃபெக்ஷனால் ஏற்படுவது. இது சாதாரணமாக ஏற்படுவது. சைனசைடிஸ் என்பது முகத்திலே, தலையிலே (அதாவது கழுத்துக்கு மேலே) நீர்கோர்த்துக் கொள்ளுதல். ஆஸ்துமா நெஞ்சிலே கபம் கட்டுதல். ஒவ்வொன்றும் வேறானவை என்றாலும் கவனிக்காமலே விடும்போது ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாற வாய்ப்புகள் உண்டு."

"இது எப்படி இருக்கிறது என்றால் சாதாரணமாக 'நகத்தில் கிள்ளியெறிய வேண்டிய ஒன்றை வளர்த்துக் கோடாரியால் வெட்ட முயல்வது போல' என்பார்களே, அதுபோலத்தான். சித்த வைத்தியத்திலேயே மூன்றுவித மருத்துவ முறைகளைச் சொல்கிறார்கள்.

'பஸ்பம், சூரணம் கொண்டு குணப்படுத்துவது, தேவ வைத்தியம். ஹெர்பல் எனப்படும் மூலிகைகளைக் கொண்டு முயற்சிப்பது மனுஷ வைத்தியம். ரண சிகிச்சை அதாவது அறுத்து அகற்றுவது ராட்சச வைத்தியம்'

என்பார்கள். சாதாரணமாக ஆரம்ப நிலையிலேயே இவற்றைக் கவனித்து முழுமையாகக் குணமடைந்துவிட்டால் இந்தக் கஷ்டமே இல்லையே!" என்கிறார் ஸ்நேகலதா.

"அதேபோல பல செய்யக் கூடாத பழக்கங்களும் இந்த சைனசைடிஸுக்குக் காரணம். இரவிலே தயிர் சாப்பிடக் கூடாது என்பார்கள். தலைக்குக் குளித்த அன்று பகலில் தூங்கக் கூடாது. தலையிலே ஈரம் இருக்கும்போது படுக்கக் கூடாது. அளவுக்கதிகமான குளிர்ந்த நீரை, பொருளைச் சாப்பிடக் கூடாது. அதாவது இயற்கையாக உடலின் வெப்ப நிலையைக் காப்பதே நல்லது. செயற்கையான மற்றவை உடம்பை நோயாகத் தாக்குகிறது. அதுவும் தலை ஈரம் முகத்தில் உள்ள பதிவுகளில் எளிதில் பதிந்து விடுகிறது. அதனால்தான் பெரியவர்களும், மருத்துவ மகான்களும் சொல்வது இயற்கையோடு இணைந்து செல்ல வேண்டும் என்று."


"இத்தனையும் நீங்கள் நோயில் அவதிப்படுபவர்களுக்குச் சொல்கிறீர்கள். ஆனால் நன்றாக இருப்பவர்கள் பருவ கால மாறுதல்கள் போன்ற நிலைகளில் இப்படிப்பட்ட தொந்தரவுகளில் மாட்டிக் கொள்கிறார்கள் இல்லையா? அவர்களுக்கு 'நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை அறிவுரை' என்ன?"

"ஒரு பெரும் அதிகாரிக்கு உண்மையில் நடந்த கதையைச் சொல்கிறேன். கடும் குளிரில் அவர் நல்ல வெந்நீரில் குளித்துக் கொண்டிருந்தார். முகத்தில் சோப்பைப் போட்டுக் கொண்டவர் தவறுதலாக ஷவரில் குளிர்க் குழாயைத் திறந்துவிட்டார். நல்ல வெந்நீரில் குளித்தவரின் மேல் திடீரென குளிர்ந்த நீர் படவும் அப்படியே அவ

பெரியவர்களைக் காட்டிலும் அதிகம் விரும்பிச் சாப்பிடும் குழந்தைகளுக்கு கண்டலை கூடுதலாகவே வைத்துக் கொடுங்கள். சத்துணவும் கூட.

- உமா





காஞ்சி கோயில் மணியோசை, ஒலிக்கிறது அண்ணாநகரில்...

காஞ்சி கூட்டுறவு சொசைட்டிகளின்
பட்டுப் புடவைகள் வண்ணக் களஞ்சியமாய்
அண்ணாநகரில் குவிந்துள்ளது,



"அதுவும் சொசைட்டி விலைக்கே"

காஞ்சீபுரம், திருபுவனம், ஆரணி, சேலம் மற்றும் கோவை நகரங்களிலுள்ள சிறப்புபெற்ற நெசவாளர் கூட்டுறவு சொசைட்டிகளின், பாரம்பரியத்தின் மேன்மையையும், கைத்தறி அற்புதங்களையும் ஒருங்கிணைத்து தயாரித்த பட்டு சேலைகள், காட்டன் சேலைகள் மற்றும் இல்லத் துணிவகைகள், முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட, அண்ணாநகர் ஷோரூமில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளன.

வாருங்கள்! தறியிலிருந்து நேரடியாக வரவழைக்கப்பட்ட, 100% தூய ஜரிகை பட்டு புடவைகளை சரியான விலைக்கே வாங்குங்கள்.

வாருங்கள்:

காஞ்சி கோ-ஆபரேடிவ் சில்க்
(தமிழக அரசு நிறுவனம்)
உம்மிடியார்ஸ் ஷாப்பிங் சென்டர், எல்.ஐ.சி. பில்டிங் எதிரில்
811, அண்ணா சாலை, சென்னை - 600 002. போன்: 8522453

தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு
மார்க்கெட்டிங் காம்ப்ளக்ஸ்
(முழுவதும் ஏர்-கண்டிஷன் வசதியுடன்) (தமிழக அரசு நிறுவனம்)
2-வது அவென்யூ அண்ணா நகர் பிளாசா,
(ஐயப்பன் கோவில் அருகில்)
அண்ணா நகர், சென்னை - 600 040.

கைக்கெட்டும் தூரத்தில் கடையிருக்க — காததூரம் ஏன் செல்ல வேண்டும்?



தயாரிப்பாளரின் கவனத்திற்கு...

மண்ணெண்ணெய் ஸ்டவ்விற்கு சமீபத்தில் புதிய திரி வாங்கினேன். அதனை உள்ளே இழுக்க மிக மெல்லிய கம்பியை வைத்திருந்தார்கள். நம் கைகளால் பிடிக்கவோ, இழுக்கவோ முடியவில்லை. தயாரிப்பாளர்கள் சற்று தடிமான (பலமான) கம்பியை வைத்தால் உபயோகமாக இருக்கும். பிறகு நான் நல்ல "டொயின்" நூலினால் திரியை இணைத்து வெகு எளிதாக போட்டு திரியை போட்டு விட்டேன்!

– ஆர். சீதா

ரைப் பாதித்துவிட்டது. ஒன்றிலிருந்து ஒன்று என நோய் ஏற்பட்டு ஒரு வாரத்தில் இறந்தே விட்டார்.

அந்த அளவிற்கு இந்தக் குளிர்ச்சியும் வெப்பமும் நம் உடம்பைப் பாதிக்கிறது. வெயில் காலத்திலிருந்து குளிர் காலத்திற்கு மாறும் நேரங்களில்தான் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நீர்க்காய்களைத் தவிர்த்து விடலாம். பல ஊர்களில் பகல் எல்லாம் நல்ல வெயில் அடிக்கும். இரவில் நன்றாகக் குளிரும். இந்த மாதிரி நேரும் போது உடல்நிலையை இயற்கைக்கு மாறாகக் குளிரச் செய்வதையோ, சூடாக்குவதையோ தவிர்க்க வேண்டும். பால் சாப்பிடும் வழக்கம் உள்ளவர்கள் அதில் இரண்டு மிளகு தட்டிப் போட்டு, பனங்கற்கண்டு போட்டுச் சாப்பிட வேண்டும். ஏனெனில் பால் சத்தான ஆகாரமானாலும் கபம் உண்டு பண்ணும். அதிலே சர்க்கரையும் சேரும்போது இன்னும் கொஞ்சம் கபம் தான் அதிகமாகும். இதைத் தவிர்க்க மிளகும், பனங்கற்கண்டும் உதவும். இவற்றையெல்லாம் சாதாரணமாக நம் பாட்டிமார்களே செய்வார்கள். எனவே செயற்கையான தட்பவெப்பத்தை உடலில் ஏற்படுத்துவதே சைனசைடிஸுக்குக் காரணம் என்பதால் அவற்றைத் தவிர்ப்பது நல்லது!"

"இன்னொரு முக்கிய காரணம் ஏர் பொலியுஷன். இன்று நம்முடைய சுற்றுப்புறச் சூழல் மிகவும் கேடடைந்துவிட்டது. ரோடுகளிலே எத்தனை கார்களும், இரண்டு சக்கர வாகனங்களும் புகையை விட்டுக் கொண்டு செல்கின்றன. இந்த அசுத்தமான புகை நிறைந்த காற்றினாலும் சைனஸ் இன்ஃபெக்ட் ஆகி சைனசைடிஸ் வருகிறது. தூசு, தும்புகளும் இந்த நோய்க்கு முக்கிய காரணம்."

"ஆனால் இந்தக் காற்று அசுத்தமடைதலுக்கு நாம் என்ன செய்ய முடியும்? இதில் இருந்து காத்துக் கொள்வது எப்படி?"

"இது ஒரு சமுதாயப் பிரச்னைதான். நகரங்களில் இருப்பவர்களில் நிறைய பேருக்கு சைனசைடிஸ் இருக்கிறது. ஆனால் கிராமங்களில் இருப்பவர்களுக்கு இந்தப் பிரச்னை இருக்காது. அவர்கள் நகரங்களுக்கு வந்தாலும் பல வருடங்கள் ஆரோக்கியமாக இருப்பார்கள். காரணம், அவர்களுடைய உடம்பு அடிப்படையில் பலம் பொருந்தியதாக, சுத்தமான ரத்த ஓட்டம் உடையதாக இருப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தியோடு விளங்கும். எளிதில் நோய் வாய்ப்பட மாட்டார்கள். ஆனால் நம் நகர மக்கள் நச்சுப் புகையினால் எளிதில் சைனசைடிஸ் வரப்பெற்று அவதிப்படுகிறார்கள்."

"இதற்கு என்ன செய்வது...?"

"காற்று நச்சுத்தன்மை அடையாமல் பாதுகாக்க ஒரு விழிப்புணர்வு தேவை. பல நல்ல குறிக்கோள்களுக்காக நாடு தழுவிய விழிப்புணர்வு ஆய்வுகள் நடத்துவது போல இதற்கும் நடத்தவேண்டும். புகை கக்கிச் செல்லும் வண்டியைப் பார்த்தவுடன் பொதுமக்கள் ஆட்சேபிக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

இப்போதைய நிலையில் நாங்கள் கொடுக்கும் மருந்தைச் சாப்பிடலாம்!" என்று சிரிக்கிறார்கள் இவர்கள்.

"மலச்சிக்கலும் கூட காரணம். மலம் கழியாமல் கெட்டியாகும்போது அதிலே இருந்து உற்பத்தியாகும் வாய்வும் மேலே சென்று பரவி நின்றுவிடுகிறது. பல நோய்களுக்கும் ஆரம்பம் மலச்சிக்கல்தான். எனவே, அதையும் தவிர்க்க வேண்டும்" என்கிறார் ஆசான்.

இப்படி எந்த நோய் எடுத்துக் கொண்டாலும் கடைசியில் நம் இந்திய மருத்துவர்கள் வருவது ஆரோக்கியமான உணவு, இயற்கையான உடல்நிலை என்பதற்குத்தான். நம் உடலைச் செயற்கையில் ஊறப் போடாமல் இயற்கையாக, வலிவாக எடுத்துச் சென்றாலே வெற்றிகரமான வாழ்க்கையை நடத்த முடியும் என்பதுதான் இவர்களின் சித்தாந்தம்.

'ஜ்வாலா'



Sunline
சூரியகாந்தி
எண்ணெயின்
சிறப்புக்குக்
காரணம்,
டீ-வேக்ஸிங்.
சன்லைன், டீ - வேக்ஸ் செய்யப்பட்ட சூரியகாந்தி சமையல் எண்ணெய்
தெளிவானது மற்றும் இலேசானது. வைட்டமின் E நிறைந்தது.
கொலஸ்ட்ரால் இல்லாதது. உங்கள்உடல்நலத்தில் அக்கறை காட்டுவது
சன்லைன். சால்வெண்ட் எக்ஸ்ட்ராக்ஷன் எதுவும்
இன்றி இது மிகமிகத் தூய்மையான
எண்ணெயும்கூட. இவற்றால் இது உன்னதமான
சமையல் எண்ணெயாகத் திகழ்கிறது.
Sunline
Sunline
நெஞ்சத்தைக் கொள்ளை
கொள்ளும் சுவை
சன்லைன்
சூரியகாந்தி சமையல் எண்ணெய்
இது ஒரு எஸ். எஸ். டி. ஆயில் மில்ஸின் தரமான தயாரிப்பு
Anti Cholesterol
ARTIG / 1518



கொலுவுக்கு எத்தனை யோசனைகள்

○ பழைய தலைவாறும் சீப்புகள் உடைந்து விட்டால் தூக்கி எறிந்து விடாமல், கொலுவில் பார்க் வைக்கும் போது வீட்டின்/தோட்டத்தின் காம்பவுண்ட் போன்று சீப்பின் மேல் பகுதி மேலே தெரியும்படி வரிசையாக நிறுத்தி வைத்தால் பார்க்க அழகாக இருக்கும்.

○ பழைய போட்டோக்களை ஒரு அட்டையில் ஒட்டி பார்க்கில் ஹோர்டிங் (Hoarding) போன்று நிற்க வைக்கலாம். பார்க்கவும் அழகாக இருக்கும். ரசிக்கவும் முடியும்.

○ டைப்ரைட்டருக்கு வரும் ரிப்பன் சுற்றி வரும் பாகத்தை எடுத்து அதனுள் சிறு குச்சியை குறுக்காக வைத்து மெல்லிய கருப்பு நூலினால் கட்டித் தொங்க விடவும். பிறகு அதன் மேல் பாகத்தில் பசையை ஒட்டி பல வண்ண பேப்பர்களை தொங்க விடலாம். மேல்பாகத்தில் ஒரு கலரும், அதன் அடிபாகத்தில் வேறு கலர் பேப்பரினால் தோரணம் போன்று அழகாக அலங்கரிக்கலாம். பல இடங்களில் இதுபோன்று கட்டினால் காற்றில் ஆடும் போது மெதுவாக சுற்றும். பார்க்க அழகாக இருக்கும்.

○ பழைய பயன்படுத்தா அல்லது லேசாக உடைந்த ஆடியோ கேஸட் கவர் இருந்தால் பார்க்கில் பஸ் ஸ்டாண்ட் போன்று கேஸட் வைக்கும் பாகத்தை குறுக்காக மண்ணில் சிறிது புதைத்து மேல் பாகத்தை இரண்டு சிறிய குச்சியை வைத்து நிற்க விடவும். அதற்குக் கீழே சிறு பொம்மைகளை வைத்தால் பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காக நிற்பது போன்று இருக்கும்! இருபுறமும் பஸ் நம்பர்களை எழுதி ஒட்டி விடவும்.

○ பயன்படுத்தாத பழைய பேனாக்களை, குறிப்பாக ஸ்கெட்ச் பென்களை பார்க்கில் காம்பவுண்ட் போன்று மாற்றி மாற்றி வைத்தால் நன்றாக இருக்கும். அல்லது பார்க்கின் நடுவே ஒரு பேனாவை வைத்து அதன் மேல் சிறிய பாட்டில் மூடியை வைத்தால் நிழற்குடை போன்று இருக்கும். அல்லது ஒரு சிலையை வைத்து அதைச் சுற்றி நான்கு புறமும் வண்ண பேனாக்களை வைக்கலாம்.

○ பேப்பர் பிளேட்டின் நடுவே சிறிய ஓட்டை இட்டு, அதில் பேனாவை சொருகி பார்க்கில் பெரிய நிழற்குடை போன்று அமைக்கலாம். அதன் கீழே ஒரு காந்தி/நேரு சிலையை வைத்தால் பார்க் நன்றாக இருக்கும். கிருஷ்ணன் போன்ற கடவுள் சிலையையும் வைக்கலாம்.

○ பழைய ஸ்டிக்கர் பொட்டுக்களை கொலு வைக்கும் படியில் விரிக்கும் வெள்ளைத் துணியின் மீது ஆங்காங்கே ஒட்டி வைத்தால் பார்க்க நன்றாக இருக்கும். துணியின் மீது ஆணி ஏதாவது அடித்திருந்தாலும் அதை மறைக்க இந்த ஸ்டிக்கர் பொட்டுக்கள் உதவுமே!

○ பழைய பவுடர் டப்பாக்களின் மீது வண்ண கலர் கிஃப்ட் பேப்பர்களை அழகாக முழுவதும் ஒட்டி ஒவ்வொரு படியின் இரு பக்கங்களிலும் நிற்க வைத்தால் நன்றாக இருக்கும். காற்றில் விழுந்து விடும் எனச் சந்தேகம் வந்தால் மணல் பவுடர் டப்பா முழுதும் நிரப்பி நிற்க வைக்கவும். அசையாமல் நிற்கும்!

- ஆர். சீதா

சில வஸ்துக்கள் காலத்துக்கு ஏற்ப விலை மதிப்பிற்கு அரிய அதிக அளவில் வளர்ச்சி அடைகிறது.

விலை உயர்ந்த பளிங்கு கற்கள், கலை நுணுக்க வஸ்த்துக்கள், பழரசம்.

வாழ்க்கையில் நல்ல பொருட்கள் விலை அதிகரித்து கொண்டே இருக்கிறது. அழகின் இரகசியமான புராதன மைசூர் சாண்டல் சோப்பைப் போல.



75 வருடங்களுக்கும் மேலாக அசல் சந்தன சோப் வீட்டு உபயோகத்துக்கு நம்பகமான பெயர் பெற்றிருக்கிறது.

இயற்கையில் சுத்த ரக சந்தன எண்ணெய் முழுமையாக அடங்கி இருப்பதால், உங்கள் சருமத்தை மென்மையாகவும் ஒரே சீராகவும் பாதுகாக்கின்றது. பளிச்சிட செய்கிறது.

மைசூர் சாண்டல் சோப் நீடிக்கும் அழகின் இரகசியம் வாழ்க்கையில் மேலும் உயர்ந்த அளவில் அதிகரிக்கின்றது.

மைசூர் சாண்டல் சோப்

75 ஆண்டுகளாக நிகரற்ற தன்மை.

கர்நாடகா சோப்ஸ்
அண்ட் டிடெர்ஜெண்ட்ஸ்
லிமிடெட், பெங்களூர் - 55




MASS/KSDL/94

என் பெண்டாட்டி சமையலே!

சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற கதை





“அட! இன்னிக்கும் அதே ப்ரெட், ஜாம் மெனுதானா? க்ரேட்!”

வேறொன்றுமில்லை. ராவெல்லாம் தலைவலி மண்டையைப் பிளந்ததால் கொஞ்சம் மெதுவா எழுந்துவிட்டு சமயத்திற்குக் கை கொடுக்கும், மாடர்ன் ப்ரெட், ஜாம், சாஸ் வகைகளை சாப்பாட்டு மேஜை மீது எடுத்து வைத்துக்கொண்டிருக்கும்போது மிகவும் எக்காளமாக என் அன்புக் கணவர் விசாரித்த விசாரிப்பு தான். தலைவலிக்குப் பிரதான காரணமே இவர் இரவு இரண்டு மணியிலிருந்து டி.வி.யில் அலற விட்ட கிரிகெட் மேட்ச்தான் என்றால் நம்பவா போகிறார்?

“ஆனாலும் சீதூ... உனக்கு வரவர சமையலே மறந்து போயிருக்கும்மா. நம்ம வீட்டுல ஒரு காஸ் சிலிண்டர் ஆறுமாசம் வருமா? வாரத்துக்கு ஒரு தடவை குழம்புங்கற பேருல ஏதோ ஒரு திரவத்தைப் பண்ணிப் ப்ரிஜ்ஜில் வச்சிட்டா டெய்லி லஞ்சுக்கு அதேதான்....”

முதல் நாள் அவருடைய அக்கா குடும்ப சகிதம் சாப்பிட வருவதாக இருந்து கடைசி நிமிஷத்தில் ரஜினி சினிமாவுக்கு ஓசி டிக்கெட் கிடைத்து விட்டதால் ‘ப்ரோக்ராம்’ திடீரென்று கேன்சல் பண்ணி விட்டாள். பருப்பும், தேங்காயும் போட்டுச் செய்த வெங்காய சாம்பாரை ப்ரிஜ்ஜில் வைத்து மறு நாளும் பரிமாறியதை பாசத்துடன் கட்டிக் காட்டுகிறார்.

“ஏண்டி... நம்ம வீட்டுல ஒரு பிட்ளை, ஒரு பொரிச்ச குழம்பு, ஒரு பருப்புருண்டை மோர்க்குழம்புன்னு சாப்பிட்டு ஒரு வருஷமாயிருக்குமா? நோ...நோ... ஆறு மாசம்தான் ஆகியிருக்கும்.”

இருக்கும்... இருக்கும் ஆனால், நான் அடிக்கடி செய்யும், கட்லெட்டும், பீட்சாவும், புலாவும், பன்னீர் மக்கன்வாலாவும், நான், புல்கா, பட்டூராக்களும், வற்றல் குழம்பு, பருப்பு உசிலி, 'கரமுர' ரோஸ்ட் கறியும், எண்ணெய்க் கத்தரிக்காயும், மைசூர் ரசம், பிசிபேளா பாத், அவியல், அப்பம் வகைகள் அனைத்துமே அவர் ஞாபகத்துக்கு வர மறுத்தது ஒன்றும் புதியதில்லை.

என்றாவது ஒரு நாள் ரொட்டியோ, உப்புமாவோ, மற்ற 'எமர்ஜென்சி' சமையல் வகைகளோ டைனிங் டேபிளில் தலை காட்டும் போது ஏதோ தானும் தன் குழந்தைகளும் கொலைப் பட்டினி போடப்படு



வது போல புலம்புவது அவரது ஸ்பெஷாலிடி... சமர்த்தாக குழந்தைகள் ஜாம் தடவிய ரொட்டியை சப்புக் கொட்டியபடி சாப்பிடுவதை கட்டிக் காட்டினாலோ...

"ஐயோ பாவம். அதுகளுக்கு உங்கிட்ட செம பயம். அது தவிர, இந்த மாதிரி சாப்பாடு போட்டே அதுங்க நாக்கைக் 'கண்டிஷன்' பண்ணிட்டியே... லீவுக்கு ஊருக்குப் போலாம் கண்ணுகளா... பாட்டி கையால சமைச்சுப் போடச் சொல்றேன்," என்பார்.

பாட்டி வருஷம் தவறாமல் ஒவ்வொரு லீவுக்கும் இங்கே கல்யாணம், கச்சேரி சீசன், வைத்தியம், "அந்தப் பட்டிக்காட்டுல போர் அடிக்கிறது' என்று ஏதாவது ஒரு சாக்கை சொல்லிக் கொண்டு வந்து விடுவதை இவரிடம் சொன்னால் அது எதில் போய் முடியும் என்பது எனக்குத் தெரியாதா என்ன?

இன்று என் பொறுமை எல்லை கடந்தது.

உஷா ஸ்ரீகுமார்



கிராமத்திலே தேவதைகள் தெய்வமாக வழிபாடு செய்யப்படுகிறார்கள். "காத்தாயி" என்று கூறப்படும் தெய்வம் கார்த்யாயினி. பேச்சாயி என்று கூறப்படும் தெய்வம் ஸரஸ்வதி. பிடாரி என்று கூறப்படும் தெய்வம் பட்டாரிகை. இவையெல்லாம் மருவி காத்தாயி, பேச்சாயி, பிடாரி அம்மன் என வழங்கப்படுகிறது.

ஆதாரம் : தெய்வத்தின் குரல் 1 ஆம் பகுதி

தகவல் : ஸரோஜா ரங்கராஜன்

"இவ்வளவுதான் என்னால முடியும். நான் ஒண்ணும் சமையல் செய்யும் மிஷின் இல்லெ... ஏதோ ஒரு நாள், ஒரு வேளை அட்ஜஸ்ட் பண்ண முடியாதா? இதென்ன இப்படி ஒரு குணம்? ஆனாலும் உங்களுக்கு நாக்கு நாலு மைல் நீளம்."

"உன்னால ஒழுங்கா சமைக்கக் கூட முடியலைன்னா சொல்லிடு.. வேற ஏற்பாடு பண்ணிக்கறேன். நீ பாட்டுக்கு 'ஹா'யா இரு. காசை விட்டெறிஞ்சா சமையலுக்கு ஆள். அதுக்குப் பதிலா எனக்கு ஒண்ணும் நாய் மாதிரி வரட்டு ரொட்டியைத் திங்கணும்னு தலையெழுத்தில்லை."

ஓஹோ... புதிதாய் வந்த பிரமோஷன். ஏரியா மேனேஜர்... கையில புரளும் அதிகப்படி கரன்சிகள்... ஆட்டம் போடச் சொல்லுகிறது. விட்டுத்தான் பிடிக்கவேண்டும்.

"என்னைக் கேட்டா சமையலுக்கு ஆள் அது இதுன்னு போறதை விட எனக்கு முடியாதப்போ நீங்க ஹெல்ப் பண்ணா போறும். ரெண்டு பேரும் அட்ஜஸ்ட் பண்ணிண்டா சமையல் வேலை ஒண்ணும் பிரம்மசூத்திரமா இருக்காது. தினமுமே எட்டு விதம் கூட செய்யலாம். ஆனா, ஆள் போட்டுத்தான் ஆகணும்னு உங்களுக்குப் பட்டா தாராளமா 'ட்ரை' பண்ணிப் பார்க்கலாம். நோ அப்ஜெக்ஷன்."

"இத்தோட இந்த விஷயத்தை விடு. நான் கவனிச்சுக்கறேன்" தீர்மானத்தோடு எழுந்து சென்றார்.

அடுத்த வாரமே வந்தவர் பாரு மாமி... கணீர்குரல், கெச்சலான உடம்பு..

"ஐநூறு சம்பளமும், தினப்படி பஸ் காசும் தரணும். நான் வேலை செய்யும் போது அனாவசியமா யாரும் குறுக்கே மூக்கை நுழைக்கக் கூடாது. நான் சமையல் பண்ணாத பெரிய மனுஷா வீடே இந்த ஊரிலே கிடையாது" - படுபந்தாவுடன் வந்தார்.

தெரு முனையிலிருந்தே எங்கள் வீட்டிலிருந்து வரும் சாப்பாட்டு மணத்தை மோப்பம் பிடித்தபடி வீட்டுக்குப் பசியுடன் வந்தவர் புருவங்களை உயர்த்தினார்.

"யாராவது விருந்துக்கு வராளா?"

மேஜை மேல் வைக்கப்பட்டிருந்த அளவு சாதத்தையும், குழம்பு, ரசம், கறி வகைகளையும் பார்த்துத் திகைத்தார்.

"எனக்குப் பெரிய்ய கைடம்மா... பத்து பேருக்குக் குறைஞ்சு சமைச்சே பழக்கமில்லை. டம்ளர்லே அரிசி வைச்சு சமைச்சே நான் கண்டதில்லை. கோட்டையடுப்பிலே ஏற்றி இறக்கித்தான் எனக்குப் பழக்கம்."

எங்கள் ப்ளாட் சமையலறையே கோட்டையடுப்பு சைஸ்தான்!

நான்கு நாட்களில் மாதாந்திர சாமான்கள் அனைத்தையும் காலி செய்து விட்டு, "இருபத்தியொரு நாட்கள் வர மாட்டேன். சாம்பு வாத்தியார் ஒரு 'காசியாத்திரை ட்ரூப்' கூட சமைக்க வரச் சொல்லியிருக்கார். அதுக்காக நீ சம்பளத்தை 'கட்' செஞ்சுடாதே.." என்றார்.

அடுத்து வந்தவர் வெங்கடலட்சுமி ஃப்ரம் விஜயவாடா.

"நான் பிட்ரகுண்டா மிராசு வீட்ல பதினேழு வருஷம் சமைச்சேன். 'செட்'டா, ருசியா செய்வேன்" என்றவர் அரை கிலோ காய்க்கு கால் கிலோ மிளகாயைத் தாளித்தார்.

வீட்டோடு அனைவருக்கும் வயிற்றுக் கடுப்பு ஒரு வாரத்திற்கு..

இம்முறை ஒரு பையன்.

"நீ கவலையை விடு. எங்க கேன்டீன்ல இருந்தவன்தான். கோபி.. நைஸ் பாய். மரியாதையான பய..."

என் கணவரின் பிரத்தியேகக் கண்டுபிடிப்பு!

"மம்மி.. இன்னிக்கு என்ன புது மாதிரி மோர்க் குழம்பு?" என்று கேட்டான் என் மகன் அபிஷேக்.

வேறொன்றுமில்லை. மோர்க் குழம்பில் வெண்டைக்காயுடன் ஜோடியாக ஒரு பிடித்

துண்டு!

அடுத்து வந்தவள் ஊரிலிருந்து என் மாமி யார் அனுப்பிய அலமுப்பாட்டி...

"நான் வத்தக்குழம்பு வச்சா எட்டு ஊருக்கு மணக்கும்!"

மணத்தது. நள்ளிரவில் காஸ் கசிந்து வீடு முழுவதும் மணத்தது!

"யாருக்குத் தெரியும் இந்தச் சனியனை எப்படி மூடித் தொறக்கறதுன்னு. நான் மூடித் தான் வச்சேன். அதுவா திறந்துண்டுடுத்தோ என்னவோ? இந்தக் காலத்து சாமான்களே இப்படித்தான். ஒரு சின்ன குமுட்டி அடுப்பு வாங்கி வை..."

டிக்கெட்டோடு ஒரு புடவையும் வாங் கிக் கொடுத்து பாட்டியை ஊருக்கு அனுப்பி விட்டு தெருமுனைப் பிள்ளையாருக்குத் தேங் காய் உடைத்தேன்!

நெக்ஸ்ட்...

பாலக்காட்டு அம்மணியம்மா...

மணக்க மணக்க ஓலனும், அவியலும் அடப்பிரதமனும் செய்தாள்.

ஒரு நாளைக்கு நான்கு முறை குளித்தாள்! (நம்ம ஊர் தண்ணீர் கஷ்டத்தில்!)

"புழைக்குளியல் சுகம் இந்த ஊரிலே கோடி கொடுத்தாலும் கிடைக்காதே..." என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

அன்று நள்ளிரவு...

டைனிங் ரூம் பக்கம் தண்ணீர் குடிக்கப் போன போது ஏதோ லைட் எரியும் வெளிச் சம். ரூமில் அசாத்திய ஜில்லிப்பு. ஃப்ரிஜ் கதவு அகலமாகத் திறந்திருக்க... அதன் முன்னே முண்டும் ரவிக்கையுமாய் 'மொசைக்' தரை யில் காலைப் பரத்திக் கொண்டு மெலியதாகக் குறட்டை விடும் அம்மணியம்மா...

"என்ன உஷ்ணம். நீங்க ஏ.சி. ரூம்ல 'ஹா'யாகத் தூங்கறீங்க... இங்கே என் கஷ்டம் எப்படிப் புரியும். எனக்கு இந்த வெக்கை பழக்கமில்லையாக்கும்... எங்க ஊர்லே இப்படி சூடு தெரியாதம்மை..."

ஊரைப் பார்க்க அனுப்பி வைத்தேன்.

இம்முறை ராமைய்யா...

"பிள்ளைக்கு லெட்டர் போஸ்ட் பண் ணிட்டு வரேன்" என்று மத்தியானம் சென்ற வர் மாலை வரை வீடு திரும்பவில்லை. அவ ருடன் மறைந்தது என் கணவரின் 'ரேமண்ட்ஸ்' பேன்ட்டும் டைட்டன் வாட்சும்...

இத்தோடு எரிந்த மிக்ஸி, 'முணுக்முணுக்' கென்று சண்டித்தனம் செய்யும் 'ஃப்ரிஜ்', உடைந்த கண்ணாடி, பீங்கான் வகையறாக் களின் பில் ஆயிரத்தைச் கலபமாகத் தாண் டிய போதுதான் என் அன்புக் கணவரின் மூளைக்குள் ஞானம் லேசாக வந்தது.

இதற்கிடையே குழந்தைகள்...

"அம்மா... சப்பாத்தியும், சப்ஜியும் பண் ணேன். அந்தப் பாட்டியோட புளிக் குழம்பு சகிக்கலே..."

"கட்லெட் பண்ணச் சொல்லும்மா... வடை எனக்குப் பிடிக்காது."

"கேக் பண்ணு மம்மீ... அந்த மாமி தினமும் 'போர்' டிபனாப் பண்ணறா. எனக்கு வேண்டாம்." என்று நச்சரிக்க...


"என்ன இருந்தாலும் நம்ம வீட்டுக் காரி யங்களை நாமளே பண்ணுற மாதிரி வராது. என்ன சொல்லு... நீ சாதாரண சாண்ட்விச் தந்தாலும், மிளகு ரசம் வச்சாலும் இருந்த 'ஸ்பெஷல் டச்' சமையல்காரங்க பத்து ஐட்டம் பண்ணினாலும் 'மிஸ்ஸிங்'தான்." இவர் மெதுவாக ஐஸ் வைக்க ஆரம்பித்தார்.

இப்போதெல்லாம்...

"அட, ரசம் மிஞ்சிடுத்தா? உடனே எடுத்து ப்ரிஜ்ஜில் வை. காலைல ஹீட் பண்ணிப்போம். சும்மா இழுத்து விட்டுண்டு அவியல், அது இதுன்னு செய்யாதே. உனக்கு உடம்புக்கு ஏதாவது வந்துட்டா கஷ்டம். நேத்தே இருமிண்டு இருந்தே.. எதுக்கு இந்த உடம்போட வெண்பொங்கல், மெதுவடைன்னு காலங்கார்த்தால சிரமப்படுத்திக்கறே? பேசாம ரொட்டியும், ஜாமும் வச்சு அட்ஜஸ்ட் பண் ணிண்டா குறைஞ்சா போயிடுவோம்? இரு. நான் டேபிள்ள தட்டு வைக்கறேன்!"

நாம் நவராத்திரி கொலு வைத்துப் பின் பொம்மைகளை உள்ளே எடுத்து வைக்கும்போது அதை காட்டன் துணி, அல்லது நியூஸ் பேப்பரில் சுற்றி வைக்க வேண்டும். பொம்மைகளை பாலிதீன் கவர் அல்லது பாலியெஸ்டர் (கிழிந்த) புடவைகளில் சுற்றி வைக்கக் கூடாது. அதன் காரணமாக காற்றோட்டமில்லாமல் புழுக்கத்தால் பொம் மைகளின் கலர் போய்விடும் வாய்ப்பு உண்டு.

- ஜானகி ரங்கனாதன்





பாதுகாப்பான வழியில் எந்த நிறுவனம் தன் நிதிகளை முதலீடு

உங்கள் பணத்தை ஒரு நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்யும் போது நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அதன் மூலம் ஒரு நிலையான வருமானத்தைப் பெற வேண்டும். பொருளாதார மாற்றங்கள் அந்த வருமானத்தைப் பாதிக்கக் கூடாது... என்பதுதானே! அந்த வகையில், நீங்கள் டெபாசிட் செய்ய மிகவும் ஏற்ற நிறுவனம் ஸ்ரீராம்தான். காரணம்—


ஸ்ரீராம் லாரிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. லாரிப் போக்குவரத்து ரொக்க அடிப்படையில் நடைபெறும் தொழில். உரிமையாளருக்கு நிமிடந்தோறும் லாரிகள் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதால், லாரி உரிமையாளரால் தவணைத் தொகையை சிரமமின்றி ஒழுங்காகச் செலுத்திவிட முடிகிறது. அப்படி அவரால் செலுத்த முடியவில்லையென்றால், அந்த லாரியைக் கையகப்படுத்தி விற்பனை செய்து கடனை எளிதில் வசூலித்து விட முடியும்.

லீசிங் எனப்படும் குத்தகை ஒப்பந்த முறையில் கருவிகளுக்குக் கடனுதவி அளிப்பதில் இதே அளவு பாதுகாப்பு இருக்கிறதா?

குத்தகை ஒப்பந்த முறையில் ஒருசில தொழில்கள், பொருள்கள், இடங்கள் ஆகியவற்றிற்கு மட்டுமே கடனுதவி அளிக்க முடியும். இவ்வாறு செய்யும்போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கடன் பெறுவோர் திருப்பித் தர தவறும்போது, அவருடைய சொத்துக்களை கையகப்படுத்தி உடனடியாக விற்பனை செய்வது எளிதல்ல. எனவே, எளிதில் விற்று பணம்பெறக்கூடிய லாரிகளுக்குக் கடனுதவி அளிப்பது மிகவும் பாதுகாப்பைப் பெறுவதாகும்.

பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள். அதைவிட,

சமையலறை மர்மங்கள்



சாப்பிடும் சமயங்களிலோ, தின்பண்டங்கள் கொறிக்கையிலோ, பால், ஹார்லிக்ஸ் போன்ற பானங்கள் அருந்துகையிலோ குழந்தைகள் அவற்றைக் கை தவறி சிந்துவதும் சிதறுவதும் சகஜம்தான். வீட்டுக்கு வீடு தப்பாமல் நடப்பதுதான். சரி போகிறது... பிள்ளை ஏதோ அறியாமல் சிந்தி விட்டான் என்று பேசாமல் இருக்க மாட்டோம் நம்மில் சில தாய்மார்கள்.


'ஐயோ! இருக்கும் விலைவாசியில் இப்படியா பண்டத்தை வீணடிப்பாய்? கொஞ்சமும் அறிவில்லாமல் இப்படியா கீழே சிதறி சீரழிப்பாய்!' என வரிந்து கட்டிக் கொண்டு அந்த அறியாக் குழந்தைகளின் மீது பாய்வோம். ஆத்திரம் மீறி முதுகில் ரெண்டு மொத்து வைப்பவர்களும் உண்டு.

பிச்சாத்து கடுகு போகும் சமாச்சாரத்தைப் பெரிதாக்கிப் பார்க்கும் நாம் படாபடா பூசணிக்காய் போகும் சமாச்சாரத்தை அலட்சியமாய் விட்டு விடுவதுதான் இதில் துரதிருஷ்டம்! ஆம்! கை தவறுதலாய் பிள்ளைகள் வீணாக்கும் ஐந்து பைசா விஷயத்துக்கு அங்கலாய்த்துத் தள்ளுபவர்கள் நம்மை அறியாமல் நாம் வீணாக்கும் பொருட்களின் மதிப்பை ஒருபோதும் எண்ணிப் பார்ப்பதில்லை.

முக்கியமாக சமையலறையை எடுத்துக் கொள்வோம். இந்தச் சமையலறையில் மட்டுமே வீடுகள்தோறும் வீணடிக்கப்படும் பொருட்கள் ஏராளம்... ஏராளம்! இதற்கென ஒரு நீண்ட பட்டியலே போடலாம்.



மாதம் பிறந்தாகின்றதா? பருப்பு வகைகள், பயறு வகைகள், மாவு தினுசுகள், பொங்கலரிசி... பிரியாணி அரிசி வகையறாக்கள் என்று அத்தனையையும் வாங்கி வந்து டின்களிலும், பாட்டில்களிலும் கொட்டி வைப்பதோடு சரி... பொறுப்பு தீர்ந்தது என்று இருந்து விடுகிறோம் நம்மில் பலர். அவற்றில் வண்டு விழாமல் இருக்கிறதா... புழு வைக்காமலிருக்கிறதா... என்றெல்லாம் அவ்வப்போது சோதித்துப் பார்ப்பதேயில்லை. அப்படியே கண்டுபிடித்தாலும் உடனடியாய் வெயிலில் உலர்த்தி எடுப்பதோ.. சலித்துச் சுத்தம் செய்வதோ கிடையாது. சமையல் முடிந்ததும் பிறகு சாவகாசமாக பார்த்துக் கொள்ளலாம் என்ற நினைப்புடன் அப்போதைக்குக் காரியத்தை ஒத்திப் போட்டு விடுவோம். அந்த 'பிறகு' என்பது நாளையாகி... 'நாளை' என்பது இன்னொரு நாளாகி... கடைசியில் அதனை சுத்தப்படுத்த முனைகையில் காலம் ஒரேயடியாய் கடந்து போயிருக்கும். அங்கொன்று இங்கொன்று என்றிருந்தது போய் பெரும் வண்டுப் படையே டின்னினுள் குடியேறியிருக்கும். பண்டமோ தொடுவதற்கும் லாயக்கற்று நாசமாகி



யிருக்கும். இனி என்ன செய் வது? கமுக்கமாய் எடுத்துப் போய் வெளியே கடாசி விட வேண்டியதுதான். வேறு வழி?

'அட... வேண்டுமென்றா செய்தோம்? ஏதோ இந்த முறை சற்று கவனப் பிசகு...' என்று குறுகுறுக்கும் மனதை சீக்கிரமே சமாதானப்படுத்திக் கொள்வோம். அதற்காக அடுத்த முறையேனும் கவனமாய் இருப்போமா என்றால் அதுவுமில்லை. இந்த மாதம் கெட்டுப் போனது ரவையும் மைதாவும் என்றால் அடுத்த மாதம் கெடப் போவது பச்சரிசியும் பயத்தம் பருப்புமாயிருக்கும். அவ் வளவுதானே தவிர புதிதாய் ஏதும் சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை. (அனுபவத்தில் முதிர்ந்த பாட்டியாரோ... வயது வந்த மாமியாரோ இருக்கும் வீடுகளில் இந்த வகையான வீணடிப்புகள் மிகவும் குறைவு. ஏனெனில் சும்மா இருக்கும் வேளைகளில் சமையலறையை உருட்டிப் புரட்டி சீர்படுத்துவதும், சாமான்களை புடைத்துச் சலித்து சுத்தம் செய்வதுமே இவர்களின் தலையாய பணியாயிருக்கும். இதற்காகவேனும் மாமியார் கூடவே இருந்துவிடலாமோ என்று ஆதங்கப்படும் மருமகள்கள் உண்டு.)

இன்னும் சில மறதிப் பேர்வழிகள் இருக்கிறார்கள். பள்ளி விட்டு வரப் போகும் பிள்ளைகளுக்காக விலையுயர்ந்த தின்பண்டங்கள் எதையேனும் அக்கறையாய் வாங்குவார்கள். வந்ததும் வராததுமாய் அவை பிள்ளைகளின் கண்ணில் பட்டுவிட்டால் செய்து வைத்திருக்கும் டிபன் மிஞ்சி விடுமே! எனவே டிபனுக்குப் பின்னர் எடுத்துக் கொடுக்கலாம் என்ற நல்லெண்ணத்தில் கண்ணுக்கெட்டாத ஓர் இடத்தில் காபந்து பண்ணி வைப்பார்கள். அத்துடன் விஷயம் சுத்தமாய் மறந்து போகும். என்றாவது நினைவு வந்து எடுத்துப் பார்க்கையில் பண்டமாகப்பட்டது எறும்பு அரித்து அஸ்தமித்துப் போயிருக்கும் அல்லது பூஞ்சைகளின் ஆக்ரமிப்பில் அழுகிக் கிடக்கும்.

'அடடே... அத்தனையும் வம்பாய்ப் போயிற்றே' என மனத்திற்குள் நொந்து கொள்வதுடன் குப்பைக் கூடையினுள் புதைப்பார்கள் வெகு ரகசியமாய்! கணவருக்கோ... பிள்ளைகளுக்கோ தெரிந்தால்தான் வார்த்தையாலேயே காய்ச்சி விட மாட்டார்களா?

அடுத்து இந்த வரிசையில பிரிட்ஜ் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும். 'பிரிட்ஜ்' எனப்படும் குளிர்சாதன வஸ்து நம்மிடையே வந்தாலும் வந்தது. தோசை மாவு, பூ, காய், மோர், மட்டன், பட்டர், ப்ரெட் முதற்கொண்டு மிஞ்சிப் போன குழம்பு... பொரியல்.. பச்சடி... கிச்சடி என சகலவித சாப்பாட்டு அயிட்டங்களையும் உச்சவரம்பின்றி அதனுள் அடைத்துத் தள்ளி விடுகிறோம்.

அடைப்பதில் தவறில்லைதான். ஆனால் எத்தனை நாட்களுக்குக் கெடாமல் தாக்குப்பிடிக்கும் என்பதறிந்து அவ்வப்போது அவற்றை எடுத்து உபயோகித்துவிட வேண்டாமா? ஊஹூம்... அந்த நினைப்பே பலருக்கு இருப்பதில்லை. மிச்சம் மீத பதார்த்தங்களை பிரிட்ஜினுள் தள்ளுவதுடன் ஜோலி முடிந்ததென சுத்தமாய் மறந்தே போவோம். ஆக-

ஒரு வாரம் முந்தைய அடைமாவு.. ஐந்து



நாள் முந்தைய புளிக்குழம்பு... நாலு நாளுக்கு முந்தைய தயிர்... இரண்டு தினம் முந்தைய சாம்பார் என்று அத்தனையும் நம் வீட்டு குளுகுளுப் பெட்டிகளினுள் அணிவகுத்துக் கிடக்கும். என்னதான் குளிர்ப்பதனம் செய்யப்பட்டாலும் எதற்கும் ஒரு கால வரையறை உண்டல்லவா? என்றேனும் ஜுருராய் பிரிட்ஜைச் சுத்தம் செய்யக் கிளம்புகையில், மணம் மாறி... நிறம் மாறி— உருமாறிப் போன நிலையில் ஒவ்வொன்றாய் வெளிவரும்.

'அச்சோ மீந்து போன உருளைக் கிழங்கு பொடிமாஸை உள்ளே வைத்ததை மறந்தே போனேனே, வீணாய்க் கெட்டு விட்டதே! வெங்காய சாம்பாரை வைத்தது இத்தனை



நாள் நினைவிலேயே இல்லாமல் போயிற்றே' என்றெல்லாம் நோகாமல் தலையிலடித்துக் கொள்வோம். வருந்தி ஆகப் போவதென்ன? பாழான பண்டம் திரும்பவும் வந்து விடவா போகிறது? மூச்சுக் காட்டாமல் புழக்கடையில் ஊற்றி விட்டு கழுவிக் கவிழ்த்த வேண்டியது தான். இது தவிர பிரிஜ்ஜினுள் வைப்பதற்கே விடுபட்டு விரயமாகும் பொருட்களின் விவகாரம் வேறு தனிப்பட்ட விஷயம்!

'எரிபொருளைச் சேமியுங்கள்...' 'எரிபொருள் சிக்கனமே நாட்டுக்குத் தேவை' என்பதெல்லாம் நமது வானொலியும் தொலைக் காட்சிப் பெட்டியும் அன்றாடம் அலறிக் கொண்டிருக்கும் ஒரு சமாச்சாரம். நம் பெண்மணிகளையும் சும்மா சொல்லக் கூடாது. பிரஷர் குக்கரை உபயோகிப்பதிலாகட்டும்... சமையலை நறுக்காய் முடிப்பதிலாகட்டும்... கில்லாடிகள்தான்! இருந்து என்ன பிரயோஜனம்?

தண்ணீரைக் கொதிக்க வைக்கிறேன் என்றோ... பாலைச் சுட வைக்கிறேன் பேர்வழி என்றோ கேஸை பற்ற வைப்பவர்கள், தம்மை மறந்து இருந்து விடுகிறோமே! அக்கம் பக்கத்து அரட்டையிலும்... கேபிள்... சன் என்று ஆழ்ந்து போவதிலும் எந்த ஒன்றுமே சிந்தனையில் தங்குவதில்லை. மணிக்கணக்கானாலும் அடுப்பு பற்றிய பிரக்ஞையே வருவதில்லை. யதேச்சையாய் திரும்பி வந்து பார்க்கையில் பானைத் தண்ணீரும் பாதியாய் வற்றிக் கிடக்கும். வைத்தது பாலாக இருப்பின், வற்றித் தீய்ந்து... பாத்திரமே கரிப் பிடித்துப் போயிருக்கும். ஆன பிறகு கவலைப்பட்டு ஆவதென்ன? கேஸ் வீணானது வீணானதுதான். பண்டமும் பாத்திரமும் பாழானது பாழானது தான்.

(கேள்விப்பட்ட வரையிலும் இதுபோல் அடுப்பை அணைக்க மறந்து பாத்திரம் கரியாகிய கதை வீட்டுக்கு ஒன்றாவது நிச்சயம் இருக்கத்தான் செய்கிறது. ஏன்... உங்கள் வீட்டிலும் உண்டுதானே?)

இன்னும் இது போல -

இரவில் மீதமாகும் சாதத்திற்குத் தண்ணீர் விட மறந்து சாதத்தை வீணடிப்பது - பாலிற்கு உறைகுத்த மறந்து பாலை வீணடிப்பது - மீதமாகிக் கிடக்கும் தோசை, சப்பாத்திகளை பிறகு சாப்பிடலாம்... நாளை சாப்பிடலாம் என்று ஒத்தி வைத்து... காக்கை கூட கொத்துவதற்கு அஞ்சும் கதிக்கு வந்தவுடன் வெளியே எறிவது என்று அடுக்கிக் கொண்டே போகலாம் நம்மவர்களின் அரும்பெரும் பிரதாபங்களை!

இப்படியும் அப்படியுமாக ஒரு வீட்டின் அடுக்களைக்குள் வீணாகும் பண்டங்களின் மதிப்பைத் துல்லியமாய் கணக்கிட்டுப் பார்த்தால் நமக்கே மூச்சை அடைக்கும். நாமா இத்தனை பணத்தை நாசப்படுத்துகிறோம் என்று அதிர்ச்சியாயிருக்கும். ஆனால் உண்மையென்னவோ அதுதான்!

இதனைக் கட்டுப்படுத்துவது எப்படி?

வழியில்லாமலில்லை. சற்றே அதிகமான பொறுப்புணர்வும், ஞாபகசக்தியும் மட்டும் பெண்களாகிய நமக்கு இருந்து விட்டால் போதும்.

முடிந்தவரையிலும் பலசரக்கு சாமான்களை வெளியே தெரியும்படியான பிளாஸ்டிக் ஜாரிலோ - கண்ணாடி ஜாரிலோ கொட்டி வைப்பது நல்லது. இதனால் பூச்சி புழுக்கள் அரியாமலிருக்கிறதா என கண்காணிக்க இயல்வதுடன் எந்தெந்த அயிட்டம் எந்தெந்த

அளவில் நம்மிடம் இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ள முடியும். மாதாந்திரக் கணக்கில் வாங்கும் பொருட்களையும், வற்றல் வடாம் போன்றவற்றையும் இடையில் ஒரு முறையேனும் நல்ல வெயிலில் உலர்த்தி எடுப்பது நலம். அதிலும் மழைக் காலங்களில் குளிர்காலங்களிலும் இவற்றில் ஈரப்பதம் ஏறி எளிதில் புழுக்கூடு வைத்து விடும். உலர்த்த லாமெனில் வெயிலையும் பார்க்க முடியாது. இதுபோன்ற தருணங்களில் எதையும் தேவைக் கதிகமாய் வாங்கிப் போடுவதையே தவிர்த்து விடலாம்.

காய்களையோ பதார்த்தங்களையோ பிரிஜ்ஜினுள் வைக்கும் பொழுதே, இன்னின்ன பொருள் மீதம் இருக்கிறது - இந்தந்த நேரத்தில் எடுத்து உபயோகித்து விட வேண்டும் என்பதைத் தெளிவாய் திட்டமிட்டுக் கொள்ளுதல் அவசியம். மேலும் மேலும் எதையாவது அடைத்துக் கொண்டே போகாமல், ஏற்கெனவே உள்ளவற்றை அவ்வப்போது அகற்றினால்தான் நமது பிரிஜ் பழம்பொருள் மியூசியமாகிப் போகாமல் பாதுகாக்க முடியும். பொருட்கள் அநாவசியமாக விரயமாவதையும் தடுக்க முடியும். மற்றும் எந்த ஒரு பதார்த்தம் மீதமானாலும் சரி... இனி நாம் அதனை உண்ணுவது சந்தேகம் என்று தோன்றி விட்டால், நல்ல நிலையில் இருக்கையிலேயே யாரேனும் ஏழை எளியவர்க்குக் கொடுத்து விடுவதே நலம். அதோ... இதோ என்று நான் கடத்தித் தூர வீசுவதற்கு இங்ஙனம் தானம் செய்தால் போகும் வழிக்குப் புண்ணியமாவது கிடைக்கும்!

கேஸ் அடுப்பைப் பொறுத்தவரையிலும் விறகடுப்பு.. கரியடுப்பு போல் தானே ஆந்து அணைவதற்கு சான்ஸ் இல்லையாதலால் நம் பாட்டில் போட்டு விட்டுப் போய் விட முடியாது. பற்றவைத்து விட்டால் அவ்வளவு தான் - அணைக்கும் வரையிலும் விருந்துக்கு வந்த மருமகனைக் கவனிப்பது போல் முழு கவனத்தையும் அதன் மீது வைத்தாக வேண்டும். இடையே வேறு என்னதான் வேலை வந்தாலும் சமையலறையின் பக்கமாகவும் ஒரு கண் பதிக்கத் தவறி விடக் கூடாது. தவறி விடுவோமோ என்று தோன்றும் பட்சம் பேசாமல் அணைத்து விட்டுச் செல்வதே உத்தமம்.

சமையல்கட்டு என்பது பெண்களாகிய நமது சாம்ராஜ்யம். (சமையல்கட்டு மட்டும் தானா நமது என்று கேட்காதீர்கள். குடும்பத்தினர் எவரின் தலையீடும் இல்லாமல் முழுக்க முழுக்க நமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள இடம் இதுதானே?) நாம் மனது வைத்தால்... நம் நிர்வாகத் திறனை சரியான முறையில் பயன்படுத்தினால் இயலாதது என்று எதுவுமே இல்லை. எனவே கொஞ்சமே கொஞ்சம் கூடுதல் பொறுப்புணர்ச்சியுடன் இருந்து பாருங்கள். மூன்றே மாதங்களில் வழக்கத்தை விடவும் அதிகமான ஒரு தொகை லட்டு போல் உங்கள் கையில் சேமிப்பாக மாறியிருப்பது திண்ணம்!

- சூரியா சிதானந்த்

எதற்கெடுத்தாலும் அருகம்புல் ஜூஸ் சாப்பிடுவது நல்லது என்கிறார்கள். தினமும் அருகம்புல்லை எடுத்து அரைத்து ஜூஸ் செய்வது கஷ்டம் என்று நினைக்கிறார்கள். ஜூஸ்தான் செய்ய வேண்டும் என்பது அவசிய மில்லை. அருகம்புல்லைப் பொடி யாக நறுக்கி தினமும் நாம் செய்யும் குழம்பு, ரசம், கூட்டு இவற்றில் கொத்து மல்லி, கறிவேப்பிலை மாதிரி தூவி (போட்டு) பயன்படுத்திவிடலாம்.

தகவல் : ஜானகி ரங்கநாதன்



T.S.S. NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras 600 004. ☎ 4942303 / 4943365

BRANCHES: THIRUVANMIYUR	:	112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras 41. ☎ 410058
TONDIARPET	:	667, T.H. Road, Madras 81.
SAIDAPET	:	11, Jones Road, Madras 15. ☎ 4851468

FIXED DEPOSIT SCHEME

Period (Months)	12	24	36	60
Rate of Int. P.A.	17%	18%	19%	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs.1,000/-

Period (Months)	12	24	36	45	67
Maturity Value	1190	1425	1760	2025	3025

SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit Rs.10,000/- Period - 12 months

Interest payable monthly **19.5%** p.a. Interest payable annually **21%**

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

Period (Months)	Maturity Value
120	Rs.66,000
180	Rs.1,82,000

RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT Rs. 100/-

Period in Months	12	24	36	48	60	72
Maturity Value	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd. Office Mylapore	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Friday
Branch Offices	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Tuesday

HIGHLIGHTS

- ★ Recognised as a NIDHI COMPANY by Central Government of India.
- ★ Company is in 21st year of service.
- ★ Transaction with members only (Rupees two only for membership)
- ★ Premature repayment facility as per terms and conditions.
- ★ Monthly Interest Warrants would be despatched in advance for the year of Deposits.

LOANS

★ A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gms. (Rs.2400/- per 8 gms.)

- ★ No Ceiling
- ★ No Charges
- ★ No Interest Tax
- ★ Recurring Deposit not required
- ★ Your Jewels are insured at our cost.

B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

P.S. SAMBASIVAM
Secretary

G. KUMARAVELU
Vice-President

K.R.V. RAMANI
President



சினிமாவில்

கொலு பொம்மைகள்

தமிழ்த் திரைப்படங்களில் அவ்வப்போது நவராத்திரி கொலு தொடர்பான காட்சிகள் இடம் பெறுவதுண்டு. "நவராத்திரி" படத்தில் "நவராத்திரி சுபராத்திரி" என்ற பாடல் காட்சியில் சாவித்திரி பாடி ஆடும்போது பாடலின் ஒவ்வொரு வரிக்கும் பொருத்தமாக பொம்மைகள் காட்டப்படுவதை மக்கள் ரசிப்பதுண்டு. அதேபோல் "இரு கோடுகள்" படத்தில் "புன்னகை மன்னன் பூவிழிக் கண்ணன்" பாடலில் கொலுவைப் பின்னணியாகக் கொண்டு சௌகார் ஜானகி-ஜெயந்தி வாதம் செய்ததை (என்னதான் தன் கணவன் தனக்கு மட்டுமே சொந்தம் என்பதை வலியுறுத்தும்போது ஒருத்தி ராமனை உதாரணமாகக் காட்டாமல் கண்ணனையும், முருகனையுமா சுட்டிக்காட்டுவாள் என்ற லாஜிக் உதைத்தாலும்) ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

"நானும் ஒரு பெண்" படம். "கண்ணா கருமை நிறக் கண்ணா" என்ற பாடல். தீர்க்கமான கண்ணனின் பொம்மை ஒன்று அந்தப் பாடல் முழுவதும் இடம்பெற்றிருக்கும். அந்தப் பொம்மையை ரசித்ததைவிட, கறுப்புத் தோலுடன் பிறந்துவிட்ட 'குற்றத்திற்காக' பலரால் ஏளனப்படுத்தப்படும் கதாநாயகி "கண்ணா, நீ என்னதான் கருநிறத்துடன் இருந்தாலும் உன்னை எல்லோரும் நேசிக்கிறார்கள். எனக்குதான் இந்த கதி" என்று ஒப்பிட்டுப் பாடும் புத்திசாலித்தனம் அதிகம் ஈர்த்தது. ஒருவிதத்தில் பாடலைக் கேட்கும் அவளது மாமனார் மனம் மாறிவிடுவதாகக் காட்டப்படுவதால் அந்த பொம்மை படத்தின் திருப்புமுனைகளில் ஒன்றிற்குக் காரணமாகிறது என்று கூடச் சொல்லலாம். இதுபோல் பல சமயங்களில் கடவுள் பொம்மைகள் பாடல் காட்சிகளில் முக்கிய இடம் பெறுவதுண்டு. நாயகனோ, நாயகியோ தங்களது மனக்குமுறல்களைக் கொட்டுவதற்கு அந்தப் பொம்மைகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள். மீரா, பாட்டும் பரதமும் (ஆதிசக்தி), 'நீல்வானம்' சிவக்கும் (கண்கண்ட தெய்வமே) ஆகியவை அவற்றில் சில.

தாஜ்மகால் பொம்மை இடம்பெற்ற ஒரு காட்சியும் பெரிதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. "பணம் படைத்தவன்" படத்தில் "பவளக் கொடியில் முத்துக்கள் பூத்தால் புன்னகை என்றே பேராகும்" என்ற பாடல் காட்சியை தாஜ்மகாலில் படம் பிடிக்க நினைத்தார்களாம். ஆனால் அப்போது தாஜ்மகாலில் படப்பிடிப்பு நடத்துவது தடை செய்யப்பட்டுவிட்டது. எனவே தாஜ்மகாலைப் போலவே ஒரு சிறிய மினியேச்சர் பொம்மை செய்து ஷாஜஹான் - மும்தாஜ் (அதாவது எம்.ஜி. ஆர். - கே. ஆர். விஜயா) இடம்பெற்ற காட்சிகளைத் தனியாக எடுத்து அவற்றை மினியேச்சர் பொம்மையுடன் இணைத்திருந்தார்கள். இந்தப் பின்னணியை அறிந்தபோது அந்தப் பாடல் காட்சியில் தொழில்நுட்பக் கலைஞர்கள் காட்டியிருந்த அற்புதமான சிரத்தையைப் பாராட்ட வைத்தது.

கதாபாத்திரங்களின் குணங்களைக் காட்ட பொம்மைகள் பெரிதும் உதவியிருக்கின்றன. "பூவா தலையா" படத்தின் முதல் காட்சியில் ஒரு சாவிக் கொத்தும், தஞ்சாவூர் தலையாட்டி பொம்மையும் மாறி மாறிக் காட்டப்படும். அப்போது முறையே ஆட்டி வைக்கும் மாமியாரான எஸ். வரலட்சுமியின் குரலும், அவருக்கு மறுத்துப் பேசாமல் அடங்கிப் போகும் மாப்பிள்ளையாக வரும் ஜெமினி கணேசனின் குரலும் பின்னணியில் ஒலிக்கும். பல விமர்சகர்களை 'சபாஷ்'



சொல்ல வைத்த காட்சி இது. வேறொரு படத்தில் தன் அம்மாவின் சொல்படி தன்னை உதாசீனம் செய்யும் மனைவியைப் பார்த்து முத்துராமன் "பெண்ணல்ல நீ ஒரு பொம்மை" என்று பாடுவார். முதலில் பொம்மலாட்டம் போலக் காட்டி விட்டு பிறகு அந்தப் பொம்மையின் இடத்தில் ஸ்ரீப்ரியாவைக் காட்டுவார்கள்.

வயதாகியும் மனமுதிர்ச்சி பெறாத பாத்திரங்களைத் திரையில் காட்ட அவர்கள் பொம்மையை நிஜக் குழந்தையாக எண்ணிக் கொஞ்சும் யுக்தி திரையில் அவ்வப்போது இடம் பெறும் ஒன்றுதான். வெகுளிப் பெண், சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு ஆகியவை சில எடுத்துக்காட்டுகள்.

"அந்த ஏழு நாட்கள்" படத்தில் அம்பிகா பாக்யராஜை விரும்புவார். பாக்யராஜோ வருமானமில்லாத நிலையில் அவர் மீது தான் கொண்ட காதலை மறைத்துக் கொள்ள முயலுவார். இதை விளக்க ஒரு காட்சியில் பொம்மைகள் பயன்படுத்தப்பட்டன. வீட்டில் வைத்துள்ள நவராத்திரி கொலுவில் ஆர்மோனியம் வாசிக்கும் பொம்மை ஒன்று இருக்கும். அதன் பக்கத்தில் நடனப் பெண்மணியின் பொம்மையை நகர்த்தி வைத்துவிட்டு "ஜோடிப் பொருத்தம் நல்லா இருக்கு இல்லே" என்று கேட்பார் அம்பிகா. பாக்யராஜோ அந்தப் பெண்ணின் பொம்மையை நகர்த்தி வைத்து விட்டு ஜால்ரா போடும் ஒரு சிறுவனின் பொம்மையை அந்த இடத்தில் வைத்துவிட்டுப் போவார்.

"திருமதி ஒரு வெகுமதி" படத்தில் வரவுக்குள் வாழ விரும்புவார் எஸ். வி. சேகர். அவர் மனைவியோ பேராசை பிடித்தவர். லஞ்சம் வாங்க சேகர் மறுத்துவிட, ஒரு காரியவாதி சேகரின் மனைவிக்கு ஒரு பட்டுப்புடவையை அன்பளிப்பாக அளித்துக் காரியத்தை முடித்துக் கொள்வார். இந்த நிலையின் சோகத்தை விளக்கக் கொலுவில் பாடப்படும் "பார்த்துச் சிரிக்குது பொம்மை" என்ற பாடல் வரிகள் கட்டிக் காட்டும் வகையில் அமைந்துள்ளன.

புராணங்களில் பொம்மைகளுக்குத் தனியிடம் உண்டு. பாரதப் போர் முடிந்ததும் திருதராஷ்டிரன் பாசத்துடன் பீமனைத் தன்னருகே அழைத்தாராம். கண்ணன் பீமனைத் தடுத்து அவன் போன்ற பொம்மையை அவரருகே நிறுத்தினார். முதலில் பாசத்துடன் அதைக் கட்டிக் கொண்ட அவர், "என்ன இருந்தாலும் என் மகன் துரியோ தனனைக் கொன்றவனல்லவா இவன்" என்ற எண்ணம் வந்ததும் ஆத்திரப்பட, அந்தக் கோப வெளிப்பாட்டில் பொம்மையே உடைந்து சுக்கலாகி விட்டதாம்.

விக்கிரமாதித்தன் கதையில் அவன் அமர்ந்த சிம்மாசனத்தில் ஏற போஜராஜன் முயற்சிக்கும்போது அதன் படிகளில் உள்ள ஒவ்வொரு படியிலும் உள்ள பொம்மைகள் உயிர் பெற்று விக்கிரமாதித்தனின் பிரதாபங்களை விவரிக்கும். இந்தச் சுவையான சம்பவங்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட படங்களில் இடம்பெற்றன.

"அவர்கள்" படத்தில் இடம் பெற்ற ஜூனியர் என்ற பெயர் கொண்ட பொம்மை பலரைக் கவர்ந்தது. "இருமனம் கொண்ட திருமண வாழ்வில்" என்ற பாடலில் கமலஹாசன் பாட நடுநடுவே தன் அதிகப்பிரசங்கித்தனமான பதில்களை அந்தப் பொம்மை அள்ளி வீசியது. உண்மையில் பொம்மை பேசவில்லை. இதை இயக்கும் மனிதன்தான் அதைப் 'பேச' வைக்கிறான் என்பது தெரிந்திருந்தும், வென்ட்ரிலோகிஸம் என்ற இந்தக் கலை இன்னமும் பார்ப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது.

நிஜ வாழ்வில் பொம்மைகள் ரசிகர்களைத் திடுக்கிட வைத்து நாற்காலி நுனிக்குக் கொண்டு வர வைத்துள்ளன. "என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு" படத்தில் கப்பலில் அனைவரும் போய்க் கொண்டிருக்கும்போது, குழந்தை ஒன்று கடலில் விழுந்துவிடும். அது இறந்துவிட்டதைக் காண்பிக்க அவள் எப்போதும் வைத்துக் கொண்டிருக்கும் பொம்மை கடலின் மேற்பரப்பில் தனியாக மிதப்பதைக் காட்டினார் இயக்குனர். "யார்?" படத்தில் சூனியக்கார பொம்மை ஒன்று தானே நடந்து சென்று அழிவு வேலைகளைச் செய்து திடுக்கிட வைத்தது. சமீபத்திய ஒரு படத்தில் வைஷ்ணவியைக் கொலை செய்ய பாடிக் கொண்டே ஒரு பொம்மை தொடர்ந்தது நினைவிருக்கலாம்!

இவ்வளவையும் சொல்லிவிட்டு ஒரு பொம்மையை மையமாகக் கொண்ட 'பொம்மை' படத்தைக் குறிப்பிடாவிட்டால் எப்படி? வீணை பாலசந்தர் இயக்கிய படம் அது. அழகான ஒரு சிறுமியின் பொம்மை. ஆனால் அதன் வயிற்றில் செருகப்பட்டிருக்கும் சீட்டை யாராவது எடுத்தால் அதிலுள்ள டைனமைட் வெடித்துவிடும் வகையில் வில்லன்களின் ஏற்பாடு. அந்தப் பொம்மையைப் படத்தில் வரும் ஒரு சிறுமி, பிச்சைக்காரர், நடனமணி, ஆகியோர் மாறிமாறிக் கையாளும் போது பொம்மை வெடித்துவிடப் போகிறதே என்ற திக் திக் உணர்வு ரசிகர்களுக்கு ஏற்பட்டது.

ஒன்று புரிகிறது. பொம்மைகளைப் போல நடிப்பாற்றல் இல்லாமல் வந்து போகும் சில நடிக நடிகைகளைவிட, பல படங்களில் பொம்மைகள் உயிர்த்துடிப்புடன் கையாளப்பட்டிருக்கின்றன.

- ஜி.எஸ்.எஸ்.

படங்கள் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்


AVT
SUNBEAM
SUPER-REFINED SUNFLOWER OIL
இதோ, உங்கள் குடும்ப டாக்டர்!
சுவையான உணவை இனி மனமார சாப்பிடலாம், சன்பீமினால்! சுத்திகரிக்கப்பட்ட சன்பீம் சூரியகாந்தி எண்ணெயில் குறைந்த அளவில் கொழுப்புச் சத்தும், அதிக வைட்டமின்களும் உள்ளன. மேலும், இரட்டிப்பு ஆரோக்கியத்திற்காக சன்பீம் பிரத்யேகமாக, 'டீ-வாக்ஸ்' செய்யப்படுகிறது. உங்கள் கைமணம் மாறாத உணவு இனி உங்கள் குடும்பத்தை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கட்டும்.
LOW LOW LOW FAT
பிடித்ததை சாப்பிடுங்கள். கவலையின்றி வாழுங்கள்.
SUNBEAM



சுவையான இல்லறத்திற்கு இவையும் வேண்டும்!

ஆம். இனிமையான இல்லறத்திற்கு அன்பு, அரவணைப்பு, பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல்-இப்படி உளம்சார்ந்த விஷயங்கள் மட்டும்தானா? உணவுசார்ந்த, அம்சங்களும் உள்ளனவே!

SMB ரவா, மைதா, கோதுமை மாவுகளில் பூரி, கேக், பப்ஸ், உப்புமா, பிரெட், ரவா இட்லி, ரவா லட்டு என்று விதவிதமாகச் சமைத்திடுங்கள். இனிய குடும்பவாழ்வுக்கு சுவையான அடித்தளம் அமைத்திடுங்கள்.

இப்பொழுது
பரிசோதிக்கப்பட்டு
நிருபணமான கூடுதல்
தரத்துடன் கிடைக்கிறது.

SMB மைதா, ரவை, கோதுமை மாவுகள்
1 கிலோ, ½ கிலோ பாலிதீன் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

SMB

சக்தி முருகன் ரோலர் பிளவர் மில்ஸ் (பி) லிட்

தபால் பெட்டி எண். 15, அவினாசி - 638 654,
கோயமுத்தூர் மாவட்டம். போன்: 2991, 2992




தரமென்றால் இதுதான் தரம். சுவையென்றால் இதுதான் சுவை

SASI / 509 / 94

சானல் மாதிரி...

முன்பெல்லாம் நவராத்திரி என்றால், நாலு தெரு என்றாலுங்கூட சோம்பலில்லாமல் சென்று, குங்குமம் கொடுத்து அழைப்பார்கள். அதேபோல் அந்த ஒன்பது நாளும் போய் பாட்டுப் பாடி... சுண்டலும் வாங்கிவருவார்கள். இப்போதுள்ள பெண்களோ உறவினர்களையும், வேண்டியவர்களையும் அழைப்பதோடு நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள்.

அழைத்த வீட்டிற்குச் செல்பவர்கள் கூட, ஏதோ ஒருநாள் மட்டும் தலையைக் காட்டிவிட்டு வந்துவிடுவார்கள் (இதில் முன்பே அவர்களுக்கு நாம் வரப்போகும் நாள், நேரம் இவற்றிற்குத் தகவல் கொடுத்து விட வேண்டும்). வயசுப் பெண்கள்



என்றால் கேட்கவே வேண்டாம். 'ஒரே கொலுவைத் தினமும் போய்ப் பார்க்க அப்படியென்ன இருக்கிறது?' என்று அலுத்துக் கொள்கிறார்கள். தோழியின் வீட்டில், தட்டில் இரண்டு பிஸ்கட் வைத்துக் கொடுத்தால், ஸ்டைலாகச் சாப்பிடும் இவர்கள், இந்த சுண்டல் சாப்பிடுவதை மட்டும் ஏனோ கௌரவக் குறைச்சலாக நினைக்கிறார்கள்.

உண்மையான ஆசையுடன், பரணிலிருந்து பெட்டியைக் கஷ்டப்பட்டுக் கீழே இறக்கி, பொம்மைகள் ஒவ்வொன்றையும் தூசி துடைத்து படிகள் அமைத்து, கொலு பார்க்க இவைகளைப் பார்த்துப் பார்த்துச் செய்பவர்களுக்கு அதைப் பார்க்க நாலு பேர் வரவில்லையென்றால் மனத்துக்குக் கஷ்டமாகத்தானே இருக்கும்?

இதையெல்லாம் பார்க்கும் போது, ஓர் ஐடியா தோன்றுகிறது. அதுதான் 'நவராத்திரி க்விஸ்.' 'தவறாமல் ஒன்பது நாளும் கொலுவைப் பார்க்க வாருங்கள். கடைசி நாள் நாங்கள் கேட்கும் கேள்விகள் அனைத்திற்கும் சரியான பதில் சொன்னால், சின்ன பரிசு (உங்கள் சக்திக்கேற்ப) காத்திருக்கிறதென்று கொலுவிற்கு அழைக்கும்போதே சொல்லிவிட வேண்டும்.

(உதாரணம் : 1. "கொலுப்படியில் நாங்கள் செய்த மாற்றம் என்ன?" 2. "குறிப்பிட்ட இந்தப் பொம்மை இதற்குமுன் எந்தப் படியில் வைக்கப்பட்டிருந்தது?" வேடிக்கையாய் ஒரு கேள்வி : "மூன்றாம் நாள் நாங்கள் கொடுத்த சுண்டல் என்ன?") இப்படியாக உங்கள் கற்பனா சக்திக்கேற்றவாறு அறிவுபூர்வமான கேள்விகளையும் சேர்த்துக் கேட்டுப் பார்க்கலாம்.

இந்த வருட நவராத்திரியை, புதுமையான, சுவாரஸ்யமானதாக நடத்த முயற்சிக்கலாமே!

- உமா. நாராயணசுவாமி


• விசாலாட்சி


• ஜானகி


• கிரிஜா


• பத்மா


• இந்திரா

இம்மாத இல்லத்தரசி

பொருள் : வேகவைத்த உணவு

முதல் பரிசு ரூ. 300/-

திடீர் ஸ்பான்ஞ் டிக்கி + இனிப்புச் சட்னி

தேவையான பொருட்கள் :

ரவை - 100 கிராம்,
அரிசி மாவு - 100 கிராம்,
கடலை மாவு - 100 கிராம்,
தயிர் - ஒரு கிண்ணம்,
எண்ணெய் - 5 டீஸ்பூன்,
சமையல் சோடா - 1 டீஸ்பூன்,
காரட் - 100 கிராம் (துருவிக் கொள்ளவும்)
இளம் பீன்ஸ் - 100 கிராம் (பொடியாக நறுக்கவும்)
பச்சை பட்டாணி - 100 கிராம் (உரித்துக் கொள்ளவும்)
பச்சை மிளகாய்,
இஞ்சி கலந்த பேஸ்ட் - 2 டீஸ்பூன்,
உப்பு - 1 டீஸ்பூன் (இது அவரவர் ருசி பொறுத்தது)
நறுக்கிய கொத்துமல்லி,
தேங்காய்த் துருவல், கொஞ்சம். (ஒரு டேபிள் ஸ்பூன் அளவு)
எலுமிச்சம் பழம் - 1 மூடி (ரஸம் எடுத்துக் கொள்ளவும்).

செய்முறை :

1. பீன்ஸ், பட்டாணி, காரட் இவைகளை அரை வேக்காடு வேகவைத்து எடுத்துக் கொள்ளவும்.


2. ஒரு பாத்திரத்தை சூடு பண்ணி எடுத்துக் கொண்டு அதில் 4 டீஸ்பூன் எண்ணை ஊற்றி சோடா போட்டுக் கையால் கலந்து ரவை, மாவுகளை கலந்து தயிர் ஊற்றி நன்கு கலக்கவும்.

3. வேகவைத்த காய்களையும் போட்டு மிளகாய், இஞ்சி பேஸ்ட், உப்பு கலந்து சிறிது ஜலம் சேர்த்து ஒரு பக்கமாக நன்கு கலந்து இட்லி மாவு பதத்தை விட சிறிது கெட்டியாக நன்கு கழற்றிக் கலந்து பத்து நிமிஷம் வைக்கவும்.

4. ஒரு தட்டில் அல்லது வட்ட ஸ்டாண்ட் இருந்தால் அதில் மீதி எண்ணெயை நன்கு தடவி இந்தக் கலவையைக் கொட்டி பரத்தி 10 நிமிஷம் வேகவைக்கவும். குக்கரில் வெயிட்

வெற்றிலை, பூ எல்லாம் அதிக விலை விற்கும். காசை மீதப்படுத்த விரும்புபவர்கள் நான்கு, ஐந்து பேருக்காக, இருவர் பூக்கடைக்குப் போய் பூ, பழம், வெற்றிலை வாங்கிப் பகிர்ந்து கொள்ளலாம்.

- விஜயலட்சுமி



போடாமல் வேகவிடவும். நன்கு வெந்து வரும்.

5. எடுத்து இன்னொரு தட்டில் போட்டு சதுரமாக சின்னச் சின்ன ஸ்பான்ஞ் போல் துண்டுகள் போட்டு வெட்டி எடுத்து இன்னொரு தட்டில் வட்டமாக அழகாக அடுக்கி, பரத்தி வைக்கவும்.

6. மேலே எலுமிச்சை ரசத்தைப் பரத்தி பிழிந்து கொத்துமல்லி இலை, தேங்காய் துருவல் தூவி இனிப்புச் சட்னியுடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

இனிப்புச் சட்னி :

விதை எடுத்த 4 பேரிச்சம்பழம், ஒரு தக்காளிப்பழம், ஒரு டீஸ்பூன் பொட்டுக்கடலை, பத்துப் பதினைந்து புதினா இலை, ஒரு துண்டு வெல்லம், சிறிது உப்பு கலந்து மிக்ஸியில் நன்கு அரைத்து எடுக்கவும். இந்தச் சட்னி சிறிது தளர இருக்கலாம்.

- பி. என். விசாலாட்சி,
பம்பாய் - 49.

இரண்டாம் பரிசு ரூ. 200/-

அசடு(!)

தேவையான பொருட்கள் :

சர்க்கரை வள்ளிக் கிழங்கு - ½ கிலோ,
கத்தரிக்காய் - ½ கிலோ (தேவைக்கேற்ப கூட்டியோ, குறைத்தோ செய்யலாம்.)
கடலைப் பருப்பு - ½ கப்,
பச்சை மிளகாய் - 5 அல்லது 6,
கடுகு - 1 ஸ்பூன்,
காயம் - சிறிதளவு,
புளி - இதற்குப் புளிப்பு அதிகம் கூடாது. லேசாக இருக்க தேவையான புளி.
தேங்காய் - 1 மூடி துருவியது,
உப்பு - தேவையானது,
அரிசி மாவு - 1 ஸ்பூன்,
கருவேப்பிலை சிறிது.

செய்முறை :

சர்க்கரை வள்ளிக் கிழங்கையும், கடலைப் பருப்பையும் தனித்தனியாகக் குக்கரில் வேக வைத்துக் கொள்ள வேண்டும். கத்தரிக்காயை சற்றுப் பெரிய துண்டங்களாக நறுக்கி லேசான புளித் தண்ணீரில் வேகவைத்துக் கொள்ள வேண்டும். கத்தரிக்காய் ரொம்பக் குழையாமல் (சிதையாமல்) வெந்தவுடன் அதில் வேகவைத்துள்ள சர்க்கரை வள்ளிக் கிழங்கை (பெரிய துண்டங்களாக) சேர்க்கவும். வேகவைத்துள்ள கடலைப் பருப்பையும் சேர்த்து, பச்சை மிளகாயை நீளவாட்டில் கீறி அதில் போட்டு, தேவையான உப்புச் சேர்த்து சற்று கொதிக்க விடவும். சற்று கொதித்தபின் துருவிய தேங்காயைச் சேர்த்து சிறிது அரிசி மாவைத் தூவி அடுப்பிலிருந்து இறக்கி வைத்து கடுகு, காயம், கருவேப்பிலை தாளிக்கவும்.

இது உப்புமா, பொங்கல் இவற்றிற்குத் தொட்டுக் கொள்ள ருசியாக, சரியான பொருத்தமாக இருக்கும். ஏன்? சாதத்தில் அப்பளத்தின் துணையுடன் ஒரு ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து சாப்பிட்டுப் பாருங்கள். பாத்திரம் உடனே காலியாகி விடும்.

பி. குறிப்பு : இவ்வளவு ருசியான இதற்கு பின் ஏன் எங்கள் பாட்டி 'அசடு' என்று வைத்தார்களோ? தெரியவில்லை.

- ஆர். ஜானகி ரங்கனாதன்,
சென்னை - 61.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

பல்சஸ் ஸாண்ட்விச்

தேவையான பொருட்கள் :

பச்சைப் பயறு - 1 கப்,
பச்சை பட்டாணி - 1 கப்,
கடலை - 1 கப்,
பச்சை மிளகாய் - 12,
கொத்துமல்லித் தழை - 1 சிறிய கட்டு,
இஞ்சி - 1" துண்டு,
உப்பு - தேவையான அளவு,

வெங்காயம், தக்காளி,
வெள்ளரி - ஒவ்வொன்றும் ஒன்று.

செய்முறை :

பயறு, பட்டாணி, கடலை மூன்றையும் தனித்தனியே காலையில் நீரில் ஊறப் போடவும். இரவு நீர் வடிய விட்டு முளை கட்ட விடவும். காலையில் பச்சை மிளகாய், இஞ்சி, கொத்துமல்லித் தழை, உப்பு சேர்த்து சற்று கரகரப்பாக அரைக்கவும். ஒரு சமமான தட்டை எடுத்து எண்ணெய் தடவி அதில் அரைத்த விழுதை மெல்லியதாக பரப்பவும். இதை தட்டுடன் 10 நிமிடம் ஆவியில் வேக வைத்து எடுக்கவும். இவ்வாறு அரைத்த கலவை முழுவதையும் தட்டில் பரப்பி வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். காப்பி பில்டர் மூடியால் தட்டில் வேகவைத்திருக்கும் பருப்புக் கலவையை வட்ட வட்டமாக வெட்டி எடுத்து வைக்கவும்.

இப்போது வெள்ளரி, வெங்காயம், தக்காளிகளை வட்ட வட்ட வில்லைகளாக அரிந்து வைத்துக் கொள்ளவும். ஒரு வெள்ளரி வில்லையில் உப்பு மிளகுப் பொடித் தூவி அதன் மேல் பருப்பு வில்லை வைத்து அதன் மேல் சாஸ் தடவி, அதன் மேல் ஒரு வெங்காய வில்லை வைத்து மறுபடி சாஸ் தடவி அதற்கு மேல் மறுபடி ஒரு பருப்பு வில்லை வைத்து கடைசியாக ஒரு தக்காளி வில்லையை வைத்து ஸாண்ட்விச்சை பூர்த்தி செய்யவும். இவ்வாறு அடுக்கடுக்காக எடுத்து வைத்த பின்னர் சாப்பிடக் கொடுக்கவும். இது பல சத்துக்கள் நிறைந்த பல்சஸ் சாண்ட்விச் எனப்படும்.

- கிரிஜா வைத்தியநாதன், பெங்களூர் - 96.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

கார வில்லைகள்

தேவையான பொருட்கள் :

புழுங்கல் அரிசி - ¼ கிலோ,
துவரம் பருப்பு - 200 கிராம்,
உலர்ந்த மிளகாய் - 4,
தேவையான அளவு உப்பு,
தேக்கரண்டி எண்ணெய்,
கடுகு, உளுந்து - 1 ஸ்பூன்.

செய்முறை :

முதலில் புழுங்கல் அரிசியையும், துவரம் பருப்பையும் கல் போகக் களைந்து தண்ணீரில் 3 மணி நேரம் ஊறவைக்கவும். பிறகு இரண்டையும் தேவையான உப்பு, மிளகாயுடன் தண்ணீர் அதிகம் விடாமல் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். பிறகு இவற்றை பிடிகருணை போன்று கொழுக்கட்டைகளாகப் பிடித்து இட்லி தட்டில் வைத்து ஆவியில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும். வேகவைத்த கொழுக்கட்டைகளை வில்லைகளாக அரிந்து, தேக்கரண்டி எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பு இவற்றைத் தாளிதம் செய்து கார வில்லைகளை ஒரு புரட்டு புரட்டி எடுத்துச் சாப்பிடவும்.

சுவையான, சத்துடன் உள்ள இந்த வேக வைத்த உணவை மாலை நேரச் சிற்றுண்டியாகவோ (அ) இரவு நேர உணவாகவோ கொள்ளலாம்.

- பி. பத்மா, சென்னை - 19.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

கோதுமை புட்டு

தேவையான பொருட்கள் :


சலித்த கோதுமை மாவு - ¼ கிலோ,
தேங்காய் - ¼ மூடி,
சர்க்கரை - ¼ கிலோ,
சிறிதளவு உப்பு.

செய்முறை :

நன்கு சலித்து எடுத்த கோதுமை மாவை அகன்ற பாத்திரத்தில் இட்டு உப்பினை நீரில் கரைத்துக் கொண்டு மாவின் மீது லேசாக தெளித்து மாவை நன்கு கிளறி விட வேண்டும். (நீர் அதிகம் தெளித்து விட்டால் கோதுமை மாவு கெட்டியான உருண்டைகளாக ஆகி விடும்) உப்பு தெளித்து கிளறி விடப்பட்ட மாவினை இட்லி பானையில் வைத்து ஆவியில் வேகவைக்க வேண்டும்.

மாவை இறக்கி வைத்து உருண்டைகளாக உள்ளவற்றினை கையினால் அழுத்தி உடைத்து விட வேண்டும். பின் ரெடியாக உள்ள சர்க்கரை மற்றும் தேங்காய்த் துருவல்களைத் தூவி நன்கு கிளறி விட வேண்டும். இது தனித்தும் மற்றும் பிற உணவுகளுடனும் உண்ணுவதற்கும் ருசியாக இருக்கும்.

- பி. இந்திரா, கடலூர் - 1.



கடலை உருண்டை, பொரி உருண்டை, பொட்டுக் கடலை உருண்டை இவைகளை ரிஸர்வில் வைத்திருங்கள். சுண்டல் பற்றாக்குறை வரும்போது, சமாளிக்கலாம்.

- விஜயலட்சுமி

மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்.

புதிய பதவி ஒன்றை எதிர்பார்க்கலாம். பணிபுரியும் அலுவலகத்திலேயே கூட அத்தகைய உயர் பதவி கிடைக்கும். வழக்குகளில வெற்றி உண்டு. மாத ஆரம்பத்தில் தனலாபமும், எதிரிகளின் சவால்களை எதிர்த்து வெற்றி பெறும் வாய்ப்பும் கிடைக்கும். ஆனால் மாதத்தின் பிற்பகுதியில் நேர்மாறான நிலை. எதையும் யோசித்துத் திட்டமிட்டுச் செய்தல் வேண்டும். இராசிக்குக் குருவின் பார்வை உள்ளதால் பயப்பட வேண்டிய நிலை ஏற்படாது. கலைத் துறையினர்க்கு ஏற்றதோர் காலம். இலாபஸ்தானத்தில் உள்ள சனீஸ்வரனால் தொழிலில் திருப்தியானதொரு முன்னேற்றம் காணப்படும். சர்ப்பக் கிரகங்களான இராகுவும், கேதுவும் அனுகூலமான சூழ்நிலையில் சஞ்சரிக்கவில்லை. அதனால் உடலில் சிறு சிறு கோளாறுகள், தானாகத் தேடி வந்து வம்பு வழக்குகளில் உங்களை மாட்டி விடும் நிலை, விருப்பமில்லா இடத்திற்கு மாற்றலாக வேண்டிய சூழ்நிலை, பெண் ஒருத்தியால் சிரமப்பட வேண்டிய நிலை எனப் பலவிதங்களில் பாதிக்கப்பட வேண்டி இருக்கும். ஆயினும் குருவின் பார்வையும், சுக்கிரனின் பார்வையும் உங்களது இராசிக்கு இருப்பதால் கவலைப்பட வேண்டியதில்லை. எனினும் உணவு விஷயத்தில் பிடிக்காததைத் தட்டிக் கழிப்பது நல்லது. இல்லையேல் மருத்துவர் உங்கள் வயிற்றைத் தட்டிப் பார்க்க வேண்டிவரும். இராசிநாதன் நீச்சம் பெற்று சுகஸ்தானத்தில் இருப்பது நல்லதல்ல. அரசமரத்தடியில் காணப்படுகின்ற நாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகர்கல் சிலையை, நீராஞ்சனம் காட்டிச் சேவியுங்கள். ஸ்ரீசுப்ரமணியருக்கான பாமாலைகளைப் படியுங்கள்.

ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 -ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 -ஆம் பாதங்கள்.

மாதத்தின் பிற்பகுதியில் அனுகூலமான சூழ்நிலை உண்டு. தொழிலில் இருந்த தேக்கம் நீங்கும். இராசிக்கு யோககாரகனாகிய சனீஸ்வரன் 10ல் உள்ளதால் கெடுதல் செய்ய மாட்டார். சில சமயங்களில் மனதில் ஒருவித விரக்தி தோன்றி, அதனால் எதிலும் ஆர்வமற்ற தன்மையைக் கொடுக்கும். அது சமயம் ஆழ்நிலைத் தியானத்தை மேற்கொள்ளுவது நலம். உண்ணும் உணவோ உங்கள் உடலுக்கு ஏற்றவிதத்தில் அமையாமல் "அலர்ஜி" எனும் சரும நோய் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், சாப்பிடுகின்ற ஆகாரத்தைக் கவனித்துச் சாப்பிடவும். சுபநிகழ்ச்சி ஒன்றுக்கு வாய்ப்பு உள்ளது. வாகனம் ஒன்றை வாங்க இருக்கிறீர்கள். வீடு வாங்கும் விஷயத்தில் சுக்கிரன் அனுகூலமான நிலையில் இல்லை. முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். கேது எடுக்கும் முயற்சிகளைத் தடுக்கப் பார்ப்பார். ஆனால் ராகு அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதுடன், அதை முடித்துக் காட்டும் ஆற்றலை உங்களுக்கு வழங்குவார். இந்த மாதத்தில் நீங்கள் செய்யும் முயற்சியைப் பொருத்தே அதன் வெற்றி அமை யும். சத்ருஸ்தானத்தில் குரு. எனவே சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் அதிகக் கவனம் செலுத்திக் கடமையை முடிக்கப் பாருங்கள். வேலை மாற்றத் திற்கு விண்ணப்பிக்க வேண்டாம். மற்றபடி அங்காரகனுக்குரிய முறையில் அவன் சன்னதிக்குச் சென்று திருமுருகாற்றுப் படையைப் படியுங்கள். ஸ்ரீலக்ஷ்மிக்குரிய ஸ்தோத்திரங்கள் பொருளுணர்ந்துப் படிப்பதால் சுக்கிரனால் ஏற்படும் தடைகள் நீங்கும். குழந்தைகளின் கல்வியில் சற்று கவனம் செலுத்த வேண்டியது அவசியம். குருவுக்குரிய ஸ்தோத்திரத்தைப் படிப்பது அவசியம்.



கர்நாடகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குடகுநாடு அழகு கொஞ்சும் மலைப்பிரதேசம். இந்த மலைக்கும் உயர்தர காஃபிப்பயிருக்கும் உள்ள தொடர்பு தொன்மையானது. வளமையானது. என்றும் பசுமையானது.

குடகு தரும் 100% கலப்படமற்ற ஃபில்டர் காஃபியை ஒரு முறை பருகியவர்கள் வேறு எதையும் அருந்த மாட்டார்கள். கூர்க் காஃபியில் அடங்கியுள்ளவையே இதன் தனித்தன்மைக்குக் காரணம். தூய மலைக்காற்றும், சுறுக்க திறமுள்ள செழிப்பான மண்ணும், பொழியும் மழையும், சூரிய கிரணங்களை இதமாகப் பாய்ச்சும் மரங்களடர்ந்த மலைப்பிரதேசமும் சேர்ந்து, காஃபிக் கொட்டைகளை மெல்ல, பதமாக முற்ற வைக்கின்றன.

குடகில் காஃபி வளர்ப்பது ஒரு கலை. குடகு நாட்டவர் பரம்பரை பரம்பரையாகப் படித்து கை தேர்ந்துள்ள அருமையான கலை. இந்த கலையில் விளைவது நறுமணமும் நற்சுவையும் நிறைந்த ஓர் அற்புத காஃபி : சிக்கரி சேர்க்கத் தேவையில்லாத காஃபி. இந்த ஃபில்டர் காஃபியை உங்களுக்கு கன்ஸாலிடேட்டட் காஃபி நிறுவனத்துடன் சேர்ந்து தருவது டாடா நிறுவனம்.

அடங்கியுள்ளவை :

மலைக்காற்று,

செழுமையான

நிலம்,

மழை,

கூர்க்

இவற்றுடன்

டாடா நிறுவனம்.

குடகின் மரபைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்ட "கூர்க்" இந்தியாவின் மிகத் தூய்மையா கலப்படமற்ற ஃபில்டர் காஃபி. துளியும் சிக்க சேர்க்காத 100% காஃபி.

டாடா நிறுவனமும் கன்ஸாலிடேட்டட் காஃ லிமிடெட்-டும் குடகின் மிகப்பெரிய காஃட தோட்டங்களின் உடைமையாளர்கள இருப்பதால் "கூர்க் ஃபில்டர் காஃபி 100% சிக்க இல்லாமல் வருவது மட்டுமல் மற்ற எந்த காஃபியையும் வி இன்னும் பசுமை மாறா உங்களுக்கு டாடாவி தோட்டங்களிலிருந்து வருகிறது.

NO CHICORY

100% கலப்படமற்ற "கூர்க் ஃபில்டர் காஃபியை குடித்து பருகுங்கள் : ஆனந்தத்துட அனுபவியுங்கள். இதி அடங்கியுள்ளவை இப்போ உங்களுக்குத் தெரியுமே எனவே இனி உங்களுக் புரியும் : எதனால் இ இத்தனை அருமையா இருக்கிறது. எதனால் இத மணமும் சுவையும் இத்தனை சிறப்பாக இருக்கிற எதனால் இது ஆ திருப்தியை அளிக்கிற என்பது.



TATA's

coorg

பெருமிதத்துடன்

வளர்த்த காஃபி.



Mudra CCL-2274-94 TAM



மிதுன ராசி :

மிருகசிரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இராசிக்குக் குருவின் பார்வையுள்ளதால் குழந்தைகளின் கல்வி நலன் நன்கு அமையும். சுபநிகழ்ச்சிக்கு வாய்ப்பு உண்டு. ஆன்மீகத் தலைவர் ஒருவரை சந்தித்து ஆசி பெறுகின்ற நிலை. மறக்காமல் சென்று வணங்கி வாழ்த்துக்களைப் பெற்று மகிழுங்கள். "நல்லோரைக் காண்பது, அவர்கள் சொல் கேட்பது, அவர்களது குணங்களை மற்றவர்களுக்குக் கூறுவது, அவர்களுடன் இணங்கி இருப்பது அனைத்தும் நல்லது" எனப் பள்ளிகளில் போதித்தது பழங்கதையாகி விட்ட காலம். என்றாலும் அவர்களது ஆசி இருந்தாலே நவக்கிரகங்கள் நம்மை அதிகம் தொல்லைக்கு ஆளாக்க மாட்டார்கள். கேதுவால் நன்மை உண்டு. ஆனால் இராகுவும், புதனும் மன அமைதியைக் குறைப்பர். இக்குறைகள் நீங்க துர்க்கையை வணங்குங்கள். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் எதையுமே கவனித்துச் செய்யுங்கள். நா காப்பது நல்லது. குலசேகர ஆழ்வார் பாடியுள்ள பெருமாள் திருமொழியில் திருவேங்கடவனைப் பற்றிப் பாடியுள்ள பதிகத்தைப் படியுங்கள். அருளினத்தால், ஈன்ற தாய் அகற்றிடினும், அவளது அரவணைப்பையே நினைந்து ஏங்கும் குழந்தை போல, சோதனைகளைத் தந்தாலும் நாம் இறைவனது அடிகளைத் தவிர வேறெங்கே சென்று சரணமடைய முடியும்? சுலபமாகச் செய்யக்கூடிய பரிகாரம் பக்தியைக் காட்டுவது ஒன்றுதான். மற்றபடி சாதாரண மாதம்தான்.


கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

தொழில்முறையிலும் சரி, பணிபுரியும் இடத்திலும் சரி, சற்று சோதனைகள் நிறைந்த மாதமே. உடல்கூட சற்று பாதிக்கப்படலாம். எனினும் இராஜக்கிரகமான சூரியன் மாதத்தின் முற்பகுதியில் வழக்கில் வெற்றி, பதவி உயர்வு, உடல் ஆரோக்கியம் என நன்மை செய்யும் நிலையில் இருப்பதால் கவலை தேவையில்லை. மாதத்தின் பிற்பகுதியிலும் புதன் கணிசமாக உதவலாம். சுக்கிரனால் சுகமுண்டு. தனலாபம் உண்டு. அது மட்டுமல்ல தாம்பத்திய உறவிலும் மகிழ்ச்சி நிலவும். நீச்சம் பெற்றுள்ள அங்காரகன், கேது, ராகு ஆகியவர்களின் நிலைதான் சாதகமாக இல்லை. நவம்பர் முதல் வாரம் வரை சுப நிகழ்ச்சிகள், தொழில்முறை மாற்றம் இவை இழுபறி நிலையில்தான் இருக்கும். அதன் பிறகு உங்களுக்கு நல்லதொரு காலகட்டம் ஆரம்பமாகும். ஏற்றத் தாழ்வுகள் இருப்பினும் குடும்பப் பிரச்னைகளைச் சமாளித்து விடுவீர்கள். உறவினர்களில் ஒருவரது உடல்நிலை சம்பந்தமான கவலை வரலாம். சனீஸ்வரஸ்தியும், ஸ்ரீசுப்ரமணிய புஜாங்கமும் படியுங்கள்.

முதன் முதலில் கொலுவுக்குப் பிள்ளையார் சுழி போடுபவர்களுக்கு ஓர் ஐடியா. ஆரம்பத்தில் பொம்மைகள் கொஞ்சமாய் இருக்கும். டி.வி. இருந்தால் தனி டேபிளில் வைத்து விட்டு டி.வி. ஸ்டாண்டில் பொம்மைகளை அடுக்கி வையுங்கள். அழகாக இருக்கும்.

- கி. மஞ்சுளா



சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1- ஆம் பாதம்.

சுக்கிரனால் சுகமும், மன அமைதியும், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றமும் உண்டு. ராகுவும் உங்கள் முயற்சிகள்யாவிலும் முன்வந்து உதவுவார். மாதத்தின் பிற்பகுதியில் சூரியனது நீச்சத்தன்மை, சுக்கிரனது ஆட்சியால் பங்கம் பெற்று, இராஜயோகம் தரக்கூடிய நிலையை உருவாக்கும். உள்ளபடியே இதுவரை யாராலும் அசைக்க முடியாது எனத்தனக்கே உரிய "தான்" எனும் கம்பீரத்துடன் அரசியலை நடத்தியவர்களும் சரி, பத்திரிகை நடத்துபவர்களும் சரி, அல்லது உயர் பதவியில் உள்ளவர்களும் சரி, இந்த மாதம் முதல் சற்று யோசித்துச் செயல்படுவது நல்லது. 'பதவிக்கே பங்கம் வரும் நிலையில் குருவும், புதனும் பாதகமான நிலையில் நிற்கிறார்கள். நல்லதையே எழுதிக் கொண்டு வந்து இப்படி ஒரு குண்டைப் போடுகிறீர்களே என எண்ணி விடாதீர்கள்' யதார்த்த நிலையைத்தான் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதற்கும் பரிகாரம் உண்டு. தக்ஷிணாமூர்த்தியைச் சரணடையுங்கள். சிவாலயத்தில் தெற்குப் பக்கத்தில் கல்லால மரத்தின் அடியில் மோன நிலையில் உள்ள அவர் மனம் கல்லால் ஆனது அல்ல. தன்னை அடைந்தவர்களையும், தன்னை வாழ்த்துபவர்களையும் அபயம் கொடுத்துக் காப்பவர். எனவே முடிந்தால் தக்ஷிணாமூர்த்திக்குரிய ஹோமம் கூட செய்யலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக,

சிம்ம ராசிக்குரிய "தான்" எனும் உணர்வை சற்று எல்லை மீறாமல் பார்த்துக் கொள்வது பரிகாரத்தில் தலையாயது ஆகும். இது எத்துறையினர்க்கும் எப்பதவியில், எந்நிலையில் உள்ளவர்களுக்கும் பொருந்தும். வசதி படைத்தவர்கள் ஆலங்குடி, திருச்செந்தூர் சென்று வரலாம்.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

குருவும் செவ்வாயும் உங்கள் தொழிலில் தனலாபம் வரும்படியான சூழ்நிலையை உருவாக்குவார்கள். அதுபோலவே சனியும் அனைத்துத் துறையினர்க்கும் அவரவர்களது முயற்சியில் வெற்றிவாகை சூட வைப்பார். குடும்பத்தில் குதூகலத்திற்குக் குறைவிருக்காது. தாம்பத்திய உறவு சீராக இருக்கும். அலுவலகத்தில் பணிபுரிவோருக்கும் கெடுபிடியற்ற அமைதியான சூழ்நிலை உருவாகும். வேண்டிய இடத்திற்கு மாற்றமும் கேட்டால் கிடைத்து விடும். ஆனால் ராகுவும், கேதுவும் சரியான நிலையில் உங்களுக்கு ஆதரவாக இல்லாததால் உடல் நலிவு, மனத்தில் குழப்பம், பண இழப்பு போன்று ஏதாவது ஒருவிதத்தில் உங்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். அதனால் ஸ்ரீஆதிசங்கரர் அருளியுள்ள ஸ்ரீசிவமாநஸ பூஜாஸ்தோத்திரத்தைத் தினமும் படித்து வந்தால் ஸகல காரியங்களிலும் அனுகூலம் ஏற்படும். ஜாதகத்தில் சூரியன் நீச்சமடைந்திருந்தால் கூட அவர் அனுகூலம் செய்யக் கூடிய அளவிற்கு, இந்த ஸ்தோத்திரத்திற்கு ஆற்றல் உண்டு. ஆனால் வடமொழியில் நன்கு பயிற்சி பெற்றுள்ள ஒருவரின் உதவியின் மூலம் படிக்கும் முறை அறிந்து பக்தியுடன் படியுங்கள். நீண்ட நாள் அபிலாஷைகள் கூட நிறைவேறும். தாய்மாமன் வகையில் எதிர்பாராத உதவி ஒன்று கிடைக்கலாம்.

துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

சடுகுடு, அல்லது கபடி என்ற விளையாட்டைப் பார்த்திருப்பீர்கள். இருதரப்பில், ஒரு அணியில் பலம் வாய்ந்த ஒருவர் மட்டுமே தனித்து நிற்க அதே சமயம் எதிர் தரப்பில் எட்டு பேர் ஆட்ட வளையத்தில் இருந்து கொண்டு அவரை எதிர்த்தால் எப்படி இருக்கும்! அது போல உங்கள் இராசிநாதன் மட்டுமே இராசியில் பலம் பெற்று நிற்க மற்ற



வீட்டில் குழந்தைகளின் பழைய நோட்டுகளின் அட்டைகளை வீணாக்காமல் சின்னச் சின்ன வீடுகளாகவும் கூரை வீடுகளாகவும் செய்து வர்ணம் கொடுத்து கொலுவுக்கு ஒரு காலனி மாதிரி வரிசைப்படுத்தி வைத்தால் மிக அழகாக இருக்கும். இந்த அட்டையைக் கொண்டே அழகிய மரங்களையும் உருவாக்கி வரிசைப்படுத்தலாம்.

- எஸ். விஜயா சீனிவாசன்

எட்டு கிரகங்களும் உங்களுக்கு எதிராக இருக்கின்ற சூழ்நிலை மாதம் பூராவும் உள்ளது. எனவே மனப் போராட்டமும் உண்டு. பணப் போராட்டமும் உண்டு. சுக்கிரன் அசுர குரு ஆயிற்றே! அதனால் உச்சிமீது வானிடிந்து வீழினும் அச்சமில்லை, என்ற மனப்பக்குவத்துடன் எதையும் எதிர்கொள்ளுங்கள். சாம, தான, பேத தண்ட முறைகளைக் கையாளவும் வேண்டிவரும். சுக்கிர பலத்தை அதிகப்படுத்த வெள்ளி மோதிரம் ஒன்றைக் கையில் அணிந்து கொள்ளுங்கள். பெண்கள் வெள்ளி வளையல் அணியலாம். காலில் வெள்ளி மெட்டி இருக்கிறதே அது போதாதா எனக் குழப்பம் கொள்ளாதீர்கள். செய்ய முடியுமானால் செய்வது நல்லது. அல்லது ஸ்ரீலக்ஷ்மி அஷ்டகத்தைப் படியுங்கள். ஒருமுறை படித்தால் பாபநாசனம், இருமுறை படித்தால் தனதான்ய விருத்தி. மும்முறை படித்தால் மகாசத்ருவிநாசனம். இந்த மாதம் இந்த ராசிக்காரர் அனைவருக்கும், அவர்கள் எத்துறையைச் சார்ந்தவரானாலும் இதே நிலை தான். அஷ்டகிரகங்களால் ஏற்படும் கஷ்டங்களைப் போக்கிக் கொள்ள அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம் கூடப் படிக்கலாம். மற்ற கிரகங்களுக்குப் பரிகாரம் கூற வில்லை! ஏனென்றால் பரிகாரம் செய்து கட்டுப்படி ஆகாது!

விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இராசிநாதனின் நீச்ச நிலை, ராசிக்குச் சனியின் பார்வை, அத்துடன் விரயஸ்தானத்தில் குரு, ராகுவுடன் மாதத்தின் பிற்பகுதியில் சூரியன், புதன் ஆகியவர்களின் சஞ்சாரம் அனைத்தும் உங்களுக்கு உகந்த நிலையில் அமையவில்லை என்று காட்டினாலும், சுக்கிரன் மாத ஆரம்பத்தில் உள்ள சூரியன்

ஆகியவர்களால் தனலாபம், அரசுத் துறை, அரசியல் துறை கலைத் துறையில் உள்ளவர்களுக்குப் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. ஏற்றத் தாழ்வுமிக்க மாதம். வலுவான தசாபுத்தி நடப்பவர்களுக்குக் கவலை தேவையில்லை. மற்றவர்கள் அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம். வெள்ளிக் கிழமையன்று புற்றுக்குப் பால் வார்த்தல், சனியன்று காக்கைக்கு அன்னம், ஏழைகளுக்குப் பரிவுடன் ஏதேனும் உதவி செய்தல் ஆகியவை, உங்களுக்கு வரும் விக்கினங்களைத் தகர்த்தெறியும் ஆற்றலை அளிக்கலாம். திருமுருகாற்றுப்படை படியுங்கள் அல்லது தருமபுரிக்கு அருகில் உள்ள பாப்பாரப் பட்டியில் ஸ்ரீராகவேந்திரருடைய மிருத்திகையும் சாலிக்கிராமமும் அடங்கியுள்ள பிருந்தாவனத்திற்குச் சென்று தரிசனம் செய்து விட்டு வரலாம். மூன்று நாட்கள் தங்கி, மந்த்ராலயத்தில் செய்கின்ற சேவையை இந்த பிருந்தாவனத்திலும் செய்யலாம். மந்தாரலயமகானின் அருள்வாக்கினால் ஆசீர்வதிக்கப்பட்ட தக்ஷிணபிருந்தாவனம் என்ற பெயர் பெற்ற ஸ்தலம். போய் விட்டு வரலாமே!

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் நீங்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த வாய்ப்பு ஒன்று உங்கள் கதவைத் தட்ட இருக்கிறது. அது உத்தியோக விஷயமாகவும் இருக்கலாம் அல்லது அரசுத் தரப்பிலிருந்து எதிர்பார்த்த உத்தரவாகவும் இருக்கலாம். முக்கியமாக நிதிசம்பந்தமானதாகவோ கூட அமையும். எனவே வாய்த்தத் தருணத்தை நழுவ விட்டு விடாதீர்கள். ஏனெனில் எட்டில் உள்ள அங்காரகன் அத்தகைய சூழ்நிலையை உருவாக்கும் நிலையில் நீச்சம் பெற்றுள்ளார். நில சம்பந்தமான எந்த விஷயத்திலும் நாட்டம் செலுத்த வேண்டாம். ஆனால் கட்டிய வீடு வாங்கும் யோகம் சுக்கிரனால் வரலாம். கேதுவும் செவ்வாயும் மட்டுமே உங்களுக்கு உகந்த முறையில் சஞ்சரிக்கவில்லை. எனவே எத்துறையினருக்கும் எப்பாலவர்க்கும் ஏற்றதொரு சூழ்நிலைதான் என்றாலும், பாவக் கிரகங்களால் குடும்பத்தை விட்டுச் சிறிது காலம் பிரிந்து நிற்க வேண்டிய சூழ்நிலை உண்டு. அது வெளியூர்ப் பிரயாணமாகவும் அமையலாம். வெளிநாட்டுப் பிரயாணமாகக் கூட இருக்கலாம். ஆனால் அதனால் அதிக நன்மை ஏற்படாது. தூரத்து உறவினர் ஒருவரின் உடல் நிலை உங்கள் மனநிலையைப் பாதிக்கலாம். விநாயகரையும், வேலவனையும் வேண்டுங்கள். பெரும்பாலும் நல்லதொரு மாதமாக இருப்பதுடன், சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளும் மாதமாகவும் இருக்கும்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

ஆட்சியில் இருக்கும் சுக்கிரன் 10ல் அமர்ந்திருப்பதால் அவரால் உங்களுக்கு நன்மை குறைவே. எனவே மண்காரகனாகிய அங்காரகனும் நீச்சம் என்பதால் நிலம், வீடு சம்பந்தமான எந்த விஷயத்திலும் ஈடுபட வேண்டாம். கொள்கிரயம், விக்கிரயம் இரண்டிலுமே விரயம் ஏற்படும் போலத் தோன்றுகிறது. உடல் நலம் சற்று பாதிக்கப்படலாம். அதனால் மனமும் பாதிக்கப்படும். அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் தாம் வகிக்கும் பதவியைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற நிலை ஏற்படும். குறிப்பாகக் காவல் துறையினர் தமது பொறுப்பைக் கவனமுடன் கையாள்வது நல்லது. முரட்டுத் துணிவையும், முன் கோபத்தையும் மூட்டைக்கட்டி தூர எறியுங்கள். இல்லையெனில் பதவிக்கும், பெயருக்கும், பெருமைக்கும் இழுக்கு வரக் கூடிய சூழ்நிலை உண்டாகி விடும். இது எத் துறையினர்க்கும் பொருந்தும். மாதத்தின் பிற் பகுதியில் சூரியன் உங்களுக்குரிய முறையில் உதவுவார் என்றாலும் நீச்சம் அடைந்திருப்பதால், நீங்களும் சற்றுக் கடுமையாக முயற்சிக்க வேண்டும். புதனால் குடும்பத்தில் அமைதி நிலவும். ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீநரசிம்மர் மற்றும் பைரவர், துர்க்கை ஆகியவர்களைப் பற்றிய ஸ்தோத்திரங்களைப் படியுங்கள்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.



கத்தரிக்காயை கறிக்கு நறுக்குவது போல் நறுக்கினால் சில குழந்தைகளுக்குப் பிடிப்பதில்லை. அதுவும் தவிர அது கொழகொழவென்றாகி விடும். அப்படியில்லாமல் கூட்டுக்கு நறுக்குவது போல் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அதனுடன் சிறிது அரிசி மாவு, சிறிது கடலை மாவு கலந்து கறி செய்தால் தனித்தனியாகவும், நன்கு மொரமொரப்புடனும் வரும்.

– சுஜாதா கோடீஸ்வரன்

We are proud to announce that our deposit crosses more than one crore with the valuable support of our shareholders

SBF சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

பதிவு அலுவலகம் : 8, கற்பகாம்பாள் நகர்,
மைலாப்பூர், சென்னை - 600 004. போன் : 4993241/4990953
கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003. போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8.30 முதல் மாலை 5.30 வரை
ஞாயிறு காலை 8.30 முதல் பகல் 12.30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

கடன் நகைகள் பேரில் கிராம் 10க்கு ரூ. 3000/- வழங்கப்படும்.

இயக்குநர்கள்

பெயர்	விலாசம்	தொழில்
திரு T.V. சீனிவாசன்	15 லஸ் அவின்யூ சென்னை - 4	நிதி ஆலோசகர் Formerly SBI
திரு P.K. சந்திரசேகரன்	89 போயஸ் கார்டன் சென்னை- 86	P.K. வடுவம்மாள் குரூப் இரும்பு வியாபாரம்
திரு ப்ரவின் கோவிந்தராவ்	22 போயஸ் கார்டன் சென்னை - 86	Architect P.S. Govind Rao, Madras.
திருமதி P.C. சுந்தரவதனி	89 போயஸ் கார்டன் சென்னை - 86	சுந்தரவதனி கல்யாண மண்டபம், எழும்பூர், சென்னை-7 ☎ 8281078
திரு P.K.C. ரமேஷ்	89 போயஸ் கார்டன் சென்னை - 86	பிரசாந்த் ஸ்டீல்ஸ்
திரு D. தனுஷ்கோடி	21/1A பழைய குயவர்பாளையம், மதுரை - 625 009	Nippon Furniture, Madurai.
திரு P.C. பாஸ்கர்	89 போயஸ் கார்டன் சென்னை - 86	Annamalai Steels
திரு K.R. நிரஞ்ஜன் குமார்	1 பின்னி ரோடு சென்னை - 86	K.V.R. பஸ் சர்வீஸ் சென்னை.
திரு P.C. சியாம் சுந்தர்	89 போயஸ் கார்டன் சென்னை -86	Deepu Steels
திரு K.G. கிருஷ்ணன்	Y-210, 2வது அவின்யூ சென்னை - 40.	ஜெனரல் ஃபாப்ரி கேட்டர்ஸ் (பி) லிமிடெட்

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

சுக்கிரன், சனி, கேது, குரு மற்றும் மாதத்தின் முற்பகுதியில் புதன் ஆகியவர்கள் அனுகூலமான நிலையிலேயே இருப்பதாலும், அங்காரகன் கடகத்தில் நீச்சம் பெற்றும், இராசியை 8ம் பார்வையால் பார்த்தாலும் உங்களுக்கு உகந்த நிலையிலேயே சூழ்நிலை உள்ளது. எனவே எதிலும் வெற்றி உண்டு. 7½ சனியின் தன்மையை குரு தமது பார்வையால் கட்டுப்படுத்தும் நிலை உண்டு. அதனால் வழக்குகளில் வெற்றி உண்டு. வீடு, வாகனம் வாங்கும் யோகமும் கைகூடி வரும். நில சம்பந்தமான கொள்கிரயம், விற்கிரயம் ஆகியவற்றைக் கவனித்தே செய்ய வேண்டும். தனலாபமும், முருகனது அருளும், கணபதியின் கடாட்சமும் உள்ளது. சூரியன் மட்டுமே ஆட்சியாளர்களுக்கும், உயர்ப் பதவியில் உள்ளவர்களுக்கும் சிறு சோதனைகள் தரலாம். அதே சமயம் எதிர்பாராத தனலாபமும் உண்டு. பங்கு மார்க்கெட், வாய்தா பேரம் இவைகளில் இலாபமும் வரும். தூரதேசத்துப் பிரயாணமும் அதனால் நன்மையும் உண்டு. சற்று உடல்நலத்தைக் கவனிப்பது நல்லது. குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் தாம்பத்திய உறவும், கூட்டுக் குடும்பத்தில் உங்கள் வாக்கிற்கு மதிப்பும் ஏற்படும். ஸ்ரீ ஆதிசங்கரர் எழுதிய சிவமாலை பூஜா தோத்திரத்தைப் பொருளுணர்ந்து படியுங்கள். மனதை ஒரே நிலையில் நிறுத்தி மேற்படி ஸ்லோகங்களைக் கூறினால் 100 முறை சிவலிங்கத்திற்கு அபிஷேக ஆராதனை செய்வதற்கு ஒப்பாகும்.

மீன ராசி :

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

சுக்கிரன் ஒருவனே சுகமளிப்பவன் - போதுமே - மற்றவர்களைப் பற்றிய கவலையே தேவையில்லையே. ஏனெனில் குடும்பத்திற்குத் தேவையான வாழ்க்கை வசதியும், மனைவியால் மனமகிழ்ச்சியும் இருந்து விட்டால் அந்தக் குடும்பமே ஸ்வர்க்கானுபவத்தில் களிக்கும். மனதிற்கு அமைதிதானே முக்கியம். ஆகவே மீனராசிக்காரர்களுக்கு இனிவரும் மாதங்களிலும் நன்மையே கூடுதலாக நடக்கும். கடந்த 7 மாதங்களில் உங்களுக்கு ஏற்பட்ட சரிவும் சரி, அல்லது அவ்வப்போது ஏற்பட்ட சுகமும் சரி உங்களை வெகுவாகப் பாதித்திருக்கும். இனி தொழிலில் முன்னேற்றம் படிப்படியாக வரும். அரையாண்டுத் தேர்வுகளில் குழந்தைகள் நன்கு கவனித்து எழுதுவார்கள். நல்ல மதிப்பெண்களும் பெறுவர். அழகுக் கலையில் ஈடுபட்டுள்ளவர்கள்,



கடலைப் பருப்பை வேகவைக்கவும். பச்சை மிளகாய், தேங்காய்த் துருவல், சிறிது உப்பு எல்லாம் மிக்ஸியில் அரைத்து வேகவைத்த பருப்பில்பிசிறி பிறகு தாளிக்கவும். மிகவும் சுவையாக இருக்கும்.

\- கீதா குமார்

* Alliance invited, from only, Vadama, grooms, well, qualified, employed in Public Sector Engineer, Bank, Insurance for Vadama girl, Vadhoola, 27, Visakam, 5'2", M.A. Final, PGDSM in Computer, employed in Software. Box No. 21315

* நைத்ருப காசியப கோத்திரம், சதய நட்சத்திரம், வடமாள், 34 வயது, பட்டதாரிப் பெண்ணுக்கு professionally qualified, preferably abroad வரன் தேவை. Girl very fair and beautiful 5'.1" height. பெட்டி எண் : 29907

* Alliance invited for Vadakalai Iyengar Girl, 28, 5'.5", Rs. 1800/- Shadamarshana Gothram, B.Sc., Typewriting, Shorthand, Moolam, 3rd padam, employed in a private firm. Subsect no bar. Reply to Box No. 29906

* தமிழக அரசில், நிரந்தரமான பணியில் கோவையில் இருக்கும் 28 வயதான திருநெல்வேலி சைவப் பிள்ளை பெண்ணுக்கு அதே இனத்தில் பொருத்தமான மாப்பிள்ளை தேவை. விருப்பமுள்ளவர்கள் ஜாதகம் மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 29905

* வடமாள், ஸ்ரீவத்ஸ கன்னியா, 26, 5'.2", B.A., P.G. Diploma in Business And Personal Management படித்த அழகான குடும்பப்பாங்கான வேலையில் இருக்கும் பெண்ணிற்கு மத்திய, மாநில தனியார் கம்பெனியில் நிரந்தர வேலையில் இருக்கும் 30 - 32 வயதிற்குள் வரன் தேவை. ஜாதகத்துடன் அணுகவும். பெட்டி எண் : 29904

* கௌசிக கோத்திரம், பூரட்டாதி நட்சத்திரம், வடகலை 36 வயதுள்ள, எல்.எல்.எம்.பி., டைப்ரைட்டிங் ஹையர், ஷார்ட்ஹாண்ட் ஹையர் பாஸ் செய்துள்ள ஐயங்கார் பெண்ணிற்கு கவர்மெண்ட் அல்லது கம்பெனியில் நிரந்தரமாக வேலை செய்யும் வரன் தேவை. தென்கலை சம்மதம். பெட்டி எண் : 29903

* கக்வயஜுர், கௌசிக கோத்திரம், மூலநட்சத்திரம், செவ்வாய் தோஷம், +2 படித்த, தனியார் கம்பெனியில் ரூ. 850/- சம்பளம் பெறும் வரனுக்கு நல்ல உத்தியோகத்தில் இருக்கும் மாப்பிள்ளை தேவை. பெட்டி எண் : 29902

* பலிஜா நாயுடு, பால கோத்திரம், பூரட்டாதி சுத்த ஜாதகம், 33, 156 செ.மீ., எல்.எல்.எம்.பி., வேலையில் இல்லாத, கௌரவமான நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த, தெய்வ பக்தியுள்ள, குடும்பப்பாங்கான நல்ல ஆரோக்கியமான, வசீகர பெண்ணுக்கு அதிக எதிர்பார்ப்பு இல்லாத இதே இன வரன் தேவை. உடல்நலக் குறைவான தந்தையின் ஒரே பெண்ணின் திருமண விருப்பம். Contact : R. V. Navaneethakrishnan, No. 90, Ismail Garden PM Darga, Lloyds Road, Madras - 600 005.

* Tamil Smartha Brahacharanam Bride, Kousika Revathi, very fair good looking B. Com., 25, 160 cms, employed in Maadras seeks Bridegroom good personality well employed. Subsects acceptable. To

Contact : S. Krishnan, 2, West Vadampokki Street, Madurai - 625 001.

* Alliance invited from suitable Boys for Bombay based fair, good looking Nellai Saiva Vellalar Pillai Girl Rohini M. A., 24, 150 cms, working as Teacher. Contact with horoscope to : A. Nallasivam, A/42, Neelima Apartment, S.P.S. Marg, Bhandup (W) Bombay - 400 078.

* Vadamal, fair, healthy good looking Bhardhwajam, Utthirattadhi Girl, 27, B. L. Practising as lawyer excellent family background seeks suitable alliance from Graduates well placed. Subsect acceptable. Reply with horoscope. Contact : K. R. Vaithianathan, 9-10th East Main Road, Gandhi Nagar, Vellore - 632 006.

* ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸம், மகம், பி.ஈ., (எலக்ட்ரிகல்/எலக்ட்ரானிக்ஸ்) பட்டம் பெற்ற 29, 165 செ.மீ., உயரமுள்ள சிவந்த அழகான பெண்ணிற்கு பி.ஈ., பி.ஏ., எம்.பி.ஏ. படித்து நல்ல நிரந்தர வேலையில் உள்ள வரன் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். முகவரி : V. Srinivasan, "Ashraya", 29, Subbanna Layout, Malleshpalya (Near BEML Quarters), Bangalore - 560 075.

* மணமகள், பாரத்வாஜ கோத்திரம், ஆயில்ய நட்சத்திரம், ஐயர், வடமாள், 24, 165 செ. மீ., BALLB வேலையிலுள்ள பெண்ணுக்கு நல்ல வேலையில் உள்ள பட்டதாரி வரன் தேவை. விலாசம் : C. S. Sundaram, 1135-A, Munithayappa Layout, Lingarajapuram, Bangalore - 560 084.

* சோழிய வெள்ளாளர் பிள்ளை (சைவம்) எம்.எஸ்ஸி., எம்.எட்., வயது 32, உயரம் 150 செ.மீ., சித்திரை நட்சத்திரம், தனியார் மேல்நிலைப் பள்ளியில் P.G. Asst. (திருவாரூர்) மாத வருமானம் ரூ. 5000/-. நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. விவரங்களுடன் தொடர்பு கொள்ள முகவரி : எஸ். அருணாசலம் பிள்ளை, கொட்டாரக்குடி, கல்யாணமகாதேவி (போஸ்ட்), குளிக்கரை (வழி) திருவாரூர் (தாலுகா) 613 704.

* பிராமண - பிள்ளை பெற்றோரின் 30.11.69 இல் ஆயில்யம் 4 ஆம் பாதத்தில் உபரி மகத்தில் பிறந்து M.Sc., P.G.D.C.A., R.D.B.M.S. முடித்த பெண்ணுக்கு, சைவக் குடும்பத்தில் பிறந்து நன்கு படித்து, வேலையில் உள்ள பிராமண அல்லது பிள்ளை மணமகன் தேவை. தொடர்பு கொள்ள முகவரி : பா. கங்கா பரமேஸ்வரன், 133-பி, தெற்கு ரத வீதி, பழனி - 624 601.

* Alliance invited from well employed decent family Boy 30 - 32 for fair and beautiful Iyer Girl B.Com (Hons), Shadamarshanam, Brahacharanam, Hastham, 25 years, 5'4", with subcaste no bar. Reply to K. S. Ramachandran, C/o. P. A. Naidu, Naidu Building P. O. Kithadih Jamshedpur - 831 002, Bihar.

* Brahacharanam, Koundinyam, Thiruvadhirai, Graduate, employed Railway, Madras, 27, 2400/- good looking fair, father Retired, Central Govt. Officer seeks professionally Post Graduate qualified well employed Groom. Subsects no bar. Contact : C. Balakrishnan, C-1, Cauvery Block, Selvam Estates, New Colony, Chrompet, Madras - 600 044.

* Non-Srivatsa alliance sought for good looking Vadamal Iyer Girl (27 years 5'.1", Rohini) with hearing defect and imperfect speech. Domestically well trained with Tailoring Diploma. Subsect no bar. Interested parties may contact T. R. Balagopal, No. 223, Sector VII, R.K. Puram, New Delhi - 110 022.

* Kannada Thevanga Chettiar Girl, affluent Hindu family, 37, 165 cms, B. A. B. L., unencumbered divorcee, seeks eligible, educated, well settled Hindu Groom in and around Coimbatore. Contact : S. Subbulakshmi 131-G, Chinnammal Street Extension, K. K. Pudur, Coimbatore - 641 038.

* துளுவ வேளாளர், ஆயில்யம், 25 வயது, சிவப்பு நிறம், 160 செ.மீ., பி.காம்., பி. எட்., மற்றும் டைப்ரைட்டிங் ஷார்ட் ஹாண்ட் ஆங்கிலம் - தமிழ் ஹையர், தேர்ச்சி பெற்ற வேலைக்குச் செல்லாத அழகிய பெண்ணிற்கு, பட்டப்படிப்பு படித்த வேலையிலுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. படிப்பு, வேலை ஜாதகக் குறிப்புகளுடன் விண்ணப்பிக்கவும். முகவரி : வி. வெங்கடராஜலு, டி-37, இராஜாஜி சாலை, வட்டம் - 11, நெய்வேலி - 607 803.

* Decently employed for Vadakalai 34, B. A., Swathi, Vadhoolam working in a Private firm. Delhi. Reply with horoscope and family details. Address : Mrs. Ambuja Srinivasan, EB-107, Maya Enclave, Hari Nagar, New Delhi - 110 064.

மணமகள் மணமகன் தேவை

* தமிழ், விஸ்வகர்மா வயது 33, எம். எஸ். எம். ஸி. படித்த பெண்ணுக்கு 35 - 40 வயதிற்குள் நல்ல வரன்கள் தேவை. விவாகரத்தானவராயினும், மனைவியை இழந்தவராயினும் சம்மதம். சகோதரன், 32, பி.எஸ்ஸி., பி.ஜி. டி.பி.எம். எல்.எல்.பி., (பிரைவேட்) ரூ. 4000/- வேலை பார்க்கும் மணமகனுக்கு வேலையிலுள்ள பட்டதாரி பெண் தேவை. பெட்டி எண் : 30070

* Mutual or Separate alliance for Vadakalai Srivatsa Nationalised Bank Officer Poosam 4th Padam, 35, 175 cms, Rs. 7500/- and for his sister B.Sc. 37, 150 cms, Rs. 4950/- Junior TeleCom Officer. Magam, Bank, Central Govt. alliance preferred for Bride and Groom. Box No. 30074

* தலைமை போலீஸ்காரர், வயது 29, மூலம் 4 ஆம் பாதம், 173 செ. மீ. உயரம், எஸ்.எஸ்.எல்.ஸி., ஊதியம் ரூ. 3000/- அசைவ முதலியார், நடுத்தர குடும்பம் மற்றும் இளைய தங்கை வயது 26, திருவாதிரை, பி.காம்., அரசு ஊழியர், ரூ. 2200/- ஆகியோருக்குத் தகுந்த மணமகளும், மணமகனும் தேவை. பெண் கொடுத்துப் பெண் எடுக்கச் சம்மதம். முதலியார் இனத்தில் எந்தப் பிரிவினரும் ஜாதகக் குறிப்புகளுடனும் குடும்ப விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 30075

* Kannada Madhwa mutual alliance invited from Non-Athreya for Bride with decent family background, 32 years, 148 cms, Graduate, Moolam, having a few harmless white spots on skin, and brother 29, 158 cms, Rs. 4500/- Nationalised Bank. Apply to Box No. 30078

Printed and Published by V. MURALI on behalf of MESSRS BHARATHAN PUBLICATIONS PRIVATE LIMITED, at the *BHARATHAN PRESS*, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.
Editor : MANJULA RAMESH. Managing Editor : V. MURALI
Telephones – Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Director : 2345621.
Annual Subscription : India Rs. 84/-; Overseas : Rs. 600/- (Air Mail); Rs. 250/- (Sea Mail);
Half Yearly Subscription : India Rs. 42/-; Overseas : Rs. 300/- (Air mail); Rs. 125/- (Sea Mail).

சிங்காரமாய் கொலுவிருக்கும் சீனி சர்க்கரை பொம்மை

நவராத்திரி கொலுவினை கடவுள் உருவங்களால், மண் பொம்மைகளால் அலங்கரித்தது அந்தக் காலம். அவரவர் கற்பனைத் திறன் கொண்டு கைவினைப் பொருட்களால் நாடு, காடு, வீடு, கோவில் என்று ஜமாய்க்கின்றனர் இப்போது.

நவராத்திரிக்கும், திருமண வைபவங்களுக்கும் கன்னடக்காரர்கள் அவர்களது சம்பிரதாயப்படி சர்க்கரை அச்சு பொம்மைகள் செய்து வைக்கின்றனர். கண்ணைக் கவரும் இவற்றின் தாத்பர்யம் என்ன? விளக்குகிறார் பெங்களூரைச் சேர்ந்த திருமதி நிர்மலா ரங்கராஜன்:

"எங்கள் சம்பிரதாயத்தில் சர்க்கரை அச்சுகளில் பொம்மையும், கொப்பரையில் செதுக்கும் உருவங்களும் மிகவும் பிரபலமானது. சென்ற மாதம் என் தங்கைக்குத் திடீரென்று திருமணம் நிச்சயமானது. என் தாயாருக்கு உடல் நிலை சரியில்லை. திருமணமாகி சில வருடங்களே ஆன எனக்குத் தந்தி அடித்து சர்க்கரை பொம்மைகள் செய்து வரும்படி கேட்டிருந்தார்.



முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படிப் பழக்கமில்லாமல் செய்வது? கைவேலைகள், சமையலில் சிறந்தவள் என்று பெயரெடுத்திருந்த எனக்கு இது ஒரு சவாலாக அமைந்தது. பெங்களூரில் இருக்கும் என் இளைய மாமியார் திருமதி சுசிலா சேதுமாதவன் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு நானே செய்து எடுத்து வந்தேன். குறுகிய காலத்தில், முதன் முதலாக செய்த பொம்மைகளை, குறிப்பாக பிள்ளையார் தத்ரூபமாக அமைந்ததை அனைவரும் பாராட்டினர். பிருந்தாவனம், துளசி மாடம், லஷ்மி, சரஸ்வதி, கப்பல், வாழைப்பழ சீப்பும், (நிஜ வாழைப்பழம் என்று என் மகன் அடம்பிடித்து சாப்பிட்டு விட்டான்) கொப்பரையில் செதுக்கிய வெங்கடாஜலபதியும் கண்டவுடன் வீடியோக்காரர் முதலில் அதைப் படம் பிடிக்கத் தொடங்கினார். அரை மூடி வடிவில் கொப்பரையாக துல்லியமாக இருப்பதாகத் தேர்ந்தெடுத்து பிளேடினால் கைதேர்ந்த சிற்பியைப் போல அழகாக அமைத்திருந்தேன். கர்நாடக மாநிலத்தில் பிரசித்தி பெற்ற கலை இது. பரம்பரையாக செய்து வருகிறோம். தை பிறந்தவுடன் சங்கராந்தி அன்று எள்ளு, வெல்லம், கொப்பரை, பொட்டுக்கடலை, வேர்கடலை இவைகளைப் பொடி செய்து அனைவருக்கும் வழங்குவது வழக்கம். மார்கழி மாதம் முடிந்து புது தானியங்கள் வருவதால் அதைக் குறிக்க இவ்வாறு செய்வது வழக்கம். நாகரீகம் வளர்ந்ததும் வெல்லத்திலிருந்து (எல்லோரும்



உஜாலாவுக்கு மாறிட்டாங்கங்கற மாதிரி) சர்க்கரைக்கு மாறிவிட்டார்கள். சர்க்கரைப் பாகு வைத்து சிறிது பால் ஊற்றி, அழுக்கை எடுத்து விட்டு வடிகட்டி, கெட்டிப்பாகு பதத்தில் தயாராக இருக்கும் அச்சுகளில் ஊற்றிச் சுமாராக ஆறியதும் எடுத்துவிடலாம். பெங்களூரில் ஒயரில் சொருகி வைத்த சர்க்கரைப் பூக்கள் ரெடிமேடாகக் கடைகளில் கிடைக்கின்றன.

முதல் நாள் சர்க்கரை வாழைப்பழத்தை சாப்பிட்ட என் மகன் மறுநாள் பழம் கேட்க வீட்டிலிருந்தவர்கள் வாழைப்பழம் தந்தால் அதில்லை வேறு வாழைப்பழம் என்று தொடர்ந்து அழுதான். வெளியே சென்று விட்டு வந்த நான் புரிந்து கொண்டு அவனுக்கென்று எடுத்து வைத்திருந்த சர்க்கரை வாழைப்பழம் தந்ததும் அழுகையை நிறுத்தினான். வாழைப்பழம் என்றே நினைத்திருக்கிறான். எல்லோரும் சிரித்தனர்.”

சர்க்கரை பொம்மைகளை ஒரு குடிசைத் தொழிலாகவே இருபது ஆண்டுகளுக்கும் மேலாக செய்து வருகிறார் திருவல்லிக்கேணி யில் வசிக்கும் திருமதி தாரா லக்ஷ்மணன்.

“என் கணவர் வேலைக்குச் செல்ல முடியாமல் விரைவில் ஓய்வெடுக்க நேர்ந்த போது சர்க்கரை அச்சுகள்தான் என் வாழ்வில் அச்சாணியாக இருந்து என் குடும்பத்தைத் தூக்கி நிறுத்தியது. என் பாட்டி, என் தாய் இவர்களைத் தொடர்ந்து நானும் இவற்றைத் தயாரிக்க ஆரம்பித்தேன். இது மிக நுண்ணிய கலையாகும்.

புராண காலத்தில் பெருமாள் திருமணத்திற்கே இந்த சர்க்கரை அச்சு பொம்மைகள் வைத்திருந்ததாக ஐதீகம். திருமணம் முடிந்ததும் சாதாரணமாக சுபமாக முடிந்ததென்று சர்க்கரை தருவார்கள் இல்லையா? நாங்கள் சர்க்கரையுடன் ஆரம்பிக்கிறோம். சம்மந்திகள் இருவரும் பரஸ்பரம் முதன் முதலில் பார்த்துக் கொள்ளும் போது அவரவர் செய்து கொண்டு வந்திருக்கும் இந்த பொம்மைகளைத் தந்து சுபமாக ஆரம்பிக்கிறோம். திருமணம், சுமுகமாக, இனிதாக நடந்து முடிய இது ஒரு அன்பின், மனித நேயத்தின் வெளிப்பாடு என்றே சொல்லலாம்.

இந்த மர அச்சுகள் தஞ்சாவூர், கும்பகோணம், பெங்களூரில்தான் ஆச்சாரிகள் மிகக் கலைநயத்துடன் செய்து தருகிறார்கள். இருபது வருடங்களாக இந்த பொம்மைகளை நான் செய்து வருவதில் கன்னடக்காரர்களைத் தவிர அனைத்து ஜாதி, சமய மக்களும் கூட இதன் அழகில் மயங்கி ஆர்டர் தருகின்றனர்.

பேசிக் கொண்டிருக்கும்போதே தயாரான சர்க்கரைப் பாகு எடுத்து தசாவதாரம் அச்சில் ஊற்றுகிறார். பத்தே நிமிடத்தில் அட! பகவானின் அவதாரங்கள், பளிச் என்று கொலுவிருக்கின்றன! அதன் அழகில் மயங்கித்தான் விட்டோம்!

“ஒரு கிலோ சர்க்கரைக்கு அரை லிட்டர் பாலை நான் கண்டிப்பாக ஊற்றுகிறேன். சிறிது பால் விட்டு அழுக்கு எடுத்தால் போதும் என்பது தவறு. அப்படிச் செய்தால் இத்தனை வெள்ளை வெளேர் என்று இல்லாமல் பழுப்பாகத்தான் இருக்கும். இந்தப் பகுதி மக்கள் என்னை சர்க்கரை அச்சு பொம்மை ஸ்பெஷலிஸ்ட் என்று கௌரவப்படுத்தி இருப்பதற்குக் காரணமே இதன் தரம்தான். ஆறுமாதங்கள் ஆனாலும் பாகு கசியாது, உருகாது. திரும்பவும் அவற்றைக் காப்பி, டீ, போன்ற பானங்களுக்கும் பயன்படுத்தலாம்.


என் பொம்மைகளின் தரத்துக்குக் காரணம் உண்டு. கும்மட்டியில் கரி போட்டுப் பித்தளை உருளியில் சர்க்கரையைப் பாகு வைத்து செய்தால்தான் பாகின் பதம் துல்லியமாக வரும். இதுதான் என் தொழில் ரகசியம் என்றே சொல்லலாம்.

அருகில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர் ஹாஸ்டலில் இருக்கும் எம்.எல்.ஏ ஒருவர் வீட்டுத் திருமணத்துக்கு செய்து கொடுத்துப் பாராட்டு பெற்றேன். கன்னடப் பட டைரக்டர் ஒருவர் வீட்டுத் திருமணம் அமெரிக்காவில் நடந்தது. பொம்மைகளை அழகான அட்டைப் பெட்டிகளில் சுற்றிலும் அரிசிப் பொரியை நிறைய வைத்து பேக்கிங் செய்து தந்தேன். ஒன்று கூட உடையவில்லை. மிகவும் பாராட்டினர்.

நவராத்திரி சமயம் இந்த பொம்மைகள் செய்து குழந்தைகளுக்குக் களிப்பூட்டலாம். நிறைய அரிசிமாவினைப் பரப்பி அதன் மீது இந்த விதவித சர்க்கரை பொம்மைகளை நிற்க வைத்து சுற்றிலும் எறும்பு, பூச்சிகள் வராமல் மருந்துப் பொடியைத் தூவி வைக்கலாம். சரஸ்வதி பூஜையன்று கொலுவில் இருக்கும் பொம்மைகளை வீட்டுக்கு வரும் பெண்கள், குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

போகப் போக, வரும் நவராத்திரிகளில் சர்க்கரை பொம்மைகள் கொலுவில் கொலுவிருக்கும் காட்சியை நாம் ரசிக்கத்தான் போகிறோம்.

- பானுமதி இராமசந்திரன்



முட்டை ஓட்டுக்குள் மணலைப் பரப்பி துவாரத்தை மூடுங்கள்! பழைய பத்திரிகைகளிலிருந்து, வழவழப்பான பேப்பர்களிலிருக்கும் அழகிய முகங்கள், பறவைகள் போன்றவைகளை வெட்டி எடுத்து ஒட்டி வரிசையாக கொலுப்படிகளில் வையுங்கள். பார்க்க அழகாக இருக்கும். விரும்பினால் முட்டை ஓடுகளுக்கு வர்ணமும் பூசலாம்!

- பட்டம்மா




பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக...

நவராத்திரியின் முக்கிய கருத்து என்ன? காணும் பொருளில் எல்லாம் அழகைக் காண்பது. அழகில் எல்லாம் தெய்வீகத்தைக் காண்பது. அழகு கொலுவிருக்கும் எதுவுமே சக்தியைப் பெறுகிறது. சக்தி வளர்ச்சிக்கு அடிகோலுகிறது.

ஒரே ஜன சந்தடியும், இரைச்சலும், பணப்புழக்கமும் (கொஞ்சம் நஞ்சம் இல்லை, இந்தியாவில் அதிகமாகப் பணம் புழங்கும் ஊர்களில் இதுவும் ஒன்று) தொழில் பேச்சுக்களுக்கும் நடுவே அழகாகக் கம்பீரம் கொலுவிருக்கும் ஹோட்டல் வேலன் திருப்பூரில் உள்ளது.

ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குரிய அனைத்து அம்சங்களுடன், தாழ்ந்த கிசுகிசுப்பான பேச்சும், மெல்லிய இழையோடும் சங்கீதமும், கண்ணைக் கூசாத வெளிச்சமுமாக இருக்கும் பஃபே லன்ச்சில், பட்டுப்புடைவையும் கழுத்து நிறைய நகையுமாக ஒரு பெண் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது வியப்பாக



இருந்தது.

சிறிய ஊரான திருப்பூரில் தான் அத்தனை வெளிநாட்டுக்காரர்களும் முற்றுகை இடுகிறார்கள், பனியன்களும் உள்ளாடைகளும், நல்ல துணிகளும் வாங்க. உலகம் முழுக்க இவர்கள் கையில். ஆனால் அந்த அளவிற்கு வேகமாக வளராத கலாசார வீட்டுப் பின்னணி. இந்த வினோதக் கலவைதான் திருப்பூர். இங்கே இப்படி ஒரு நட்சத்திர ஹோட்டல்.

சுவையான செய்திகள் கிடைக்குமே என வேலன் ஹோட்டல்ஸ் லிமிடெடின் அதிபர் திரு.குகனைப் பார்க்கப் போனால்...

அவர் மகள் பல்லவி ஆசிரியராகிக் கொஞ்ச நாளைக்கப்புறம் இந்த ஊர்ப் பெண்களும் நீச்சல் குளம் பக்கம் வர ஆரம்பித்தார்கள். ஆனால் 'நைட்டியுடன் தான் தண்ணீரில் இறங்குவோம் என்றார்கள். நீச்சல் உடை அணிந்தால்தான் நீச்சல் கற்றுக் கொடுக்க முடியும். அதனால் தயங்கிப் பின்வாங்கி விட்டார்கள். ஆனால் அங்கே பாருங்கள்...''

என்று அவர் காட்டிய திசையில் ஆகாய நீலம் பூமியில் இறங்கி விட்டது போன்ற நீச்சல் குளம். அதிலே... அட, நம் இளம் சிறுமிகள் நீச்சல் உடையில் ஜாலியாக நீந்திக் கொண்டிருந்தார்கள். கரையிலே கற்றுக் கொடுப்பவர்.



கம்ப்யூட்டர் கற்றுத் தந்து கொண்டு இருக்க மாணவ அப்பா சிரத்தையாகத் தட்டிக் கொண்டு இருந்தார். இதைப் பற்றிக் கேட்டபோது குகன் சிரித்தார்.

''நீங்கள் பார்க்கும் இந்தக் காட்சிதான் இன்றைய திருப்பூர். சில பத்தாண்டுகளிலே திடீரென தொழில் துறையில் மிக வேகமாக முன்னேறி விட்ட நகரம் இது. ஆனால் எங்கள் வீடுகள் இன்றும் மாறவில்லை. பெண்கள் இன்னும் மாறவில்லை. ஆனால் மாற ஆசைப்படுகிறார்கள்... அதற்குச் சிறந்த உதாரணம் எங்கள் நீச்சல்குளம். இங்கு வரும் வெளிநாட்டுக்காரர்களுக்காக நீச்சல் குளம் கட்டினேன்.

''சரி, இப்படி ஒரு பழமையான ஊரில் நீச்சல்குளம், பார், பஃபே ரெஸ்டாரன்ட், ஐந்து நட்சத்திர அறைகள், ஹெல்த் கிளப் என்று ஆரம்பித்து இருக்கிறீர்கள். திடீரென இப்படி ஒரு ஐடியா எப்படி வந்தது?''

''நானும் ஹொய்சரி பிஸினஸில் இருந்தவன்தான். எங்கள் தொழிற் சாலைக்கு வரும் வெளிநாட்டவர்களை கோயம்புத்தூரில்தான் தங்க வைக்கவேண்டும். அங்கிருந்து இங்கு அழைத்து வந்து, மீண்டும் மாலையில் அழைத்துப் போய்... இது எனக்கு மட்டுமில்லை, எல்லோருக்கும் பிரச்னைதான். அதனால்தான் அவர்க

* குகன்



ளுடைய தரத்தில் ஒரு ஹோட்டலை உரு வாக்க நினைத்தேன்...''


அதன் விளைவுதான் 'பளிச்'சென நிமிர்ந்து நிற்கும் ஹோட்டல் வேலன். ஜெனரல் மேனேஜர் ராபின் சக்கரவர்த்தி, அலுவலக அதிகாரி விஜயராகவன், எக்ஸி கியூட்டிவ் ஹவுஸ்கீப்பர் வீணாஜெய ராமன் என அத்தனை பேரும் இதன் துல்லியத்திற்குப் பாடுபடுகிறார்கள். அறைகளும், பாத்ரூமும், டாய்லெட்டும் தேய்த்து வைத்தாற்போல இருக்கிறது.

''இப்படி உள்ளூரில் ஒரு ஹோட் டலை ஆரம்பித்து இருக்கிறீர்களே இது நம் கலாசாரத்தைப் பாதிக்காதா? இங் குள்ள கலாசார பின்னணியிலுள்ள பெண் கள் நீங்கள் நடத்தும் விழாக்கள், கெட் டு கெதர் இவற்றிற்கு வரும்போது இந்த நவீ னம் அவர்களைக் கவர்ந்து இழுக்காதா?''

குகன் சிரித்தார். ''இது இந்தக் காலக் கட்டத்திற்கு மிகவும் தேவையானது. திருப்பூர் ஜெட் வேகத்தில் வளர்ந்து வரும் சிடி. இங்கே வெளிநாடு போகும் தொழி லதிபர்கள் அதிகம். குடும்பத்துடனும் போகிறார்கள். அங்கிருக்கும் சுத்தத்தை யும், நவீனத்தையும் தெரிந்து கொண்டு வருகிறார்கள். அதை இங்கு பின்பற்ற ஆரம்பிக்கிறார்கள். அப்போது வீடும் மாற வேண்டியதாக இருக்கிறது. அறிவியல் முன்னேற்றமோ, கலாசார முன்னேற் றமோ வேகமாக நடந்து வருகிறது. அப் படிப்பட்டவர்கள் ஒன்று சேர எங்கள் ஹோட்டல் மிக உதவியாக இருக்கிறது. நாங்கள் உதவிதான் செய்கிறோம். எந்தத் தவறான மாற்றத்தையும் புகுத்தவில்லை.''

''அது மட்டுமில்லை. நம் நாடு வேக மாக முன்னேறி வருகிறது என்பதற்கு இது ஓர் சிறந்த உதாரணம்'' என்கிறார் சசிகலா குகன். இவர் பல வெளிநாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறார். ''நாம் எந்தத் துறையிலும் மேனாட்டினருக்குக் குறைந்து போய் விடவில்லை. ஹோட்டல் இன் டஸ்ட்ரியைப் பொறுத்தவரை மேலை நாடுகளுக்கு இணையாக நம்நாடு முன் னேறி இருக்கிறது. எங்கள் ஹோட்டல் மட்டுமேயில்லை, எல்லா ஊர்களிலும் தான் சொல்கிறேன். இந்த பத்து இருபது ஆண்டுகளில் இவற்றைப் பார்த்துதான் ஆச்சரியப்படுகிறேன்'' என்கிறார் இவர். இவர்களுடைய மகன் கௌதமும் இவர் களோடு சேர்ந்து தொழில் கற்றுக் கொண்டு வருகிறார்.

''கௌதம் என்றில்லை. ஒரு புதிய இளைய சமுதாயம் திருப்பூரில் உருவாகிவரு கிறது. இவர்கள் கம்ப்யூட்டர் அடிப்படை யான நவீன கல்வி கற்றவர்கள். ஆனால் நம் பண்பாடிலிருந்து விலகாதவகையில் வீட்டில் வளர்க்கப் பட்டவர்கள். இப்படிப்



நான்பேசநினைப்பதெல்லாம் நான்பேசவேண்டும்



"சரளமாக ஆங்கிலம் பேச வேண்டும்
என்று நினைப்பேன்
அழகாக ஆங்கிலம் பேச வேண்டும்
என்று நினைப்பேன்
பிறர் வியக்கும்படி ஆங்கிலம் பேச
வேண்டும் என்று நினைப்பேன்
ஆனால், முடியவில்லையே என்று எனக்கு வருத்தம், ஏக்கம், ஏமாற்றம்!"

உங்களது வருத்தத்தைப் போக்கிட, ஏக்கத்தை விரட்டிட அழைக்கிறது

விவேகானந்தா கல்வி நிலையம்

ஆம். நீங்கள் நினைப்பதை அழகாக, அருமையாக, தயக்கமின்றி,
சரளமாக ஆங்கிலத்தில் பேசிட முறையான, முழுமையான
பயிற்சியினை வழங்குகிறது **விவேகானந்தா கல்வி நிலையம்**

மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ள விவேகானந்தாவின் அஞ்சல்வழி
ஆங்கிலப் பயிற்சியில் நீங்களும் சேர்ந்து பயன்பெற இன்றே கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டு
எழுதுங்கள் பயிற்சி பற்றிய விபரங்களை உடனே அனுப்புகிறோம் **நேர்முகப்பயிற்சியும் உண்டு**

உங்களது வெற்றியின் முகவரி

VIVEKANANDA GROUP OF INSTITUTES (P) LTD
MADRAS

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால்பெட்டி எண் M. M. - 4986, 9, நடேசன் தெரு, தி. நகர், சென்னை 600 017.

Naga

• சசிகலா




பட்ட ஒரு அற்புதமான தலைமுறையின் கீழ் கொஞ்சம் கொஞ்சமாக திருப்பூர் மாறி வருகிறது. எனவே தொழிலில் ஆகட்டும், அதைச் செய்யும் முறையில் ஆகட்டும் ஒரு பிரகாசமான சூழ்நிலை இருக்கிறது'' என வியந்து பாராட்டுகிறார் இங்குள்ள மெயின்டனன்ஸ் இன்ஜினியர் லக்ஷ்மண்.

ஒரு ஹோட்டலுக்குள் உட்கார்ந்து கொண்டு ஒரு ஊரின் கலாசாரத்தைப் புரிந்து கொள்ள முடியுமா என்ன? அதுதான் நடந்து கொண்டிருந்தது அங்கே.

ஹெல்த் கிளப்பில் உடற்பயிற்சி செய்வதற்கான அனைத்துக் கருவிகளும் இருக்கின்றன. வெந்நீர் ஆவிக் குளியல் நவீன சிகிச்சைகளும் உண்டு.

''இங்கே ஆண்கள்தான் அதிகம் வருகிறார்கள். பெண்கள் கொஞ்சம் கொஞ்சம் தான் வருகிறார்கள். இப்போதுதான் அவர்களுடைய 'ஷெல்'லில் இருந்து வெளியில் வந்துகொண்டு இருக்கிறார்கள். மேலை நாகரீகத்தில் எது நல்லதோ அதை நாம் எடுத்துக் கொள்வதில் தப்பில்லை. பெண்களுக்கு இன்றைய சூழலில் உடற்பயிற்சி என்பது மிகவும் தேவை. அதிக உடல் உழைப்பு இல்லாததால் சதை சேர்ந்து தன்னம்பிக்கையும் இழக்கிறார்கள். இப்படிப் பட்ட உடற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து உடலையும் மனதையும் 'ட்ரிம்'மாக வைத்துக் கொள்வது அவர்களுக்கு மட்டுமல்லாமல், குடும்பத்திற்கும் எதிர்காலத்திற்குமே நல்லது'' என்கிறார் வீணா ஜெயராமன்.

''இங்கே உள்ளூர் மனிதர்களை நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கவர்ந்து வருகிறோம். ஆனால் வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் மீண்டும் மீண்டும் இங்கே வரத்தான் ஆசைப்படுகிறார்கள். எனவே இரண்டு விதமான மனிதர்களை இங்கே பார்க்கலாம். திருப்பூரே மிக அதிகமாகப் பணம் புழங்கும் இடம். ஒவ்வொரு குடும்பமும் சாதாரணமாக பத்தாயிரம் வரை சம்பாதிக்கிறார்கள். இங்கே கடையில் பொருளை வாங்க பேரம் பேசினால் 'என்ன வெளியூரா' என்பார்கள். திருப்பூர்காரர் பேரம் பேச மாட்டார். கேட்ட விலைகொடுத்து வாங்கிக் கொண்டு போய்க் கொண்டே இருப்பார்கள். எனவே இந்த இரு தரப்பு மனிதர்கள் சேரும்போது நேரும் கலாசார கலவை விந்தையை நாங்கள் ரசிக்கிறோம்'' என்கிறார் ராபின் சக்கரவர்த்தி.



''ஆனால் உணவு விஷயத்தில் நான் ரொம்ப ஜாக்ரதையாக இருக்க வேண்டியதாக இருக்கிறது'' என்கிறார் சீஃப்

கென்ஸ் ஒன்றே போதும் பேன்களே வராது எப்போதும்



கென்ஸ் — பேன்களின் முழுமையான எதிரி.
கென்ஸ், பேன்களை ஒழிக்கும். ஈறுகளை அழிக்கும்.
மல்லிகை மணம் கமழும் எண்ணெயில் உருவாகும் கென்ஸ், கேசத்திற்கு நறுமணம் நல்கும். எனவே சக்தி வாய்ந்த கென்ஸைப் பயன்படுத்தி பேன் உங்கள் குழந்தையை பாதிக்காத வண்ணம் பேணுங்கள்.

பெரியவர்களும் உபயோகிக்கலாம்.

கேசத்திற்குத் தேவையான அளவு எடுத்துத் தலையிலும், மயிர்கால்களிலும் நன்கு தடவி 20 நிமிடங்கள் ஊற வைக்கவும். பின்னர் தலையை நன்கு அலசிக் குளிக்கவும். இவ்வாறு வாரம் ஒரு முறை செய்தால் போதும். அப்புறம் பாருங்கள் பேன்களின் எல்லையில்லாத தொல்லை இனி இல்லவே இல்லை.

கென்ஸ் — பேன்களை வானுலகு அனுப்பும்.

கென்ஸ் 15, 55 மி.லி. அளவுகளில் கிடைக்கும்.



கென்ஸ்

PHARM PRODUCTS

தஞ்சாவூர் 613 007.

Insight-3203

செஃபான மொஹைதீன்.

''பளபளவென மின்னும் வண்ணத்தில் உள்ள பேக்கரி ஐட்டங்களும் அதிக மசாலா சேர்த்த உணவுகளுமே உயர்ந்தவை என்ற எண்ணம் எல்லோருக்குமே உண்டு. ஆனால் நாங்கள் இயற்கையான வண்ணத்தில் அதன் சத்து கெடாமல் தந்தபோது தயங்கத்தான் செய்தார்கள். பிறகு அதன் ருசி பழக்கமாக ஆக அவர்களும் நம் பாதைக்கே வந்து விட்டார்கள்'' என்கிறார்.

சென்னையில் தலைசிறந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் பணி செய்துள்ள மொஹைதீன் உள்ளூர் மக்களின் ருசியை மெல்ல மெல்லத் திருப்பிக் கொண்டு இருக்கிறார். இவருடைய



பஃபே லஞ்ச்கம், ஐஸ்கிரீமும் மெதுவாக புகழ்பெற்றுக் கொண்டு இருக்கிறது.

நீச்சல் குளத்தைச் சுற்றி நிழல்குடைகளின் கீழ் அமர்ந்து கொண்டு பட்டுப் புடைவை, ஜிமிக்கி சகிதமாக சாப்பிடும் பெண்கள் ஒரு பக்கம். அவர்களின் கணவன்மார்கள் கோட் சூட் சகிதமாகக் கையில் குளிர் பானங்களுடன் வெளிநாட்டினருடன் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

''ஒரு ஹோட்டலுக்கு அறைகள், லாபி எனத் தங்கும் இடங்களின் தரம் முக்கியம் என் நினைக்கிறீர்களா அல்லது சாப்பிடும் இடம், உணவு என ரெஸ்டாரண்ட்டில் அதிகம் கவனம் செலுத்துவது முக்கியமா?''

''இரண்டும் முக்கியம்தான்'' என்கிறார் குகன். ஹோட்டலில் உணவு சிறப்பானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் உள்ளூர் மக்கள் மீண்டும் மீண்டும் வருவார்கள். அதே சமயம் ஹோட்டல் அறைகளும் மற்ற வசதிகளும் 100% குறைவில்லாமல் இருந்தால்தான் வெளியிலிருந்து வருவார்கள். எனவே இரண்டுமே நிச்சயம் தேவை.''


சினிமாக்களில் வருமே கிராமத் தெருக்கள். அது போல திருப்பூரில் இருக்கும் சந்து பொந்துகளில் எல்லாம் நுழைந்து திடீரென நிமிர்ந்து பார்த்தால் வித்தியாசப்பட்டு நிமிர்ந்து நிற்கிறது ஹோட்டல் வேலன். அழகு கொலு இருக்கும் இங்கு கொலு வைத்தால் என்ன? நவராத்திரிக்கு ஏதாவது செய்வார்களோ?

''செய்யலாம்'' என்கிறார் திருமதி குகன். ''முதல் ஆண்டு விழாவே நாங்கள் வித்தியாசமாகச் செய்தோம். திருப்பூரில் இருக்கும் தொழில் அதிபர்கள் எல்லாம் ஒன்று சேரும் வாய்ப்பாக அது அமைந்தது. அதே போல திருப்பூர்ப் பெண்களை ஒன்று சேர்க்கும் திரு நாளாக நவராத்திரியை அமைக்கலாம். நாங்கள் மட்டுமேயில்லை, எல்லோருமே இதைச் செய்யாமே! இன்று பாங்குகளில் எல்லாம் கொலு வைக்கிறார்கள். தொழில் நிறுவனங்களிலும் இதைக் கொண்டாடும்போது பெண்கள் அனைவரும் ஒன்றுசேரும் சந்தர்ப்பம் கிடைக்கும்'' என்கிறார்கள் இத்தம்பதியினர்.

பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக ஹோட்டலை அமைத்தது போல விழாக்களையும் அமைக்க நினைக்கிறார்கள் போல இருக்கிறது.

- பவித்ரா

படங்கள் : **ராஜு**






ஹால் நிறைய கொலு வீடு நிறைய ஜனங்கள்

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு நான் சிறுமியாயிருந்த சமயம் எங்கள் வீட்டில் வைக்கப்படும் பிரம்மாண்டமான கொலுவை நினைக்கும்போதே மனம் இனிக்கிறது. கலசம் வைத்து, பக்தி சிரத்தையுடனும், ஆசாரத்துடனும் பூஜை செய்து நவராத்திரியை ஆரம்பிப்பது எங்கள் தந்தையாரின் வழக்கம். அந்த ஒன்பது நாட்களிலும் கொலுவைக் காணவரும் ஜனங்களுக்கும் குறைவிருக்காது.

அருகில் உள்ள பள்ளிக்கூடத்திலிருந்து பெஞ்சுகளையும், பூத் தொட்டிகளையும் கொண்டு வந்து எனது தந்தையார் அழகாக பொம்மைகளை அடுக்கி அலங்கரிப்பார். 11 படிகளும் அகலமும், நீளமும் உள்ளதாக இருக்கும். பக்கத்தில் உள்ள ஜன்னலில் 2 அடி உயரமுள்ள முருகர், வள்ளி, தெய்வானை பொம்மை வைத்து வண்ணப் பட்டுப் புடவைகளால் அலங்கரித்து, எரிந்து அணையும் பல்ப் போடப்படும். மற்றொரு இடத்தில் பசுவுடன் கூடிய கிருஷ்ணன் பொம்மையும், எதிரில் கோபிஸ்த்ரீகள் ஆடும் பொம்மைகளும் இடம்பெறும். கிருஷ்ணனுக்குப் பின்னால் மின்விசிறியால் செய்த சக்கரம் சுற்றும். இன்னொரு இடத்தில் ஊஞ்சல் கட்டி தொங்க விட்டிருக்கும். அதில் இரண்டடி உயரமுள்ள செலுலாய்டு பொம்மை வீற்றிருக்கும். ஒவ்வோர் நாளும் ஓர் அவதாரமெடுக்கும் காட்சி கண்ணைப் பறிக்கும் வண்ணமாயிருக்கும்.

அருகில் சற்று தள்ளி ராமர் வனவாசம் செய்யும் காட்சி. அழகான குடில் அமைத்து அதில் சீதை நிற்பது போலவும், வெளியே ராமரும், லக்ஷ்மணனும் நிற்பது போலவும் அப்பாவே தன் கைவேலைப்பாட்டினால் செய்திருப்பார். குடிலுள் அகல் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருக்கும். மேலேயிருக்கும், படிகளில் எல்லாம் தெய்வச் சிலைகளின் (பொம்மை) குடியிருப்புக்கள். நடுவில் உள்ள படிகளில் பாண்ட் செட் என்றும், கல்யாணச் செட் என்றும், இன்னும் வகை வகையான அலங்கார பொம்மைகள் கண்ணைக் கவரும்வண்ணம் அமைந்திருக்கும். கீழே இரண்டு படி நிறைய செட்டியார் பொம்மைகளும் பலவிதமான வியாபாரங்களும்தான். மற்றோரிடத்தில் காடும், குகைகளும் புற்றும் அதற்குரிய மிருகங்களும்



நிறைந்திருக்கும். ஒரு மூலையில், ஏதாவது ஒரு சுவாமி மலையும், இமே சிமெண்ட்டினால் கட்டிய பொம்மைக் குளமும், குட்டி குட்டி உயிருள்ள மீன்கள் அதில் நீந்திக் கொண் டிருக்கும். பக்கத்தில் அழகான பூங்கா. அதில் கோல்ட் எனாமல் போட்ட கோச்வண்டி, ஒரு டேபிள், நான்கு சேர்கள் என செட் டாகயிருக்கும். மற்றும் பார்க்குக்குத் தேவையான அனைத்து பொம்மைகளும் அதில் உலாவரும். ஒருபுறம் மீன்தொட்டியும் அதில் அழகான வண்ண மீன்களும் தண்ணீர் செடிகளுமாகயிருக்கும். அதன் பின்புறம் பல்பொன்று பொருத்தி, அதன் மேல் பல வண்ணங்களைக் கொண்ட கேப் ஒன்றை வைத்து சுற்றி விட, மீன் தொட்டி ஓர் வானவில்லாக மாறி மனதைக் கொள்ளைக் கொள்ளும். எத்தனை வித சிங்காரிப்புக்கள்.

அந்த ஹாலே ஒரு கோவிலாக மாறி இருக்கும். வீடே விழாக் கோலம்தான். அம்மா, அண்ணிகள் இடுப்பு, ஒடிந்து போகும் அந்த ஒன்பது நாளும். பட்சணங் களுக்குக் குறைவிருக்காது. அண்டா கண்டாலும், குண்டான் பொட்டுக்கடலை மாவும்தான். கொலுவைப் பார்க்க ஒருமுறை வந்தால் பட்சணம் வாங்க இருமுறை வரும் பொடிசுகள் அப்பப்பா! கூட்டத்திற்குக் குறைவிருக்காது. பத்துப் பத்துப் பேராக உள்ளே விடும் வேலையாட்கள் முகத்தில் சிரிப்புத் தவழ, பட்டுப் பாவாடை உடலில் தவழ அந்த வட்டாரத்தில் மண்டிக்கார வீட்டுக் கொலு என்றாலே மிகவும் பிரபலம். பேரும் புகழுமாக வாழ்ந்தவர் எனது தந்தையார் அந்த மாதிரி கொலுவை இனி நினைத்துத்தான் பார்க்க முடியுமே தவிர வைத்துப் பார்க்க முடியாது. இக்காலத்து விலைவாசியும் சூழ்நிலையும் அதற்குச் சற்றும் ஒத்துவராது. ஹால் நிறைய பொம்மைகளும் வீடு நிறைய ஜனங்களும், பேரும், புகழும் ஆளுமாகயிருந்த அந்தக் காலம் இனி வருமா? அந்தச் சந்தோஷம்தான் இனி கிடைக்குமா?

- பிரேமா சம்பந்தன்,
பெங்களூர் - 8.

பக்தியின் நவ ரூபங்கள்



இந்துவா, முஸ்லிமா என்று கணிக்க இயலாத மதசார்பற்ற ஞான வாழ்க்கையை மேற்க் கொண்டவர் ஷீரடி மகான். ஆசைகள் பாவங்கள், அஹங்காரம் இவைகளை அகற்றினாலன்றி தன்னை உணர்ந்த ஞானம் பெறுவது கடினம் என்று தன் லீலைகளால் மக்களுக்கு போதித்தவர் சத்குரு.


ஷீரடியில் சமாதியான பகவான் சாயிபாபா மக் களிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். பாபா பக்தியின் ரூபங்கள் ஒன்பது வகையான விதங்கள் எனக் கூறுகிறார். 1. ச்ரவணம் (கேட்டல்), 2. கீர்த்தனை (வேண்டுதல்), 3. ஸ்மரணம் (நினைவுறுத்திக் கொள்ளுதல்), 4. பாதசேவனம் (பாதங்களைத் தஞ்சமடைதல்), 5. அர்ச்சனை (பூஜை), 6. நமஸ்காரம் (வணங்குதல்), 7. தாஸ்யா (சேவை), 8. சங்கத்வா (நட்பு), 9. ஆத்ம நிவேதனம் (தன்னைத்தந்து சரணாகதியடைதல்).

மற்றொரு முக்கிய விசேஷ மென்னவெனில் பாபா இருக்கையில் அமர்ந்து கொண்டே தமது கைகளால் தர்மம் செய்து கொண்டே பூதவுடலை நீத்த நாள் 1918 அக்டோபர் மாதம் 15. இந்தக் குறிப்பிட்ட நாளின் மற்றொரு சிறப்பு என்ன தெரியுமா. இந்துக்களால் புனித நாளாகக் கருதப்படுகின்றன விஜயதசமி தினமாகும். பாபா தனது இவ்வுலக வாழ்வின் எல்லைக் கோட்டை கடப்பதற்கு இந்நாளை தேர்ந்தெடுத்தது பொருத்தமேயாம்.

- கீதாமோகன்

இங்குள்ள பக்கங்களில் காணப்படும் ஓவியர் வேதாவின் படங்கள் – பார்வதி, சரஸ்வதி – ஹளபேடு சிற்பங்கள்.

அட்டையில்– மவுண்ட் அபுவில் அனைத்துப் படைக்கலன்களையும், அதே சமயம் தாமரையையும் ஏந்தி நிற்கும் தேவியின் திருக்கோலம் நவராத்திரி நாயகி போல உள்ளது.



கொலுவிலே வண்ண நீரூற்று

நம் கொலுவில் செலவு அதிகமில்லாமல் எளிய வழியில் நீரூற்று வைக்க இதோ வழி...

தேவையான பொருட்கள்:–

(1) காலியான ரீபில் (இங்க் ஒட்டாமல் வெள்ளையாக இருந்தால் நலம்) – 1, (2) வால்வு ட்யூப். (cycle spare parts கடையில் –2 அல்லது 3 மீட்டர் கிடைக்கும்). (3) வாயகன்ற, சற்றுக் குழிவான பாத்திரம் அல்லது ட்ரே –, (4) தண்ணீர் வைத்துக் கொள்ள பக்கெட் அல்லது பாத்திரம் – 1

முதலில் தேவையான அளவிற்கு ரீபிலை வெட்டிக் கொண்டு, படம் (1)ல் உள்ளது போல் ஜெம் கிளிப் அல்லது மெல்லிய கம்பி கொண்டு இரண்டு மூன்று சுற்று ரீபிலில் சுற்றி வளைத்து ரீபில் நிற்குமாறு, கம்பி அடியில் வளைத்துக் கொள்ளவும்.

நன்கு உயரமான இடத்தில் கொலு படிக்கட்டுக்கு மேலே (அல்லது ஸ்டூல் போட்டு படிக்கட்டிற்கு அடியிலோ) தண்ணீர் பிடித்து பாத்திரத்தை வைத்துக் கொள்ளவும். நீரூற்று அமைய வேண்டிய இடத்தில், வாயகன்ற பாத்திரத்தை வைத்து வால்வு, ட்யூபை, ரீபிலில் சிறிது செருகி, பாத்திரத்தில் நிற்க வைக்க வேண்டும்.

வால்வு ட்யூபின் மறு முனையை நீருள்ள பாத்திரத்தில் அடி வரை மூழ்க வைத்து, கீழ் முனையில் வாய் வைத்து சிறிது உறிஞ்சினால் "சைபன்" முறையில், பாத்திரத்தில் உள்ள நீர், காலியாகும் வரை ட்யூபின் கீழ் முனை வழியே வந்து கொண்டிருக்கும். நீர் உள்ள பாத்திரம் எவ்வளவு உயரமாக உள்ளதோ, அந்த அளவிற்குக் கீழ் முனையில் நீரின் வேகம் அதிகரிக்கும்.

நமது கற்பனையை உபயோகித்து ரீ:பிலை நேராக அல்லது சாய்த்து வைத்து, மேலும் அழகு கூட்டலாம். கூடிய வரை வால்வ் ட்யூப், வெளியே தெரியாமல் மறைத்து வைத்தால் வெகு சிறப்பாக இருக்கும். தண்ணீர் இருக்கும் பாத்திரத்தையும் மறைத்து வைக்கலாம்.

வெறும் தண்ணீராக இல்லாமல், அதில் கலர் பொடி கரைத்து, வண்ண வண்ண நீரூற்றும் உண்டாக்கலாம். நீரூற்றை :போகஸ் செய்து ஓரிரண்டு வண்ண சிறு விளக்குகள் வைத்தும் வண்ண மயமாக்கலாம்.

ரீபில் முனையை மெழுகு கொண்டு அடைத்துவிட்டு, படம் 2ல் உள்ளது போல, அதற்குக் கீழ் நான்கு புறமும் குண்டூசி கொண்டு சிறு சிறு துளையிட்டு ரீபிலை நேராக நிறுத்தினால், ரீபில் பக்கத்துளைகள் வழியாக நீர் மிக அழகாக வரும்.


தேவையில்லாத போது நீரூற்றை நிறுத்த வால்வு ட்யூபை மடித்து ஜெம் கிளிப் போட்டால் நீர் நின்றுவிடும்.

களி மண்ணில் மலை பண்ணி, அதில் நீர் வீழ்ச்சியாகவும் உண்டாக்கலாம்.

கீழுள்ள பாத்திரம் நீர் நிரம்பி விடு முழுவதும் ஆவதற்கு முன், கீழ்ப் பாத்திரத்தில் இறங்கும் நீரை அவ்வப்போது எடுத்து, மேல் பாத்திரத்திலேயே விட்டு விட்டால், தண்ணீரும் செலவாகாது.

- மைதிலி சுப்பிரமணியன்


படம்:1



படம்:2



முழுமையான மாதிரி



AN OPPORTUNITY TO PURSUE A MODELLING CARRIER




Right now, Modelling is the buzz word, with ad agencies spurting up in thousands, the demand for models is on the rise, like never before.

A model - agency, which caters to big ad-agencies is now on the look out for models.

If you are a good looking, under 30, house wife, student or whoever having a pleasing personality, send your detailed resume with your full colour photograph to the following address, soon!

Male models can also apply.



Contact


A.V. ASSOCIATES
72, II Floor, Ranga Complex,
Pondy Bazar, Thyagaraya Road, T.Nagar,
Madras - 600 017. Ph: 8284611, 8272499


ADQUEST 119/94.

100%

பாதுகாப்பான கெரஸின் ஸ்டவ்

Premier







- முதன் முறையாக சேஃப்டி வால்வ் பொருத்தப்பட்டது.
- ISI முத்திரை பெற்ற பர்னர்கள் பொருத்தப்பட்டது
- ஒரே இணைப்புடன் கூடிய கெரஸின் டேங்க்

தயாரிப்பாளர்கள் :

பிரிமியர் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்
84-A, விநாயகா வீதி, சிவானந்தா காலனி,
கோயமுத்தூர் - 641 012 போன்: 448199.

அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்:

இந்திரா & கோ.,
14/428, மலர்விழி காம்ப்ளக்ஸ்,
100 அடி ரோடு, காந்திபுரம்,
கோயமுத்தூர் - 641 012. போன்: 449331

அனைத்து முன்னணி
விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்



குறுநாவல்

நேற்று பூத்த ரோஜா

எலக்ட்ரிக் ரயிலின் தடக், தடக் சத்தம் தலையணைப் பஞ்சை ஊடுருவி சாவித்ரியின் காதைத் துளைத்தது. ஐய்யோ! நேரமாகிவிட்டதா?

யாரோ அவளை சவுக்கால் அடித்துவிட்டாற்போல் துள்ளி எழுந்து கொண்டாள். ரயில் போய்விட்டது. அதனால் எங்கேயோ ஓடிப் போய் ஒளிந்திருந்த மௌனம் மறுபடி ரூமுக்குள் வந்துவிட்டது. தினம் தினம் சாவித்ரிக்கு இப்படியேதான் விடியும். விடிந்தவுடன் அவளுடைய கம்மாடு இல்லாத மண்டையில் ஒரு சுமை ஏறும். ஸ்டவ் பற்ற வைத்து, காப்பி டிகாக்ஷன் போட்டு, குக்கரில் பருப்பு சாதம் வைத்து, காய் நறுக்கி, புளி கரைத்து, உப்பு கலந்து, தாளித்து, குளித்து, குழந்தைகளை எழுப்பி, சிரித்து, அவர்களைச் சிரிக்கப் பண்ணி, ஒன் பாத்ரூமா, டூ பாத்ரூமா விசாரித்து, வழி பண்ணிக் கொடுத்து, கழுவி, உடல் தேய்த்துக் குளிப்பாட்டி, மூர்த்தியை எழுப்பி, காப்பி கலந்து கொடுத்து, அவனிடம் கர்ண கவசமாய் ஒட்டிக் கொள்ளும் பேப்பர் பிடுங்கி, பித்தானற்ற சட்டைகளை சாயங்காலம் தைக்க என்று எடுத்து ஒதுக்கி, எல்லா ஓட்டைகளிலும் பித்தான் நுழையும் சட்டையாகப் பார்த்து, மேட்சாக பான்ட் எடுத்து, குழந்தைகளுக்கு அன்னமூட்டி, ரிக்ஷாக்காரனின் பவ்யங்குக்குப் பயந்து, தண்ணீர் கொடுக்காமல், போர்ன்விடாவோ, போனவோ, காம்ப்ளானோ கொடுக்காமல், தன் அரண்மனையின் வாசல் திறந்து, படிகள் இறங்கி, ஓடி,

"ஸாரிப்பா, கொஞ்சம் லேட்டாய்டிச்சி."

"என்னம்மா இது டெய்லி இப்படியேவா? நான் இன்னும் ரெண்டு ஸ்கூலுங்களுக்குப் போகணும்மா. முடியலைன்னா, வேற ரிக்ஷாவைப் பாருங்கம்மா."

"அதான் ஸாரி, சொல்லிட்டேனேப்பா. நாளைலேர்ந்து அஞ்சி நிமிஷம் முன்னாடியே கொழந்தைங்களோட காத்திருக்கேன்,



போறுமா?"

மூச்சிரைக்க மறுபடி வந்து, மூர்த்திக்குச் சாப்பாடு போட்டு, தானும் உண்டு, சூடு குறையாத டிபன் பெட்டியை கஸ்டமரிட மிருந்து சிப்பாக வாங்கின ஹாண்ட்பேகில் திணித்து, அலங்கரித்து, ஆடை அவிழ்த்து, வேற்றாடை அணிந்து, மூர்த்திக்கு 'பை' சொல்லி, மறுபடி அரண்மனைக் கதவு திறந்து, மாடு, பன்றி வரவேற்புக் கூட்டம் நிறைந்த தெருவில் நடந்து, அடிவயிற்று வலி தாங்கி, காங்கிரீட் பிளாட்ஃபாரம் ஏறி, காத்திருந்து, மின்சார ரயிலின் வருகைக்குக் கால் நோக நின்று, நிற்கும்போது பிளாட்ஃபாரத்தில் நேற்றிரவு ரயிலில் அடிபட்டு சுதந்திரம் வாங்கியவனின் அல்லது வாங்கியவளின் சடலம் பார்த்து, வாய்மருட்டி, நெஞ்சில் பதறி, அதோ ரயில் என்று சர்வமும் மறந்து, இடிபாடுகளுக்கிடையில் நசுங்கி,

சுபா

சகல உடல் உறுப்புகளும் மனிதப் பஞ்சக்கரங்களுக்கிடையில் மாட்டி முறுக்கிக் கொண்டு வெளிப்படுவதைச் சகித்து, மிச்சமிருக்கும் காற்றில் ஆக்ஸிஜனுக்கு அலைந்து சுவாசித்து, ரயில் இறங்கி, பஸ் பிடித்து, ஆபீஸ் போய், சிரித்து, சின்னச் சின்ன சீண்டல்களை வேறு வழியின்றி அனுமதித்து... ஐயோ... எவ்வளவு பெரிய சுமை?

சாவித்ரிக்குத் தள்ளாட்டமாய் இருந்தது. தலைச் சுமையின் பாரம் அப்படியே அவளை அமுத்திவிடும் போலிருந்தது. ஒரு முறை சிலிர்த்துக் கொண்டாள். குழந்தைகள் இரண்டும் ஜியாமெட்ரியின் எந்த ஒரு வடிவுக்கும் ஒத்துப் போகாமல் உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஆஸ்திக்கு, ஆசைக்கு.

ஆசைக்குப் பெற்றது, படுக்கையை நனைத்திருந்தது. சட். நேற்று இரவு அவளைப் படுக்கு முன் பாத்ரூம் போகச் சொல்லவில்லை. கோடை செய்த அதிர்ஷ்டமாக நேற்றிரவு மழை. அதனால் சூழ்நிலையில் புழுக்கம் குறைந்து குறைந்தபட்ச வெப்பநிலை இருபது டிகிரி செல்ஷியஸ் என்று இன்றிரவு சந்தியாவோ, பாத்திமாவோ, ஷோபனாவோ, வரதராஜனோ, செந்தமிழ்ச் செல்வனோ, யாரோ ஒரு புன்னகை முகமூடி தரித்தவனோ சொல்லப் போவதால், குளிரில் போர்வை இன்றி படுக்கை நனைந்து விட்டது. வேலைக்காரிக்குப் பெட் ஷீட்டைப் போட்டால் கோபிப்பாள். அவள் கோபத்திற்கு இலக்காகாமல் இருக்க வேண்டுமென்றால் அவளேதான் தோய்த்துப் போட வேண்டும். எதில் தோய்ப்பது? ஏரியலிலா? அல்ட்ரா சர்ஃபிலா? 'தேடிக் கொண்டே இருப்பீங்க' என்று ஒரு சோப்புத் தூள் விளம்பரம் சொல்லுமே. அந்த விளம்பரத்தில் வரும் பெண்ணுக்கு விளம்பரத்தில்தான் கணவன், குழந்தை எல்லாம். உண்மையில் கல்யாணமானவள் என்றால் முகத்தில் பல்பு தொங்கவிட்ட மாதிரி, இவ்வளவு பிரகாசம் இருக்குமா என்ன?

வெல்லச் சீடையை எண்ணெயில் போட்டேன். அலர்ந்து போய்விட்டது. உடனே கோதுமை மாவு போட்டுப் பிசைந்து போட்டேன். உருண்டையாக, உருப்படியாக வந்தது.

- தர்மாம்பாள்



சாவித்ரிக்கும் ஒரு முறை படுக்கையை நனைத்தால் என்ன என்று ஒரு சின்னச் சின்ன ஆசை தோன்றியது. கச்சக், கச்சக், கச்சக் என்று ஏதோ ஓர் மூலையில் இருந்து பல்லி சூள் கொட்டியது. அவள் ஆசை நிறைவேறும் என்று ஆசீர்வதிக்கப்பட்டு விட்டது. உண்மைதானே! இன்னும் சில வருடங்களில், உடல் சுருங்கி, தோல் எலும்புடன் ஒட்டி, படுக்கையிலேயே சிலுவையாக அறைபட்ட பின்பு அதுதானே நடக்கப் போகிறது?

டென் பை ட்வெல்வ் படுக்கையறையிலிருந்து வெளியே வந்தாள். ஹாலில் சோஃபா செட்டும், டைனிங் டேபிளும், சேர்களும் உறைந்த சித்திரமாகத் தெரிந்தன. தெருக்குழாய், மஜ்னு கல்லால் அடிபட்ட மாதிரி, யார் யாராலோ லொடக், லொடக், லொடய் லொடக்என்று அடிபட்டுக் கொண்டிருந்தது. நல்லவேளை, இந்தக் கூண்டில் குழாய் அடிக்கிற வேலை இல்லை. ஓவர் ஹெட் டாங்க், போர் பம்ப். குழாயைத் திறந்தால் சர்ர் என்று குமிழ்களும், நீருமாகக் கொட்டும். குழாயடியில் நடக்கும் சண்டையின் வேறு வேறு விதவிதமான குரல்கள் அவளுடைய செவிப்பறைகளில் மோதின. எல்லாமே பெண்களின் குரல்கள். ஆண்கள் எல்லாம் முதல் நாள் வேலைக் களைப்புத் தீர பெரும் குறட்டைகளுடன் உறங்கிக் கொண்டிருப்பார்கள். பெண்கள் எல்லாம் சும்மாதானே பொழுது போக்குகிறார்கள்? அதனால் அவர்கள்தான் தண்ணீர் பிடிக்க வேண்டும். தண்ணீர் வரும் நேரம் அவர்கள் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். கணவன் வீட்டுக்கு வரும் நேரம் அவர்கள் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். அவன் சந்தோஷத்திற்குக் கூப்பிடும் நேரம் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். மற்ற நேரங்களில் பெண்கள் சர்வ சுதந்திரத்துடன், அடக்க ஒடுக்கமாக, குறட்டை ஒலியின்றி, மூச்சு ஒலி இன்றித் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். பலே. பேஷ். பெண்களுக்கு மட்டும் எப்போதும் குரங்குகள்தான் நீதியும், நியாயமும் அளிக்கவேண்டும் என்று யாரோ சட்டமியற்றி விட்டார்கள். எதிர்த்துக் கேட்கப்படாமல் அந்தச் சட்டம்தான் இன்றுவரை செல்லுபடியாகிறது - கோர்ட்டில் பியூன்

84 பிறந்த நாட்களை கொண்டாடிய பிறகு நாங்கள் எங்களை பிறந்த நாள் கொண்டாடுவதில் வல்லுனர்களாகக் கருதுவதில் ஆச்சரியம் இல்லை!

அறிமுகப் படுத்துகிறோம்

DUGAR



உங்கள் செல்லக் குழந்தை வாயில் ஸில்வர் ஸ்பூனுடன் பிறக்கா விட்டால் என்ன! இதோ அதை ஈடுகட்ட ஓர் அரிய வாய்ப்பு. துகர் டெபாசிட் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் அக்டோபர் 15ம் தேதிக்கு முன்பு டெபாசிட் செய்திடுங்கள். நீங்கள், பிரமிக்க வைக்கும் ஓர் இரட்டை ஆச்சரியம் பெறுவீர்கள். அத்துடன் 84 வயது வல்லுனர்களின் நல்வாழ்த்துக்களையும் பெற்றிடுவீர்கள்.

DUGAR FINANCE INDIA LTD

HIRE PURCHASE ⊃ LEASING ⊃ MERCHANT BANKING ⊃ PROPERTY DEVELOPMENT ⊃ PUBLIC DEPOSITS ⊃ FOREIGN EXCHANGE

REGD. OFFICE: DUGAR TOWERS, 123 MARSHALLS ROAD, MADRAS 600 008. ☎ 8283535 (10 LINES) FAX: 8281122

BRANCHES:

											SALEM	☎	68709
ADYAR	☎	4919046	MYLAPORE	☎	4942256	CALICUT	☎	63944	GUDUR	☎	21830	SECUNDERABAD	☎	846006
MOUNTROAD	☎	8521868	BANGALORE	☎	5585590	COIMBATORE	☎	231867	MADURAI	☎	36106	TIRUPATI	☎	21077
T.NAGAR	☎	4341541	MALLESWARAM	☎	365276	ERNAKULAM	☎	369615	NELLORE	☎	27576	VISHAKAPATNAM	☎	46581

Particulars required to be specified as per Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Companies (Advertisement) Rules, 1977.

(a) **Name of the Company:** DUGAR FINANCE INDIA LIMITED (b) **Date of Incorporation:** 20th May, 1981 (c) **Business:** Hire Purchase, Leasing, Property Development, Merchant Banking, Foreign Exchange & Portfolio Management. (d) **Branches:** Mount Road, Mylapore, T. Nagar, Adayar (Madras), Bangalore, Malleswaram, Calicut, Coimbatore, Ernakulam, Gudur, Madurai, Nellore, Salem, Secunderabad, Tirupati, Visakhapatnam (e) **Management:** The Company is managed by its Managing Director under the supervision of the Board.

(f) Names, Addresses, and occupation of the Directors
• **DR. C. ANNA RAO** (Chairman) Former Chairman, Board of Trustees, TTD. [illegible] Road, [illegible] Colony, Tirupati 517 507 • **Shri. B. LALCHAND MARLECHA** (Vice-Chairman) Merchant & Banker 30, [illegible] Street, [illegible], Madras 600 [illegible] • **Shri. C.R. RAO** Company Director White House, Gudur 524 101 (A.P.) • **Shri. V. RAMACHANDRAN** Senior Advocate [illegible], Nungambakkam High Road, Madras 600 034 • **Shri. C.V. KRISHNAIAH** [illegible] Nehru Nagar, Gudur 524 101 (A.P.) • **Shri. R. RAMAKRISHNAN** Industrialist & Former Member, [illegible], 18, [illegible] Road, Madras 600 018 • **Shri. M.K. PANDURANGA SETTY** Industrialist & Company Director [illegible], 37, Bull Temple Road, Bangalore 560 004 • **Shri. K.S.T. PANI** Chief General Manager, [illegible], Madras 600 010 • **Shri. T. PADAM DUGAR** Company Director 21, Commander-in-chief Road, Madras 600 105. • **Shri. N. TARACHAND DUGAR** (Managing Director) Industrialist & Banker 21, Commander-in-chief Road, Madras 600 105.

(g) & (h) Profits of the Company, before and after making provision for Tax and Dividends declared by the Company for the three financial years immediately preceding the date of advertisement.

Year ended	Profit before provision for tax (Rs. in Lakhs)	Profit after provision for tax (Rs. in Lakhs)	Dividend declared
30-06-1991	48.89	48.89	25%
30-06-1992	81.56	79.26	25%
30-06-1993	92.45	81.90	25%

(i) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets.

Liabilities	30-06-93 (Rs. in Lakhs)	30-06-92 (Rs. in Lakhs)	Assets	30-06-93 (Rs. in Lakhs)	30-06-92 (Rs. in Lakhs)
Share Capital	300.00	300.00	Fixed Assets	590.77	532.34
Reserves & Surplus	111.59	84.36	Investment	64.69	27.00
Secured Loans	686.77	664.49	Current Assets	1855.32	1610.21
Unsecured Loans	1303.37	924.81	Loans & Advances	212.74	199.33
Current Liabilities & Provisions	442.80	400.77	Miscellaneous Expenditure	59.81	15.55
	2783.33	2384.43		2783.33	2384.43

(j) **Contingent liabilities**

	30-06-93 (in Lakhs)	30-06-92 (in Lakhs)
(a) Estimated amount of contracts remaining to be executed on capital account and not provided for	1.00	3.00
(b) Counter guarantees to Bankers.	5.00	5.00
The Company can raise by way of deposits under the directions	3517.80	2788.12
Aggregate of deposits actually held	1303.37	924.81

(k) **The Company has no overdue deposits other than unclaimed deposits**

(l) **The Company hereby declares** (i) that the company has complied with the applicable provisions of the directions of Reserve Bank of India. (ii) that the compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the RBI and (iii) that the deposits accepted by the Company will be unsecured and rank pari passu with other unsecured liabilities.

This advertisement is issued on the authority and in the name of the Board of Directors of the Company. The text was approved by the Board of Directors on 23rd December 1993 and a copy duly signed by a majority of the Directors has been filed with the Regional Office of Reserve Bank of India, Department of Financial Companies, Bangalore.

By Order of the Board
For DUGAR FINANCE INDIA LIMITED
N.TARACHAND DUGAR, Managing Director.

● TAKEWING ● DFIL ● A438 ● 94 ●

மட்டும் செருப்பணியக் கூடாது என்று பிரிட்டிஷ்காரன் இட்ட சட்டம் போல.

சாவித்ரி பின்னும் ஒரு முறை தலையைச் சிலுப்பி உறக்கத்தைக் கல்லெடுத்து அடித்தாள். சமையல் அறைக்குள் நுழைந்தாள். விளக்குப் போட்டாள். என்னவோ ஓர் அணுகுண்டே விழுந்துவிட்ட மாதிரி, சமையல் மேடையில் திரண்டு புரட்சிக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த கரப்பான் பூச்சிகள் ஓடி ஒளிந்து கொண்டன. சாவித்ரிக்குக் கரப்பான்களைக் கண்டால் எரிச்சல் வருவதில்லை. மாறாகப் பரிதாபம்தான். ஆண் கரப்பான்கள் எல்லாம் எங்கோ ஒரு பாதுகாப்பான இடத்தில் பதுங்கியிருந்து, பெண் கரப்பான்களை இரை தேடி வரச் சொல்லி அனுப்பி விடுகின்றன என்று அவளுக்குள் ஒரு தீர்மானம். அதனால் அவையும் கரப்பான்களைப் பார்த்தால் 'ஐயோ பாவம்'தான்.

ஸ்டவ் பற்ற வைத்தாள். தண்ணீர் சூடு பிடிக்குமுன் ஸ்டவ் அணைந்துவிட்டது. காஸ் தீர்ந்து விட்டது. பரவாயில்லை. இந்த மட்டிலும் காலையிலேயே தீர்ந்து போய் விட்டது. இல்லாவிட்டால் அதுவும் சேர்ந்து அவளைப் பழிவாங்கி எட்டரையிலிருந்து. எட்டேமுக்காலுக்குத்தான் தீரும். மூர்த்தி பாத்ரூமில் தன் பேப்பர் கவசத்துடன் இருப்பான். அந்த நேரத்தில் நிஜமாகவே ஒரு பூகம்பமே வந்து வீட்டைத் தாக்கினால்கூட அவனுக்குப் பிரக்ஞை இருக்காது.

பேப்பரில் அப்படி என்ன பதிப்பிக்கிறார்கள்? சாவு, பிறப்பு, கொலை, கொள்ளை தானே? நம் மந்திரிகள் பெயர் வாயில் நுழையா நாட்டிற்குச் சென்று 'ஈ' என்று இளித்துக் கடன் கேட்டு, அந்த நாடும் ஒத்துக் கொண்டதுதானே? ஷேர் மார்க்கெட்டில் ஏமாந்த சோணகிரிகளின் பணத்தையெல்லாம் ஜாக்கோ, வேறு எதுவோ எங்கே பதுக்கியிருக்கிறார்கள் என்று தேடிக் கொண்டிருக்கிறதுதானே? அதைப் போய் எப்படி இவ்வளவு சுவாரசியமாய்ப் படிக்க இயலும்? காஸ் சிலிண்டர் மாற்றுவதற்கு அந்த நேரத்தில் ஒரு பெண்டாட்டி, புருஷனை அழைப்பதே மிகப் பெரிய நம்பிக்கைத் துரோகமாகி விடும். பத்திரிகையில் வெளியாகிற புருஷ ஜாதி சமையல் செய்கிற ஜோக்கெல்லாம் கல்வெட்டு உண்மைகளாகிவிடும்.


சாவித்ரி சிலிண்டர் மாற்றினாள். டிகாக்ஷனுக்குத் தண்ணீர் ஊற்றினாள். குக்கரை ஏற்றினாள். அரிசி களைந்து போட்டாள். பருப்பு வைத்தாள். முதல் நாளிரவே அரிந்த காய்கறிகளை ஃப்ரிட்ஜிலிருந்து எடுத்து ஒரு முறை குளிப்பாட்டி வைத்தாள். குக்கர் அவளை விசிலடித்து அழைக்கும்வரை, புளி கரைத்து, பொடி கரைத்து, மிச்சமிருந்த பாத்திர பண்டங்களை 'விம்பார்' போட்டுத் தேய்த்துக் கழுவிக் காத்திருந்தாள். குக்கர் விசிலடித்தது. அப்பாடா! வெயிட் போட்டாள். தற்காலிக சுதந்திரம். பாத்ரூமுக்கு ஓடினாள். களைந்தாள், நனைந்தாள். வெள்ளிக் கிழமை. பழமொழிகள் எல்லாம் பெண்களை வெள்ளிக்கிழமை எண்ணெய் ஸ்நானம் செய்யச் சொல்கின்றன. ஈரத்தலை, தலைவலிக்கு என்ன செய்வது என்று சொல்லாமல் மௌனிக்கின்றன. ஆபீஸ் நாட்களில் வெள்ளிக்கிழமை எண்ணெய்க் குளியல் கேசத்திற்குக் கேடு விளைவிக்கும் என்ற அனுபவபூர்வமான கண்டுபிடிப்பை இனிமேல் சியக்காய்த் தூள் பாக்கெட்டுகளில் எல்லாம் சட்டபூர்வமான எச்சரிக்கையாக அச்சடிக்க வேண்டும்.

உடம்பைத் துடைத்துக் கொண்டாள். கேசத்திலிருந்த ஒரு நாள் உறவு கொண்டாடிய நரை மட்டும், சிக்காகியிருந்த முடியிலிருந்து பிய்த்தெடுத்தாள். பாத்ரூம் கண்ணாடியில் உடம்பு தெரிந்தது. முன்பு பார்க்கப் பிரியமாயிருந்தது. இன்றைக்கு...? மாசக் கடைசி பற்பசைக் குப்பி ஞாபகம்தான் வருகிறது. உபயோகிப்பவர்கள் ஒழுங்காய் உபயோகித்தால் பற்பசைக் குப்பி கூடப் பார்க்க ரம்யமாகத்தானிருக்கும்! துவட்டிக் கொண்டாள். ஹூக்குச் சரியில்லாத பிராவை எரிச்சலுடன் மாட்டிக் கொண்டாள். அதற்குக் கூடத் திட்டுவிழும் - அவசர தருணத்தின் போது. அடப்போய்யா, போ! ரவிக்கையை இப்போதே மாட்டினால் அது, அதனுடைய கோடுகளை இழந்து, ஆபீஸ் போவதற்குள்



இளநீர் நிறைய இருந்ததால், சப்பாத்தி மாவில் விட்டுப் பிசைந்தேன். சப்பாத்தியா, ஸாஃப்டாத்தியா என்று வியந்தேன்.

- தர்மாம்பாள்



கொழுக்கட்டை சொப்பு விரியாமல் வரவேண்டும் என்றால், ஒரு கிலோ அரிசிக்கு அரை ஆழாக்கு உளுத்தம் பருப்பு சேர்த்து அரைக்கவும்.

- தர்மாம்பாள்

எண்பது வயதுக் கிழவியின் முகத்தை ஒத்திருக்கும். நைட்டியையே மாட்டிக் கொண்டாள். வெளியே வந்தாள்.

"குட்மார்னிங் மம்மி."

"மார்னிங் சின்னு."

"ஏம்மா பெட்ஷீட்டிலேர்ந்து ஒரு மாதிரி நாத்தமடிக்கிறது?"

"வைஜூ மூச்சா போய்ட்டாடா கண்ணா!"

"இந்த வைஜூ எப்பவும் இப்படித்தான். நாளைலேர்ந்து நீ அவளை என் பக்கத்திலே படுக்க விடாதே மம்மி."

"சரி" அடுப்பில் இருந்து குக்கரை இறக்கி, கறிக்குத் தாளித்தாள்.

"ஏன் நீ பெட்ஷீட்டைத் தோய்க்கலே?"

சாவித்ரி கடுகை உள்ளங்கையில் திட்டமாக எடுத்தாள். எண்ணெய் காய்ந்திருக்குமா? இப்போது போட்டால் கடுகு முழுசாகப் பொரியுமா? கடுகு பாதி பொரிந்து, மீதி பொரியாமல் இருந்தால் மூர்த்திக்குப் பிடிக்காது.

"கேக்றேன்ல?"

"என்ன கேட்டேடா?"

"ஏன் பெட்ஷீட்டைத் தோய்க்கலே?"

"அம்மாக்கு டயம் இல்லேடா கண்ணா!"

கடுகு மணமாகப் பொரிந்தது.

"அப்படின்னா வைஜூவை இனிமே பெட்ஷீட்லே முச்சா போகச் சொல்லாதே."

"சரி."

"இல்லேன்னா நான் இன்னிக்கு ஸ்கூலுக்குப் போக மாட்டேன்."

பையன் எபோதும் இப்படித்தான். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவான். வேறு எந்த வாக்கியத்துடனும் 'நான் ஸ்கூலுக்குப் போக மாட்டேன்' என்பதை 'நமஹ' மாதிரி சேர்த்துச் சொல்வான். அவனைச் சமாதானப்படுத்த வேண்டும். சாவித்ரியின் காலை நேர ஓவர்டைம். சமாதானப்படுத்தினாள்.

வீடு எழுந்துவிட்டது. வைஜூ எழும்போதே சிணுங்கலுடன்தான் எழுந்தாள். அர்த்தமில்லாப் பிடிவாதம். மூர்த்தி, வைஜூவை அழப்பண்ணிவிட்டதாக, அவள் மீது குற்றம்சாட்டினான். சாவித்ரி எதிர்வாதம் செய்யவில்லை. அது வேஸ்ட். எதிர்வாதம் அவளையும் பிடிவாதக்காரியாக மாற்றும். அனாவசியமாக அவளைப் பெற்ற தாய், தாய்க்குத் தாய் என்று பரம்பரையே அந்த ஃப்ளாட்டின் ஹாலுக்கு இழுத்துக் கொண்டு வரப்படுவார்கள்.

குழந்தைகளை அலங்கரித்தாள். பருப்பு சாதமும் போனஸூம் கொடுத்தாள். போனஸ் குடித்துவிட்டுப் பையன் கராத்தே கற்றுக் கொள்ளப் போவதாகச் சொன்னான். பெண் நாட்டிய ஆசையைத் தெரிவித்தாள். டீவி. குழந்தைகளை நிறையவே பாதிக்கிறது. சாவித்ரியால் டீவி. அம்மா மாதிரி முகத்தில் பெருமிதம் பொங்கக் குழந்தைகளைப் பார்க்க இயலவில்லை. அதற்கெல்லாம் பயிற்சி நடந்திருக்கும். கட், ஸ்டார்ட், லைட்ஸ் ஆன் எல்லாம் இருந்திருக்கும். சாவித்ரிக்கு க்வார்ட்ஸ் கடிகாரம்தான் கண்முன் தெரியும். ஐயய்யோ நேரமாகிவிட்டதே?

மூர்த்தியைப் பார்த்தாள். டைனிங் டேபிள் முன் உட்கார்ந்திருந்தான். எதிரில் தட்டு இருந்தது. கையில் ரொட்டித் துண்டை வைத்திருந்தான். ஆனால் கவனம் முழுக்கப் பேப்பரில். தட்டில் இருந்த ஜாமை இரண்டு ஈக்கள் ஆனந்தமாக ருசித்துக் கொண்டிருந்தன. சாவித்ரிக்கு எரிச்சலாக வந்தது.

"மூர்த்தி.. நான் இன்னிக்கு எங்க ஆஃபீஸ் கிருஷ்ணகுமாரோட ஓடிப் போப்போறேன். ஃபர்ஸ்ட் ஸைட் காதல்" என்று தொண்டை நரம்பு புடைக்கக் கத்தினாள்.

மூர்த்தி நிமிர்ந்து ஒரு வெற்றுப் பார்வை பார்த்தான்.

"ம்... என்ன சொன்னே? ரொட்டியா? போதும். இதுக்கு மேலே சாப்பிட முடியாது" என்று சொல்லி எழுந்தான். நாற்காலியின் முதுகில் படர்ந்திருந்த துண்டில் கை துடைத்து, துண்டைத் தரையில் உதறிவிட்டு, சூட்கேஸூடன் கதவு நோக்கி நடந்தான்.

"நான் வரேன். ஆபீஸூக்கு டயமாய்டிச்சி" என்று அவன் குரல் கதவுக்குப் பின்னால் கேட்டது.

அல்ட்ரா கிரைண்ட்+ வீட்ல இருந்தா வேலை எவ்வளவு ஈஸி!




ULTRA
GRIND +

12 month warranty


இந்தியாவின் முதல் "டேபிள் டாப்" ஆட்டுக்கல்

என்னைப் போல ஒங்களப் போல பிஸியா இருக்கற புதுயுகப் பெண்களுக் காகவே தயாரிச்சிருக்காங்க இந்த அல்ட்ரா கிரைண்ட் + ஆமாம்! இந்த அல்ட்ரா கிரைண்ட் + வந்ததிலேருந்து இட்லி தோசைக்கு மாவு அரைக்கறது ஈஸி! சட்னிக்கு தேங்காய் துருவறது ஈஸி! சப்பாத்தி மாவு பிசையறது ஈஸி! இப்படி, நம்மளோட வேலையெல்லாம் எவ்வளவு ஈஸியாயிடுச்சு பாத்தீங்களா?

என்னப் பொறுத்தவரைக்கும் இல்லத்தரசிக்கு வசதி மட்டுமில்ல; இல்லத்திற்கே பெருமை தர்றது இந்த அல்ட்ரா கிரைண்ட் + என்ன, நான் சொல்றது சரிதானே!



மாவு பிசை சாதனம்



தேங்காய்த் துருவி

எல்ஜி தயாரிப்பு

எல்ஜி அல்ட்ரா அப்ளையன்சஸ் லிட்
எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 045.
போன்: 0422-216132. பேக்ஸ்: 0422-212810
மண்டல அலுவலகம்: சிந்தூர் டவர்ஸ்,
95, லஸ் சர்ச் சாலை, சென்னை- 600 004. தொ.பே: 4992101

PATENT PENDING DESIGN REGD. NO. 163445 & 163446.

புதுயுக வசதி அல்ட்ரா. புதியதோர் அனுபவம் அல்ட்ரா.

Anugrah 1693/94

சாவித்ரி சமையல் அறைக்குள் நுழைந்தாள். ஏதோ ஒரு கதையில் சுஜாதா சொல்லியிருந்த மாதிரி சமையலறை எருமை மாடு பிரசவித்த இடமாகத் தெரிந்தது.

ஓரளவு சகிக்கிற மாதிரி ஒழுங்குபடுத்தினாள். வெளிக்கதவு தாளிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்து சில்ட்ரன்ஸ் பெட்ரூம் என்று குழந்தைகள் பெயர் வைத்திருந்த அறைக்குள் நுழைந்தாள்.

அங்கேதான் சாவித்ரியின் டிரஸ்ஸிங் டேபிள் இருந்தது. அதைப் பார்த்தால் சாவித்ரிக்குப் பழைய நினைவு மண்டையைப் பிளக்கும். அந்த ட்ரஸ்ஸிங் டேபிளை அப்பா, அவளுடைய அக்காவின் கல்யாணத்திற்காகப் பண்ணியது. ரோஸ்வுட். ரோஸ் வுட் என்றால் அந்த மரத்தில் ரோஜா வாசனை அடிக்கும் என்று நம்பி முகர்ந்து பார்க்கும் வயது சாவித்ரிக்கு அப்போது. ரோஸ்வுட்டிலிருந்து ரோஜா வாசனை வரவில்லை. வேலைப்பாடுகள் நிறைந்த டிரஸ்ஸிங் டேபிள் அக்காவின் புக்ககப் பயணத்தின் போது ஒரு லாரி மீதேறி பல்லக்கு அசைகிற மாதிரி, அசைந்து அசைந்து சென்றதை என்னவோ ரொம்ப நெருங்கிய சொந்தத்தின் உயிரற்ற உடல் போகிற மாதிரி நினைத்து சாவித்ரி அப்போது அழுதாள். அக்காவின் பிரிவுக்காக அவள் அழுவதாக மற்றவர்கள் சந்தோஷப்பட்டார்கள். அக்கா ஆறாவது மாதமே திரும்பி வந்துவிட்டாள். அவள் அடக்கம் அற்றவள், கணவனை சந்தோஷமாக வைத்திருக்கத் தெரியாதவள் என்று அவளுடைய மாமியார் வீட்டில் இருந்து கண்டனக் கடிதம் வந்தது. ஆனால் அக்காவின் வயிறு பெரிதாக இருந்தது. கணவனைச் சந்தோஷமாக வைத்திருப்பது என்றால் என்ன?

அம்மாவும், அப்பாவும் அக்காவை வீட்டுக் கூண்டில் நிற்க வைத்து விசாரித்தார்கள். சூதாடி, குடிகாரன், ஸ்த்ரீலோலன், என்று அக்கா அவள் கட்சியை எடுத்துரைத்தாள். காலில் மாமியார் போட்ட சூட்டைக் காண்பித்தாள்.

அம்மா அழுதாள். 'இந்தக் காலத்திலா இப்படியெல்லாம்' என்று மறுகினாள்.

"என்னம்மா இது. இருப்பியும் என்னை அந்த வீட்டுக்குப் போகச் சொல்லாதே. அவங்களுக்கு அனாவசியமாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் செலவு வந்துடும்" என்று திரும்பப் போகச் சொன்ன அம்மாவின் வற்புறுத்தலுக்குப் பதிலாக அம்மாவின் மேல் சர்வ அலட்சியமாக ஓர் இடியை எடுத்து வீசினாள் அக்கா. அம்மா வாய் திறந்து, வாயடைத்துப் போனாள்.

"டீ... சாவித்ரீ... இங்க வா. உனக்கு ட்ரஸ்ஸிங் டேபிள் மேல ஒரு கண்ணுன்னு தெரியும். அதுக்காகவே அதை நான் ஓர் ஆளை ஏற்பாடு பண்ணி கட்டி லாரில நம்ப அட்ரஸுக்கு அனுப்பிட்டுத்தான் வந்தேன். இனிமே அது ஒனக்கே, ஒனக்குத்தான்" என்று சாவித்ரியை இழுத்து வைத்துக் கொண்டு அக்கா சொன்னாள். ட்ரஸ்ஸிங் டேபிள் வந்துவிட்டது. சாவித்ரி எவ்வளவோ மறுத்தும் கூட, அது அவளோடு இன்னொரு லாரியில் பல்லக்கு போல அசைந்து, அசைந்து வந்துவிட்டது. அதில் இப்போதெல்லாம் ரோஜா வாசனை வருவதில்லை. அக்காவின் வாழ்வு கருகிய வாசனைதான் வருகிறது. அக்காவை இப்போதும் கிராமத்தில் இருக்கும் மற்ற மூத்த பெண்கள் வாழாவெட்டி என்றுதான் சொல்கிறார்கள். ஒரு விசேஷத்திற்கும் அவளை முன்னால் நிற்க விடாமல் பின்னால் தள்ளிவிடுகிறார்கள்.

ம்ஹூம். இந்த ஆண்கள்!

ஐயையோ, இந்நேரம் ஃபாஸ்ட் ட்ரெயின் புறப்பட்டிருக்குமே! அவசர அவசரமாக ட்ரஸ் பண்ணிக் கொண்டாள். மை தீட்டி, பொட்டு வைத்து, பிளாஸ்டிக் பையில் போட்டு வைத்திருந்த பூச்சரம் எடுத்துப் பின்னந்தலையில் செருகிக் கொண்டாள்.

கைப்பையைத் திறந்து ரயில் ஸீஸன் டிக்கெட் இருக்கிறதா என்று பார்த்து, புடைவை தடுக்க ஓடிவந்து செருப்பு மாட்டிக் கதவு திறந்து, பூட்டி தெருவிற்கு ஓடிவந்தாள்.

தெருவில் வழக்கம்போல் சேற்றில் குளித்த பன்றி வாலை ஆட்டிக் கொண்டே,


என்ன சாதம் தயாரிக்கும் பொழுது வீட்டிலிருக்கும் கறிவேப்பிலைப் பொடியில் சிறிது சேர்த்துக் கலந்து, சாதம் தயாரித்தால் சுவை கூடுதலாக இருக்கும்.

- பாலசரஸ்வதி



எங்கள் விட்டில் ஒரு மாதக் குழந்தை இரவில் தூங்காமல் எங்களையும் தூங்க விடாமல் இருந்தது. கொஞ்ச நாட்கள் ரொம்ப அவதிப்பட்டோம். எங்கள் அத்தை ஒருநாள் அரை ஸ்பூன் தேனைக் கொடுத்தார்கள். என்ன ஆச்சரியம்! உடனே சிறிது நேரத்தில் தூங்கிவிட்டது. மலத்தையும் கட்டவில்லை. என் குழந்தைக்கு ஒரு வயதாகிவிட்டது. இன்றும் தூங்காமல் இரவில் படுத்தினால் தேனின் அளவைக் கொஞ்சம் அதிகம் சேர்த்துக் கொடுத்து விடுகிறேன். இரவில் தூங்காத சின்னக் குழந்தைகளுக்கு நீங்களும் தேனைப் பயன்படுத்தலாம்.

\- லக்ஷ்மி



அவள் பாதையில் திடீரென்று கடந்தது. சாவித்ரி திடுக்கிட்டு நின்றாள். யாரோ விரட்டியடித்திருக்க வேண்டும். அந்தப் பன்றியின் பின்னால் கிர்ரக் கிர்ரக் என்று உறுமிக் கொண்டே ஓர் ஆறேழு குட்டிப் பன்றிகள் கடந்தன. தூரத்தில் ஸ்டேஷனில் இருந்து இன்னொரு யூனிட் பீச் ஸ்டேஷன் நோக்கி நகர்ந்தது. சாவித்ரி ஏறக்குறைய ஓடினாள்.

எழும்பூரில் இறங்கி, மவுண்ட்ரோடு ஆபீஸை அடைந்தபோது மணி கிட்டத்தட்ட பத்தாகியிருந்தது. ஆபீஸுக்குள் நுழைந்தாள். வெளி வெயிலையும், அவளது அக்குளின் வியர்வைக் கசகசப்பையும் ஆபீஸில் பரவி இருந்த குளிர் எதிர்த்தது. நல்ல வேளை. இன்றைக்குக் கரண்ட் இருக்கிறது. சாயங்காலம் வரை இனிமேல் வியர்க்காமல் வேலை செய்யலாம்.

அவளுக்குப் பர்சனல் செக்ரட்டரி வேலை. அவளுடைய பாஸ் எஸ். எஸ். நாதன் இப்போதுதான் ஆந்திராவிலிருந்து டிரான்ஸ்ஃபர் ஆகி வந்திருக்கிறான். இளைஞன். மிகச் சமீபத்தில் கல்யாணமானவன். புருவங்கள் இரண்டும் ஒன்றோடொன்று கைகோர்த்துக் கொள்ளுகிற மாதிரி அவனுக்கு முடி. அதுவே அவன் முகத்தில் முரட்டுத்தனத்தைச் சேர்க்கிறது. தினம் தினம் ஷேவ் செய்து கொண்டு வந்தாலும் இடது கன்னத்தில் ஒரு வடு. அவனுடைய முரட்டுத்தனத்தை அதிகரிக்கிறது. ஆண்களுக்குக் கன்னங்களில் ஷேவிங் பச்சை இருந்தால் பார்க்க அழகாயிருக்கும் என்று அவளுக்குத் தோன்றும். எஸ். எஸ். நாதனின் முகத்தில் அதையெல்லாம் தேட முடியாது. கார் வண்ணன். இதற்கு முன்னால் இருந்த கிழம் ரிட்டயராகிவிட்டது. கிழம் பாம்பா, கயிறா என்று பக்கத்தில் நின்று பார்த்தாலும் அறிந்து கொள்ள முடியாத அளவு மர்மம். ஒருநாள் திடீரென்று கடுவன் பூனை. இன்னொரு நாள் தோளைத் தொட்டு, தோளிலிருந்து புறம் தொட்டுப் பேசும் வாத்சல்யம் நிறைந்த அப்பா மாதிரி என்று சொல்லிக் கொள்ளும் எலி தின்னாப் பூனை அல்லது கோழி உண்ணா நரி.

எஸ். எஸ். நாதன் வந்த ஒரு மாதத்தில் நன்றாகத்தான் பழகுகிறான். பழகுகிறான் என்றால் சிரித்துப் பேசி என்றெல்லாம் இல்லை. 'டியர் சார், வித் ரெஃப்ரன்ஸ் டு யுவர்' போன்ற ஆபீஸ் கடிதங்களை எல்லாம் மனத்திற்குள் முன்பே தீர்மானம் பண்ணிக் கொண்டுதான் கூப்பிடுகிறான். உள்ளே போனதும் அவன் எதிரில் அமர இருக்கை தருகிறான். அவன் கால் அவளுடைய காலில் படுவதில்லை. அவள் உள்ளே இருக்கும் நேரத்தில் காப்பியோ, டீயோ வந்தால் அவன் சொல்லாமலே காப்பிக்காரன் அவளுக்கும் ஒரு கோப்பை வைத்து விட்டுப் போகிறான். அனாவசியமாய் அவளது அந்தரங்கங்களைக் கேள்வி கேட்பது இல்லை. எத்தனை நாட்களுக்கு இந்த முகமூடி என்றுதான் தெரியவில்லை.

ஆபீஸில் ஒவ்வொருத்தராய் நுழைந்தார்கள். அவிழ்த்துவிடப்பட்ட வண்டிமாடுகள் நேரே வைக்கோல்போரையும், தண்ணீர்த் தொட்டியையும் போய் அடைகிற மாதிரி அவரவர் இருக்கைகளில் அமர்ந்தார்கள். சாவித்ரிக்குக் காலை நேரத்தில் ஆபீஸில் நுழைகிறவர்களைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். சாயங்காலம் பறவைகள் சடசடவென இறக்கையடித்து நெல் மணி பொறுக்கிக் கூடு நோக்கிப் பறக்க மேல் நோக்கி எழுகிற மாதிரி தோன்றும். தெய்வநாயகி, மிஸஸ் லலிதா சிவராமன், ஜே. பி., டி.எஸ்.ஆர்., மிஸஸ் ஹெலனா. வரும்போதே ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆக்ஷனோடு வந்தார்கள். டி. எஸ். ஆர். முழங்காலில் கை யூன்றி படியேறி வந்தார். தெய்வநாயகி குடையை மடித்துக் கொண்டு வந்தாள். மிஸஸ் லலிதா சிவராமன் குனிந்து தன் மார்பிலேயே 'உஷ்' என்று ஊதி வெயிலை விரட்டிக் கொண்டே வந்தாள்.

தனஞ்செயன் இன்றைக்கு லீவா என்ன? அவன் ஏன் வரவில்லை? அவன் வராத

நான் எல்லாம் ஆபீஸ் லேசாக இருண்டிருக்கிற மாதிரி தோன்றும் அவளுக்கு. தனஞ்செயன் பெண்களிடம் எப்படி நடந்து கொள்வது என்று அறிந்தவன். அவனுக்கு ஒரு மாதிரி பெண்மை கலந்த முகம். கூர்ந்து பார்த்தால் மட்டுமே தெரிகிற மாறுகண். அவன் சிரிப்பில் அவனது பற்களையும், மனத்தையும் பார்க்க முடியும். சாவித்ரி மூர்த்தியையும், தனஞ்செயனையும் அவ்வப்போது அருகருகே வைத்து ஒப்பிட்டுப் பார்ப்பது உண்டு. மூர்த்தியின் முகத்தில் எப்போதுமே ஒரு கடுமை வெளிப்படையாய்த் தெரியும். அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காத புகையிலைப் பாக்கைப் போட்டுக் கொண்டு எப்போது பக்கத்தில் வந்தாலும் அதற்கென்று ஒரு தீவிர வாசனை. அதை வாசனை என்று சொல்ல முடியாது. தாக்கும் வாடை. தனஞ்செயனுக்கு அப்படி இல்லை. ஆரோக்கியமான பற்கள். பற்கள் ஒரே வெள்ளையாய் இருந்தால் கண்ணாம்புக்குத்தான் ஈடு. தனஞ்செயனின் பற்கள் மிக லேசாக மஞ்சள் கலந்த முத்துப் பற்கள். என்ன இது? பைத்தியமா பிடித்திருக்கிறது? எதற்கு இந்த ஒப்பிடல் என்று சாவித்ரி அவளுக்குள்ளாகவே கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாள். அனுசூயாவிற்கு வேண்டுமானால் மணற்பானை செய்ய முடியாமற் போயிருக்கலாம். சாவித்ரிக்கு அப்படி எல்லாம் பரீட்சை எதுவும் இல்லையே. மேலும் அனுசூயாவின் கதையை எழுதியவன் நிச்சயம் ஓர் ஆண் பிள்ளையாகத்தானிருப்பான். அதென்ன, ஓர் ஆண் பிள்ளையைப் பார்த்து அவன் அழகு என்று நினைத்தால்கூட கற்புக்குக் கேடு வந்து விடுமா என்ன?

போன் மணி அடித்தது. கலைந்து எடுத்தாள்.

"ஹலோ" என்று கம்பெனி பெயர் சொன்னாள்.

"நான்தாங்க தனஞ்செயன்" என்று குரல் கேட்டது. சிரிப்போடு கலந்து வந்த மாதிரி தோன்றியது.

"ஓ... ஹலோ... குட்மார்னிங்... சொல்லுங்க தனஞ்செயன்."

"நான் இன்னிக்கு ஆபீஸுக்கு லீவு."

"ஏன்?" என்று கேட்டாள். அவள் குரலில் தொனித்தது என்ன? ஏமாற்றமா, எதற்கு ஏமாற்றம்?

"பாத்ரூம்ல கால் ஸ்லிப்பாயி சுளுக்கு."

"ச்சொ. ச்சொ."

"சுளுக்குக்காக நான் ஒண்ணும் கவலைப்படலே. இன்னொரு விஷயந்தான் கொஞ்சம் கஷ்டமாயிருக்கு."


"என்ன சொல்லுங்க?"

"என் ட்ராயர்ல ஓர் ஆயிரம் ரூபா காஷ் வெச்சிருக்கேன். எங்க பக்கத்து வீட்டு மணி இல்லே? சொல்லியிருக்கேனே... அவரோட பையனுக்கு ஃபீஸ் கட்டணும்னு கேட்டிருந்தாரு. நேத்து காஷை எடுத்துட்டுவர மறந்து போயிட்டேன்... நீங்க அதைக் கொஞ்சம் எடுத்துட்டு வந்து எங்க வீட்ல குடுக்க முடியுமா? உங்களுக்குச் சிரமமில்லேன்னா... போற வழில மாம்பலத்தில எறங்கினவுடனே வீடு. நீங்களும் வரேன், வரேன்னு சொல்லி ஏமாத்திட்டேயிருக்கீங்க... கிரகப் பிரவேசத்துக்கே வரலை..."

அவன் வீட்டுக்குப் போவது என்பது அவளுக்கு உள்ளூர விருப்பமுடைய செயலாகத்தான் இருந்தது. அவன் ஒருவன்தான் அவளைப் பெண்ணாக இரக்கப்படுபவன். மனைவி வேலைக்குப் போனால் அப்புறம் வீட்டைக் கவனிக்க முடியாது என்று மனைவியை வேலைக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்துப் பொத்தியிருப்பவன். தோள் மேலேயே தாங்குவானோ என்று கூடத் தோன்றும் அவளுக்கு. ஒரு நாளுக்கு ஒரு தடவையாவது அவனுக்குப் பெண்டாட்டி புகழ் பாட வேண்டும். அவள் வார்த்துத் தந்த ஆப்பம், அதனால்தான் மல்லிகைப் பூவை விட மென்மை. அவள் செய்து தந்த காரக் குழம்பு. அதுதான் மணம் லஞ்ச் ரூமையே ஒரு தூக்கு தூக்குகிறது. சாவித்ரி அந்தக் காரக் குழம்பை ருசி பார்த்திருக்கிறாள். அப்படி

புளியஞ்சாதம், எள்ளுப் பொடி சாதம் இவற்றிற்குத் தாளிக்கும் பொழுது பட்டை, ஏலம், கிராம்பு ஆகியவற்றையும் உடன் சேர்த்துத் தாளித்து சாதம் கிளறினால் மசாலா மணத்துடன் நன்றாக இருக்கும்.

– பாலா



ஒன்றும் பால்கே விருது அளிக்கும்படியாக இருக்கவில்லை. அதை அவன் வெளியே சொல்லவில்லை. ஆனால் மனைவியை, அவள் கைபாகத்தை இவ்வளவு தூரம் அவன் இல்லாதபோது புகழும் தனஞ்செயன்தான் பெண்களுக்குச் சரியான இடஒதுக்கீட்டு மரியாதை செய்பவனாக அவளுக்குத் தோன்றினான். தனியாக அவனை மற்ற ஆண்களில் இருந்து பிரித்துப் பார்க்கத் தோன்றியது அவளுக்கு.

"என்ன, பதிலே காணோம்?"

என்ன பதில் சொல்வது? அவன் வீட்டுக்குப் போவது அப்படி ஒன்றும் தப்பான செயல் இல்லை. இருந்தாலும் நாளைக்கு ஆபீசில் யாருக்காவது தெரிந்து போனால்? இது வதந்திகளைப் பரப்பும் நாடு. 'வதந்திகளைப் பரப்புபவர்கள் தேச எதிரிகள்' என்று மூலைக்கு மூலை பெரிய பெரிய நகர போஸ்ட்டாக நிறுத்தி வைக்கச் செய்த நாடு. மேலும் அவன் மனைவி என்ன நினைப்பாளோ? மூர்த்தியுடன் அவன் வீட்டுக்குப் போனால் ஒரு கவசத்தோடு போன மாதிரி ஆகிவிடும். இருந்தாலும் யாருக்கோ ஃபீஸ் கட்ட வேண்டிய பணம். அதுதானே? பக்கத்து வீட்டு மணியோ, அவர் பையனோ இங்கே வந்தால் பணத்தை எடுத்துக் கொடுத்து விடலாமே, அவள் சொன்னாள்:

"அதுக்கில்ல தனஞ்செயன். நான் இன்னிக்கு சீக்கிரம் வீட்டுக்கு வர்றேன்னு சொல்லியிருக்கேன். உங்க பக்கத்து வீட்டு மணியையே அனுப்புங்களேன். அவர் இல்லேன்னா அவர் பையன்?"

அவன் சிரிப்பது ரிசீவர் வழியாக அவள் காதில் கிச்சுக்கிச்சு மூட்டுகிற மாதிரி இறங்கியது.

"நான் அதை யோசிச்சிருக்க மாட்டேனா? மணி அவரோட சொந்த ஊருக்குப் போயிருக்காரு. ஏதோ குத்தகைப் பணம் வரணும்னாரு. அந்தப் பணம் வந்தா, என் பணம் அவருக்குத் தேவையிருக்காது. மணியோட பையன்து தனிக்கதை. நேத்து சாயங்காலம் ஊர்லேர்ந்து ஆள் வந்து என் மாமியாருக்கு ஒடம்பு சரியில்லேன்னு சேதி சொன்னான். அதனால ஒய்ஃபை நேத்து ராத்திரி ஊருக்கு அனுப்பியிருக்கேன். கூடத் தொணைக்கு மணியோட பையன். நான் காலைல ஆபீஸ் வந்து பணத்தை எடுத்துக் கட்டிடலாம்னு நெனைச்சேன். எங்காலு இப்படித் திடீர்னு சுளுக்கிக்கும்னு எதிர்பார்க்கலே. டாக்டர் வந்து ஊசி போட்டுட்டு படுக்கையை விட்டு அசையக் கூடாதுன்னு சொல்லிட்டாரு. கால் லேசா வீங்கிப் போய்டிச்சி. நம்ப ஆபீஸ்லே எனக்கு உங்களை விட்டா நம்பிக்கையா வேற யாரும் இல்லே. அதான்..."

"சரி வரேன்" என்றாள். ஏதோ ஒரு புலவர் பாடின பாட்டுதான் நினைவுக்கு வந்தது. எவனோ ஒருத்தனின் வறுமையைச் சொல்லும்போது, ஒரு மனிதனுக்கு அடுக்கடுக்காக வரும் தொல்லையைச் சொல்லியிருப்பார் புலவர். அதுபோல தனஞ்செயனுக்கு.

"தாங்க்ஸ்ங்க. ரொம்பத் தாங்க்ஸ். என் ஒய்ஃப் நேத்து சாயங்காலந்தான் உங்களுக்கு ரொம்பப் புடிச்ச பாசந்தியைப் பண்ணி வைச்சிருக்கா. ஃப்ரிட்ஜ்ல இருக்கு. மொதல் தடவை நீங்க வரப் போறீங்க. உங்களுக்குன்னு உங்களுக்குப் புடிச்ச ஸ்வீட் அமைஞ்சிருக்கு பாருங்க... உங்க அதிர்ஷ்டத்துக்குக் கேக்கணுமா? வச்சிடட்டுமா? ஆபீஸ்ல லீவு சொல்லிட்டீங்களா? ரொம்பத் தாங்க்ஸ்."


அவன் போனை வைத்துவிட்டான். சாவித்ரி ரிசீவரை வைத்த பின்பும் அது சற்று நேரம் தனஞ்செயன் குரலில் 'ரொம்பத் தாங்க்ஸ்' 'ரொம்பத் தாங்க்ஸ்' என்று சொல்லிக் கொண்டிருந்த மாதிரி பட்டது அவளுக்கு.

சாயங்காலம் கொஞ்சம் சீக்கிரமே புறப்பட்டுப் போய்விட வேண்டும். மூர்த்திக்குச் சொல்லலாமா என்று யோசித்தாள். காலையில் 'கிருஷ்ணகுமாருடன் ஓடிப் போகப் போகிறேன்' என்று அவள் சொன்னதற்கு அவனுடைய பதில் ஞாபகம் வந்தது. மூர்த்தி


குழந்தைகள் வளர்ச்சிக்கு உதவ...

குழந்தைகள் இருக்கும் வீடுகளுக்கு நாம் செல்லும்பொழுது பொதுவாக பிஸ்கட், சாக்லேட் வாங்கிச் செல்வது வழக்கம். மாறாகப் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் இருக்கும் வீடுகளுக்குச் செல்லும் பொழுது அங்குள்ள குழந்தைகளின் வயதிற்கு ஏற்ப காமிக்ஸ், கோகுலம், ட்விங்கிள், சின்னச் சின்ன கதைப் புத்தகம் வாங்கிக் கொண்டு போய்க் கொடுக்கலாம். இதனால் குழந்தைகளுக்குப் புத்தகம் படிக்கும் ஆர்வம் வளரும்.

- பத்மாவதி ராதாகிருஷ்ணன்



பூஜை சாமான் கண்டெய்னர்



வீடுகளில் நாம் உபயோகிக்கும் வி.வி.டி. தேங்காய் எண்ணெய் பாட்டில்களை எண்ணெய் தீர்ந்த பின்பு அதன் கழுத்துப் பகுதி சேரும் இடத்துடன் கத்திரித்து விடவும். கீழ்ப்பாகம்ஓர் அழகிய டப்பாவாகக் காட்சியளிக்கும். அதன் நான்கு பக்கங்களுக்கும் சாமி படங்கள் ஸ்டிக்கரை ஒட்டிவிட்டால் இன்னமும் அழகாக இருக்கும். பூஜை அறையில் இவற்றில் திரி, மஞ்சள் தூள், குங்குமம் போன்ற பூஜை சாமான்களைப் போட்டு வைத்துக் கொள்ளலாமே! வெட்டியெடுத்த கழுத்துப் பகுதியின் மேல் அடைப்பானில் துளை போட்டு அதில் பூங்கொத்தைச் செருகி ஃப்ளவர் வாசாகவோ (அ) ஊதுபத்தியைச் செருகி ஸ்டாண்டாகவோ பயன்படுத்தலாமே!

- சரஸ்வதி வெங்கடேசன்

ஒரு கல். கர்ப்பக்கிருஹத்துக்கல். அபிஷேகம் செய்தாலும் சரி, அசுத்தம் பண்ணினாலும் சரி. குழந்தைகள் இரண்டும் எதிரில் இருக்கும் ஷீப்ளாட்டிற்குப் போய்விடும். மூர்த்தி வரும் நேரம் சொல்ல முடியாது. பரவாயில்லை. தனஞ்செயன் வீட்டுக்குப் போய் விட்டு அதற்குப்பின் வீட்டுக்குப் போய், மூர்த்தி இருந்தால், சொன்னால் போதும்.

முயல் மாதிரி இருந்த கிரே நிற இண்டர்காம் ஒலித்தது. எஸ். எஸ். நாதன் கூப்பிடுகிறான். எப்போது வந்தான். அவள் பார்க்கவேயில்லையே. எடுத்தாள். "குட்மார்னிங் சார்" என்றாள். பர்சனல் செக்ரட்டரிகளுக்கே உரித்தான ஒரு குழைவு அந்தக் குரலில் இருந்தது. மூர்த்தியுடன் பேசும் போது அது இருக்காது. தனஞ்செயனுடன், எஸ். எஸ். நாதனுடன் பேசும்போதெல்லாம் குழைவு குரலில் தானாக சேர்ந்து கொள்கிறது. சாவித்ரி அதை உணர்ந்துதான் இருந்தாள். ஆனால் அவளை மீறிக் குரலில் குழைவு எப்படி வருகிறது என்று அவளால் பகுத்தறிய முடியவில்லை.

"கொஞ்சம் உள்ளே வர முடியுமா?" என்று கேட்டான்.

உள்ளே போனாள்.

"குட்மார்னிங் மிஸஸ் சாவித்ரி" என்றான். அதிசயமாகச் சிரித்தான். "ஒரு சின்ன ஆப்ளிகேஷன்."

"சொல்லுங்க சார்."

டிராயரைத் திறந்தான். ஒரு குளிர்க் கண்ணாடி வைக்கும் ஃபைபர் பெட்டியை மேஜை மீது வைத்து நகர்த்தினான்.

"திறந்து பாருங்க. எப்படி இருக்குன்னு சொல்லுங்க."

என்ன இது? கூலிங்கிளாஸ். சரி! எப்படி இருக்கிறதென்று சொல்ல அவள் யார்? ஒரு வேளை அவளுக்காகவே வாங்கி வைத்து விட்டானா? திறந்தாள். உள்ளே கூலிங்கிளாஸ். புது மாடலாய் இருந்தது. அழகாக இருந்தது. அதைக் கண்களில் மாட்டிக் கொண்டால் உலகமே ஜில்லென்று தெரியும் என்று தோன்றியது சாவித்ரிக்கு.

"என் ஒய்ஃபுக்கு வாங்கினது. நேத்து வெளியே கூட்டிட்டுப் போனப்ப, வெயில்ல கண்ணைச் சுருக்கிக்கிட்டே வந்ததைப் பார்த்தேன். அதான் ஒண்ணு வாங்கினேன். லேடீஸ் டேஸ்ட் எனக்குத் தெரியாது. அதான் உங்ககிட்டே கேட்டேன். லேடீஸ் யூஷுவலா போடறதுதானே இது? நல்லா இருக்கா?"

"மார்வலஸ்" என்றாள் சாவித்ரி. "ரொம்ப நல்லாருக்கு சார். நீங்க எங்க வாங்கினீங்கன்னு சொல்லுங்க. நான் கூட ஒண்ணு வாங்கணும்."

"ப்ளூ ப்ரதர்ஸ்தான். உங்களுக்கே ஒண்ணு வாங்கற அளவு பிடிச்சிருக்குன்னா... ரொம்பத் தாங்க்ஸ். என் செலக்ஷன் தப்பாயிடலை. இதை அழகா ஒரு கிஃப்ட் பாக்காப் பண்ணி என் வீட்டுக்கு மாரியப்பன் மூலமா கொடுத்தனுப்பிட றீங்களா? மத்தியானம் அவன் லன்ச் எடுத்துட்டு வரப் போவான்."

"ஓ... யெஸ் சார்" என்று தன் இருக்கைக்கு அந்தக் கண்ணாடியுடன் திரும்பினாள். ஒரு கண நேரத்திற்குள் அவனைக் கொஞ்சம் தரம் தாழ்த்திப் பார்த்ததற்கு வருந்தினாள்.

கல்யாணமான புதிதில் கூட மூர்த்தி அவளுக்கு இப்படிப்பட்ட திடீர் ஆச்சரியங்களை எல்லாம் கொடுத்ததில்லை. குழந்தைகளின் பர்த்டேக்கு கிஃப்ட் வாங்கி வருவான். வெட்டிங்டே என்றால் அவளுடன் கடைக்குப் போய் ஒரு சேலை. அவளுக்குப் பிறந்தநாள் என்றால் அப்போதும் கடைக்குக் கூட்டிப் போய் இன்னொரு சேலை. அல்லது செருப்பு. எப்போதாவது ஒரு பிறந்த நாளுக்கு மணிக்கட்டு வாட்ச். காது தொங்கட்டான். நிச்சயம் எஸ்.எஸ்.நாதன் போல கூலிங்கிளாஸ் இல்லை. பதினைந்து நாட்களுக்கு முன்னால் ஒரு அயல்நாட்டு

உங் ள்

வங்கி டெபாசி டில்

எ ன குறை

என்று எங் ளை

கேளுங் ள்.

நம்பிக்கை! மதிப்பு! சேவை!

அதிக பலன்களைத் தரவேண்டிய உங்கள் வங்கி டெபாசிட் ஆரவாரமில்லாமல் அமைதியாக குறைந்த பலனை தொடர்ந்து தருகிறது.

மாறாத விகிதத்தில் மாதவட்டி வருகிறது சரிதான்! ஆனால் ஏறிடும் விலைவாசிகளின் முன்னே இது எந்த மூலை?

உபாஸனா பரிபூரண டெபாஸிட்

இந்த உண்மை உங்களுக்கு ஒருதரம் புரிந்துவிட்டால், வங்கி டெபாசிட்டில் நீங்கள் இழப்பது தெரிந்துவிடும் 'பரிபூரண டெபாசிட்டின் பலன்களும் புரிந்துவிடும்.

உங்கள் டெபாஸிட்டிற்கு உபாஸனா அளிப்பதோ அளவில்லாதா சுதந்திரம். காலத்தின் தேவைக்கேற்ப அதிக பலன்கள்!

உபாஸனாவுடன் உடனே தொடர்பு கொள்ளுங்கள்!

அதிக பலன் பெறும் வழிகளை கூறுகிறோம்!

உபாஸனா
ஃபைனான்ஸ் லிமிடெட்
தொடரும் 'நம்பிக்கை' என்னும் 'டிவிடன்' பாரம்பரியம்.

ஆம் பரிபூரணபலன்! பரிபூரண சுதந்திரம்! பரிபூரண நம்பிக்கை! இதுதான் என் தேவை!

பெயர்: ____________________


முகவரி: ____________________ போன்: ____________

சென்னை: 'கணேஷ் டவர்ஸ்', 3வது மாடி, 96/1, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை - 600 004. போன்: [illegible]. **பெங்களூர்:** 18/1, வாணி விலாஸ் ரோடு, பசவன்குடி, பெங்களூர் - 560 004. **மதுரை:** 186, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001. **சேலம்:** ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், A-1-2, பாரதி தெரு, சுவர்ணபுரி, சேலம் - 636 004. **திருநெல்வேலி** - 177-A/10, திருவனந்தபுரம் சாலை, பார்வதி சங்கர் & சன்ஸ் காம்ப்ளெக்ஸ், வண்ணாரப் பேட்டை, திருநெல்வேலி - 627 003. **திருச்சி:** 16/A-3, Dr. சுவாமிநாத சாஸ்திரி சாலை, தென்னூர், திருச்சிராப்பள்ளி - 620 017. **விஜயவாடா:** காஜூரி பாப்பையா பில்டிங், 54-9-1, பண்டார் ரோடு, படமட (ஹாடுக்கு அடுத்து), விஜயவாடா-520010. **கோயம்புத்தூர்:** நெ.?, ரூபிலி டவர்ஸ், 594, D.B. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர் - 641 002.

இது ஆகஸ்ட் 21, 1994 தேதியிட்ட "மக்கள்குரலில்" வந்த விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்

Stimulus/UFL/402M/8/94/T

என் கணவர் கூறினார்: நன்றி என் அன்பே





அதற்கு நான் கூறினேன்: நன்றி ஸரள்

நேற்றிரவு அலுவலகத்திலிருந்து அவர் வெகு நேரம் கழித்து வந்தார். இரவு சாப்பாட்டை முடித்ததும் அடுத்த நாள் காலை சீக்கிரமே காபி, டிபன் செய்து வைக்குமாறு என்னிடம் கூறினார். ஒரு பெரிய தர்மசங்கடமான நிலைக்கு உள்ளானேன். ஏனென்றால் துரதிருஷ்டவசமாக கேஸ் தீர்ந்துவிட்டது. ஆனால் அவருக்கு காபி, டிபன் கொடுக்காமல் எப்படி அலுவலகத்திற்கு அனுப்புவது ?

அனைத்து விஷயங்களில் சுதந்திரத்தை அனுபவிக்கும் பக்கத்து வீட்டு சரளாவைப் பற்றி உடனே எனக்கு ஞாபகம் வந்தது. அவளிடம் கேஸ் கிடையாது. இதைப் பற்றி கேட்டதும் அவள் பெருமிதத்துடன் கூறினாள் ''கேஸ் இல்லேனா என்ன . . . ஸரள் இருக்கே''!

நடைமுறைக்கு ஏற்றவாறு தன் வாழ்க்கையை அவள் அமைத்துக் கொண்டது என்னை மிகவும் கவர்ந்தது. இதனால் எனக்கு ஏற்பட்ட கூடுதல் நற்பயனைக்கூறட்டுமா ? கேஸ் இல்லாமலே குறித்த சமயத்தில் அனைத்தையும் செய்து முடித்தேன் என்றறிந்ததும் என் கணவர் என்னை அணைத்துக் கொண்டு கூறினார்.
''நன்றி, என் அன்பே''.





IS: 2980

HAMARA SANSAAR

ஸரள்

DISTRIBUTORS FOR
TAMILNADU AND PONDICHERY :

Naik BROTHERS

62, JERMIAH ROAD 1st FLOOR, VEPERY,
OPP. BENTINCK HIGHER SEC. SCHOOL
(NEAR DOVETON TOWER) MADRAS-600 007
PH. 6421115, 6422006

DRISHTY-RJT.

சென்ட் பாட்டில் இல்லை. அதற்கும் ஒரு வாரத்திற்கு முன் ஒரு மேக்கப் செட். ம்ஹூம்! புது மனைவி. முதலில் அப்படித்தானிருக்கும். பழகப் பழகப் பாலும் புளிக்கும் இல்லையா?

மறுபடி இன்டர்காம் அழைத்தது. எடுத்து, "ஹலோ சார்" என்றாள்.

"நான் சொல்றது உங்களுக்குக் கோபத்தை வரவழைக்காதுன்னா, போய் உங்களை நீங்களே கண்ணாடில பாத்துக்குங்க" என்று சொல்லி விட்டு எஸ்.எஸ்.நாதன் போன் தொடர்பைத் துண்டித்தான்.

சாவித்திரி எழுந்து சென்று லன்ச் ரூமில் இருக்கும் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். கடவுளே. இது என்ன இது?

சாவித்ரி எப்போதுமே அலங்காரப் பிரியை. முகத்தில் லோஷன் தடவி ரோஸ் பவுடர் போடுவாள். கண் இமைகளுக்கு மஸ்காரா தடவுவாள். மையை விளிம்புகளில் தீட்டுவாள். உதடுகளில் லிப்ஸ்டிக்கை உதடுகள் நிறத்திலேயே தடவி லிப்க்ளாஸால் ஈரப் பளபளப்பைக் கொண்டு வருவாள். அவளுடைய வேலை இந்த அலங்காரத்தை அவளிடம் எதிர்பார்க்கிறது. இன்றைக்குப் பார்த்தால் ஒரு கண்ணிமைக்கு மட்டும் எல்லா அலங்காரமும் நடந்து இருந்தது. மஸ்காரா, ஜிகினாப்பவுடர். மை விளிம்பு. இன்னொரு கண் பன்றியின் கண் போலத் தோன்றியது - நிர்வாணமாக.

அவளுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. அழாமல் இருக்க நிறைய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த முகத்துடனா இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து வந்திருக்கிறோம். என்ன ஒரு மறதி! எல்லாம் அலுப்பால்தான். எட்டு வருட அலுப்பு. செக்குமாட்டுத்தனம். சாப்பிட்டு, பாத்திரம் கழுவி, தூங்கி, எழுந்து, சமைத்து, ஆபீஸ் வந்து... ஹான்ட்பேகில் இருக்கும் மேக்கப் பெட்டியைக் கொண்டு வந்து திருத்திக் கொண்டாள். மறுபடி இருக்கைக்கு வந்து உட்கார்ந்தாள்.

மாரியப்பனை அழைத்தாள். அழகாக ஒரு பரிசுப் பெட்டியாக உருவாக்கியிருந்த கூலிங்களாஸ் பெட்டியை அவனிடம் கொடுத்தாள். பெட்டியின்மேல் With Love என்று ஒரு ஸ்டிக்கர் ஒட்டியிருந்தாள்.

"மாரியப்பா. பாஸ்கிட்ட இந்த ஸ்டிக்கர்ல கையெழுத்துப் போட்டுத் தரச் சொல்லு. அவர் போட்டுத் தந்தவுடனே கொண்டு அவர் வீட்ல அவர் ஒய்ஃப் கிட்டக் கொடுத்துடு. அப்படியே வரும் போது அவருக்கான லன்ச்சைக் கொண்டு வந்துடு" என்று புன்முறுவல் வரவழைத்துச் சொன்னாள். இருந்தாலும் துக்கம் தாக்கிய குரல் பிசிறாய்த்தான் வெளிப்பட்டது.


"என்னாம்மா, ஜல்ப்பா?" என்று கேட்டான் மாரியப்பன். அவனுடைய இயல்பான மொழியில் ஒரு விசாரிப்பு. அவள் அதற்கு சிரித்துப் பதில் சொன்னால் உடனே அந்த இடத்தில் கூடாரம் போட்டு விடுவான். அவன் ஒரு குடிகாரன் என்று கேள்விப் பட்டிருக்கிறாள். ஆபீஸ் நேரம் முடிந்தவுடன் அவனுடைய சாராய நாள் துவங்கி விடும் என்று தனஞ்செயன்தான் சொல்லியிருக்கிறான். மாரியப்பனின் கண்களில் எப்போதும் செவ்வரிகள் தெரியும். முகத்தில் ஓர் அப்பாவித்தனம். மரக்கிளை நுனியில் அமர்ந்து இரையைப் பார்க்கும் சிறுத்தையின் முகம். சிரித்தால் மேற்பற்களுக்கு இடையே இருக்கும் இடைவெளி அவன் முகத்து அப்பாவித்தனத்தை அதிகரித்துக் காட்டும்.

"நீ ஒன் வேலையைக் கவனி" என்றாள். அவன் சட்டென்று கண்டிய முகத்துடன் அப்பால் நகர்ந்தான்.

சாவித்ரி வேலையைத் தொடர்ந்தாள். அவளுக்கு முன்னிருந்த எலக்ட்ரானிக் டைப் இயந்திரம், அவளது விரல் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு 'டகடகடகடக' என்று கடிதங்களை அச்சடித்தது. முதல் நாள் கடிதங்கள் நிறைய இருந்தன. பன்னிரண்டு மணிக்கு

பையன், பெண்களின் ஜீன்ஸ் பேண்ட் கிழிந்தால் மனதுக்குள் சந்தோஷம் வரும். சந்தோஷத்தை வெளியில் காண்பித்தால் அவர்களுக்குக் கோபம் வரும். கால்கள் பாகத்தை ஒரே அளவாக வெட்டிக் கொள்ள வேண்டும். அடியில் குறுகிய பாகத்தைச் சேர்த்துத் தைத்து விடவும். மேல் பாகம் அகலமானது. அதை ஓரம் மடித்துத் தைத்துக் கொள்ள வேண்டும். பின் என்ன? முதலில் ஒரு காலை எடுத்து அதில் முக்கால் பாகத்தில் மற்ற காலை வைத்துத் தைத்துவிடவும். பிடியும் போட்டுவிட்டால் கார்டு கவர், வந்த போஸ்டுகள் வைக்கச் சௌகர்யம்.

- சரோஜா



பெண்களின் விதவிதமான 'டாப்ஸ்' கைகளைக் கூட விடுவதில்லை. கல், கல்லாகத் துணியை அதிக விலை கொடுத்து வாங்கி வேண்டாம் என ஒதுக்கி விடுகின்றனர். கைகளை எடுத்துக் கொள்வேன். ஓரம் மடித்துத் தைத்து மிக்ஸி கவர் ரெடி பண்ணுவேன். சிறிய பாகம் கீழ் பெரிய பாகம் மேல். நம் பெண்களைவிட உபகாரமாக இருக்கும் மிக்ஸிக்கு வாரமொரு முறை உடை மாற்றுவேன். அம்மாவின் செல்லப் பெண் என கேலி செய்வார்கள்.

- சரோஜா



வந்த டையைக் கூட வேண்டாம் என்று சொல்லி விட்டாள். வாழ்க்கையின் செக்கு மாட்டுத்தனம் பற்றிய நினைப்பு அவளை விழுங்கி விடப் போகிறது என்று பயந்தாள். நினைப்புகள் எல்லாம் பிரும்மாண்டமான எறும்புத் தின்னிகளாக உருவெடுத்து அவளைப் பயப்படுத்தின. வாழ்க்கையில் நிச்சயம் ஒரு மாற்றம் வேண்டும். ஒரு பரிகப் பொருள் வேண்டும். ஆண் ஆதிக்கம் ஒழிய வேண்டும். பசுஞ்சோலையாக வேறொரு நட்பு வேண்டும். அவள்பால் பரிவு காட்டும், அவளது மென்மையின் சிறப்பைப் பாராட்டும் ஒரு நட்பு. சீக்கிரமே மாலையாகி விடக் கூடாதா என்று தோன்றியது அவளுக்கு. கடிதங்களை எல்லாம் ஒருமுறை படித்துப் பார்த்தாள். திருத்தங்கள் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் அடுக்கி, நாதனின் கையெழுத்திற்காக அவன் அறைக் கதவு தட்டி அனுமதி பெற்று உள்ளே நுழைந்தாள்.

நாதன் வழக்கம் போல் எதிரில் உட்காரச் சொன்னான். கடிதங்களைப் படித்துப் பார்த்தான். முன்பு இருந்த கிழம் அறைக்கு ஒரு மாதிரி டார்க்ப்ளூ சாயத்தைப் பூசியிருந்தது. கார்ப்பெட் டார்க் ப்ளூ. அறைச் சுவரில் பானலிங் டார்க்ப்ளூ. அங்கங்கே செடித் தொட்டிகள் கூட டார்க்ப்ளூ என்று கெட்ட ரத்த உபாசகனாய் இருந்தது கிழம். சுவரில் மாட்டியிருந்த சித்திரத்தில் சிவப்பாய் ஒரு பெண். அந்தப் பெண் எப்போதும் ஏவாளைத்தான் நினைவுபடுத்துவாள். அறையில் நுழையும் யாரும் அந்தச் சித்திரத்தைப் பார்க்காமல் போய் விடக் கூடாதென்று சித்திரத்தை நோக்கித் துப்பாக்கியால் சுடுகிற மாதிரி ஒரு விளக்கு வெளிச்சத்தைச் சுட்டுக் கொண்டிருக்கும். கேட்டால் அந்தச் சித்திரம், அறையில் வந்து அவருடன் பேசிப் போகிற கஸ்டமர்களைக் கவர என்று கிழம் ஒரு அசட்டுச் சாக்கு வைத்திருந்தது. நாதன் வந்தபின் அறையின் அமைப்பே மாறி விட்டது. டார்க் ப்ளூ இருந்த இடம் தெரியவில்லை. காலுக்குக் கீழே கார்ப்பெட் ராணுவப் பச்சை நிறத்திற்கு மாறி விட்டது. சுவர்கள் எல்லாம் ஆப்பிள் கிரீன். சுவர்ச் சித்திரத்தில் கூட மாற்றம். புதியதொரு கோணத்தில் வரையப்பட்ட காந்தி. வட்டங்கள், நேர்க் கோடுகள் - இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு வரையப்பட்ட நவீன காந்தி கூட அந்த அறையின் கவர்ச்சியை அதிகப்படுத்தியது சாவித்ரிக்கு ஆச்சரியமான விஷயமாகத்தானிருந்தது.

'ம்க்கும்' என்று கனைத்தான் நாதன். சாவித்ரி லேசாகத் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

"மிஸஸ் சாவித்ரி. லெட்டர்ஸ் எல்லாம் சரியா இருக்கு! ஒரு தப்பு கூட இல்ல. வெரிகுட்."

"தாங்க்ஸ் சார்."

"அந்த லேப்ட் பாக்கெட்டை அனுப்பிட்டேன். மாரியப்பன்கிட்ட மத்தியான லன்ச்சைக் கொண்டு வரவேணாம்னு சொல்லிட்டேன்."

"ஏன் ஸார்?"

"இன்னிக்கு மத்தியானம் லன்ச் எனக்கு தம்ப கான்டீன்ல.. என் கூட சேர்ந்து இன்னைக்கு நீங்க சாப்பிடப் போறீங்க" என்றான் நாதன்.

அவன் கண்கள் சிரித்துக் கொண்டிருந்தன. புருவங்களின் ஒன்று சேர்தல் கூட அவளுக்கு இப்போது அவ்வளவு முரட்டுத்தனத்தைக் கொட்டிய மாதிரி தெரியவில்லை.

"ப்ளீஸ்... இது ஒண்ணும் கூடாத விஷயமில்லை. நீங்க மறுக்கக் கூடாது."

"யெஸ்... ஸார்" என்று சாவித்திரி வெளியே வந்தாள்.

நெஞ்சில் படபடப்பு. எதற்கு அவளோடு மதியச்சாப்பாடு? நாதன் வந்ததில் இருந்து ஒருபோதும் இப்படி சாப்பாட்டிற்கு அழைத்ததேயில்லை. மனத்தில் எதை இருத்திக் கொண்டு அழைக்கிறான்? என்ன இருந்தாலும் அவன் அவளுடைய மேலதிகாரி. அந்தப் பதவித் துணிச்சலுடன் அவன்

கூப்பிடுகிறான். அவள் மறுத்தால் அதற்குப் பின் அவனுடைய மனத்தில் அவள் ஒரு கரும் புள்ளியாகிப் போகலாம். ஆபீஸில் எப்போதாவது எதற்காவது ஒரு அரவான் தேவைப்பட்டால், நாதனின் மூளையில் சாவித்ரி என்ற பெயர் பளிச் பளிச் என்று மின்னத் தொடங்கலாம். அதெல்லாம் வேண்டாம் என்றால் சாப்பிடப் போக வேண்டும். இன்றைக்கு சாப்பாட்டு விஷயத்தில் உரிமை. நாளைக்கு? சாவித்ரியால் எந்த மாதிரியும் யோசிக்க முடியவில்லை. மற்றவர் மனதில் என்ன இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் வரத்துடன்தான், கடவுளின் மடியிலிருந்து இறங்கி அடுத்த பிறப்பிற்குள் நுழைய வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

மிகச் சிக்கனமாக 'இரண்டு சாப்பாடு' என்று ஆர்டர் செய்தான் நாதன். ஆபீஸில் எங்கேயாவது ஒரு மூலையில் வதந்தியின் ஒரு பொறி விழுந்திருக்குமெனத் தோன்றியது சாவித்ரிக்கு.

''சாவித்ரி. எனக்கு சுத்தி வளைச்சி எல்லாம் பேசத் தெரியாது. நேரடியா பேசறேன். எனக்கு ஒங்களை ரொம்பப் பிடிச்சிப் போச்சி. நான், ஒங்களை, 'நீங்க, வாங்க போங்க'ன்னு ரொம்ப சிரமப்பட்டுத்தான் சொல்றேன். உங்களை ஒருமையில கூப்பிட்டுப் பேச அனுமதி குடுத்தீங்கன்னா நான் ரொம்ப ஃப்ரீயா ஃபீல் பண்ணுவேன்.''

மரக்கிளை நுனி சிறுத்தை!

''ஒடனே கன்னா, பின்னான்னு நெனைக்க வேணாம். உங்க வீட்டுப் பெட்ரூமுக்குள்ள நான் எட்டிப் பாத்துடுவேன்னுல்லாம் சந்தேகப்பட வேணாம். எனக்கு ஒரு தங்கை இருக்கா. ஸ்டேட்ஸ்ல. அவளும் சந்தோஷமாத்தான் இருக்கா. எனக்கு ஒங்களப் பாத்த மொத நாளே அவளைப் பாக்கற மாதிரி இருந்தது. அதனால ஒங்கமேல எனக்கு ஒரு தனிப்பிரியம்.''

''என்னை வா, போன்னே கூப்பிடுங்க சார்.''

''தாங்க்ஸ் சாவித்ரி. நான் எம்.பி.ஏ. படிச்சவன். ஸ்டேட்ஸுக்குப் போய் இண்டஸ்ட்ரியல் சைக்காலஜி படிச்சவன். அதனால எனக்கு மத்தவங்க மனசை ஓரளவு புரிஞ்சிக்க முடியும்.''

''எனக்குப் புரியலை.''

''ஒனக்கு லைஃப் போரடிக்குதுதானே?''

சாவித்ரி தீயை மிதித்து விட்டவள் போல் நாதனைப் பார்த்தாள். அவன் என்னவோ சிரித்துக் கொண்டு, சிவப்புப் பூக்கள் நிறைந்த குல்மொஹர் மரம் காற்றில் கம்பீரமாய் நிற்பது போல் தெரிந்தான்.

''நான் கவனிச்சிட்டு வரேன் சாவித்ரி. மூர்த்திகிட்டேர்ந்து போன் வந்தா மட்டும் நீ ரொம்ப மெக்கானிக்கல்லா பேசறே. ஆனா மத்தவங்ககிட்ட அப்படிப் பேசறதில்ல. நல்லா சிரிச்சித்தான் பேசறே.''

''மூர்த்திக்கு எம்மேல பிரியம் இல்ல. நீங்க உங்க ஒய்பை எவ்வளவு லவ் பண்றீங்க? வாரத்துக்கு ஒரு கிஃப்ட்டாவது அனுப்பறீங்க. தனஞ்செயன் அவரோட ஒய்பை தலைமேல தூக்கி வச்சிக் கொண்டாடறாரு. ஆனா... எங்க வீட்ல? அக்காவோட லைஃப் ஒரு ஃபெய்லியர். மூர்த்திக்கு நான் யாரோடயாவது ஓடிப் போனாக் கூட கவலையில்ல. அவருக்கு அவரோட ஆபீஸ். பேப்பர். பேப்பர். நீங்க என்னைத் தங்கைன்னு சொல்லிட்டதாலத்தான் சொல்றேன் நாதன் சார்.''

''பரவால்ல. நாதன்னே கூப்புடு. நீ மூர்த்திக்கு என்னிக்காவது கிஃப்ட் வாங்கித் தந்திருக்கியா சாவித்ரி?''

ஒரு பெரிய பாறாங்கல்லால் அவள் முகத்தை மோதினான் நாதன். யோசித்துப் பார்த்தால் இல்லை. அப்படித் தோன்றியதே கூட இல்லை.

''ம்ஹூம்ஹூம்.''

''தேர் யூ ஆர். புருஷன் ஒன்னைத் தாங்கணும். புருஷன் ஒன்னைக் கவனிக்கணும். புருஷன் ஒனக்கு கிஃப்டெல்லாம் வாங்கித் தரணும். புருஷன் உன்னோட கேர்-டேக்கரா இருக்கணும்னு நெனைச்சிட்டிருக்கே. அது உன்னோட தப்பில்ல. வழிவழியா வர்ற விஷயம் அது. ஆம்பளைதான் பெண்ணை

தினமும் லஞ்சுக்குத் தயிர்சாதம் எடுத்துச் செல்லும் என் மகன் சாதத்தை மீந்துக் கொண்டு வருவான். பார்த்தார் கற்பனைவளம் மிக்க என் மாமியார். தொட்டுக் கொள்ள நான் வைக்கும் சாலட்டைத் தனித்தனியாகத் தன்னிடம் தரச் சொன்னார். வெள்ளரி, கேரட், தக்காளி, வெங்காயம் போன்றவற்றைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி தயிர் சாதத்தின் மேல் மனுஷன், கிளி, மயில் என்று தினம் ஒரு உருவத்தைச் செய்து வைத்தார். அவரது கைவண்ணம் என் மகனுக்கு நிறைய நண்பர்களைச் சேர்த்து, 'இன்றைக்கு என்னடா ஸ்பெஷல்' என்று கேட்க வைத்தது. டிபன் பாக்ஸும் காலியாகி அவன் வயிறும் நிறைகிறது.

- சியாமளா ராஜகோபால்





மிக்ஸரில் இரண்டு டீஸ்பூன் ஓமத்தை நெய் விட்டுப் பொரித்துக் கலந்து சாப்பிட்டுப் பாருங்கள். மிக்ஸர் ஓம மணத்துடன் கமகம வென்று மணம் வீசும். வயிற்றுக் கோளாறும் ஏற்படாது.

- பாலா ராஜேந்திரன்

வழிகாமிச்சிக் கூட்டிட்டுப் போகணும்னு உம் மனசில பதிஞ்சி போயிருக்கு. கிட்டத்தட்ட எல்லா லேடீஸும் இப்படியேதான் நெனைக்கறாங்க. தலைமுறை தலைமுறையா இப்படித்தான் பொண்ணுங்க கத்துக்கறாங்க. அதனால புருஷன் கவனிக்கலேன்னா கோவம் வருது. எங்கேயாவது ஓடிப் போகலாமான்னு தோணுது. வாழ்க்கை போரடிக்குது. என் ஒய்ப் எனக்கு ப்ரசண்ட் பண்றா. ஒரு ஷர்ட். ஒரு பெல்ட். புதுசா மார்க்கெட்டுக்கு வந்திருக்கிற டை-பின். கிட்டத்தட்ட அவ என்னோட அம்மா மாதிரி நடந்துக்கறா. நீ அப்படி உன் புருஷனோட அம்மா மாதிரி நடந்து பாரேன்."

சாவித்ரி விக்கித்துப் போய் அவனைப் பார்த்தாள். யார் இந்த நாதன்? வானத்திலிருந்து கடவுளால் அனுப்பி வைக்கப்பட்ட தேவனா? இந்த பலாப்பழ முகம் இவ்வளவு சக்தி வாய்ந்த நீதியை ஒளித்து வைத்திருந்து சரியான சமயத்தில் அதை எடுத்து என் மேல் ஏவிவிட்டிருக்கிறதே! என் மன அலைளை எப்படி அவன் புரிந்து கொண்டான்?

"அம்மான்னா, ஒரேயடியா அம்மாவாய்டாதே. ராத்திரியில ஒய்ஃபா இரு. கொழந்தைங்கள சீக்கிரமாத் தூங்கப் பண்ணு. நீயும் ஒன் புருஷனும் மட்டும் மொட்டை மாடில போய் நின்னு நிலாவைப் பாத்துட்டு வாங்க. சாம்பார், குழம்பு வாசனையோட ஒரு புடைவையைக் கட்டிக்கிட்டு எதிர்ல நிக்காதே. மத்த ஆம்பிளைங்க முன்னாலே அப்படியா நிக்கறோம். புருஷன் முன்னாடி மட்டும் ஏன் அப்படி இருக்கணும்? வியர்வைக் கறை இல்லாத நீட்டான உள்ளாடை போடேன். ஐ'ம் ஸாரி. நான் ரொம்ப மூக்கை நீட்றேன்னு நெனைக்கறேன்."

"பரவாயில்ல."

"ஹெட் ஆபீஸ்ல திடீர்னு என்னை இங்க போஸ்ட் பண்ணதுக்குக் காரணம் என்ன தெரியுமா சாவித்ரி?"

அவள் அப்பாவித்தனமாய் மறுத்துத் தலையை அசைத்தாள்.

"இந்த ப்ராஞ்ச்ல ஒரு மோசடி நடந்திருக்கு. அதை யார் பண்ணாங்கன்னு கண்டுபிடிச்சி, மோசடி பண்ணுன ஆளை வேலைய விட்டு அனுப்பணும்ங்கற ஆர்டரோடதான் நான் இங்க வந்தேன். யார்னு கண்டுபிடிச்சிட்டேன். மெமோ இஷ்யூ பண்ணப் போறேன், தனஞ்செயனுக்கு."

"த-ன-ஞ்-செ-ய-ன்?"

"ஆமா. அவன் பர்சனல் ரெகார்டு ரொம்ப அழுக்கா இருக்கு. அவன் பொண்டாட்டியைத் தாங்கறானா? நீ நம்பறே. பெரிய ஜோக். லேடீஸ் எப்படி இவ்வளவு ஈஸியா ஏமாந்து போறாங்கன்னு எனக்குத் தெரியலே. போலாமா?"

சாவித்ரியின் கால்கள் பஞ்சாக இருந்தன.

சாயங்காலம் சாவித்ரி சீக்கிரம் புறப்பட்டு விட்டாள். நாதனின் வார்த்தைகள் சவுக்கால் அடித்து அடித்து அவள் உடல் முழுவதையும் ரணப்படுத்தி விட்ட மாதிரி இருந்தது. அவன் சொன்னதில் இருந்த நியாயம் என்ற துறட்டுக்கோல் அவளது மன சாக்கடையைக் குத்திக் குத்திக் கிளறியது. நாதன் திடீரென்று உதைக்க இருந்த பசுவின் கழுத்தைக் கையால் வருடி சாந்தப்படுத்தி விட்டான். இங்கே கற்பு பற்றி எல்லாம் பேச்சில்லை. பிரியத்தைப் பற்றி, அன்பைப் பற்றித்தான் பேச்சு. கொடுக்கல் வாங்கலில் ஒரு ஒழுங்கு வேண்டும். கொடுத்து வாங்க வேண்டும். வெறுமனே வாங்கிக் கொண்டேயிருப்பது தப்பு. சரிதானே.

பஸ்ஸின் டீஸல் புகை அவள் முகத்தை மூடிய போது, மலர் மணம் நிறைந்த மேகமொன்று அவளைத் தழுவுவதாகத்தான் சாவித்ரிக்குத் தோன்றியது. பஸ்ஸின் ஜன்னலில் இருந்து ஒரு பையன் அவளை நோக்கிக் கையசைத்தான். அவள் அழகை அங்கீகரிக்கிறான். சாவித்ரி கையசைத்து அவனுக்கு நன்றி தெரிவித்தாள்.

உற்சாக முகங்களும், சிரிப்பும் ஆரவாரமும் நிறைந்த ஒரு டிபார்ட்மென்டல் கடையில் நுழைந்தாள். மூர்த்திக்குப் பிடிக்கும் என்று தோன்றிய மணமுடைய ஒரு சென்ட் பாட்டில் வாங்கினாள். வியர்வை அழுக்குத் தாக்காத உள்ளாடைகள் வாங்கினாள்.

1-2-3 ஆண்டுகள்...
உங்கள் குழந்தையின்
Junior Horlicks ஆண்டுகள்.



கூடுதல் பால்சத்து: நா சிலிர்க்க வைக்கும் அபாரமான இதன் பால் சுவையை குழந்தைகள் மகிழ்வாய் விரும்புவார்கள்.

கூடுதல் ஊட்டச்சத்து: உங்கள் குழந்தையின் இம்முக்கிய மூன்று ஆண்டுகளில் அவனுக்குத் தேவைப்படும் அத்தியாவசியமான புரோட்டீன்கள், விட்டமின்கள், கால்சியம் மற்றும் இரும்புச்சத்தை ஜூனியர் ஹார்லிக்ஸ் கொண்டுள்ளது.

எளிதில் ஜீரணமாகிறது: ஜூனியர் ஹார்லிக்ஸ் எளிதில் ஜீரணமாகிவிடுவதை உங்கள் குழந்தை உணர்வான். காரணம், 1, 2, 3 வயதைச் சார்ந்த குழந்தைகளுக்காகவே இது விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

உங்கள் குழந்தை வளர்ச்சி அடைந்திடும் இந்த முக்கியமான வயதினில் அவனது அன்றாட உணவில் ஒரு அங்கமாக ஜூனியர் ஹார்லிக்ஸை சேர்த்திடுவீர்!

HTA.5926.95 TAM

The Special 123 Nourisher

கொஞ்சம் மெல்லிய, சன்னமான துணியாலான நைட்டிகள் வாங்கினான். ஸ்டேஷன் நோக்கி விரைந்தான்.

ரயிலில் இருந்தவர்கள் எல்லோரும் ஓர் உற்சாக மாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அவனைச் சுற்றி நடந்த பேச்சில் அன்புதான் முதலிடம் வகித்துக் கொண்டிருந்தது.

'புருஷன், பொண்டாட்டி ரெண்டு பேருக்குள்ளயும் அப்படி ஒரு அன்னியோன்யம் மாட்டிடுத்து. மாமி ஸ்பாட்லேயே காலி. அவர் மயக்கமாய்ட்டார். ஆஸ்பத்திரில கண்ணைத் தொறந்து 'மாமி எங்கே'ன்னு கேட்டார். 'இந்த மாதிரி சேதி'ன்னு சொன்னா. அவ்ளவ்தான். அடுத்த செகண்ட் அவர் இல்ல. மாமி பின்னாலேயே போய்ட்டார்'

இதுநாள் வரைக்கும் இந்த வாய்மையை அறியாமல் இருந்தது எப்படி? சாவித்ரிக்குத் தன் மேலேயே அம்பு பாய்ச்சிக் கொண்டு அழ வேண்டும் போலிருந்தது. மாம்பலம் ஸ்டேஷன் சலனமின்றிக் கிடந்தது.

குழந்தைகளைச் சீக்கிரம் தூங்கப் பண்ணினாள்.

"நாளைக்கு லீவுதானே. ஜூவுக்குப் போய் லயன், கிராஃபி, எலிபெண்ட் எல்லாம் பாக்கலாம்"

"நீ கூட்டிட்டுப் போணும்?"

"ப்ராமிஸா கூட்டிட்டுப் போறேன்."

தூங்கி விட்டார்கள். குளித்தாள். புத்தாடை அணிந்து, சென்ட் பீய்ச்சி, நைட்டி அணிந்து... மூர்த்தி வந்தான். அவளைப் பார்த்தான்.

"சாவித்ரி" என்று பிரமித்தான். "நீயா... நீயேதானா?"

"ம்" என்றாள் புன்முறுவலுடன்.

அவன் கையிலிருந்த ப்ரீஃப் கேஸை வீசியெறிந்தான். அவளை நோக்கி நடந்து வந்தான்.

"சூப் பண்ணியிருக்கேன். புஸ்தகத்தில படிச்சி புதுசா மலாய் கோஃப்தா பண்ணி ட்ரை சப்பாத்தி பண்ணியிருக்கேன். அப்புறம் உங்களுக்குப் புடிச்ச மாதிரி தயிர்சாதம். கடுகு தாளிச்சி, இஞ்சி பச்ச மிளகாப் போட்டு, கொத்தமல்லியால அலங்காரம் பண்ணி."

"கிரேட். ஸிம்ப்ளி கிரேட்"

"எது?"

"எல்லாமே" என்றான்.

நிமிஷத்தில் குளித்து, ஜிப்பாவும், பைஜாமாவும் மாட்டி வாசனையாக வந்தான்.

டைனிங் டேபிளின் அடங்கின வெளிச்சத்தில் அவளைப் பார்த்துக் கொண்டு அமர்ந்தான்.

"குழந்தைங்க?"

தாமரை, இதழ் மூடுகிற மாதிரி கண்களை மூடி 'தூங்குறார்கள்' என்பதை சைகையில் சொன்னாள்.

"ஸாரி சாவித்ரி"

"எதுக்கு?"

"நான் ஒன்னைக் கவனிக்கவேயில்ல இல்ல?"


அவன் அவளை நெருங்கி வந்து அவளை மெல்ல அணைத்தான். அவள் காதருகே உதடுகளை அசைத்தான். பாடினான்.

ஏக் லட்கீ கோ தேகா தோ ஐஸா லகா... ஜைஸே சாந்த்னீராத்.. ஜைஸே டண்டீ ஹவா...

சாவித்ரிக்கு சிலிர்த்தது. சொர்க்கம் மீண்டது.

குலோப்ஜாமுன் செய்யும்பொழுது பாகில் ஏலக்காய், எசன்ஸ் போன்றவற்றைப் போடுவதற்குப் பதில் இரண்டு கிராம்பை நெய்யில் வறுத்து லேசாக (நசுக்கி) பொடித்துப் போட்டுப் பாருங்கள். மாறுதலான மணமுடன் ஜாமுன் மிகவும் நன்றாக இருக்கும்.

- பாலா





மங்கையர் மலரும் வி.ஜி.பி. கோல்டன் பீச்சும் நடத்திய சுற்றுலா போட்டியில் பரிசு பெற்ற கட்டுரைகள்.

சுற்றுலா போட்டியில் 'சிறப்புப் பரிசு' பெற்ற கட்டுரை

ரயில் சிநேகிதம்


போன வருடம் கோடை விடுமுறைக்கு, குடும்பத்தோடு பெங்களூர் சென்றபோது, ரயிலில் நடந்த ஒரு சம்பவம் மறக்க முடியாததோடு, எங்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்தது.

நாங்கள் ரயிலில் ஏறி உட்கார்ந்த சிறிது நேரத்தில் போர்ட்டர் கட்டு சாதக் கூடையையும், பெரிய பெரிய அட்டைப் பெட்டிகளையும் கொண்டு வந்து வைக்க, தொடர்ந்து புதுமணத் தம்பதிகளுடன் பத்துப் பதினைந்து பேர் ஏற, அந்த கம்பார்ட்மெண்டே கலகலப்பானது. பகல் நேர பிரயாணமாக இருந்தாலும், புளியோதரை வாசனையும், நல்லப் பேச்சுத் துணையும் கிடைத்ததில் நேரம் போனது தெரியவில்லை. நடுநடுவில் இறங்கி, சிறுவர்களுக்கு மட்டும் பிஸ்கெட்டும் பழங்களும் அவர்கள் வாங்கி கொடுத்து விட்டு எதுவும் சாப்பிடாததோடு அந்த கட்டுசாதக் கூடை சாப்பாட்டை வீணாக்குகிறார்களே என்ற கோபமும் என் மனதுக்குள் பொங்கி எழுந்தது.

ஜோலார்ப்பேட்டை தாண்டியதும், அவர்கள் ஏன் கட்டுசாதக் கூடையை பிரித்துச் சாப்பிடவில்லை என்று நான் தெரிந்து கொண்டதும், நாங்கள் நிஜமாகவே நெகிழ்ந்து விட்டோம். மாப்பிள்ளை வீட்டோடு வேலை செய்து கொண்டிருந்த வேலைக்காரியின் தாயார், அன்று காலை இறந்து விட்ட செய்தி கிடைத்ததில் அவசரமாக அவளை அனுப்பி விட்டு, கல்யாணம் நின்று போகக் கூடாது என்பதற்காக சடங்குகளை மட்டும் முடித்து விட்டுக் கிளம்பி விட்டார்களாம். பங்கார்பேட்டையில் இறங்கி அவள் வீட்டிற்குச் சென்று துக்கத்திற்கு வந்தவர்களுக்கு உணவளித்து விட்டு பிறகுதான் சாப்பிடுவார்களாம். அதைக் கேட்ட பிறகு நாங்கள் கூட எங்கள் உல்லாசப் பயணத்தை சீக்கிரமாகவே முடித்து விட்டுத் திரும்பி வந்து எங்கள் வீட்டுக்கருகில் இருந்த ஏழைக் குழந்தைகளுக்குப் பரிசுப் பொருட்கள் வாங்கிச் சென்றோம்.


தொடர்ந்து வருடா வருடம், இது போல ஏழைகளுக்கு உதவி செய்ய எங்களைத் தூண்டி விட்ட அந்த ரயில் சிநேகிதர்களுக்கு நன்றி.

- கே. விசாலாட்சி, சென்னை - 24.



திடீர் 'மினி' விருந்து!

எங்கள் வீட்டில் நெடுநாளாகவே சகோதரிகள், அவர்கள் மக்கள், மற்றும்



நெருங்கிய உறவினர்களுடன், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயில், மற்றும் வேலூரில் அமைந்த இரத்தினகிரி, மதுராந்தகம், பாண்டி, மதுரை என திருத்தலங்களுக்குச் சுற்றுலா செல்ல வேண்டுமென்ற விருப்பம் அதிகம்! புறப்பட்டோம்.

'ஆதிபராசக்தி' கோயிலுக்குப் புறப்பட்டதும் பாதி வழியில் வேன் மக்கார். குழந்தைகளுக்கு ஓரே பசி. கையில் எடுத்து வந்திருந்த உணவு வகைகள் எப்பவோ காலியாகி விட்டிருந்தன. ஃபோன் செய்து தகவல் தெரிவித்து மாற்று வண்டி வர, தீர்வு காண நேரமில்லை! அன்று அங்கு தங்கும்படியாகி விட்டது!


அருகேயிருந்த எங்கள் உறவினர் வீட்டிற்குப் போய் நாங்கள் கதவைத் தட்டியதும், 'யாரு?' என்று கண்களைக் கசக்கியபடி வந்தார் அந்த அம்மாள். ஏனெனில் அப்போது இரவு 10 மணி. விஷயம் தெரிந்ததும், "பாவம்! பசியாயிருக்கீங்களே," என்றார். உண்மையை ஒத்துக் கொண்ட நாங்கள் அவரைச் சிரமப்படுத்தாமல் நாங்களே சமைக்கிறோம் என்றோம்.

ரேவதி உலை வைத்துச் சாதம் வடித்தாள். தோட்டத்தில் காய்த்த கத்தரிக்காய் மட்டும் பறித்து வைக்கப்பட்டிருந்தது. வினயா அதை நறுக்கிக் கொடுத்தாள். சியாமளி, சாம்பாருக்கு வறுத்து மிக்ஸியில் அரைத்துக் கொடுக்க, இந்துமதி சாம்பார் தயார் செய்தாள்.

நான் தக்காளி ரசம் இன்சார்ஜ். சாருமதி, அனைவரையும் உட்கார வைத்து, சாப்பாடு பரிமாற, ஒருவர் இலையெடுத்து, சுத்தம் செய்ய, ஒரு மினி விருந்து தயார்! அன்று கத்தரிக்காயைத் தவிர, தொட்டுக் கொள்ள பொரியல் வைக்க காய்கறி வேறு ஏதும் இல்லை. அவரைக்காய் தோட்டத்தில் காய்த்திருந்த போதிலும், இரவில் எவ்விதம் பறிப்பது? அதுவுமின்றி அனைவருக்குமே ஒரே பசி! பறிக்கவோ, சமைக்கவோ, பொறுமையில்லை!

எத்தனையோ பெரிய விருந்துகளில் கிடைக்காத திருப்தி அச்சிறு திடீர் மினி விருந்தில் கிடைத்தது!

- சீதா ராகவன், சென்னை - 94.



பண்டிகை தினங்களில் அரிசி கோல மாவு தயாரிக்கும் போது அதனுடன் வடித்த கெட்டியான கஞ்சியை சேர்த்துக் கொண்டால் நீங்கள் இழுக்கும் பக்கமெல்லாம் கோலம் அழகாக வருவதுடன் காய்ந்தவுடன் 'பளிச்'சென்றிருக்கும். நவராத்திரி நேரங்களில் முதல் நாள் இப்படி போட்ட கோலம் ஒன்பது நாட்களும் சீக்கிரம் கலையாமல் புதுப் பொலிவுடன் இருக்கும்.

- சசிபெருமாள்.

வேண்டாம் தொந்தரவு


ஓரிடத்திற்கு நாம் விருந்தினராக சென்றோமானால் இவ்விருந்தினர் (நாம் ஒரு மாதம் தங்கினாலும்) மேலும் சில நாட்கள் இருக்க மாட்டாரா என்ற விதத்தில் நாம் அங்கு நடந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு சிறந்த விருந்தினராக அமைய நாம் அணிய வேண்டிய நவரத்தினத்தை பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

வைரம் :

நாம் யார் வீட்டிற்குச் செல்வதாக இருந்தாலும், முடிந்தவரை அவர்களிடம் குறைந்தது ஒரு வாரம் முன்னதாகவே நம் வருகையை தெரிவித்து விட வேண்டும். (இது அவர்கள் பொருளாதாரம், இடம், நேரம், தன் சொந்த அலுவல் ஆகியவற்றை முன்னதாகவே தீர்மானிக்க ஏதுவாக இருக்கும்.)

வேண்டாம் : திடீர் விசிட்.



நீலம் :

நம்மில் பலர் விருந்தினர் வீட்டுக்குச் சென்றவுடன், அவர்களை அழைத்துக் கொண்டு அங்குள்ள பல இடங்களுக்குச் செல்கின்றனர். இதில் தவறொன்றுமில்லை. ஆனால் செல்லுமிடத்திலெல்லாம் செலவை அவர் தலையில் கட்டி விடுகின்றனர். எந்தக் காரணத்தை கொண்டும் அனாவசியமாக நமக்கு அவர் செலவழிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் பணத்தில்தான் பிரச்னையே ஆரம்பம்.

வேண்டாம் : அடுத்தவர் பர்ஸ்

முத்து :

நாம் எங்கு சென்றாலும், நம் வீட்டிலுள்ள அனைத்துச் சௌகரியங்களும் போன இடத்திலும் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. உதாரணமாக (தூங்கும் போது கொசுவர்த்தி மேட் வேண்டும்) போன்றவை.



வேண்டாம் : அடுத்தவர் மனக்கஷ்டம்.

பவளம் :

நாம் விருந்தினராகச் செல்லுமிடத்தில் அவர் பொருளாதார ரீதியாக கஷ்டப்படுபவர் என்று தெரிந்தால் கண்டிப்பாக நாம் அவர்களுக்குப் பிரதி உபகாரம் செய்ய வேண்டும். அவர் நேரடியாகப் பெற்றுக் கொள்ள மறுத்தாலும் அவர்கள் தேவைக்கேற்ற பொருளைப் பரிசாக அளிக்கலாம். ஏனென்றால் ஒரு வாரம் ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு செலவாகும், நடுத்தரவர்க்க குடும்பத்திற்கு அது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று.

வேண்டாம் : நம்மால் அடுத்தவருக்குப் பொருளாதார நெருக்கடி.

மாணிக்கம் :

கூடுமானவரையில் நாம் ஒரு வீட்டிற்குச் செல்லும் போது அங்குள்ள குழந்தைகளுக்கு தேர்வு இல்லாத நேரமாக பார்த்துச் செல்ல வேண்டும். நிச்சயம் நம் வருகை அவர்களின் படிப்பைப் பாதிக்கும்.

வேண்டாம் : உபத்திரவம்

மரகதம் :

நாம் எங்கு சென்றாலும், நாம் வந்திருப்பது ஓர் குடும்பத்திற்கு என்ற எண்ணத்தை நினைவில் கொள்ள வேண்டும். ஹோட்டலில் வந்திருப்பது போல் நினைத்துக் கொண்டு உட்கார்ந்த இடத்தில் ஆர்டர் செய்யக் கூடாது. ஒரு குடும்பத்தில் ஒவ்வொரு வேளையும் எந்த அளவு வேலை உண்டு என்பது அனைவரும் அறிந்ததே. கூடுமானவரையில் (அவர்கள் அனுமதியுடன்) சிறு சிறு ஒத்தாசை செய்யலாம். நாம் அவர்கள் வேலையை பகிர்ந்து கொள்ளலாம்.

வேண்டாம் : நம் வருகையால் அடுத்தவர்க்கு வேலை சுமை.

கோமேதகம் :

நாம் எங்கு சென்றாலும், நாமாக தோண்டி, தோண்டி அவர்கள் பிரச்னைகளையும், கஷ்டங்களையும் கேட்கக் கூடாது. ஏதாவது தெரிய வந்தாலும் பாலிஷாக விட்டு விட வேண்டும்.

வேண்டாம் : அநாவசிய மூக்கு நுழைப்பு

பதுமராகம் :

நாம் எங்கு சென்றாலும், நம் ஊரில் பிரபலமான பொருளை வாங்கிச் சென்றால் அது அவர்களை மிகவும் சந்தோஷப்படுத்தும்.

வேண்டாம் : சிறிய விஷயத்தில் அடுத்தவரது ஏமாற்றம்.

வைடூரியம் :

நாம் அங்கிருந்து கிளம்பும் போது அவர்கள் செய்த பல நல்ல விஷயங்களை எடுத்துக் கூறி, நம் வீட்டிற்கு அவர்களை அழைக்க வேண்டும். கண்டிப்பாக நன்றி கூற


"ஜென்டில் மேன்" படம் பார்த்து என்னை ஜென்டில் மேனாக்கிய ரசிகப் பெருமக்களுக்கும், திரைப்பட விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும், பத்திரிக்கை நண்பர்களுக்கும், மற்றும் அனைத்து தரப்பினருக்கும் என் நன்றி !
எங்களுடைய "காதலன்" படத்தையும் ஒரு மாபெரும் வெற்றிச் சித்திரமாக்க அனைத்து தரப்பினரையும் நன்றியுடன் கேட்டுக்கொள்கிறேன்.
-அன்புடன்
GENTLEMAN
K.T. KUNJUMON
K.T. KUNJUMON
PRESENTS
ARS FILM INTERNATIONAL
சத்யம் 70MM A/C
சாங்கம் 70MM A/C
கமலா A/C
பாரத்
4 காட்சிகள்
மற்றும் உலகெமங்கும்
TAKE IT EASY
கா•த•ல•ன்
ஷங்கர்
A.R.ரகுமான்
ஜீவா • லெனின் – V.T. விஜயன் • வாலி – வைரமுத்து • தோட்டா தரணி பாலகுமாரன் • விக்ரம் தர்மா • சுந்தரம்–ராஜு
Elegant

வேண்டும். ஒரு சில கசப்பான விஷயங்கள் நேர்ந்திருந்தாலும் வெளிப்படுத்த வேண்டாம்.

வேண்டாம் : தர்மசங்கடமான சூழ்நிலை.

- எஸ். ஜெயஸ்ரீ, சென்னை - 44.

அநாவசிய சந்தேகம் வேண்டாம்!

1. முதலில் நம்முடைய வரவை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

2. அங்கு செல்லுமுன் தேவையான அவசிய பொருட்கள் சோப், பேஸ்ட், பிரஷ், பவுடர் போன்றவற்றை கையோடு எடுத்து வைக்கவும். அங்கு சென்று சோப் இருக்கா, பேஸ்ட் இருக்கா? எனக் கேட்கக் கூடாது.

3. எடுத்துச் செல்லும் பெட்டி பாதுகாப்பானதாக இருக்க வேண்டும். எதையாவது தொலைத்து அங்கு வேலை செய்பவரையோ, பிறரையோ சந்தேகிக்கும் நிலைமை உருவாக வாய்ப்பு கொடுக்கக் கூடாது.

4. உடன் குழந்தைகளை அழைத்துச் செல்லும் சமயங்களில், அவர்களால் வீட்டில் பிரச்னை எழாதவாறு சமாளிக்க வேண்டும். அவர்கள் வீட்டுக் குழந்தைகளுடன் அக்கா, அண்ணா என பாசத்தோடு விளையாட வைப்பது சிறந்தது.

5. சென்றவுடன், நம்முடைய திட்டம் என்ன, எத்தனை நாட்கள் இருப்பது என தெளிவாகச் சொல்லி விடுதல் நலம்.

6. சாப்பாடு வீட்டிலா, வெளியிலா என்பதை முன்கூட்டியே சொல்லி விட்டால் சமைப்பவர்க்கு வசதி.

7. அனுமதியின்றி டீ.வி., ரேடியோ வைக் கக் கூடாது. குழந்தைகள் ஏதேனும் பொருட்கள் உடைத்து விட்டால் திருப்பி வாங்கி வைத்து விட வேண்டும்.

8. இரவில் நேரங்கழித்து வந்து அவர்களின் தூக்கத்தைக் கலைக்கக் கூடாது. கூடியமட்டும் சீக்கிரம் வர வேண்டும். இதனால் அவர்களின் காலை அலுவல்கள் பாதிக்காமல் இருக்கும்.

9. வி.சி.ஆர். இல்லையா, வாஷிங் மெஷின் இல்லையா என் இல்லாத பொருளை தேடாமல் டீவி. கவர் நன்றாக உள்ளது, டேபிள் மேட் எம்பி ராய்டரி அழகாக இருக்கிறது என்ற பேச்சிற்கு சக்தி அதிகம்.

- க. சுமதி, தக்கோலம்.

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : குளிருக்கேற்ற உணவு

கடைசி தேதி : 15.10.'94

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


பல்லாயிரக் கணக்கான
இல்லத்தரசிகளின்
நம்பிக்கைக்குரியது!
L.G
100
YEARS
1894 - 1994
RAE-2111
எல். ஜி
கூட்டுப் பெருங்காயம்
போலி சரக்குகள்
உள்ளன ஜாக்கிரதை!
LALJEE GODHOO & CO.
SOWCARPET MADRAS
L.G
லால்ஜீ கோது & கம்பெனி
சௌகார்பேட்டை, சென்னை-600 079.


அபிராமி ஒரிஜினல் சிதம்பரம் கவரிங் நகைகள்
No. 158. ½ G. Rs. 280
No. 130. ½ G. Rs. 280 -
No. 136. ½ G. Rs. 280 -
No. 122. ½ G. Rs. 260 -
No. 121. ½ G. Rs. 260/-
No. 99. ½ G. Rs. 560/-
No. 108. ½ G. Rs. 280/-
No. 143. Rs. 75 -
No. 138. Rs. 180 -
No. 154. Rs. 75 -
Rs. 100/- No. 169
Rs. 100/- No. 168
No. 153. Rs. 75/-
½ கிராம், 1 கிராம், 2 கிராம் செயின், வளையல், நெக்லஸ் ரகங்கள் உபயோகித்த பின்பும், "திரும்ப பணம் பெறும்" நிபந்தனையுடன், கீழ்க்கண்ட எங்கள் இரண்டே ஷோரூம்களில் மட்டுமே கிடைக்கும்.
* இலவச கேட்லாக்கிற்கு விண்ணப்பிக்கவும் * நகையை V.P.P.ல் பெறலாம்.
அபிராமி
8 & 34, ரெங்கநாதன் தெரு
தி.நகர், போன் : 4347806
மாம்பலம் ரயில்நிலையம் அருகில்
* "அபிராமி சிதம்பரம் நகை கடைதானா" என்பதை கவனித்து வாங்குங்கள்! * கிளைகள் கிடையாது!

கல்வராயன் மலை - ஏழைகளின் ஊட்டி

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியில் இருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியும், அதன் பச்சை வண்ணம் போர்த்திய அழகும், சிலு சிலுவென வீசும் இளந்தென்றலும், மனதிற்கு இதம் தரும். எங்களைப் பொறுத்தவரை ஏழைகளின் ஊட்டி கல்வராயன் மலை என்போம். கள்ளக்குறிச்சி டு கருமாந்துரை நேரடி பஸ் வசதி உள்ளது. வழியில் 15 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளது "கோமுகி அணை". கல்வராயன் மலைகளில் பெய்யும் மழை மூலமாக ஏற்படும் சிற்றோடைகள் யாவும் ஒன்று சேர்ந்து கோமுகி அணையில் சேர்கிறது. நீர் நிரம்பி இருக்கும் காலங்களில் மலை மீது சற்று ஏறி அங்கு இருக்கும் Dam View Point என்ற இடத்தில் இருந்து அணையைப் பார்த்தாலே தனி அழகுதான். அங்கிருந்து 12 கி.மீ. தூரம் சென்றால், "குறத்தி குன்றம்" என்ற அருமையான இடமும், மேலும் 4 பர்லாங் தூரம் ஒற்றையடிப் பாதையில் இயற்கை அன்னையின் துணையுடன், வினோதமாக ரீங்காரமிடும் பறவைகளின் துணையுடனும் கடந்து சென்றால் "மேகம் அருவி"யும் உள்ளது.

- எஸ். பூங்கோதை,
கள்ளக்குறிச்சி.

லிங்கத்திலிருந்து வற்றாமல் சுரக்கும் தீர்த்தம்!

மைசூரிலிருந்து 25 கி.மீ. தென்கிழக்கே உள்ளது சோம்நாத்புரா என்ற சுற்றுலாத்தலம். அங்குள்ள ஹொய்சளா காலத்து நட்சத்திர வடிவிலான கோவில் கலையழகுமிக்கது. சுமார் 750 வருடங்களைக் கடந்திருந்த போதும் கம்பீரமாகவும், நுணுக்கமான வேலைப் பாடுகளுடனும் விளங்குகிறது.

அங்கிருந்து ப. நர்சிபூர் வழியாக மைசூர் திரும்பும் வழியில் சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ளது திருமுக்கூடல் என்னும் சிற்றூர். அங்கே கபில ஆற்றின் கரையில் அகஸ்தீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. மூலவர் லிங்க வடிவில் காட்சி தந்தருளுகிறார். லிங்கத் தின் தலைப் பகுதி சிறிது பின்னமடைந்தது போல் குழியாக உள்ளது. அங்கே பிரசாதமாக ஸ்வாமியின் தலையிலுள்ள குழிப்பகுதியி லிருந்து தீர்த்தம் எடுத்துக் கொடுக்கிறார்கள். எடுக்க எடுக்க இந்தப் பகுதியில் வற்றாமல் சுரக்கிறது தீர்த்தம்!

- வித்யா ஸ்ரீதர்,
பொள்ளாச்சி.

குற்றாலத்தை மிஞ்சும் திருமூர்த்திமலை நீர்வீழ்ச்சி!

திருமூர்த்திமலை - உடுமலைப்பேட்டையிலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் அருமையான நீர்வீழ்ச்சி.

நீர்வீழ்ச்சி என்றாலே குற்றாலம் மட்டுமே பலருக்கு நினைவு வரும். ஆனால் அதனையும் மிஞ்சி விடக்கூடிய அளவினில் அங்கு இந்நீர் வீழ்ச்சி அமைந்திருப்பதை அனுபவித்து உணர்ந்தால்தான் புரிந்து கொள்ள முடியும்.

மற்ற இடங்களைப் போல் அல்லாமல் நீர்வீழ்ச்சியானது கிட்டத்தட்ட ஐந்து அல்லது ஆறு கிலோமீட்டர் மலை ஏறிய பிறகுதான் தெரிகின்றது.

மற்ற இடங்களைப் போல் அல்லாமல் நீர்வீழ்ச்சியானது மிக அருகிலிருந்து வீழ்வதால் அதன் வேகம் மிகவும் அதிகமாகவும் அதே சமயத்தில் ஆபத்தில்லாமலும் இருக்கின்றது.

- எஸ். ரமேஷ் ப்ரியா,
சென்னை - 12.



சேப்பங்கிழங்கை வேக வைத்துத் தோலை உரித்தெடுத்த பிறகு எண்ணெயில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு வறுத்துக் கொள்ளுங்கள். பிறகு உப்பு, காரம் சேர்த்தால் மொறுமொறுவென்று இருக்கும். எண்ணெயும் கொஞ்சமாகச் செலவழியும். எண்ணெயில் வறுக்கும் போது சேர்த்தால் உப்பு காரம் எண்ணெயில் சென்றுவிடும்.

- ஜி. இந்திரா



உங்களுடைய
நிரந்தர வைப்புத் தொகைக்கு
கவர்ச்சிகரமான
30%
வட்டி
வழங்கப்படும்
இலவசம்!
சிங்கப்பூர் உல்லாச பயணம்!
சிறப்பு
குலுக்கல் நாள்:
1-11-1994
★ ரூ. 1 லட்சம்
வைப்புத் தொகை செலுத்துபவருக்கு சிங்கப்பூர் சென்றுவர விமான டிக்கட்.
★ ரூ. 50,000/-
வைப்புத் தொகை செலுத்துபவருக்கு மாலத்தீவு சென்று வர விமான டிக்கட்
★ ரூ. 25,000/-
வைப்புத் தொகை செலுத்துபவருக்கு மைசூர் சென்று வர முதல் வகுப்பு ரயில் டிக்கட் வழங்கப்படும்.
இலவசம்! ரூ. 10000/- நிரந்தர வைப்புத் தொகைக்கு 1 கிராம் 22 காரட் தங்க நாணயம் மற்றும் ரூ. 5000/- நிரந்தர வைப்புத் தொகைக்கு 20 கிராம் வெள்ளி நாணயம்
இப்பரிசுகள் குலுக்கல் மூலமாக தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு வழங்கப்படும்.
★ முதல் முறையாக தவணை முறை திட்டத்தில் நகைகள் வாங்க ஓர் அரிய வாய்ப்பு!
★ எங்களது ஷோரூம் முழுவதுமாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது (Fully Insured)
★ டெபாசிட் (வைப்புத் தொகை) செலுத்துபவர்களுக்கு தங்க நகைகளில் 2% சிறப்பு தள்ளுபடி
★ இந்தச் சலுகை முதல் 1000 நபர்களுக்கு மட்டும்
வட்டித்தொகையை பின்தேதியிட்ட காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும்
பாரதி ஜெம்ஸ் & ஜுவெல்ஸ்
F-7, முதல் மாடி, ஸ்பென்சர் பிளாசா,
769, மவுண்ட்ரோடு, சென்னை - 600 002.
போன்: 8524280. பேக்ஸ்: 91-44-8521782
இச்சிறப்பு இலவச பரிசு திட்டங்கள் அனைத்தும் 1-11-94 வரை மட்டுமே!
தி.நகர் உஸ்மான் ரோட்டில் அதிநவீன வைரம் மற்றும் தங்கச்சுரங்கம் உருவாகிறது !
பாரதி குரூப் கம்பெனிகள்:
★ பாரதி ஜெம்ஸ் & ஜுவெல்ஸ் மவுண்ட் ரோடு
★ வெல்டன் பர்னிச்சர்ஸ் வளசரவாக்கம்
★ ரமணன் இண்டர் நேஷனல் மவுண்ட் ரோடு
★ தனு எலக்ட்ரானிக்ஸ் மேற்கு மாம்பலம்
Lotus

நவராத்திரி: குழந்தைகள் என்ன சொல்கிறார்கள்?

நவராத்திரி என்றவுடன் நம் கண்முன்னே தெரிவது விதவிதமான பொம்மைகளும், பல வகையான சுண்டல் களும் தான். இவை வீட்டி னுள்ளே இடம் பெறுபவை. சிறிது வீட்டிற்கு வெளியே நவராத்திரியின் மாலை வேளை களில் எட்டிப் பார்த்தால் நம் கண்குளிர் காட்சி கிடைக்கும். ஆம்! சின்னஞ்சிறு பெண் குழந்தைகள் வண்ண வண்ண உடைகளில் உலா வரும் காட்சி. நவராத்திரி இந்தப் பெண் குழந்தைகளின் சந்தோ ஷத்திற்காகத்தான் என்பது பெரும்பான்மை யோரது கருத்து. நவராத் திரியைப் பற்றி இந்தக் குழந் தைகள் என்ன சொல்கிறார்கள்?

அபிராமி:

''நவராத்திரியின் போது ரொம்ப சந் தோஷமாயிருக்கும். எங்கம்மா நிறைய பொம்மை வைப்பா. நானும் ஹெல்ப் பண்ணுவேன்.. எங் கம்மா சின்னவங் களா இருக்கறப்போ, காலேஜ்ல படிக்கி றப்போ கூட எல்லார் வீட்டுக்கும் தினமும் போவாங் களாம். ஆனா எனக்குத் தினமும் எல்லார் வீட்டுக்கும் போக வெக்கமா இருக்கு. ஒரு நாளைக்கு நாலு அல்லது ஐந்து வீட்டுக்குப் போவோம். சீக்கிரம் வீட்டுக்கு வந்துடணும். ஏன்னா ஹோம் ஓர்க் செய்யணுமே? எங்க ஸ்கூல்ல நவராத்திரிக்கு லீவு கிடை யாது. அதுதான் ரொம்ப வருத்தமா இருக்கும். இருந்தாலும் நவராத்தி ரின்னா ஜாலிதான். நவராத்திரி முடிஞ்சு பொம்மைகளை எடுத்து வைக்கும் போது நாங்க வீட்ல இருக்க மாட்டோம். ஸ்கூல்லேர்ந்து வந்தா பொம்மை இல்லாத ஹாலைப் பார்க்க ரொம்ப வருத்தமா இருக்கும்.''

ப்ரீதி :

''எங்க வீட்ல கொலு வைக்க மாட்டாங்க. பக்கத்துல இருக்கிற வீட்ல எல்லாம் வைக்கிறதைப் பார்க்கும் போது, 'நம்ம வீட்லயும் வைக்கலாம் மா'ன்னு சொல்வேன். அம்மாவுக்கும் ஆசைதான். ஆனால் அம்மா



• லக்ஷ்மிப்ரியா



• ப்ரீதி



• அபிராமி



• பத்மாசுபஸ்ரீ

வேலைக்குப் போறாங்களே! எப்படி முடியும்? எல்லோரையும் மாதிரி 10 மணிக்குப் போய்ட்டு 5 மணிக்கு வந்தாப் பரவா யில்லை. ஆனா எங்கம்மாவுக்கு ஷிஃப்ட் வரும். எப்படி கொலு வைக்க முடியும். ஆனா நவராத்திரியின் போது புதுப் புது டிரஸ்ஸெல்லாம் போட்டுண்டு கொலு வச்சிருக்கிறவங்க வீட்டுக்குப் போவேன். அம்மாவுக்கு நேரம் கிடைக்கும் போது பட்சணம், சுண்டல் எல்லாம் பண்ணுவாங்க.''

பத்மா, சுபஸ்ரீ :

''எங்க வீட்டுலே கொலு வைப்போம். தினமும் எல்லார் வீட்டுக்கும் போய் கூப்பிடுவோம். எங்க வீட்டுக்கும் எல்லாரும் வருவா. நவராத்திரி சமயத்துல நாங்க என்ன பண்ணினாலும் எங்கம்மா - அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. எங்கப்பா புதுசா டிரஸ் எடுத்துத் தருவாங்க. எங்க விளையாட்டு பொம்மையைக் கூட கொலுவுல வைக்கக் குடுத்துடுவோம். நவராத்திரி சாயந்திரம் எல்லா நாளும் எங்க வீட்டுல ஒரே கூட்டமும் பாட்டுமா இருக்கும். ஸ்கூல் சில சமயம் இருக்கும். எல்லாரும் வந்துட்டுப் போனாப்புறம் இராத்திரி 10 மணிக்கு மேலதான் ஹோம் ஒர்க் பண்ணுவோம். மத்த நாளுல படிக்கலேன்னா. ஹோம் ஒர்க் சீக்கிரம் முடிக்கிலேன்னா எங்கம்மாவும் அப்பாவும் திட்டுவாங்க. ஆனா நவராத்திரி சமயத்துல திட்டு விழாது. ஸ்கூல் இருந்தா எப்பவும் ஃபிரெண்ட்ஸ் கிட்ட கொலு பத்திதான் பேசுவோம். இதுனால சில சமயம் மிஸ்கிட்ட திட்டு கூட வாங்கி இருக்கோம். அதனால எங்களுக்கு நவராத்திரின்னாலே ஜாலிதான்!''

லக்ஷ்மி பிரபா :

''எங்க வீட்ல கொலு வைக்கிற வழக்கம் கிடையாது. நாங்க திருவல்லிக்கேணியிலே இருந்தப்ப பக்கத்து வீட்ல எல்லாம் கொலு வைப்பாங்க. எங்கம்மா கொலு பாக்க கூட்டிட்டுப் போவாங்க. அப்ப 'நம்ம வீட்லேயும் வைக்கலாம்மா' அப்படின்னு கேட்டா நம்ம வீட்ல வைக்கற வழக்கமில் லேம்மான்னு அம்மா சொல்லிடுவாங்க. எனக்கு ரொம்ப ஆசையா இருக்கும். அதனால விளையாடும் போது என் பொம்மையெல்லாம் கொலு மாதிரி வச்சு விளையாடுவேன். இப்ப இந்த வீட்டுக்கு (கோயம்பேடு) வந்தப்புறம் பக்கத்துல யாரும் கொலு வைக்கிற தில்லே. இது எனக்கு ரொம்ப வருத் தமா இருக்கு.''

பேட்டி : **புஷ்பா ரமணி**

கொலு முடிந்தபின் மொத்தமாக பேக் செய்வதைவிட ஒவ்வொரு படி பொம்மை களையும் தனித்தனியாக சிறு பெட்டிகளில் வைத்து அதைப் பெரிய பெட்டிக்குள் வைத்தால் - அடுத்த வருடம் அந்தந்தப் படிக்குரிய பொம் மைகளை வரிசைப்படுத்த மிக வசதியாக இருக் கும்.

- எஸ். பட்டம்மாள்



பட்டுப் புடவைகளுக்கு ஈடாக பாலிகாட்

கண்ணைக் கவரும் புதியரக புடவைகளுக்கு நம் பெண்களிடத்தில் எப்போதும் ஒரு வரவேற்பு உண்டு. அந்த வரிசையில் கடந்த ஒரு வருடகாலமாக நம் பெண்களின் கவனத்தை அதிகமாக ஈர்க்க ஆரம்பித்திருக்கிறது இந்த 'பாலிகாட்' புடவைகள்.

இவை அசல் பட்டுப் புடவைகள்போல் - பல வண்ணங்களில், டிஸைன்களில் விழாக்காலங்களுக்கு ஏற்ற மிடுக்கை தரக் கூடிய வகையில் வந்து குவிகின்றன.


அதிக விலை கொடுத்து வாங்கக் கூடிய பட்டுப் புடவைகளைக் குறித்துப் பொதுவாக - இன்றைய நம் நடுவர்க்கத்துப் பெண்கள் என்ன நினைக்கிறார்கள்?

சௌந்தர்யா: "பட்டுப் புடவைகளை நான் நிச்சயமாக வாங்க விரும்பவில்லை. முன்பெல்லாம் விழாக்காலம் என்றாலோ, வீட்டில் விசேஷம் என்றாலோ வசதியானவர்கள் பட்டுப் புடவைகளைக் கட்டிக் கொள்வது நம் மதிப்பை உயர்த்திக் காட்டக் கூடியதாக இருந்தது. அப்போதெல்லாம் அது ஒரு சடங்கு; சம்பிரதாயம். இப்போது - அப்படியில்லை. டிரெண்ட் மாறிடுச்சு. பொருளாதாரம் பார்க்க வேண்டியிருக்கு. பணத்தை பட்டுப்புடவைகளில் முடக்குவதற்கு ரொம்பவும் யோசிக்கத் தோணுது. இது நாகரீக காலம். நிறைய பெண்கள் வேலைக்குப் போறாங்க. அதனால எது விலை மலிவா, புதிய ஃபாஷனோட மெயின்டென் பண்ண சுலபமா, அதே நேரத்துல தரமான புடவையாயிருக்கோ அதை வாங்கத்தான் விரும்பறாங்க. நிறையவும் தேவையா இருக்கு. அந்த வகையில் விழாக்காலங்களுக்கு விலையும் குறைச்சலா, பட்டுப் புடவைக்கு ஈடாவும் வேணும்னா சரியான சப்ஸ்டியூட் 'பாலிகாட்' புடவைகள்தான்."

நம் பெண்கள் புடவைகளை விட பல்லு என்றுச் சொல்லப்படும் - முந்தானைப் பகுதியின் டிஸைன்களுக்குதான் அதிக



விருப்பத்தோடு முக்கியத்துவம் கொடுப்பார்கள். பாலிகாட் புடவைகளின் பல்லுப் பகுதி சரிகைகளாலும், நூல்களாலும், அழகான வேலைப்பாடுகளோடு அமைந்திருப்பது அபரிமிதம். இந்தப் புடவைகளில் கூடுதல் அழகு அதன் தலைப்பாகத்தில்தான் இருக்கிறது. பட்டுப் புடவைகளில் எத்தனை டிஸைன்கள் வருகிறதோ அத்தனையும் பாலிகாட் புடவைகளிலும் உண்டு.



வீட்டுக் குறிப்பு

தினசரி நாள் கிழிக்கும் காலண்டர் அட்டையில் வெள்ளைக் கலர் டிஷ்யூ பேப்பர் ஒட்டுங்கள். அதில் உங்களுக்கு பிடித்தமான ஏதாவது ஒரு வாசகம் பொன்மொழி எழுதுங்கள். அதன் மீது சாதா 'கம்' தடவி, பிள்ளையார் கண் என்று சொல்லப்படும் குண்டுமணியை ஒட்டவும். இதை உங்கள் வீட்டுக் கொலு படியின் முகப்பில் மேற்புறத்தில் மாட்டவும். பார்க்க அழகாக இருப்பதுடன் புதுமையாகவும் இருக்கும்.

– பாலா

எல்லாப் புடவைகளிலும் அட்டாசட் பிளவுஸ் இருப்பதால் மேட்சிங் தேடி அலைய வேண்டியதில்லை. விலை ரூபாய் 400 லிருந்து ரூ.1,500 என்ற வரம்புக்குள்ளாகவே இருக்கிறது."

அந்தத் திருப்தி மட்டுமே ஒரு புடவையைத் தேர்ந்தெடுக்க உதவுமா? பாலிகாட் புடவைகள் நீடித்து உழைக்குமா? நிறம் மாறுமா? சரிகை கறுக்குமா? விலை குறைவு என்றாலே டிரை வாஷுக்கு ஒவ்வொரு முறையும் பணம் அழ வேண்டியிருக்குமோ? இது ஒட்டு மொத்தமாக எல்லா பெண்களுக்குமே ஏற்படும் சந்தேகங்கள். இதைக் குறித்து சென்னை, தி.நகர், சரோஜினி தெருவிலுள்ள 'ஷேட்ஸ்' கடையின் பெண் உரிமையாளர்கள் என்ன சொல்கிறார்கள்?

"மற்றவர்கள் கண்களுக்கு 'பாலிகாட்' அசல் பட்டுப் புடவைப் போல இருக்கிறது. புடவையின் ஆயுள் முடிந்து கிழிந்தாலும் சரிகை கறுக்காது. பளபளப்புத் தன்மையும் மாறாது. மிகச் சுலபமாக பராமரிக்கலாம். வீட்டிலேயே துவைக்கலாம், மற்ற புடவைகள் போல அயர்ன் செய்யலாம். எங்கள் பெண் வாடிக்கையாளர்களிடம் 'பாலிகாட்' அதிக வரவேற்பு பெற்றிருக்கின்றன. இந்த 'பாலிகாட்' புடவைகளை எங்களுக்கென நெசவாளர்களிடம் பிரத்யேகமான முறையில், புதிய நாகரீகத்துக்கேற்ப பல டிஸைன்களில் நாங்கள் உருவாக்க வைத்துத் தருவிக்கிறோம். இதனால் இப்போதைய லேட்டஸ்ட் ஃபேஷன் பாலிகாட் சாரீஸ்தான்" என்கிறார்கள்.


இவர்களுள் சுதா ரவி, கல்பனா ஜெயராம் இருவரும் கடை வியாபாரத்தை கவனித்துக் கொள்கிறார்கள். பூர்ணி வெங்கட்ராமன் கல்கத்தாவிலிருந்து விற்பனைக்குரிய புடைவைகளை அனுப்பி வைக்கிறார்.

'பாலிகாட்' புடவைகள் மட்டுமல்லாமல் பெண்களின் ரசனைக்கேற்றவாறு இவர்கள் பலவகைக் காட்டன் புடவைகளையும் விற்பனைக்கும் வைத்திருக்கிறார்கள். அசல் வீடு போல், அவசரத்துக்கு இடம் இல்லாமல் பொறுமையாக, நிதானமாக யோசித்துப் புடவைகளை எடுத்துக் கொள்ள முடிகிறது – இந்தப் பெண் உரிமையாளர்கள் வியாபாரம் என இதை நடத்தாமல் 'ஹோம்லி'யாக வைத்திருப்பது மனதைக் கவருகிறது.


–ஜே.மலர்விழி.

கடையில் ஒரு ரூபாயில் விற்கும் சிறிய பிளாஸ்டிக்கிலான பச்சைக் கிளி பொம்மையை வாங்கி அதில் ஒரு துளை உள்ள பச்சைக் கலர் சமிக்கிகளை குண்டுசியில் மாட்டி நெருக்கமாக குத்தவும். மூக்கு பாகத்திற்கு மட்டும் சிகப்பு கலர் சமிக்கியால் குத்தவும். இதை உங்கள் வீட்டுக் கொலு படியில் கட்டித் தொங்க விடுங்கள். பளபளப்பான கிளி ஊஞ்சலாடுவது அழகாக இருக்கும். கொலு முடிந்த பின்பும் கூட உங்கள் விட்டு வறவேற்பு ஹாலில் கட்டித் தொங்க விடலாம்.

-பாலா




அந்த நாட்களின்
தொல்லை
அறவே உங்களுக்கு
இல்லை
பட்டிலும் மெல்லிய முதன்மைரக
வில்கோஸ் இழைகள் முழுமையான சுகம்
உயர்ரகப் பருத்தியை அடுக்காக,
அமைத்த நிலை அதிகமாக உறிஞ்சும்
உறிஞ்சும் தன்மையற்ற நீலநிற
பருத்தி இழைகளினால் மூடிய
அடிப்பாகம் உள்ளாடைகள்
கறைபடாமல் பாதுகாக்கும்
நமது சீதோஷ்ண நிலைக்குத்
தகுந்தாற்போல் அமைந்திருப்பதால்
100% திருப்தியை
அளிக்கிறது.
NEW helena
ஹெலனா உங்களின் துணை!
இல்லை இதற்கு இணை!
இந்தியாவிலேயே
முதன்முதலாக
பெற்றது.
helena
சர்காட் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்
மில்: சூரியநாராயணபுரம், ரேணிகுண்டா (A.P.)
தலைமை அலுவலகம்: 23, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 007. போன்: 6421982/6422004
Carrying a helena is carrying confidence
ADSERVE




சிறசிறுக்கே சிக்கனம்

'சிக்கனம் வீட்டைக் காக்கும். சேமிப்பு நாட்டைக் காக்கும்' இந்த ஸ்லோகன் அடிக்கடி நம் கண்களில் படுகிறது இப்போது. வாஸ்தவந்தான். சிக்கனம் வீட்டைக் காக்கும் நிச்சயமாய். சிக்கனத்தை நாம் காக்க வேண்டாமா? அதுவும் ஐந்தில் வளையும் குழந்தைப் பருவத்திலிருந்தே வீட்டில் குழந்தைகளுக்கு சிக்கனத்தை நாம் பழக்கிக் கொடுப் போமேயானால் அது பாரம்பரியமாகி வீட்டையும் பிறகு நாட்டையும் கட்டாயம் காக்கும்.


சில வீடுகளில், 'சின்னக் குழந்தை, அதுக்கென்ன தெரியும்' என்று நிறைய செல்லம் கொடுப்பதைப் பார்க்கிறோம். குழந்தைக்குத் தெரியாதுதான் பேஸ்ட்டின் விலை. ஐந்தாறு வயதுக் குழந்தை தேவை தெரியாமல் பிரஷ்ஷின் முழு நீளத்திற்கும் பிதுக்கும் போது, "இங்க பாருடா கண்ணா ஒரு நிலைக்கடலையளவு பேஸ்ட் இந்தக் குட்டிப் பல்லத்தனையும் தேய்க்கறதுக்குப் போதுமாம். நம்ம பல் டாக்டர் அன்னிக்குச் சொன்னாரில்லையா?" என்று மென்மையாக உபயோகிப்பில் எது அளவு என்பதைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

சில குழந்தைகள் குழாயைத் திருப்பி தண்ணீர் கீழே விழுந்தோடுவதை வேடிக்கை பார்ப்பது வழக்கம்தான். பொதுவாக தெற்கில் 'நீரழிந்த வீடு சீரழிந்து போகும்' என்ற ஒரு பழமொழியை வழக்கில் அடிக்கடி உபயோகிப்பார்கள். நீரின் அருமை நமக்குத் தெரியாதா என்ன? கூடியவரை விவரம் அறியா குழந்தைகள் தாங்களாக குழாயைத் திருகுவதைத் தவிர்ப்பதும் சிறிது வளர்ந்து விட்ட குழந்தைகளிடம் தண்ணீர் ரொம்ப முக்கியம் அதை வீணாக்கக் கூடாது என்பதையும் அறிவுறுத்த வேண்டும். (வேண்டுமானால் உம்மாச்சி அடிக்கும், கண்ணைக் குத்தும் என்று லேசாக பயமுறுத்தலாம்)

என் தோழியின் குழந்தை, அதென்ன பழக்கமோ - காப்பியோ, பாலோ காம்ப்ளானோ எதாயிருந்தாலும் டம்ளரில் சிறிதளவாவது மிச்சம் வைக்காமல் குடிக்கவே மாட்டான். அதை வெகு ஈஸியாக தூர ஊற்றுவாள் என் தோழி. 'இதென்னடி பூமாதேவிக்கு நைவேத்தியமா?' என்பேன் நான். மனதுக்குள் பொருள் வீணாவதை சகிக்க முடியா விட்டாலும் பண்பாடு கருதி மனதில் மறைத்துக் கொண்டு. "அதென்னவோ போ, இவன் டம்ளர்ல குடிக்க ஆரம்பிச்சதிலேயிருந்தே இப்படித்தான் துளியாவது மிச்சம் வச்சாகணும் அவனுக்கு." ஏதோ தன் மகன் இமாலய சாதனையை விடாப் பிடியாய்க் கொண்டிருப்பது போல் பெருமை தொனிக்கும் தோழியின் குரலில், 'நல்ல டம்ளர் பழக்கம்' என்று என் மனம் பொருமும். ஏனென்றால் பாலும் சீனியும் மற்றவையும் எதுதான் குறைவாய் விற்கிறது?



என் கணவரின் சிநேகிதர் வீட்டிற்குப் போயிருந்தோம். அவர்கள்



ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேச்வர கோடி நாமயக்ஞம் - திருப்பதி

From 7th Oct '94 to 22nd Jan '95, 108 Days

'ஸ்வாகதம்'

ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடனும், ஆஸ்திகஅன்பர்களின் விசேஷ உதவியுடனும் திருப்பதி புண்ய க்ஷேத்திரத்தில் கடந்த 14 வருடங்களாக பார்வையற்ற குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியோர்களுக்கு நவஜீவன் ஆஸ்ரமம்உதவி வருவது குறித்து ஆஸ்திக அன்பர்கள் குறித்ததே.

மீண்டும் கோடி நாம யக்ஞம் :

தமிழ்நாடு, கர்நாடகம், பாம்பே, வடஇந்தியா மற்றும் வெளிநாட்டிலுள்ள ஆஸ்திக அன்பர்களின் விசேஷ வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் அருள் ஆசியுடன் திருப்பதி "நவஜீவன் சப்தகிரி ஆஸ்ரமத்தில் "மீண்டும் 7.10.94 முதல் 22.1.95 வரை 108 நாட்களுக்குத் தொடர்ந்து ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேஸ்வர கோடி நாமயக்ஞம்" எழுத்து வேள்வி நடத்த திட்டமிட்டுள்ளோம்.

கலியுக கண்கண்ட தெய்வமான ஸ்ரீ ஏழுமலையான் அருள் பாலிக்கும் திருப்பதி புண்ய ஸ்தலத்தில் நடக்கவிருக்கும் இந்தப் புனிதமான கோடிநாம வேள்வியில் கலந்து கொள்ளுமாறு ஆஸ்திக அன்பர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இலவச புனிதப் பயணம் மற்றும் தங்கத்தில் திருமாங்கல்யம் :

1) Free trip to Tirupati - FTT - தேர்ந்தெடுக்கப்படும் 101 அன்பர்களுக்கு இலவச திருப்பதி புனிதப் பயணம் ஸ்ரீ வெங்கடாசலபதியின் திவ்ய அருளாக!
2) Free trip to Kashi - FTK - தேர்ந்தெடுக்கப்படும் 9 வயோதிக அன்பர்களுக்கு இலவச காசி புனிதப் பயணம் காசி விஸ்வநாதரின் ஆசியாக!
3) Free Gold Tirumangalyam - FGTM - தேர்ந்தெடுக்கப்படும் 9 பெண்களுக்கு இலவசமாகத் தங்கத்தில் திருமாங்கல்யமும் பட்டுப்புடைவையும், ஸ்ரீ பத்மாவதி தாயாரின் மங்கள ஆசீர்வாதமாக அளிக்கப்படும்!

ஆசீர்வாதமாக விசேஷ பிரசாதம்:

ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேச்வர கோடி நாம யக்ஞத்தில் பங்கு கொள்ளும் எல்லா ஆஸ்திக அன்பர்களின் சார்பாகவும் விசேஷ பிரார்த்தனை செய்வித்து அன்னதானமும் வழங்கி ஸ்ரீ வெங்கடாசலபதி - ஸ்ரீ பத்மாவதி தாயார் ஆசீர்வாதமாக ஹோம பிரசாதம் போஸ்ட் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

முக்கிய குறிப்பு :

ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேச்வர கோடி நாம வேள்வியில் பங்கு கொள்ள விரும்பும் ஆஸ்திக அன்பர்கள், அதற்கான விதிமுறைகள் மற்றும் நியமங்களை அறியும் பொருட்டு Printed Form அச்சிட்ட படிவத்தை இலவசமாகப் பெற போஸ்ட். கார்டில் தங்களது அட்ரஸைத் தெளிவாக எழுதி (With Pincode) மேற்காணும் அட்ரஸிற்கு விண்ணப்பிக்கும்படி வேண்டுகிறோம்.

K. S. ACHARYA, Organiser
SRI LAKSHMI VENKATESWARA KOTINAMA YAGNAM,
NAVAJEEVAN SAPTAGIRI ASHRAM,
P.O. TIRUCHANUR, TIRUPATI - 517 503.


ச்ரேயோ பூயாத் ஸகல ஜனானாம்



வீட்டின் ஐந்து வயதுக் குழந்தையின் பழக்கம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நாங்கள் போகும் போது கட்டிலில் படுத்து ஃபேன் காற்றில் தூங்கிக் கொண்டிருந்தவள், தூக்கம் கலைந்து எழுந்தவுடன் முதல் காரியமாக ஃபேனை நிறுத்தி விட்டுத் தான் வெளியில் வந்தாள். அதே போல் அவர்கள் வீட்டுக் குழந்தைகள், உபயோகிப்பு முடிந்தவுடன் அறையின் மின்விளக்குகளை, ஃபேன்களை அணைத்து விடும் பழக்கத்தைத் தவறாமல் மேற்கொள்கிறார்களாம். இன்றைய நாளில் மின் உபயோகிப்பு சிக்கனம் வளர்ந்த குழந்தைகளுக்கு அவசியம் போதிக்கப்பட வேண்டியதை அன்றைய தினம் முதல் நானும் கடைபிடிக்கிறேன்.


கோடை விடுமுறை, தசரா விடுமுறை இவைகளில் குழந்தைகள் வருவதும் வீடு கொள்ளாமல் குதூகலம் நிறைவதும் மனதுக்கு மகிழ்ச்சியளிக்கும் விஷயம்தான். ஆனால் அவர்கள் காலையில் பாத்ரூமில் அடிக்கும் லூட்டியிருக்கிறதே! அதிலும் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளிருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். அமளிதுமளிதான் காலைப் பொழுது. நான் தேய்ப்பேன் முதலில் நீ தேய்ப்பாய் முதலில் என்று சோப்புக் கட்டி எறிபந்தாகி வழுக்கி விழுந்து கீழேயுள்ள மண், மணலையெல்லாம் அப்பிக் கொண்டு சரசரப்பாகி ஒருவழியாய் சோப்பு சீப்பின் நிலைக்குத் தேய்ந்து டப்பாவில் அடைக்கலமாவதைக் கூட சகித்துக் கொள்ளலாம். அதன் பிறகு கண்களை மூடிய சோப்பு நுரையின் காரணமாய் சோப்பு டப்பாவை நகர்த்தாமலே தண்ணீரை மொண்டு மொண்டு குழந்தை ஊற்ற, பட்ஜெட்டில் நம் கையைக் கடிக்க வாங்கிய சோப்பு ஆமைக்குட்டி கணக்காய் டப்பாவுக்குள் முழுகிக் கொண்டு கிடக்கும்.

காலையில் அடுக்களை வேலைகளை முடித்து பாத்ரூம் பக்கம் எட்டிப் பார்த்தோமானால் கழட்டி எறிந்த ஈரஜட்டிகளும், சுருட்டிப் போட்டு புழுங்கல் நாறும் ஈரத் துண்டுகளும், சோப்பு டப்பாவிலிருக்கும் லிக்விட் ஃபார்மேஷன் சோப்பும் நம்மை முகமன் கூறி வரவேற்கும். இவைகளைத் தவிர்க்க முடியாதா என்ன? சோப்பு டப்பாவை சுவற்றோடு பொருத்துகிற முறையிலுள்ளதை வாங்கி ஆணி அடித்து மாட்டி விட்டோமானால் தண்ணீர் தெறிக்காமல் சோப்பு பத்திரமாய் உட்கார்ந்து கொள்ளும். அதோடு சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு, குளித்து முடித்ததும் ஜட்டியை அலசிக் காயப்போடும் பழக்கத்தை ஏற்படுத்துவதும் துவட்டிய துண்டை சுருட்டி எறியாமல் விரித்து அவர்களுக்கு எட்டும் உயரமாகக் கொடிக் கயிறு கட்டிக் கொடுத்து அதில் காயப் போட பழக்கம் ஏற்படுத்துவதும் முக்கியம்.



பொருட்களைப் பேணுவது, துணிமணிகளைப் பேணுவது இதெல்லாமும் சிக்கனத்தின் முக்கியமான ஒரு பகுதியல்லவா?

குழந்தைகளின் கல்விச் செலவை நினைத்தாலே - ஜூன் மாதம் வருகிறது என்றாலே வயிறு பகீர் என்கிறது நடைமுறையில் தவிர்க்க முடியாமல் போய் விட்ட காலம் இது. அட்மிஷன் ஃபீஸில் தொடங்கி ஸ்பெஷல் ஃபீஸ், நோட்டுப் புத்தகம், யூனிஃபார்ம், பூட்ஸ், டை என்று வருமானத்தில் முக்கால் வாசியை பகாசூரனாய் கொள்ளை கொண்டு போகிறது கல்வி. வேறு வழியில்லை. 'கற்கை



நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றல்லவா சொல்லிச் சென்றிருக்கிறார் ஔவை? அதோடு போயிற்றா, குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவித்தலுக்குத்தான் எத்தனை உபகரணங்கள் தேவையாயிருக்கிறது? சிலேட்டு, பலப்பம், பென்சில், கலர் பென்ஸில் நோட்டு. நல்ல வேளை இப்போது உடையாத சிலேட்டுகள் புழக்கத்துக்கு வந்திருக்கின்றன. இல்லாவிட்டால் தினம் ஒரு சிலேட்டு டமார் டுமார்தான். அது உடைதலிலிருந்து தப்பித்து விட்டாலும் பலப்பமும் சிலேட்டும் தொலைவதைத் தவிர்க்க முயல வேண்டும். தன் பொருளை கவனமாய் ஓரிடத்தில் வைத்தெடுக்கும் பழக்கத்தை பிள்ளைகளுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும் பெற்றோர்கள்.

சில குழந்தைகள் பென்சிலை, கலர் பென்சிலை கூராக்குகிறேன் கூராக்குகிறேன் என்று பிளேடினாலோ, ஷார்ப்பனராலோ சீவித் தள்ளுவதையே தொழிலாகச் செய்வார்கள். ஆரம்பத்திலேயே பென்சில், முழுவதுமாக எழுதி அல்லது வரைந்து கரைந்த பிறகுதான் அதுவும் சிறிய நீளத்திற்குத்தான் சீவ வேண்டுமென்பதை பலமுறை சொல்லியாவது அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். இல்லாவிட்டால் தினம் ஒரு பென்சில்தான் தொடர்கதை யாகும்.

இது போக நோட்டுப் புத்தகத்தின் பக்கங்களை வீணாக்குவது இருக்கிறதே அது பெரிய வயிற்றெரிச்சல். ஏகப்பட்ட பக்கங்கள் வேண்டாத கிறுக்கல் களால் நிரம்பி பழைய பேப்பர்காரனை அதிசீக்கிரம் தஞ்சமடையும் கொடுமையையும் பெற்றோர்களாகிய நாம் தான் (பின்னே வேறு யார் முன்வருவார்களாம்?) தடுத்தாட்கொள்ள குழந்தைகளைப் பழக்க வேண்டும். இதே போலத்தான் சில குழந்தைகள் அமிர்தமாயிருந்தாலும் கூட தட்டில் சிறிதளவாவது மிச்சம் போடாமல் எழுந்திருக்க மாட்டார்கள். அவர்களின் வயிறறிந்து அளவாகப் போட வேண்டியது பெரியவர்கள் கடமையென்றாலும் கூட வீணாக்குவது கூடாது என்பதை மனத்தில் பதிய வைப்பதும் பெரியவர்களாகிய நமது கடமை தானே?

இப்படிக் குழந்தைகளிலேயே சிக்கனம் பழகினால்தானே வளர்ந்த பிறகு குடும்பப் பெண்ணானதும் கேஸ், மண்ணெண்ணெய் முதலான எரிபொருள் சிக்கனமும், குடும்பத் தலைவியானதும் ஸ்கூட்டர் கார் முதலானதுகளுக்கு ஆயில் சிக்கனமும் கடைப்பிடித்து நாட்டிற்கு நல்ல பிரஜையாக முடியும்?

- கண்ணம்மா பகவதி

எஸ்.எஸ்.எல்.சி. இளைஞர் எம்.பி.பி.எஸ். இளம்பெண்ணைக் காதலித்து அது திருமணத்தில் முடிய 'நவராத்திரி' உதவியது. எப்படி?

நவராத்திரி காதல்

ராஜா - டாக்டர் கல்யாணசுந்தரி

ராஜா : "நான் எஸ்.எஸ்.எல்.சி. நல்ல மார்க் எடுத்து பாஸ் செய்தாலும் கல்லூரியில் சேர்ந்து படிக்க முடியாத சூழ்நிலை. எங்கப்பா போலீஸ் இன்ஸ்பெக்டரா வேலை பார்த்து ரிடையர்ட் ஆனவர். அவர் சொல்படி தொலைபேசி இலாகாவில் மதுரையில் வேலைக்குச் சேர்ந்தேன். அப்ப நான் பிரம்மச்சாரியா இருந்ததால் மதுரை ரிசர்வ் லைன் காலனியில் சட்டக் கல்லூரியில் படித்த மாணவர்கள் தங்கி இருந்த அறை ஒன்றில் நானும் தங்கினேன். அவங்க என் நல்ல நண்பர்கள் ஆயிட்டாங்க. அவங்க கூட காலையிலே டீ குடிக்க கடைக்குப் போகும் போதுதான் முதன் முதலா, பஸ் ஸ்டாப்பில் மெடிக்கல் காலேஜில் படிச்சிட்டு இருந்த சுந்தரி பஸ்ஸிற்குக் காத்திருந்ததை பார்த்தேன். பார்த்த உடனேயே சுந்தரியை நான் 'லவ்' பண்ணலே. தினமும் பார்த்து பல நாட்களுக்குப் பிறகு சுந்தரியோட அடக்கம், அழகு என்னைக் கவர்ந்தது. காதலிக்கத் துவங்கினேன்.


என் நண்பர்கள்கிட்டே சொன்னேன் அப்பத்தான் அவங்களும் சுந்தரியை 'லவ்' பண்ணிட்டு இருந்தது தெரிந்தது. அவங்க என்னை கிண்டலா 'நீயோ சாதாரண எஸ்.எஸ். எல்.சி. உனக்கு எம்.பி.பி.எஸ். கேட்குதோ?' என்று சொன்னதும் எனக்கு ரோஷம் வந்து விட்டது. அவர்களிடம் கல்யாணசுந்தரியை காதலித்துக் கல்யாணம் செய்து காட்டுவதாக சவாலே விட்டேன். அதனால் சுந்தரியைக் காதலிக்க எங்களுக்குள் கடும் போட்டியே உருவாகி விட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக முயற்சி செய்தோம். (சிரிப்பு).



கல்யாணசுந்தரி : "என்னை ராஜாவும் அவர் நண்பர்களும் போட்டிப் போட்டு காதலிப்பது எனக்குத் தெரியாது. ஆனா மற்றவங்க பஸ் ஸ்டாப்பில் நான் நிற்கும் போது நேரடியாக என்னிடம் வந்து, 'ஐ லவ் யூ' என்று கூறி திட்டு வாங்கி ஓடிப் போனார்கள். ராஜா மட்டும் அப்படிச் செய்யவில்லை."



ராஜா : "அப்போ நவராத்திரி வந்தது. என்னுடன் வேலை பார்த்தவர் வீட்டில் 'கொலு' வைத்தார்கள். அவர் குடும்பம் ஏற்கெனவே சுந்தரி வீட்டின் அருகே குடியிருந்து வந்ததால் சுந்தரி கொலு பார்க்க வந்தாள். நான் நண்பர் வீட்டுக் கொலுவை கலைநயத்துடன் அமைத்துத் தந்தேன். சுந்தரி அதற்காக என்னைப் பாராட்டினாள். தினமும்



பொம்மைகள் ஏதாவது உடைந்திருந்தாலோ, விரிசல் விட்டிருந்தாலோ, அந்த பொம்மைக்கு ஏற்ப தலை பாகம் உடைந்திருந்தால் சிறிய தொப்பி அணிவிக்கலாம், கால்பாகம் உடைந்திருந்தால் சிறிய 'ஸ்லோகன்' ஒட்டலாம்.... நடுவே விரிசல் விட்டிருந்தால் ஆண் அழகன்.. பெண் அழகி 1994 என்று பேப்பரில் எழுதி குறுக்கே போட்டு விரிசல் தெரியாமல் மறைக்கலாம்.

– ஆர்.சீதா.

விதவிதமான 'கொலு செட்டிங்' செய்து சுந்தரியை பிரமிக்க வைத்தேன். என் உள்ளங்கையில் 'ஐ லவ் யூ' என்று எழுதி யாரும் பார்க்காதபடி சுந்தரிக்குக் காட்டினேன். அவள் புன்னகை பூத்தாள். பதில் சொல்லவில்லை.''

கல்யாணசுந்தரி : "நவராத்திரி எட்டாவது நான் அன்று ஒரு சிறுமி லேடி டாக்டர் பொம்மையைக் கொலுவில் வைத்து, 'இது கிட்டே வைக்க ஆம்பளை டாக்டர் பொம்மை இல்லையே?' என்றாள். நான் சட்டென்று, 'டாக்டர் பொம்மைகிட்டே இன்னொரு டாக்டர் பொம்மைதான் வேணும்னு தேவையில்லை. அழகா ராஜா மாதிரி சிலை இருந்தால் கூட வைக்கலாமே' என்றேன். என் பேச்சில் என் காதலை தெரிந்து கொண்ட ராஜா பூரித்துப் போனார். கொலுவில் எங்கள் காதல் மலர்ந்தாலும் அது 'பொம்மைக் காதலாக' இல்லாமல் 'உண்மைக் காதல்' ஆனது.

ராஜா : சுந்தரி என்னைக் காதலிப்பது தெரிந்ததும் போட்டி போட்ட மற்ற நண்பர்கள் எங்களை வாழ்த்தினார்கள்.

"நாங்க ரெண்டு பேரும் வெவ்வேறு ஜாதியா போனதாலே இரண்டு வீட்டினரும் எங்கக் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிச்சு தடை போட்டாங்க."

கல்யாணசுந்தரி : "எங்க உறுதியான காதலுக்குப் பெரிய சோதனை வந்தது. நான் காலேஜுக்குப் படிக்கப் போனதால்தான் காதலிச்சேன்னு என் தங்கையைக் காலேஜிலே சேர்க்கவே கூடாதுன்னு என் அம்மா அடம்பிடிச்சாங்க."

ராஜா : "சுந்தரியின் தங்கை நன்றாக படிப்பாள். எங்கள் காதலால் அவள் படிப்பு தடையாகக் கூடாது என்று நினைத்தோம். அவள் கல்விக்காக எங்கள் காதலைத் தியாகம் செய்யக் கூடத் தயார் ஆனோம்."


கல்யாணசுந்தரி : "ஆனா எங்கப்பா அம்மாகிட்டே சமாதானம் செய்து என் தங்கையைக் கல்லூரியில் சேர்த்ததும் நிம்மதி அடைந்தேன். எங்கள் உறுதிக்கு வெற்றி கிடைத்தது. பெற்றோர் சம்மதத்துடன் திருச்செந்தூரில் எங்கள் திருமணம் நடந்தது."

ராஜா : "எங்களை காதலர்கள் ஆக்கி கணவன் - மனைவி ஆக்கிய நவராத்திரியை மறக்க முடியாது."


பேட்டி, படம் : **விஜயா கண்ணன்**

தீபாவளி, பொங்கல், புதுவருடம், பிறந்தநாள் போன்றவற்றிற்கு சிலர் அனுப்பும் வாழ்த்து மடல்கள் மிக அழகாகவும், புதுமையாகவும் இருந்து அதைப் பத்திரப்படுத்தி வைத்திருப்போம். அவற்றைத் தேடி எடுத்து, ஒரு கயிற்றில் வரிசையாகக் கோர்த்து, கொலுவின் முன் தோரணமாய் கட்டிப்பாருங்கள். வந்தவர்கள் கொலுவை விட்டு, இதை ரசிக்க ஆரம்பித்து விடுவார்கள்!

— உமா



ங்கூ...ங்கூ...கா...கா... என்னும் மழலை விரைவிலேயே அ ஆ இ என்று கூறிடும் வழி.



உங்கள் சின்னஞ்சிறுசு. நாட்கள் போனதே தெரியாது, உரக்க கூச்சலிட்டுக் குப்புறத்துக்-கொண்ட குழந்தை, களகளவென சிரித்து தத்தித்தத்தி நடக்கத் துவங்கும். சீக்கிரமே, அவன் உங்களிடம் அது என்ன... இது என்ன என்று ஆயிரம் கேட்கத் துவங்குவான். ஆகாயம் ஏன் நீலமாயிருக்கிறது ? வான வில் எப்படி வருது? அந்த மாமாவுக்கு மீசை எங்கிருந்து வந்தது ?

அவனுடைய அறிவுப் பசிக்கு அளியுங்கள் அன்றாடம் ஒரு முட்டை. ஏனெனில் முட்டையில் உன்னத தரமுள்ள புரதமும் பாஸ்பரஸும் அடங்கியுள்ளன: சுறுசுறுப்பான மூளை வளர்ச்சிக்குத் தேவையானவை இவைகள்தான்.

அவனுக்கு இன்னும் ஏராளமானவற்றை அளிக்கவல்லது முட்டை. ஆரோக்கியமான



முட்டை சாட்: இலைச் சுட்டச்சத்து வழிகாட்டி மற்றும் 30-க்கும் மேலான முட்டை சமையல் குறிப்புகள் அடங்கிய சிறு புத்தகத்திற்கும் எழுதவும்: NECC, அஞ்சல் பை எண் 633, புனே-411 004.

சருமத்திற்கும் நல்ல கண் பார்வைக்கும் வைட்டமின் 'A' செறிந்துள்ளது. நல்ல ஜீரண சக்தியையும் நிலையான நரம்புகளையும் பெற்றிட உதவும் வைட்டமின் 'B' சத்துகளின் அனைத்து வகைகளும் உள்ளன. வலுவான எலும்புகளைப் பெற வைட்டமின் 'D' அடங்கியுள்ளது. அதோடுமட்டுமா, நல்ல ஆரோக்கியமான இரத்தத்திற்கு அத்தியாவசியமான இரும்புச்சத்து மிருந்துள்ளது.

ஆகவே உடைத்திடுவீர் அன்றாடம் தவறாமல் ஒரு முட்டை.

அதனால் உருவாகும் குழந்தையின் திண்மையான உடல் வளர்ச்சி.

நித்தம் ஒரு முட்டை.

NECC

நேஷனல் எக் கோ- ஆர்டினேஷன் கமிட்டி

Enterprise/NECC/177/B/Tm


Peacock Silks
GRAND
Festive Contest
Draw Your Own Saree Design
&
WIN
Fabulous Prizes
1st Prize
VIDEOCON Washing Machine
2nd Prize
BPL 70W Audio System
3rd Prize
SINGER Juicer Mixer Grinder
10 Consolation Prizes
Peacock Silk Sarees
This Scheme Closes on 03-11-94
This offer is valid in Tamilnadu only
Contact your neare
Peacock Silk Deale
INTRODUCING
Feather Touch Finish
Stain Proof Protecti
* for Crape Sare
Shwetha
Taranga
PEACOCK SILK
100% Pure Silks
Ensure Peacock Silk Tag on every genuine saree
Ask for design album for other designs
Devatha Fabrics,
555, Avenue Road, Bangalore-2.
Tel: 2262973, Fax; 080 2266591. D.F.

ஊட்டச்சத்து மிக்க உணவே நல்ல உடல் நலத்தின் ஆதாரம்



ஒரு சத்துணவு வல்லுநராக இருப்பதால் உடல் மெலிதாகவும் சீராகவும் இருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி எனக்கு தெரியும். அப்படி உடலை சீராக வைப்பது சுலபமான விஷயமில்லை என்றும் எனக்கு தெரியும்.

இந்த வடிவத்தைப் பெற சிலவற்றை நீங்கள் விட்டுக் கொடுத்தே ஆக வேண்டும். உங்களுக்குப் பிடித்தமான சாக்லேட்டுகள், ஐஸ்க்ரீம், கொழுப்புச் சத்துமிக்க உணவு வகைகள் இன்னும் பற்பல...



இனி நேரடியாக விஷயத்திற்கு வருவோம். உணவுக் கட்டுப்பாடு என்பது கடினமான விஷயம். ஆனால் நீங்கள் எல்லாம் சாப்பிடலாம் என்று சொன்னால் ஏராளமாய் சந்தோஷம். ஆமாம்! நீங்கள் நினைத்த எது வேண்டுமானாலும் சாப்பிடலாம். அத்துடன் ஃபிட் என்ற உடல் வாகுடன் விளங்கலாம். (அதற்கு சிறிது உடற் பயிற்சிகளான அலுவலகத்திற்கு வாக்கிங் செல்லுதல், நடைப் பயிற்சி செய்தல்... போதுமானது).

ஆனால் இது நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்பதைப் பொறுத்தது. மேலும், எதனால் உங்கள் உணவு செய்யப்பட்டுள்ளது என்பதெல்லாம் பார்க்க வேண்டும். உதாரணமாக சொல்லப் போனால் என்ன சமையல் எண்ணெய் நீங்கள் உபயோகிக்கிறீர்கள் என்பதை எடுத்துக் கொள்கிறேன். எண்ணெய் என்று சொன்னேன் அல்லவா? நல்லது அதற்கு ஒன்றும் விஞ்ஞானப் போதனை செய்யத் தேவையில்லை. கொழுப்புச் சத்துமிக்க எண்ணெய் உபயோகப்படுத்துவதைத் தவிர்த்தல் உன்னதமானது. இப்படி எல்லா நலன்களையும் கருத்தில் கொண்டு பார்க்கையில் உடலுக்குப் பாதுகாப்பான நம்பகமான எண்ணெய் சூரியகாந்தி எண்ணெய் ஒன்றுதான்.

''அனுராக்'' ஓர் அன்பளிப்பு

''அனுராக்'' நான் உபயோகப்படுத்தும் சூரியகாந்தி எண்ணெய். இது கொலஸ்ட்ராலை எதிர்க்கக் கூடிய வல்லமை வாய்ந்தது. எனவே உங்கள் இருதயத்திற்கு இது மிகவும் நல்லது. மேலும் இதில் கொழுப்பின் அளவு மிகக் குறைவு. எனவே இது உடலுக்கு மிகவும் பாதுகாப்பானது. மேலும் ''அனுராக்'' வைட்டமின் E-ஆல் செறிப்பாக்கப்பட்டது.

அதிநவீன முறையில் சுத்திகரிக்கப்படுவதால் ''அனுராக்'' மிகவும் தூய்மையாகவும்



தெளிவாகவும் கிடைக்கிறது. மேலும் இது உங்கள் உடல் நலத்தைப் பேணுவதோடு உங்கள் உணவையும் ருசிப்படுத்துகிறது.

இத்தனை நலன்களுடன் மற்றொரு விஷயம் என்னவென்றால் ''அனுராக்'' மலிவான விலையில் கிடைக்கிறது. ஏனெனில் அனுராக்-கின் ''பாக்கிங்'' செலவுகள் குறைவு.

இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ''ஊட்டச்சத்து மிக்க உணவே, நல்ல உடல் நலத்தின் ஆதாரம்'' என்று. உங்கள் நினைப்பு எனக்கு புரிகிறது. ''அனுராக்'' உங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள மளிகைக் கடையிலும் கிடைக்கும்.

எல் & என் இண்டஸ்ட்ரீஸ் அண்ட்
எண்டர்பிரைசஸ்-லிட்-ன்
தரமான தயாரிப்பு,
189, அண்ணாசாலை,
சென்னை 600 006.

ANURAG
அதி சுத்திகரிக்கப்பட்ட
சூர்யகாந்தி எண்ணெய்
(வைட்டமின் E-உடன் கூடியது)



• அனுராக் அதி சுத்திகரிக்கப்பட்ட சூர்யகாந்தி எண்ணெய் • அனுராக் அதி ... எண்ணெய் •

கூந்தல் பராமரிப்பு முறை பற்றி பிரபல சினிமா ஹேர் ஸ்டைலிஸ்டிடம் அறிந்து கொள்ளுங்கள்.



கொலீன் ஒரு பிரபல சினிமா கூந்தல் அலங்கார நிபுணர். கூந்தல் பராமரிப்பில் உலகளாவிய பியூட்டி பார்லர்களில் அனுபவம் பெற்றவர். நீங்களும் கூந்தல் பராமரிப்பு பற்றிய உங்கள் கேள்விகளை அவருக்கு அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி— ஸன்ஸில்க் அட்வைஸரி சர்வீஸ், போஸ்ட் பாக்ஸ் 541, பாம்பே-400 001.

அழகான கூந்தலைப் பெறும் முறை பற்றி கொலீன் கூறுகிறார்.

"அழகான கூந்தல்னா என்ன? அது சிலசமயங்கள்ல

கூந்தல் பராமரிப்பு பற்றிய பழைய சித்தாந்தங்களை சிகையலங்கார நிபுணர்கள் உடைத்தெறிகிறார்கள்.

இன்று கூந்தல் பராமரிப்பு என்பது மேலும் மேலும் முன்னேறிக் கொண்டு வருகிறது. இந்நிலையில் இதுவரை கூந்தல் பராமரிப்பு பற்றி இருந்து வந்த நம்பிக்கைகள் இனிமேல் செல்லுபடியாகாது என்று சிகையலங்கார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இதோ சில கட்டுக்கதைகள். இவற்றை சரிசெய்யாவிடில் உங்கள் கூந்தலுக்கு நன்மையை விட தீமையே அதிகம் விளையும்.

<u>கட்டுக்கதை - 1 : அடிக்கடி கூந்தலை கழுவுவது கூந்தல் சேத மடையச் செய்யும்.</u>

தவறு: கூந்தல் அழுக்காகும்போது கழுவச் செய்யத்தான் வேண்டும். இல்லையெனில் திட்டான அழுக்கு கூந்தல் பரப்பில் படிந்து தலை வாரும்போது கூந்தலை சேதமாக்கலாம். அழுக்கான கூந்தலால் பேன்கள், தொற்று போன்ற பிரச்சனைகளும் வரலாம். சுற்றுப்புறம் மாசடைந்த இடத்தில் வசிப்பவர்கள் கூந்தலை சுத்தமாக வைத்திருக்க அடிக்கடி கழுவுவது அவசியம். அப்படி அடிக்கடி கழுவுகையில் ஒரு நல்ல ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டிஷனர் உபயோகப்படுத்துவது முக்கியம்.

<u>கட்டுக்கதை - 2 : ஷாம்ப்பூக் களால் கூந்தல் வறண்டு போய்விடும்</u>

தவறு. ஒரு நல்ல ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டிஷனர் கூந்தலை இதமாகச் சுத்தம் செய்யும். அதன் பயனுள்ள கண்டிஷனர் கூந்தலுக்கு ஊட்டமளித்து சேதத்திலிருந்து பாதுகாக்கும். அம்மாதிரியான ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டிஷனரை முறையாக உபயோகித்தால் உங்கள் கூந்தலின் தரம் காலப்போக்கில் கூடும்.

<u>கட்டுக்கதை - 3 : ஷாம்பூக்களை உபயோகிப்பதற்கு முன் அதனுடன் தண்ணீர் சேர்க்க வேண்டும்.</u>

கண்டிஷனர் இல்லாது ஷாம்ப்பூகள் வந்து கொண்டிருந்த காலத்தில் அவ்வாறு செய்தனர். ஏனெனில் கண்டிஷனர் இல்லாத ஷாம்ப்பூகள் உறுத்தலாக இருந்தன. இப்போது அவ்வாறு செய்ய வேண்டியதில்லை. ஷாம்ப்பூ ப்ளஸ் கண்டிஷனருடன் தண்ணீர் சேர்த்தால் அதன் கண்டிஷனர் தண்ணீரோடு போய்விடும். வேண்டிய பலன்கள கிடைக்காது.

கள். வெவ்வேறான பராமரிப்பு வழிகள்.



சோப்கள். 3 வகை பாதுகாப்பு அம்சங்களுடன்.

உங்கள் குடும்பத்தினர் நித்தம் பாக்டீரியா பிரச்சினைக்கு உள்ளாகின்றனர். பாக்டீரியா சிறிய வெட்டுக் காயங்களையும், சிராய்ப்புகளையும் பரவச் செய்யும். அறிமுகம் செய்கிறோம் — புரொடெக்ஸ் பாலன்ஸ். பாக்டீரியாவை கட்டுப்படுத்தும் சோப் – உங்கள் குடும்பத்தினரின் சருமத்தை ஆரோக்கியமாகவும், பாதுகாப்புடனும் விளங்கச் செய்கிறது.



கடுமையாக உழைப்பதனாலோ, அல்லது சமையலறையில் வியர்க்க விறுவிறுக்க பணிபுரிவதனாலோ, ஏற்படும் வியர்வை மூலம் பாக்டீரியா வேலை செய்யத் துவங்குகிறது. அதனால் ஆரோக்கியமற்ற வியர்வை துர்நாற்றம் ஏற்படலாம். ஆகவே திடமான, சுறுசுறுப்பான மக்களுக்குத் தேவை அல்ட்ரா பாதுகாப்பு. அறிமுகம் செய்கிறோம் புரொடெக்ஸ் அல்ட்ரா. இரட்டை மூலப்பொருள் அடங்கிய இது அதிகம் வியர்வை உள்ளவர்களின் பாக்டீரியாவைக் கட்டுப்படுத்திப் பாதுகாக்கிறது. இது உங்கள் சருமத்தை ஆரோக்கியமாகவும், பாதுகாப்புடனும் திகழச் செய்கிறது.

பாதுகாக்கப்பட்ட சருமத்திற்கு.

Rediffusion/Bom/CP/341 h TM



.... இன்றைய நாகரீக நங்கையரைப் படைக்கிறது குப்தா புடவைகள்.
Gupta®
Sarees & Dress Material
□ பீச் சில்க்
□ மார்பிள் ஷிஃபான்
□ மைக்ரோ ஜார்ஜெட்
□ மார்பிள் ச்செக்ஸ்
□ க்ரேப் சில்க் ஸாரி
□ ரீகல் ஜார்ஜெட்
□ யுரா கிரி புட்டா
□ மெட்டல் ஷிஃபான்
□ ஸ்விஸ் சில்க்
□ நிஷி க்ரேப்
□ C.D. ஜாக்கார்டு
ROGULF
சேல்ஸ் & எக்ஸ்போர்ட் அலுவலகம் : குப்தா சாரீஸ் & டிரஸ் மெட்டிரியல்ஸ்
413 G.I.D.C. பண்டேஸரா, சூரத்-394 221 (இந்தியா) போன் : 0091-261-690885 ஃபாக்ஸ்: 0091-261-691100.

இதை அபூர்வான்னு சொல்றதுல ஆச்சரியமென்ன!



- வைட்டமின் 'E' சேர்ந்தது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கடலைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது.
- கொலஸ்ட்ராலை எதிர்க்க உதவுவது.
- சுத்தமானது உங்கள் சமையலுக்கு ருசி கூட்ட வல்லது.
- எளிதில் ஜீரணிக்கக் கூடிய விலையில்.
- அதிக ஸ்மோக் பாய்ண்ட் கொண்டதால் இதனை மீண்டும் மீண்டும் உபயோகிக்கலாம்.

சரியான அடிப்படையைத் தெரிந்து கொள்ளுங்கள்!



கடலைகளிலிருந்து பெறப்பட்ட அபூர்வா சூப்பர் ரிபைண்ட் கடலை எண்ணெய் புரோட்டீன் மற்றும் ஊட்ட சத்துக்கள் நிறைந்தது. அபூர்வாவில் இருக்கும் 'MUFA' உடலில் கொலஸ்ட்ரால் சேர விடாமல் தடுக்கிறது.

ருசியான, சிக்கனமான எண்ணெய் அபூர்வாவிற்கு மேலும் சிறப்பூட்ட



உங்களுக்கு பிடித்த உணவை அபூர்வா சூப்பர் ரிபைண்ட் கடலை எண்ணெயுடன் சமைத்து ருசியில் வித்தியாசத்தை உணருங்கள். இதற்குமுன் உணராத ருசி.

சுவையான சமையல், சுவை நிறைந்த வாழ்வு

கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட



வைட்டமின் 'E' சேர்க்கப் பட்டுள்ளது. இது சமைத்த உணவை நெடுநேரம் கெடாமல் வைத்திருக்கும். காரல் மற்றும் புகையை' கிரகிக்காததால் அபூர்வாவை மீண்டும் மீண்டும் உபயோகிக்கலாம். இப்படிப்பட்ட அபூர்வமான சூப்பர் ரிபைண்ட் எண்ணெயை அபூர்வா என்று சொல்வதில் ஆச்சரியமே இல்லை!

அபூர்வா

சூப்பர் ரிபைண்ட் கடலை எண்ணெய்

WITH VITAMIN E

நிலக்கடலைகளின் நல்ல தன்மைகளைக் கொண்ட சரியான சமையல் எண்ணெய்

எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் எண்ட்டர்ப்ரைசஸ் லிமிடெட்-ன் தரமான தயாரிப்பு

189, அண்ணா சாலை, சென்னை 600 006.

Imageads Tam

முகத்தைக் கழுவியதுமே ஒரு சில நிமிடங்களில் எண்ணெய்ப் பசையின் பளபளப்பு மறுபடி காணப் படுமே... அந்தக் கவலை இனி மேல் இல்லை.

பாண்ட்ஸ் இன்ஸ்டிட்யூட் உங்களுக்காகவே உருவாக்கியுள்ளது — புதிய பாண்ட்ஸ் ஆயில்-பாலன்ஸ் ஃபார்முலா.

> “எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? எண்ணெய்ப் பசையான சருமம் இனிமேல் எனக்கு இருக்காது!”

முற்றிலும் எண்ணெயே இல்லாதது.

எண்ணெய்ப் பசையான சருமத்தில் ஸ்பாஞ்சு போல் செயல்படும் கிரீம்


புதிய பாண்ட்ஸ் ஆயில்-பாலன்ஸ் ஃபார்முலா — பகல் நேரத்திற்கான மிக மென்மையான கிரீம். இது மிக எளிதாகவும் சீராகவும் பரவும்.

சருமத்தில் பட்டவுடனேயே, அதன் மேற்பரப்பில் உள்ள அதிகப்படியான எண்ணெயை இது உறிஞ்சிக் கொள்கிறது.


இந்த விசேஷ கிரீம் 100% முற்றிலும் எண்ணெயே இல்லாததால், இதன்மீது தூசு மற்றும் அழுக்குக்கறை ஆகியவை எளிதில் படியாது.

இதன் பயன் — ஒரு சில விநாடிகளில் புத்துணர்ச்சி மற்றும் பொலிவுடன் கூடிய, பளபளப்பான தோற்றம் கொண்ட, மிகத் தெளிவான சருமம்.





மேற்பரப்பில் உள்ள அதிகப்படி எண்ணெயை இதன் விசேஷ ஃபார்முலா அமைப்பு உறிஞ்சிக்கொள்கிறது.



சருமத்தைப் ஃப்ரெஷ்ஷாகவும், பொலிவுடன் கூடிய தோற்றத்துடனும் வைத்திருக்கிறது!

சருமப் பாதுகாப்புக்கு உலகளாவிய ஆதாரமாகத் திகழும் பாண்ட்ஸ் இன்ஸ்டிட்யூட். பெண்களின் சருமப் பாதுகாப்புக்கான தேவைகளை நன்கு உணர்ந்து அவர்களுக்கு ஏற்ற விசேஷத் தயாரிப்புகளை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.



மங்கையர் மலர்



நவராத்திரி
சிறப்பிதழுடன்
இணைப்பு


அக்டோபர் '94

வெவ்வேறான மக்கள். வெவ்வேறான தேவை



அறிமுகம் செய்கிறோம் புதிய 3 புரொடெக்ஸ்

1 ஜென்ட்டில்



நாசுக்கான சருமம் நமது கண்களைக் கவர்வதோடு மட்டுமில்லாமல் ஏராளமான பாக்டீரியாக்களையும் கவர்கிறது. பாக்டீரியா அருவருப்பான பருக்களைத் தோற்றி சிரமத்தைக் கொடுக்கிறது. இவற்றிலிருந்து உங்களுடைய எழில்மிகு சருமத்தை பாதுகாத்து பராமரித்திட, அறிமுகம் செய்கிறோம் புரொடெக்ஸ் ஜென்ட்டில். இது நாசுக்கான சருமத்தை ஆரோக்கியமாகவும், பாதுகாப்புடனும் திகழச் செய்வதற்கான விசேஷத் தயாரிப்பு.

2 பாலன்ஸ்



புரொடெக்ஸ் — ஆரோக்கியமான,


POND'S
OIL – BALANCE
FORMULA
100% OIL-FREE

Mangayar Malar October – '94
REGISTERED NO. TN MS (S) 231
Registered as Newspaper in Srilanka



கட்டுக்கதை - 4 : அதிகமதிக மாக பிரஷ் பயன்படுத்துவது கூந்தலுக்கு நல்லது.

தவறு. அளவுக்கதிகமாக பிரஷ் செய்தால் கூந்தலின் புறப்பகுதி பாதிக் கப்பட்டு நுனிகளில் பிளவு ஏற்படும். கூந் தல் அதனால் உதிர்ந்தும் போகலாம். எண்ணெய் பசையான பிசுபிசுப்பு கூந்தல் கொண்டவர்கள் தேவைக்கதிகமாக பிரஷ் செய்தால் அது மயிர்ப்பை நெய்மச் சுரப் பியைத் தூண்டிவிட்டு சருமமெழுகு அதிகம் சுரக்க வைக்கும். அப்போது கூந்தல் மேலும் தொய்ந்து போய் மேலும் பிசுபிசுப்பாக ஆகும்.

கட்டுக்கதை - 5 : கூந்தலை வெட்டிவிட்டால் வேகமாக வளரும்.

தவறு. கூந்தல் வளருவது இயற்கை யான முறைப்படி மட்டும்தான். அதன் வளர்ச்சியை எதனாலும் கட்டுப்படுத்த முடியாது. எனினும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ட்ரிம் செய்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

கட்டுக்கதை -6 : எல்லா ஷாம்பூ ப்ளஸ் கண்டிஷனர்களும் ஒன்று தான்.

தவறு. ஒரு நல்ல ஷாம்பூ ப்ளஸ் கண்டிஷனர் என்பது அது கூந்தலுக்கு தரும் பராமரிப்பைப் பொறுத்தது. ஒரு நல்ல ஷாம்பூ ப்ளஸ் கண்டிஷனரை பயன்படுத்திய உடன் வித்தியாசம் தெரி யும். கூந்தல் மென்மையாக இருக்கும். சொரசொரப்பெல்லாம் போயிருக்கும். உலர்த்திய பிறகு தலைவாரும்போது சிக்கே இருக்காது. முறையாக உபயோகித்தால் கூந்தலுக்கு அழகு கூடும்.

கட்டுக்கதை - 7 : ஷாம்பூ பயன் படுத்துவதால் கூந்தல் நரைக்கக் கூடும்.

தவறு. கூந்தலுக்கு கருமை நிறம் தரும் மெலனின் எனும் நிறமி குறைவதால் மட்டுமே நரை ஏற்படும். ஷாம்பூ ப்ளஸ் கண்டிஷனர் கூந்தலின் வெளிப்புறத் திலேயே தடவப்படுவதால் அவை நரை ஏற்படுத்தாது. ஆனால் ஒரு நல்ல ஷாம்பூ ப்ளஸ் கண்டிஷனர் கூந்தலை சுத்தமாக்கி, பராமரித்து கருமைப் பளபளப்பைத் தரும்.

எனவே ஒரே நாளில் அழகான கூந்தல் பெறலாம் என்பதெல்லாம் கட்டுக்கதை. முறையான பராமரிப்பு மட்டுமே நீளமான, அழகான கருங்கூந்தலைத் தரும் என்பதே உண்மை.

பார்வைக்கு அழகா இருந்து பல சமயங்கள்ல ரொம்ப சாதாரணமா இருக்கறது இல்ல. **அழகான கூந்தல் முறையான பராமரிப்பால மட்டுமே கெடைக்கறது** — அதுக்கு சரியான கூந்தல் பராமரிப்பு முறையை பின்பற்றனும்''.

புதிய ஸன்ஸில்க் ஷாம்பூ ப்ளஸ் நியூட்ராகேர் கண்டிஷனர் ஒவ்வொரு முறை தலை குளிக்கும் போதும் உபயோகிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது.

இது நீங்கள் அழகான கூந்தலைப் பெற சரியான கூந்தல் பராமரிப்பு முறை.

ஷாம்பூ இதமாக சுத்தம் செய்கையில் இதிலுள்ள **விசேஷமான நியூட்ராகேர் கண்டிஷனர்** கூந்தலுக்கு ஊட்டமளித்து, உலர்ந்து போவதிலிருந்தும், சேதமடைவதிலிருந்தும் பாதுகாக்கிறது. **அதனால் ஒவ்வொரு முறையும் உங்கள் கூந்தல் அழகு கூடிக் கொண்டே போகும்.** உங்கள் கூந்தலில் ஸில்க் மாதிரி மென்மையை நீங்கள் நிஜமாகவே உணரமுடியும்.

எல்லாப் பெண்களுக்கும் கூந்தல் ஒரேமாதிரி இருப்பதில்லை. ஒவ்வொரு விதமான கூந்தலுக்கும் அதற்கேற்ற முறையான பராமரிப்பை அளித்திட புதிய ஸன்ஸில்க் 4 விதங்களில் வருகிறது. உலர்ந்த கூந்தலுக்கு, சாதாரண கூந்தலுக்கு, எண்ணெய்ப் பிசுக்கான கூந்தலுக்கு, நீண்ட கரிய கூந்தலுக்கு என ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு விதம்.

எனவே உங்கள் கூந்தல் எந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் ஒவ்வொரு முறை தலைகுளிக்கும் போதும் ஸன்ஸில்க் உபயோகியுங்கள். பிறகு உங்கள் கூந்தல் அழகு கூடிக்கொண்டே போவதைக் காணுங்கள்.



ஸன்ஸில்க் கூந்தலுக்கு அழகினைக் கூட்டிடும்

HTA.2174.93

ஸன்ஸில்க் அட்வைஸரி சர்வீஸ்,
போஸ்ட் பாக்ஸ் 541, பம்பாய்- 400 001.

தேர்ந்தெடுத்த நகரங்களில் கிடைக்கிறது.

தலைவலி உங்கள் மண்டையைப் பிளக்கும்போது,

முக்கியமான வேலைகளை அலுவலகத்தில்

சரிவர செய்ய முடிவதில்லை.

தலைவலியை விரட்டுங்கள்
ஜண்டு பாம் தடவுங்கள்

விரைவில் துடிப்புடன் விளங்குங்கள்.



தலைவலி தனியாக வருவதில்லை. கூடவே வேறு சில உபாதைகளையும் அழைத்து வரும் -- அமைதியின்மை, உடம்புவலி போன்றவை.

இதில் கவலைப்பட ஒன்றுமில்லை. வலியை நீக்கும் ஜண்டு பாமிலே [illegible] செய்யப்பட்ட விசேஷ மருந்துப் பொருட்கள் உள்ளன. இவை தலைவலி மற்றும் இதர உபாதைகளையும் [illegible] வெளியேற்றி, உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கின்றன.

வலியை நீக்கும் ஜண்டு பாமை எப்போதும் கைவசம் வைத்திருங்கள். இது ஜலதோஷம் மற்றும் உடம்புவலி போன்ற உபாதைகளிலிருந்தும் விரைவில் நிவாரணமளிக்கிறது.

ஜண்டு பாம் ஜண்டு பாம் வலியை நீக்கும் பாம்
ஜலதோஷம் தலைவலி நோவுகளையும்
நொடியில் நீக்கிடுமே

பாம் ஒன்று, செயல் மூன்று.

1. ஜலதோஷம்
2. தலைவலி
3. உடம்பு வலி



30, 10 கிராம் பேக்கிலே.

AP/ZB/524/94/TAM/H